
இரவல் கவிதை
பாலகுமாரன்

உள்ளே...


இரவல் கவிதை 5

காற்றுக்கென்ன வேலி? 101


# இரவல் கவிதை

உலகத்திலுள்ள எல்லா மரங்களும் அம்மா மாதிரி என்று குருமூர்த்திக்குத் தோன்றியது. ஏன் மரத்தைப் பெண்பாலாகவே யோசிக்கிறோம்? ஏன் அப்பாவென்று அதைக் கூப்பிடவில்லை? கனி கொடுப்பதால் மரம் பெண்பாலா? பூத்துக் குலுங்குவது என்ற வார்த்தைகளின் உபயோகத்தால், அது பெண்களின் உடலமைப்போடு ஒத்திருப்பதால், மரத்தைப் பெண்பாலென்று சொல்லிவிட்டோமா? மரத்தைக் கிழவனென்று ஏன் சொல்லக்கூடாது? வலுவுள்ள வயசாளிக் கிழவனென்று மரத்தை யாராவது வர்ணித்திருக்கிறார்களா? அமைதியான, அறிவார்ந்த, சகலமும் அறிந்து, ஆர்ப்பாட்டமில்லாத ஒரு மரத்தை உருவகப்படுத்திக் கொள்ளலாம். ஆனாலும், மரத்தை அம்மா என்று சொன்னால், இன்னும் பாந்தமாய் மிகச் சரியாக இருக்கிறது. ஓர் உருவகம் அதன் அமைப்பை ஒட்டியில்லை. அதன் வடிவம் பொருத்து வரும் விஷயம் அல்ல. அதிலிருந்து வரும் உணர்வுதான் உருவகம்.

ஒரு மரத்தின் வயசும், வலுவும் மட்டுமே தாக்கினால் அதைக் கிழவன் என்று சொல்லலாம். ஆனால், மரம் தரும் குளுமை இருக்கிறதே. அதை அம்மாவிடம்தான் காண முடியும். எந்த ஆணிடமும் மரம் தரும் சுகத்தைக் காண முடியாது. தாவரங்களில் ஆணுக்கு எதை ஒப்பிடமுடியும்? தாவரத்தின் எந்த லட்சணத்தை ஆண் என்று சொல்ல முடியும்? ஒரு முரட்டு வேலியை, சப்பாத்திக்கள்ளி தட்டு, அது வரிசையாய் மார்புயரம் நிற்பதை ஆண் என்று

சொல்லலாம். எத்தனை வெட்டினாலும் மறுபடி மறுபடி கள்ளி துளிர்ப்பதைக் கண்டு வியக்கலாம். கல்லும், கள்ளியும் நட்டு நிலம் பிரித்ததாய் குருமூர்த்தி எங்கோ படித்திருக்கிறான். கல் ஆண், கள்ளியும் ஆண் எல்லைகளைக் காவல் காக்கிற ஆண் ஆனால், எல்லைக்கு உள்ளே இருக்கிறமரம் பெண். பாதுகாக்கப்பட வேண்டிய பெண். இந்த மாமரம் பெண். முப்பத்தைந்து வயதுப் பெண். இது பலன் கொடுக்கத் தொடங்கி இருப்பது, இருபத்தைந்து வருடங்கள் ஆகிவிட்டன. அவனுக்கு மூன்றுவயது இருக்கும் பொழுது, அப்பா அவனைத் தூக்கி உட்காரவைத்த கிளை வெகு உயரம் போய்விட்டது. இரண்டு கால்கள் போட்டு பின்னிக்கொண்ட கிளை, இப்பொழுது மிகப் பருமனாய்ச் சொர சொரப்பாய்ப் போய்விட்டது. அவனும் சொர சொரப்பாகிவிட்டான். பதினெட்டு வயதில் சவரம் செய்ய ஆரம்பித்து, இந்த இருபத்தைந்து வயதில் கட்டை தாடி வந்துவிட்டது. காலையில் எதிர்பக்கம் சவரம் செய்து, மாலையில் பௌடர் போட்டுக் கொள்ளும்போது முகம் சொர சொரப்பாய்த் தெரிகிறது.

அவனும் அந்த மரமும் அந்த வீட்டில் ஒன்றாய்வளர்ந்தவர்கள். அவனைவிடப் பத்து வயது மூத்தது அந்த மரம். ஆயினும், அந்த மரம் அக்கா இல்லை அடுத்தவீட்டு மாமியில்லை. அம்மா. அந்த உணர்வுதான் வேடிக்கையாக இருந்தது. மாமரம், அம்மா என்ற உருவகம் எதனால் வந்தது? மற்றதில் ஏதும் வாராத தன்மையேன் இதனுள் வந்தது? கவிதை போலும் சில வார்த்தைகள் குருமூர்த்தியின் மனதுள் புரண்டன. குருமூர்த்தி மரத்திற்குக் கீழே போடப்பட்டிருந்த ரயில்வே சிமெண்ட் பெஞ்ச் மாதிரியான இடத்தில் குந்திட்டு அமர்ந்து, அந்த மரத்தை ஆதுரத்துடன் பார்த்தான். மரத்தைச் சுற்றியிருக்கிற எல்லா விஷயத்தையும் பரவசமாய்ப் பார்த்தான். ஒரு கவிஞன் எப்பொழுதும் விழித்திருக்க வேண்டும் என்கிற நினைப்பு வர, எல்லாவற்றையும் விழித்து விழித்துப் பார்த்தான்.



அப்படி விழித்துப் பார்த்தபோது அந்த இடம் அவனுக்கே வியப்பாக இருந்தது.

இப்படியொரு வீட்டில் இருபத்தைந்து வருடம்வாழ்ந்த வியப்பு அது. இந்த மாதிரி ஒரு வீடு யாருக்காவது கிடைக்குமா என்கிற வியப்பு அது. அது வீடு இல்லை. சத்திரம். சத்திர வீடு. ஒரு சத்திரம் வீடாய் மாறியிருக்கிறது. ரா. ஆ. குப்புசாமி ஐயர் சத்திரம். நூறு வருஷத்துக் கட்டடம். நாலு கட்டு கட்டடம். பூமியிலிருந்து மூணே முக்காலடி உயரம். சிவப்பு சிமெண்ட் தளம். அகலவராந்தா. ஒருவருக்குக் கீழ் ஒருவராய் இரண்டுபேர் படுத்துக்கொள்ளும் அகலத் திண்ணை. அடுத்தடுத்து நூறுபேர் படுத்துக்கொள்கிற நீளம். பித்தளைக் குமிழ்போட்ட மரக்கதவு. முற்றத்துப்பக்கம் செவ்வகக் கருங்கல் தூண்கள். ஹாலுக்கு நடுவே ஒரு கை கட்டலுக்கு அகப்படாத மரத்தூண். மூன்று ஆள் உயரக் கூரை. நாலடிக்கு ஒடு. கப்பல்மாதிரியிருந்தது வீடு. வீடில்லை. சத்திரம். சத்திர வீடு.

வீட்டுக்குப் பின்புறம் பெரிய கொல்லை. மகிழ மரம், வில்வமரம், மா மரம், மல்லிச்செடி, முல்லைக்கொடி, சங்கு புஷ்பம். துளசிப்புதர், பிள்ளையார் கோயில், எப்போதோ திருமணம் செய்துகொண்ட அரசும், வேம்பும். வீடுகட்டும் போதே இவற்றையும் நட்டிருக்க வேண்டும். சின்னக் கன்றாய் நட்டு, சுற்றிலும், கருங்கல் தளம் போட்டு,மேடை நெடுகெல்லாம் இப்போது மலைப்பாம்பு மாதிரி வேர் பிதுங்கி நிற்கிறது. மர உயரம் கண்ணுக்குத் தெரியாமல் கிளைகளை இலைகள் மறைக்கின்றன. அரசும், வேம்பும் அடுத்து, குளம். படிகள் உள்ள குளம். அறுபதடிக்கு அறுபதடி சதுரம். அதற்குப் பிறகு தென்னந்தோப்பு. தோப்புக்கு அப்பால் சாவடி.

சத்திரம் சாவடி என்றால் என்னவென்று தெரியாதிருந்தது. திடீரென்று ஒரு நாள் புரிந்துபோயிற்று.

சத்திரம் நல்ல விஷயங்களுக்கான இடம். சாவடி நீத்தார் கடனுக்கான விஷயம்.

புதுச்சேரியிலுள்ள இந்துக்களுக்கு நூறு வருடம் முன்பு வாழ்ந்த குப்புசாமி ஐயரென்பவர், தன் சொந்த செலவில் சத்திரமும், சாவடியும் கட்டிவிட்டுப் போயிருக்கிறார். நல்ல காரியமும், நீத்தார் காரியமும் நடக்க, தரும கைங்கரியமாய் இரண்டு இடம் கட்டி, இரண்டு இடத்துக்கு நடுவே குளம் கட்டி, எல்லா ஜனங்களும் சந்தோஷமாய் இருக்கட்டும் என்று செத்துப் போயிருக்கிறார். ஜனங்கள் முன்னைவிட சௌகர்யமானவர்கள். சந்தோஷத்திற்கு அதிகம் ஆசைப்பட்டார்கள். குப்புசாமி ஐயரை, அவர் சத்திரத்தை சௌகர்யமாய் மறந்துபோனார்கள் இப்பொழுது சத்திரத்தில் எதுவும் நடைபெறுவதில்லை எப்பொழுதாவது சாவடியில் எவருடைய நீத்தார் கடனாவது நடக்கும். அப்படி நடக்க, சத்திரத்தைச் சுற்றிக்கொண்டு போகவேண்டும்.

நல்லதும், கெட்டதும் ஒரே இடத்தில் நடைபெறலாமா நடைபெறலாம். நடுவே நீர்நிலை பிரித்தால் நடைபெறலாம். சத்திரத்து வாசல் கிழக்குப் பார்த்து இருக்கும். சாவடி தெற்குப் பார்த்திருக்கும். சிமெண்ட் திண்ணையில் கால் கட்டிப் படுத்தால், தெற்கத்திக் காற்று தாசிப்பெண்ணைப் போலச் சுற்றிக்கொள்ளும். இடித்து மோதும். சில சமயம் வேட்டியைப் பிரித்துப் போடும். எத்தனையோ பேர் கல்யாண சாப்பாடு சாப்பிட்டு, இந்தத் திண்ணையில் சுயநினைவின்றி தூங்கியிருக்கக் கூடும். இப்போது அப்படி யாரும் தூங்குவதில்லை. அந்நியர்கள் உள்ளே வர இயலாது. வாசல்பக்கக் கம்பிக்கதவு எட்டு மணிக்கு மூடப்பட்டுவிடும். உள்ளே இருக்கிற ஏழு குடித்தனக்காரர்கள் கோடை காலத்தில் மட்டும் திண்ணையில் வந்து தூங்குவார்கள்; மற்ற நேரத்தில் திண்ணையில் புழுதி மட்டும் புரண்டு கொண்டிருக்கும்.



குருமூர்த்தி அந்த வீட்டில்தான் பிறந்தான். அங்குதான் வளர்ந்தான். அங்கேதான் படித்து பாஸ் செய்தான். அங்கிருந்தபடிதான் அரசாங்க வேலைக்கும் போனான். இதையெல்லாம்விட அற்புதமான விஷயம், குருமூர்த்தி கவிதை எழுதக் காரணம் அந்த இடம், குருமூர்த்தி ஐயர் சத்திரம், காலை ஏழு மணிக்கு யார் அந்தக் கொல்லைப் புறத்தில் உட்கார்ந்தாலும் கவிதை போலவும் ஓர் அமைதி அங்கே தோன்றுகிறது. மரங்களுக்கிடையே வெயில்வட்டங்கள் விழுந்து, தரையெங்கும் தங்க நாணயமாய்ச்சிதறிக் கிடக்கிற அழகே போதும். ஆனால், தன்னைச் சுற்றி யார் கவனமுடன் இருக்கிறார்களோ, அவர்களுக்குத்தான் கவிதை வருகிறது. படிக்க உட்கார்கிறேன் என்று சொல்லி, குருமூர்த்தியின் நிறைய நண்பர்கள் அந்தக் கொல்லைப் புறத்தில் துண்டு விரித்துப் படுத்துவிடுவார்கள். ரொம்ப ஆனந்தமாய்த் தூங்குவார்கள். ப்ளஸ் டூ படிக்கிறபோது ஏழு எட்டு பேர் சேர்ந்தார்கள். குருமூர்த்தி வீட்டுக்குப் படிக்கப் போகிறேன் என்பது, ப்ளஸ் டூவில் மிகப் பெரிய விஷயமாக இருந்தது. ஒரு சமயம் பதினாறு பதினேழு பேர் அந்தக் கொல்லைப்புறத்தில் வகுப்பறை போலப் படிப்பதற்குச் சேர்ந்ததும் உண்டு. ஆனால் அந்தமாதிரியான சோக்கை வரதராஜனால் உடைந்தது.

வரதராஜனின் அப்பா செத்துப் போனபோது சத்திரத்தைச் சுற்றிக்கொண்டு, அவனும், அவன் தம்பியும் இடுப்பில் ஈர அரைத்துண்டோடு வந்தார்கள். வரதராஜனை அவன் வகுப்புப் பையன்கள் யாரும் அப்படிப் பார்த்ததேயில்லை. வரதராஜன் அம்மா துவண்டுபோய், ஒரு சைக்கிள் ரிக்ஷாவில் ஒரு பெண்மணி அணைத்துக் கொள்ள அழுதபடியே வந்தாள். வகுப்பு நண்பர்கள் அந்தக் காட்சியைப் பார்த்துவிட்டு உடைந்து போனார்கள்.

"இப்ப என்னடா நடக்கும்? இப்ப என்ன நடக்கும்" என்று ஆவலுற்றார்கள்.

"நாங்க பார்க்கலாமா?" என்று பிராமணரல்லாத பையன்கள் கேள்வி கேட்டார்கள். குளம் தாண்டி, தென்னந்தோப்பு தாண்டி கும்பலாய் சாவடி பக்கம் நின்று, வரதராஜன் அழுவதை வேடிக்கை பார்த்தார்கள். குருமூர்த்தியைத் தவிர, எல்லா நண்பர்களின் முகத்திலும் மிகப்பெரிய கலவரமிருந்தது. இப்படி சாவு, சடங்கு பார்ப்பது நல்லதா, கெட்டதா என்று கேள்வியிருந்தது. ஒரு பையன் பார்க்கமாட்டேன் என்று சொல்லிப் போய் விட்டான். மற்றவர்கள் பயம் கொடுத்த கிளர்ச்சியோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஒரு பெரிய மியூசியத்தை விவரித்துச் சொல்கிற வழிகாட்டி போல, குருமூர்த்தி அங்கே என்ன நடக்கிறது என்பதை நண்பர்களுக்கு விவரித்துச் சொன்னான்.

"எங்க ஜாதில இதுக்கு பத்து பண்றதுன்னு பேரு. செத்துப் போனவா ஆவி ரூபமா பத்து நாள் கழிச்சு, பசி தாங்காத பூமிக்கு வருவாளாம். பூமி மேல ஆசையோட உப்பும், உறப்புமா திங்கணுங்கற ஆசையோட மறுபடி பைசாசமா வருவாளாம். அப்படி வர பைசாசத்துக்கு உப்பில்லாத தோசை, உப்பில்லாத இட்லி, உப்பில்லாத சாதம், உப்பில்லாத குழம்பு இன்னிக்கி போடறாங்க. சாப்பிடறது பைசாசமில்லையா? அதனாலே நாலுபேர் சாப்பாட்டை ஒண்ணா குவிச்சு, சுத்தி தோசையும் இட்லியும் அடுக்கி, அது உச்சில குழம்பு ஊத்தறோம். பைசாசம் வந்து சாப்பிட உட்கார்ந்துட்டு, 'சீச்சீ, கொஞ்சங் கூட உப்பேயில்லே'ன்னு வெறுத்துட்டு, பூமிய விட்டு மேலோகத்துக்குப் போயிடும். பூமி வாசனை அந்த பைசாசத்துக்கு மொத்தமா அறுந்து போகணும்னு, இப்படிச் செய்யறது வழக்கம்."

சோறு குவிக்கப்பட்டிருந்ததை நண்பர்கள் பயத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பைசாசம் எப்பொழுது வரும் என்பதுபோல் காத்திருந்தார்கள்,



"பைசாசம்னா என்னடா?" ஒருவன் கேள்வி கேட்டான்.

"பிசாசு. வரதராஜன் அப்பா இப்ப பிசாசா, ஆவி ரூபமா வருவாரு"

நண்பர்களுக்கு பயத்தில் சிறுநீர் முட்டிக்கொண்டு வந்தது. ஒருவர் ஒருவராய் நகர்ந்து சுவரோரம் இருந்து விட்டு மறுபடி நகர்ந்து வந்தார்கள். வரதராஜன் அம்மாவை குளக்கரையில் உட்கார வைத்து அவள் தலை முடியை அவிழ்த்து, தலையில் குளத்து ஜலத்தைக் கொட்டினார்கள். வரதராஜனையும், அவன் தம்பியையும் அவ்விதமே குளிப்பாட்டினார்கள். நெற்றிப் பொட்டில்லாமல், தலையை முடிந்து கொள்ளாமல் வரதராஜன் அம்மா படியேறினாள்.

புருஷன் செத்த துக்கம் தாளாமல், இரண்டு விதவைப் பெண்கள் தாங்க, சாவடி கட்டடத்திற்குள் நுழைந்தாள். குவிந்து கிடக்கிற சோறு பார்த்துவிட்டு, மார்பிலடித்துக் கொண்டு அலறினாள்.

"மோர்க் குழம்பு பண்ணிப்போடு, வத்தல் குழம்பு செய்து போடுன்னு கேட்பியே, உனக்கு வெறும் சோறு செய்து போட்டிருக்கே" என்று அழுதாள்.

"பதினெட்டு வயதிலேர்ந்து உனக்கு நான் தவறாத சோறு போட்டிருக்கேனே. நான் இனி யாருக்குப் போடுவேன்" என்று அழுதாள்.

"இதுதான் நீ சாப்பிடற கடைசி சாப்பாடா? இனிமே நான், உனக்கு சாதமே போட முடியாதா?" என்று அழுதாள். அவள் கையில் கரண்டியை வலுக்கட்டாயமாகக் கொடுத்து ஊற்றச் சொன்னார்கள். வரதராஜனின் சித்தியும், அத்தையும், மன்னியும் யாரெல்லாம் அவன் அப்பாவுக்கு சாதம் போட்டார்களோ அந்தப் பெண்களெல்லாரும் சாதம் போட்டார்கள். வரதராஜன் தம்பி

யைக் கட்டிப் பிடித்துக் கொண்டு விக்கி, விக்கி அழுது கொண்டிருந்தான். பையன்களுக்கு மனசு கலங்கிவிட்டது. நிறைய பேருக்கு கண்களில் நீர் வழிந்தது. எல்லாப் பெண்களும் அந்தச் சோற்றுக் குவியலைச் சுற்றி வந்து, மார்பிலடித்துக் கொள்வதைப் பார்த்து முகம் திருப்பிக் கொண்டார்கள்.

"பிசாசு வரவேயில்லியேடா" ஒரு பையன் துணிச்சலாய்க் கேட்டான்.

"வருங்கறது ஒர்ஜஜிகம். ஆனா வராது" குருமூர்த்தி பதில் சொன்னான்.

"ஆ...இது சும்மா பேச்சு. பிசாசு நிச்சயம் வரும். வரதராஜன் அப்பா நிச்சயம் ஆவியா வருவார். ஆனா வர்றது நம்ம கண்ணுக்குத் தெரியாது" வேறொருவன் விளக்கம் சொன்னான்.

"ஆனா, அவருக்கு சாப்பாடெல்லாம் கண்ணுக்கு தெரியும்ல?"

"நிச்சயமா தெரியும்"

"வரதராஜன் அம்மாவை?"

"ரொம்ப நிச்சயமா தெரியும்"

"அப்ப நாம நிக்கிறதெல்லாம்?"

"அதுவும் தெரியும்"

நண்பர்கள் கலவரமானது அங்குதான். ஒரு பிசாசு அல்லது ஆவி ரூபமான மனிதன், மாமரத்துக்குக் கீழே படிக்கிற தங்களைப் பார்த்துக் கொண்டிருப்பானென்றால், எப்படிப் படிக்க முடியும்? வரதராஜனின் அப்பா மட்டுமில்லாது வாரத்திற்கு நாலு பேர் அங்கு உப்பில்லாத சாப்பாடு சாப்பிட வருவார்களென்றால், எப்படிக் கூடிப் பேச முடியும்?



மனசு சரியில்லையென்றும், வயிறு வலிக்கிறதென்றும் அவசர வேலையிருப்பதாகவும் நண்பர்கள் பல்வேறு காரணம் சொல்லிக் கலைந்து போனார்கள். அதற்குப்பிறகு அந்த இடத்துக்கு வரவே பயந்தார்கள்.

"அந்த இடம் சாவு தீட்டு நடக்கற இடம். அங்கெல்லாம் போகக் கூடாதுன்னு எங்க வீட்ல சொல்லிட்டாங்க."

ஒரு பையன் வர மறுத்து விட்டான்.

"அப்படி உங்க வீட்டுக்குப் போனா குளிச்சுட்டுத்தான் நுழையணும்னு சொல்லிட்டாங்க. நான் இனிமே படிக்க வரலைப்பா" இன்னொருவன் திட்டவட்டமாய் மறுத்தான்.

ஆனால், இப்பொழுதெல்லாம் சாவடியில் எப்போதாகிலும் ஒருமுறைதான் இந்தப் பத்து சமாச்சாரம் நடக்கிறது. அப்படி நடக்கின்ற விஷயம் எதுவும் குருமூர்த்தியைக் கலவரப்படுத்தவேயில்லை. அது பழகி விட்டது. குளமும், தோப்பும், கோயிலும், நிறைய மலர்ச் செடிகளுமாய் யாருக்கு இப்படியொரு வீடு கிடைக்கும் என்கிற அதிசயம்தான் குருமூர்த்திக்கு எப்பொழுதுமே இருந்து வந்தது. சத்திரத்தில் குடியிருக்கிற ஏழு குடித்தனப் பையன்களும் கண்ணாமூச்சி ஆடுகிற போது வாசல் பக்கத்திலேருந்து, கொல்லைப்புற சாவடி வரை, எங்கு வேண்டுமானாலும், ஒளிந்து கொள்ள வேண்டுமென்பதுதான் நியதியாக இருந்தது. அப்பொழுது சாவடியில் பலமுறை ஒளிந்து கொண்டதும் உண்டு. சாவடிச் சுவற்றிலுள்ள விளக்குப் பிறையில் கால் வைத்து, இருட்டான மரப் பரணையில் ஒளிந்து கொண்டால் யாருமே கண்டுபிடிக்க முடியாது. ஒருமுறை முதல் போர்ஷன் சங்கீதா, தேடுகிற ஆளாய் குருமூர்த்தியைக் கரம் வைத்து தேடினபோது. இருட்டுப் பரணையில் வேஷ்டியைத் தலைக்குமேல் போர்த்திக் கொண்டு, குருமூர்த்தி உட்கார்ந்திருந்தான். சங்கீதா தயங்கித் தயங்கிச் சாவடிக்குள் நுழைந்தபோது

"சாதம் போடுறீ, மகாபாவி. பன்னிரண்டு வருஷமா பசிக்கறதுடீ. சாதம் போடுறீ" என்று அடிக்குரலில் உறுமினான். சங்கீதா சட்டென்று வெளியேறி விட்டாள். வெளியே போய் வேறு யாரையோ அவுட்டாக்கினாள். 'நான் விளையாட்டுக்கு வரலை" என்று அவுட்டாக்கி விட்டுக் கத்தினாள். அவனும், அவளுமில்லாத கண்ணாமூச்சி ஆரம்பித்ததும் சாவடிக்குள் நுழைந்து கதவு சாத்திக் கொண்டாள்.

"ஏய் குரு.... நீ இங்கேதான் எங்கேயோ இருக்க, எனக்குத் தெரியும். வெளில வா" என்று மெல்லக் கூவினாள்.

"எனக்கு சாதம் போடுறீ மகாபாவி. இல்லேன்னா உன்னை சாப்பிட்டுருவேன்" குருமூர்த்தி பைசாசம் போல மேலிருந்தபடி கத்தினான். சங்கீதா மரப் பரணை உற்றுப் பார்த்தாள். கீழே கிடந்த, சமித்து குச்சிகளையும், வறட்டித் துண்டுகளையும் பரணைநோக்கி எறிந்தாள். இரண்டு துண்டு வறட்டி குருமூர்த்திமீது பட்டது. குருமூர்த்தி 'ஊவ்' என்று கத்திக் கொண்டு, போர்த்தின வேஷ்டியோடு தரையில் குதித்தான். சங்கீதா,பயந்தவள் போல் சுவரோரம் ஒதுங்கிக் கொண்டாள். போர்த்தின வேஷ்டியோடு குருமூர்த்தி அவளை நெருங்கினான். ஓட்டு இடைவெளியிலுள்ள வெளிச்சம் தவிர, வேறு வெளிச்சம் அறையிலில்லை.

"நீ குருமூர்த்தி தானே?"

"இல்லை. பைசாசம்"

'பிசாசுக்கு வேஷ்டி உண்டா?" சங்கீதா வெடுக்கென்று குருமூர்த்தியின் வேஷ்டியை விலக்கினாள். குருமூர்த்தியைப் பார்த்ததும் பயமாருக்கே என்று கட்டிக்கொண்டாள். பன்னிரண்டு வயது சங்கீதாவின் உடம்பு. தணல் போல சுட்டது. சங்கீதா இன்னும் பெரியவளாகவில்லை. ஆனால், அவள் உடம்பு பெரியவளாவதற்குத் தயாராகிக் கொண்டிருந்தது.



"எனக்கு பயமாருக்கு குருமூர்த்தி! என்னைக்கட்டிக்கோ" என்று அவள் அவனை இறுக்கிக் கொண்டபோது, அவனும் அவளைக் கட்டிக் கொள்ள வேண்டியதாயிற்று. அவள் முத்தம் கொடுத்தபோது, அவனும் முத்தம் கொடுக்க வேண்டியதாயிற்று. அவள் நாக்குச் சுவைத்தபோது, அவனும் நாக்குச் சுவைக்க வேண்டியதாயிற்று. பைசாசமென்பது வெளியேயில்லை என்பது குருமூர்த்திக்கு அன்று தெரிந்து போயிற்று. அவன் மனசிலுள்ள பிசாசை சங்கீதா தட்டியெழுப்பினாள். குருமூர்த்தி அந்தப் பிசாசிடமிருந்து விடுபட மிகவும் கஷ்டப்பட்டான். தமிழ்க் கவிதையாய் தன்னில் தோன்றிய காமப்பிசாசை கட்டுக்குள் வைத்தான். சங்கீதா ஒன்பதாவது படிக்க, புதுச்சேரி விட்டு சென்னைப்பட்டணம் போய்விட்டாள். தனக்குள் தோன்றியதுபோல் சங்கீதாவுக்குள்ளும் ஒரு பிசாசு தோன்றியிருக்குமே, அந்தப் பிசாசு சங்கீதாவை என்ன செய்தது என்பது குருமூர்த்திக்குக் கேள்வியாக இருந்தது. பன்னிரண்டு வயது உடம்பு மலராத சங்கீதாவை, பதினேழு வயசு குருமூர்த்தி முத்தமிட்டது இன்னொரு விளைவு கவிதை. முத்தம் முதலில் அதிர்ச்சியையும், பிறகு ஆவேசத்தையும், அதன் பிறகு அயோக்கியத்தனமான கனவுகளையும், இவையெல்லாம் அலுத்தபிறகு, மிக ஆழமான கவிதைகளையும் அவனுக்குக் கொடுத்தன. சங்கீதா கண்ணெதிரே இருந்தவரை அவள் கவிதையாகத் தெரியவில்லை. அவள் போனபிறகு அவள் நின்ற இடம், நடந்த இடம், முத்தமிட்டுக் கொஞ்சியஇடமெல்லாம் கவிதையாய்த் தெரிந்தன. கொல்லைப்புற பவள மல்லிகையை, ஊசியில் கோத்து வீட்டிலுள்ள கிருஷ்ணன் படத்திற்குப் போடுவதற்கு முன், தன் கழுத்திலேயே தானே மாலையாய் சங்கீதா போட்டுக் கொள்வாள். உள்ளங்கையில் வைத்து முகர்ந்து, முகர்ந்து பார்ப்பாள்.

இப்படிச் செய்யலாமா என்று குருமூர்த்தி கேட்டதற்கு, "இந்த உலகத்துல என்ன வேணாலும் செய்யலாம். எதுவும் தப்பில்லை" என்று தீர்மானமாய்ச் சொல்லியிருக்கிறாள்.

கொல்லைப்புற கிணற்றில் வெட்டின வாழையோடு நீச்சலடிக்கிற ஒரே பெண்மணி சங்கீதாதான். ஒரு தவளையை பாம்பு விழுங்குவதை அவளும் குருமூர்த்தியும் நெருக்கமாய் நின்று பார்த்திருக்கிறார்கள். பாம்பு கொத்திவிடுமோ என்று பயத்தில் குருமூர்த்தி ஓடிப்போகப் பார்த்தபோது, வேண்டாம் என்று தடுத்து நிறுத்தினாள். பாம்பு தவளையை விழுங்கிவிட்டுப் புதருக்குள் போய் மறைந்துவிட்டது.

''பாம்புக்கு பயந்துதானே என்னைத் துணையா இருக்கச் சொன்னே?''

''இல்லை. அவ்வளவு பெரிய தவளைய வாயில வச்சிட்டிருக்கற பாம்பு, நம்மளை எப்படி கொத்தும்? நான் இதைப் பார்த்ததா சொன்னா யாரும் நம்பமாட்டா. நான் உன்னை சாட்சிக்காக வச்சேன்.''

ப்ளஸ் டூ படிக்கும்போது சங்கீதாவைப் புரியவில்லை. இப்போது புரிந்தது. சங்கீதா ஓர் அடாவடி டைப். அப்பாவை மிரட்டுகிற அம்மாவின் வளர்ப்பில் திமிறி எழுந்த பெண். அந்தத் திமிர்தான் அவளுடைய கவிதை. கவிதையென்பது நிகழ்வின் பதிவல்ல. இடத்தின் விளைவல்ல. செயலின் எதிர்மறையல்ல. இவையெல்லாம் மனசைத் தாக்க, ஓர் உணர்வு வெளிப்படும். ஒட்டு மொத்தமாய் ஒரு மனக்கிளர்ச்சி ஏற்படும். சங்கீதா என்றால் என்னவென்று யோசித்தபோது, நாலைந்து விஷயங்கள் நினைவுக்கு வந்தன. அவை மறக்கவே முடியாத விஷயங்கள். அந்த விஷயங்களிலிருந்து வேறோர் உணர்வு வெளிப்பட்டது. அந்த உணர்வு சங்கீதாவையும் தாண்டிப் போயிற்று. சங்கீதா சட்டென்று பட்டணத்திற்குப் போய்விட்டாள். மறுபடி புதுச்சேரி வராமலேயே இன்னும் வேறெங்காவது சங்கீதா போய்விடலாம். உருமாறிப் போகலாம். ஒரு காலத்தில் நான் வாழ்ந்த இடமென்று இந்த இடத்தோடு ஒட்டுதலில்லாது போகலாம் ஆனால், இந்த இடத்தில், இந்த மரத்தில் ஒரு காதல்



உணர்வு நிரந்தரமாய் இருக்கும். உலகத்தின் எல்லா இடமும் மனிதர்களைப் புதைத்த இடம்தான் என்று சொல்கிறார்கள்: அதே மாதிரி, உலகத்தில் எல்லா இடமும் காதல் ஏற்பட்ட இடமாகவும் இருக்க வேண்டுமல்லவா? இந்த குப்புசாமி ஐயர் சத்திரம் நூறு வருஷங்களுக்கு முன்பு தென்னந்தோப்பாக இருந்ததாம். தோப்பழித்துத் தோற்றுவித்த சத்திரம் என்று பத்திரமிருக்கிறதாம். அந்த தென்னந்தோப்பிலும் காதல் நடந்திருக்கக் கூடும். யாரேனும் ஓர் ஆணும், பெண்ணும் கட்டிப் பிடித்து முத்தம் கொடுத்திருக்கக் கூடும். புல்வெளியில் படுத்துக் கலவியில் ஈடுபட்டிருக்கக் கூடும். உலகத்தில் எல்லா இடமும் மரணம் நிகழ்ந்த இடம். உலகத்தின் எல்லா இடமும் காதல் நிகழ்ந்த இடம். கடவுளே உலகம் எவ்வளவு பெரிசு. யுகம் யுகமாய் எவ்வளவு வயசு. இடைவிடாத காதல். இடைவிடாத மரணம். எவ்வளவு பெரிய ஆச்சர்யம். இந்த வரிசையில் நானும் சங்கீதாவும். அவள் இப்பொழுது இல்லை. அவள் விட்டுச்சென்ற தடங்கள் இருக்கின்றன. முருங்கை மரத்தில் கம்பளிப் பூச்சி அடையாய் மொய்த்துக் கொள்ள சங்கீதா மரக்கட்டையில் துணி சுற்றி, சுட்ட நல்லெண்ணெயில் நனைத்து திகுதிகு என்று தீப்பந்தம் எரிய அத்தனை கம்பளிப் பூச்சியையும் சற்றும் இரக்கமின்றித் தீய்த்து எறிந்தாள். அந்தக் காரியத்தைச் சந்தோஷமாகவே செய்தாள். புழுக்கள் பொசுங்கி, பச்சை மரமும் தீய்ந்தது. புழு சாம்பலாய்ப் போக, மரம் தீய்ந்த இடம் மட்டும் இன்னுமிருக்கிறது. அந்தக் கறுப்பு நிசலைப் பார்க்கும் போதெல்லாம் சங்கீதா ஞாபகம் வருகிறது. சங்கீதா பெரியவளாகியிருப்பாள். இப்போது அழகாயிருப்பாள். புடைவைக்கு மாறியிருப்பாள். ஆனால், அதெல்லாம் முக்கியமில்லை. மலராது, மலரத் தயாராய் நிற்கும் சங்கீதா தான், மனசுக்குள் நிரந்தரமாய் இருக்கிறது. சங்கீதா தனக்கு வேண்டும் என்கிற விருப்பம் குருமூர்த்திக்கு இல்லை. சங்கீதா என்றதும் ஒரு சந்தோஷம் மனதுள் எழுகிறது. அவள், எச்சில் நாக்கு மனதுக்குள் திமிறிக்கொண்டிருக்கிறது. ஒட்டுமொத்த

மாய் அவள் நினைப்பு உள்ளே ஒரு கவிதையைக் கொடுக்கிறது.

முசுக்கொட்டை மப்ளர் போல
முருங்கையைச் சுற்றிப் படர
தீப்பந்தம் கையில் ஏந்தி
நீ எரித்த சுவடு மிச்சம்.

முதலிரண்டு வரிகள் வந்தவுடன் உள்ளுக்குள் சந்தோஷம் பொங்கியது. வேறு என்னென்ன சுவடுகள் என்று மனசு லிஸ்ட் போட்டது.

வேம்பிலே உன் பெயர் செதுக்கி
வேறொருவர் அறியா வண்ணம்
அரையடி தள்ளிக் கிழித்த
என் இன்ஷியல் இன்னும் இருக்கும்.
குடியினில் மூழ்கிச் செத்த
புருஷனை மறக்க மாமி
மெட்டியைக் குளத்தில் வீச
நீ மூழ்கி எடுத்துப் பரிசாய்,
என் விரலில் போட்டது இருக்கும்.
குருவியின் கூடு கலைத்து
குப்பையை அள்ளிப் போட்டு
நீ அடைத்த பாவடை விட்டம்
ஹாலுக்கு நடுவே உன்னால்
ஆணியால் கிழிக்கப்பட்ட
ஆடுபுலி ஆட்டக் கட்டம்
ஆர் ட்பை என்கிற ஒப்பம்
உன் பெயர் மறக்கக் கூடும்
பின்னொரு நாள் நரைக்கும் பொழுதில்
காலத்தால் மிதிக்கப்பட்டு
உன் முகம் மாறக் கூடும்.
தெருவினில் எதிரெதிராக



நாம் சந்திக்க நேரும் போது
யாரது என்ற கேள்வி
அந்நாளில் வரவும் கூடும்,
எரித்ததும் எந்தன் நெஞ்சில்
கிழித்ததும் கிழிந்த துணியில்
அடைத்ததும் மறக்கப் போகுமோ?
காதலர் இறந்தாலென்ன
காதற் சுவடுகளே உலகமெங்கும்!

கவிதையை முடித்துவிட்டு குருமூர்த்தி சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தான். துளசிப் புதருக்கு எதிர் நின்று அலறை வாசகர் வட்டமாய் நினைத்து, கவிதையை வாசித்துக் காட்டினான். கவிதையை முடித்ததும், யாரும் கைதட்டாமலேயே நீண்ட கரவொலி அவன் காதுக்குள் தொடர்ந்து கேட்டது; அந்தக் கவிதைப் பேப்பரை கொல்லைப்புறப் பிள்ளையார் சந்நதியில் வைத்து சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்தான்.

"ஐயா, எனக்கு கவிதை வரம்கொடுத்த உமக்கும், அந்த சங்கீதாவுக்கும், மரங்களடர்ந்த இந்தக் கொல்லைப்புறத்திற்கும் என் மனமார்ந்த நன்றி. தொடர்ந்து நான் கவிதை எழுதி ஜெயிக்க அருள் புரிய வேண்டும், தயாதரா" என்று வேண்டினான்.

ஜெயிப்பது என்றால் என்னவென்று குருமூர்த்திக்கு அப்போது தெரியவில்லை. பிற்பாடு தெரிய வந்தது. ஜெயித்தலின் முதல்படி தோல்வியென்பது மெல்ல மெல்லப் புரிந்தது. குருமூர்த்தி தொடர்ந்து கவிதைகள் எழுதினான். அவன், கவிதைகளுக்கு துளசிப் புதரும், தும்பைச் செடியும். முல்லைக் கொடியும் தவிர, ஒரு மனிதரும் தேவைப்பட்டது. யாருடனாவது தன் கவிதையைப் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்று ஆசைப்பட்டது. அந்த ஆசைக்கு வடிகாலாய் அமைந்தவன் சாமிநாதன். கல்லூரியில் அவனோடு படித்தவன். குருமூர்த்தியைவிடப் பணக்காரன்.

# 2

பணம் பற்றிய பிரேமை ஒரு மனிதனுக்குப் பதினைந்து வயதில்தான் வர வாய்ப்பிருக்கிறது. சிலருக்குத் தாமதமாகவும் வரக்கூடும். ஆனால், குருமூர்த்திக்குக் கடைசி வருட பட்டப் படிப்பின்போதுதான் வந்தது. அப்பா மணக்குள விநாயகர் குருக்கள். புதுச்சேரியில் மையமாயிருந்த அந்தக் கோயிலுக்குக் கூட்டம் உண்டு. தட்டில் விழும் தட்சணைகளை ஆறுபேர் பங்கு போட்டுக் கொள்ள. ஒரு நாளைக்கு முப்பதிலிருந்து அறுபது வரை கிடைக்கும். ஆனால், ஒரு ஹாலும், ஒரு சமையலறையும் கொண்ட குருமூர்த்தியின் போர்ஷனுக்கு, ஆரம்பத்தில் மூன்று ரூபாய் வாடகையும், இப்போது ஏழு ரூபாய் வாடகையும் இருக்கிறபோது. ஒரு நாளைக்கு முப்பது ரூபாய் வருமானத்தில் குடித்தனம் செய்வது ஒன்றும் கடினமாக இல்லை. குருமூர்த்தியின் அண்ணா. மில்லில் வேலை செய்யப் போகின்றபோது சாப்பாட்டுக்கு கஷ்டமேயில்லை. நல்ல சவுக்காரம், தலைக்குத் தேங்காய் எண்ணெய், காலுக்கு உறவாய் செருப்பு, கவிதை எழுதவும், பரீட்சை எழுதவும் இரண்டு பேனாக்கள். பிறந்த நாள் பரிசாக அண்ணா கொடுத்த பாரதியார் புத்தகம் என்று வாழ்க்கை சகல வசதிகளோடும் போயிற்று.

ஆனால், இவையெல்லாம் வசதிகளேயில்லை. அடிப்படைத் தேவைகள் என்பது சாமிநாதன் வீட்டைப் பார்த்தபோது புரிந்தது. சாமிநாதன் வீட்டில் குளம் இல்லை. ஆனால், ஹால், குளம் மாதிரி இருந்தது. தரையைப் பார்க்க முகம் தெரிந்தது. பெரிய பெரிய ப்ளாஸ்டிக் தாமரை, ஃப்ளவர் வாஸில் பூத்திருந்தது. சோபாவில் உட்கார்ந்து கொண்டிருக்கும் பொழுது ஏதோ ஒரு பூனை மடியில், உட்கார்ந்திருப்பதுபோல் ஒரு கூச்சம் ஏற்பட்டது. குருமூர்த்திக்கு அந்த வீட்டின் செழிப்பு வியப்பைக் கொடுத்தாலும், அந்த செழிப்பு தனக்கும் வேண்டும் என்கிற ஆசை



ஏனோ வரவில்லை; தன் வீட்டைச் சுற்றியுள்ள சுகம், அந்த பரந்த கொல்லைப்புறம், அது கொடுக்கும் குளுமை இந்த நாலு சுவர்களுக்குள் வரவே வராது என்று தோன்றியது. சாமிநாதன் வீட்டில் குலோப் ஜாமூன் கொடுத்தார்கள். ஒன்று சாப்பிட்டு முடிந்ததும் இன்னொன்று போட்டார்கள். அதையும் சாப்பிட மறுபடி வேண்டுமா என்று கேட்டார்கள். 'அந்த புள்ள பன்னி மாதிரி திங்கறான்' என்று பிற்பாடு சொல்லிவிடுவார்களோ என்று குருமூர்த்தி பயந்தான். தயவு செய்து வேண்டாம் என்று வேகமாக மறுத்தான்.

"ஏன்? குலோப் ஜாமூன் பிடிக்காதா?" சாமிநாதன் அம்மா கேட்டாள்.

"ரொம்பப் பிடிக்கும். ஆனா, ரெண்டுக்கு மேல சாப்பிட முடியலையே"

"ஒரு பாட்டில்ல போட்டுத் தரேன், வீட்டுக்கு எடுத்துட்டுப் போறியா?" குருமூர்த்தி பேசாதிருந்தான். அதை, அந்த அம்மா 'சரி' என்பதாய் எடுத்துக் கொண்டாள். ஒரு ஹார்லிக்ஸ் பாட்டிலில் இருபது அடைத்துக் கொடுத்தாள். எதற்குத் தன்மீது இவ்வளவு அன்பு என்று குருமூர்த்தி நினைக்க, "யாரோ கொண்டு வந்து கொடுத்தது எங்க வீட்ல யாரும் சாப்பிடவேயில்லை. நானும் ரெண்டு மாசமா சாப்பிடுங்கடா, சாப்பிடுங்கடான்னு கெஞ்சறேன். ஒருத்தன் கூட காதுல போட்டுக்கவேயில்லை. குலோப் ஜாமூன் கெட்டே போகாது. ஜீரால இருக்கற பொருள் இல்லையா? நன்னா ஊறி எப்படியிருக்கு பார்."

அந்த குலோப் ஜாமூன் பாட்டில், வீட்டிற்கு வந்ததும் மூன்றே நிமிடத்தில் தீர்ந்து போய்விட்டது. அண்ணா, அப்பா, தம்பி என்று எடுத்துக் கொள்ள அம்மாவுக்கு ஒரே ஓர் உருண்டைதான் கிடைத்தது.

"எப்பவும் அவன் வீட்ல ஏதாவது ஸ்வீட் இருக்கும்" என்று குருமூர்த்தி பெருமையுடன் சொல்ல, 'ரொம்ப பணக்காரரா?' என்று அம்மா கேட்க, சாமிநாதனுடைய பணம் முதன்முதலில் குருமூர்த்தியைத் தாக்கிய விஷயம் அதுதான். கிரிக்கெட் மாட்ச் பற்றிய வீடியோ படமொன்று பார்க்கப் போய் அங்கு குலோப் ஜாமூன் தின்ற பிறகு, அந்த வீட்டிலுள்ளோர் அன்பை குருமூர்த்தியால் மறுக்க முடியவில்லை. அது அன்பா, அன்பில்லையா என்கிற சந்தேகமெல்லாம் அவனுக்குள் எழவேயில்லை. என் வீட்டில் அப்படி உபசரிக்க முடியாது. சாமிநாதன் வீட்டில் உபசரித்தார்கள். அப்படி உபசரித்ததற்கு நன்றியாய்த்தான் சாமிநாதனோடு குருமூர்த்தி பழக ஆரம்பித்தான். மற்றவன் செய்கிற சின்ன உதவி கூட குருமூர்த்திக்குப் பெரிதாய்ப் படுவது கூட இதற்குக் காரணமாக இருக்கலாம்.

கல்லூரி காம்பௌண்டில் எப்போது சந்தித்தாலும் 'சாமிநாதா' என்று ஒரு கூவலுடன் குருமூர்த்தி அவன் அருகே சென்று நிற்பது வழக்கம். சாமிநாதன் எது பேசினாலும் 'ஹா'வென்று கேட்டுக் கொண்டிருப்பது வழக்கம். சாமிநாதன் மிகவும் நல்லவனென்று ஓர் எண்ணம், எதன் பொருட்டோ குருமூர்த்திக்கு வந்துவிட்டது. சாமிநாதனுடைய அண்மை, அவன் பேச்சு எல்லாம் சந்தோஷத்தைக் கொடுத்தன. அந்த சந்தோஷத்திற்கு குருமூர்த்தியின் வறுமையும், வளர்ப்பும் காரணம்.

சாமிநாதனுக்கு எப்பொழுதும் ஓர் அடைப்பக்காரன் தேவையாய் இருந்தது. அவனுக்கு வேலை செய்ய, ஓர் உதவியாள் அவசியமாக இருந்தது, அந்தக்காலத்தில் ராஜாவின் வெற்றிலைப் பெட்டியை அக்குளில் இடுக்கிக்கொண்டு அவ்வப்போது வெற்றிலை மடித்துத் தந்து, ராஜா சொன்னதற்கெல்லாம் ஆமாம் போடுகிற அடைப்பக்காரனைப்போல ஓர் ஆள் தேவையாக இருந்தது. அடைப்பக்காரன் விசுவாசமாக இல்லாது போனால், ராஜாவின் வீடும் ஆட்டம் கண்டு



விடும். குருமூர்த்தியினுடைய விசுவாசம் சாமிநாதனுக்குப் பிடித்திருந்தது.

"குருமூர்த்தி பான்பராக் வாங்கிட்டு வாடா" என்று பத்துரூபாய் நீட்டி, இரண்டு பொட்டலம் பான்பராக் வந்ததும் சில்லறையை வேண்டாமென்று சொல்லிவிடுவான். அந்த சில்லறையை அம்மா, குருமூர்த்தியின் பேண்ட் பாக்கெட்டிலிருந்து எடுத்து, வேறெதாவது வீட்டுச் செலவுகளுக்குப் பயன்படுத்திக் கொள்வாள்.

"வெறும் பொங்கலாருக்கே, மிளகு வாங்கிப் போடலாமேன்னு உன் பாக்கெட்லேர்ந்து ரெண்டு ரூபா எடுத்தேன். ரெண்டு ரூபாய்க்கு இருபது மிளகுதான் எண்ணித் தரான்" அம்மாவும் ஏது இரண்டு ரூபாய் என்று கேட்டதில்லை. நட்பு என்பது உபயோகத்தோடு சம்பந்தமாகிவிட்டால், உபயோகம் தீர்ந்ததும் முறிந்துவிடும். குருமூர்த்தி, சாமிநாதன் நட்பு முறியாததற்குக் காரணம் பரஸ்பரம் அவர்கள் உபயோகமாக இருந்தார்கள் என்பது மட்டுமே.

இந்த விசித்திர நட்பு நெருக்கமாக, ஒரு விஷயம் நடந்தது. பி.எஸ்ஸி., ஜுவாலஜி படிக்கும் செந்தமிழரசி, பாரதியார் பற்றிய கவிதை ஒன்றை சென்னைக் கல்லூரியில் போட்டிக்கனுப்பி, அதில் முதல் பரிசு வாங்கி, அந்த முதற்பரிசான ரூபாய் நூற்றைம்பதும், ஒரு பாராட்டுப் பத்திரமும் பலத்த கைதட்டல்களுடனே மேடையில கொடுக்கப்பட்டன.

கல்லூரி முதல்வர் செந்தமிழரசியைப் பாராட்டிப் பரிசைக் கொடுப்பதோடு நிற்காமல் "ஒரு பொட்டப்புள்ள மெட்ராஸுக்குப் போயி கவிதை படிச்சு, பரிசு வாங்கிட்டு வந்துடுச்சு. மத்தபசங்கள்ளாம் என்னடா பண்றீங்க? தியேட்டர்ல போயி கெட்ட படம் பார்க்கறதோடு சரி. ஏதுனா செய்யுங்கடா" என்று உசுப்பேற்றிவிட்டார். அத்தோடு நிற்காமல் செந்தமிழரசியை அருகே அழைத்து, முதுகைத்

தட்டிக் கொடுத்தார் முதல்வர். கை செந்தமிழரசியின் முதுகில் பட்டவுடன், "கிழவா தொடாதே" என்று சாமிநாதன் கத்தினான்.

"யார் கத்தியது?" என்று முதல்வர் சீறியும் சாமிநாதனை யாரும் காட்டிக் கொடுக்கவில்லை.

"அந்த இடப் பக்கத்திலேர்ந்துதான் குரல் வந்தது. அந்த இடப் பக்கத்தில இருக்கிற எழுபத்தைஞ்சு பேரைத் தவிர மத்தவங்கள்ளாம் க்ளாஸுக்குப் போகலாம்" என்று முதல்வர் உத்தரவிட, சாமிநாதனுக்காக அந்த எழுபத்தைந்து பேரும் தண்டனை பெற்றுக் கவலைப்படாமல் நின்றார்கள். முதல்வர் நகர்ந்து போனதும் அந்த ஹாலிலேயே உட்கார்ந்தார்கள்.

"ஏண்டா, இந்த செந்தமிழரசிக்கு எவன் பரிசு கொடுத்தான்? அப்படியே பரிசு வாங்கினாலும் அது வூட்டோடயே வச்சுக்க வேண்டியதுதானே. எதுக்கு காலேஜுக்கு வந்து அலட்டுது? லஞ்ச் அவர்ல அது பாராட்டுப் பத்திரத்தைப் பார்த்துட்டுத் தரேன்னுவாங்கி, கிழிச்சுப்போட்டுடலாமா?" சாமிநாதன் ஆத்திரத்தோடு கேட்டான்.

"வேணாம், அதுமட்டும் வேணாம்" குருமூர்த்தி அவசரமாய் மறுக்க, பல நண்பர்கள் குருமூர்த்தியை ஆமோதித்தார்கள்.

"அந்த பிரின்ஸி மாங்கொட்டைத் தலையன் என்னைக்கு வெள்ளை சட்டை போட்டுட்டு வரான்னு பார்த்து, அன்னைக்கு முதுகுக்கு இங்க் ஊத்திடுவோம்" வேறொருவன் வேறொரு வழிகாட்ட அதுவும் மறுக்கப்பட்டது.

"எதுனா பழிவாங்கியே ஆகணும்" சாமிநாதன் தரையிலடித்துச் சீற்றம் காட்ட, நண்பர்கள் யோசித்தார்கள்.

"அந்த பிரின்ஸ், மாங்கொட்டைத் தலையன் கவிதை எழுத முடியாதான்னு கேட்டான். பொட்டப்புள்ளை எழு



திடுச்சே, நீங்கள்ளாம் வெட்கப்பட வேண்டாமான்னு கேட்டான். அவன் கேட்டதுக்குப் பதில் தரணுமே தவிர, இங்க் ஊத்தறதுல என்ன புண்ணியம்?

"என்னடா செய்யணுங்கற?"

"கவிதை எழுதணும், நம்ம ஆள்ல எவனாவது ஒருத்தன் கவிதை எழுதி, நாளை காலைல மேடை ஏறிப் படிக்கணும். கவிதை நல்லாருந்தாலும், நல்லா இல்லாவிட்டாலும் நாமெல்லாம் ஒண்ணா கைதட்டணும். அந்த மாங்கொட்டைத் தலையனும் கைதட்டுவான் பாரு, அப்ப அவன் எதிரே திரும்பி. வாசிச்ச கவிதையை சுக்குநூறா கிழிச்சுப் போடணும்."

"சபாஷ் எங்களுக்கு கவிதை எழுதத் தெரியும். மெட்ராசுக்கு அனுப்பி பரிசு வாங்கவும் தெரியும். ஆனா, நாங்க அதையெல்லாம் செய்யறதில்லை. அது பொட்டைப் புள்ளைங்க சமாச்சாரம். எங்க வேலை, கெட்டபடம் பாக்கறதுதான்னு சொல்லாது சொல்லிடணும்."

"நல்லாருக்கு இந்த ஐடியா. யார் கவிதை எழுதறது?"

"குருமூர்த்திதான்."

"நான் எழுதின கவிதையை நானே எப்படி கிழிப்பேன்?" குருமூர்த்தி கவலையுடன் கேட்டான்.

"ஒரு காபி எடுத்து வச்சுக்க பிரதர். நாம கிழிக்கறது ஒரு ப்ரொடஸ்ட் மாதிரிதான். எங்களுக்குக் கவிதை எழுதத் தெரியும்னு காட்டத்தான். உனக்கு கிழிக்க மனசு வரலேன்னா, சாமிநாதன்கிட்ட கொடு. அவன் கிழிச்சுப் போடுவான்."

"சரியா வரலியே, குருமூர்த்தி கவிதை படிச்சு, அதை சாமிநாதன் கிழிச்சுப் போட்டா மேட்டர் தப்பாயிடும். யார் படிக்கறானோ அவன்தான் கவிதையை கிழிச்சுப்போடணும்.

குருமூர்த்தி நீ கவிதையைக் கிழிச்சுப் போடுறா, நாங்க பார்த்துக்கறோம்.''

''மாங்கொட்டைத் தலையன் எனக்கு மெமோ கொடுத்து சஸ்பெண்ட் பண்ணிட்டா?''

''அந்தாளுசெய்தாலும் செய்யலாம்.பாக்கறதுக்குபையன் இளக்காரமா இருந்தா, கூப்பிட்டுக் கூப்பிட்டு மிரட்டுவான். 'அப்பாவைக் கூட்டிட்டு வா, அம்மாவைக் கூட்டிட்டு வா'ன்னு மிரட்டுவான். ஆனா கவிதையைக் கிழிக்கல.... ப்ரொடஸ்ட் பண்ணினா மாதிரி ஆகாது. நமக்கு கவிதை முக்கியமில்லை. ப்ரொடஸ்ட்தான் முக்கியம். சாமிநாதா, நீயே படிச்சு நீயே கிழிச்சுடேன்.''

''கவிதை யார் எழுதறது?''

''குருமூர்த்திதான்.''

''குருமூர்த்தி எழுதின கவிதையை நான் படிச்சு, நான் எப்படிக் கிழிப்பேன்?''

''அது நீ எழுதின கவிதைதான். என்ன குருமூர்த்தி நம்ம மானத்தைக் காக்க குருமூர்த்தி செமத்தியா பாரதி யார் மேல கவிதை எழுதி சாமிநாதன்கிட்ட கொடுத்து டணும். சாமிநாதன் அதைப் படிக்கிறபோது நாம வரிக்கு வரி கைதட்டணும். நாம கைதட்டறத பார்த்துட்டு செந் தமிழரசி உள்பட எல்லா பொண்ணுங்களும் கைதட்டணும். பொண்ணுங்க கைதட்டினா மாங்கொட்டைத் தலையனும் கைதட்டுவான். கவிதை படிச்சு முடிஞ்சதும் சாமிநாதன் முதுகை தட்ட வருவான். தொடாதேன்னு எல்லாரும் கத்தணும். இந்த தடவை எல்லாரும் கத்தணும். நாம கத்தி முடிஞ்சதும், சாமிநாதன், தான் படிச்ச கவிதையை நூள் நூளாகக் கிழிக்க, மேடையிலேயே பறக்க விட்டுட்டு வரணும். அந்த செய்கையை ஆதரிக்கறபடியாவும், செட்ட படத்துக்குப் போவோம்னு சொல்ற மாதிரியும், டபுள்



டெக்கர், டபுள் டெக்கர்ன்னு கத்தி எல்லாரும் கைதட் டணும்.''

''டபுள் டெக்கர்ன்னா என்ன?'' குருமூர்த்தி அப்பாவி யாய்க் கேட்டான்.

''வால் போஸ்டரே பார்க்கறதில்லையா நீ. நம்மூர்ல பத்து நாளா ஒரு படம் ஓடுது. நடுல சுபக்குன்னு படத்தை நிறுத்திட்டு வேற படத்தை ஓட்றான். டபுள் டெக்கரே ஒரு மாதிரி படம். அதுல, நடுல போடற படம் இருக்கே செம ஆக்ஷன். ஒவ்வொரு நாளைக்கும், ஒவ்வொரு பிட் புதுசா போடறானா, இனம் கூட்டம்.''

குருமூர்த்திக்கு கவிதை மறந்துபோய், பாரதி மறந்து போய் டபுள் டெக்கர் ஒட்டிக் கொண்டது. அதற்கு என்ன அர்த்தம் என்று மனது யோசனை செய்தது.

''குருமூர்த்தி நீ சாயங்காலத்துக்குள்ள பாரதியாரை பத்தி ஒரு கவிதை எழுது.''

நண்பர்கள், எவர் உத்தரவுமின்றிக் கலைந்து போனார்கள். குருமூர்த்தி வகுப்புக்குப் போகாமல் பஸ் பிடித்து வீட்டுக்குப் போனான். என்னடா சீக்கிரம் வந்துட் டேன்னு அம்மா கேட்டதற்குக் தலைவலி என்று பதில் சொன்னான். ஒரு எண்பது பக்க நீள நோட்டை அக்குளில் இடுக்கிக்கொண்டு, பேனாவைச் செருகியபடி கொல்லைப் புறம் நடந்தான். மாமரத்தின் வேர்க்குழியில் அமர்ந்து, முதுகை மரத்தில் சாய்த்துக் கொண்டான். இந்த வெயி லிலும் இந்தத் தோப்பு குளுமையாக இருக்கிறது என்ற வாசகம் மனதில் ஓடிற்று. தோப்பு என்கிற வார்த்தை குயில் தோப்பு என்ற வார்த்தையை நினைவுபடுத்தியது. குயில் தோப்பு பாரதியாரோடு சம்பந்தப்பட்ட இடம் என்று தோன்றியது. புதுச்சேரியிலுள்ள குயில் தோப்பின் மாங் களை வெட்டி, எல்லைக்கல் நட்டு, ப்ளாட் போட்டு விற்கி றார்கள் என்கிற செய்தியைப் படித்ததும் ஞாபகம் வந்தது.

அந்தக் குயில் தோப்பை விற்கக் கூடாதென்று யாரோ ஒரு கம்யூனிஸ்ட் தோழர், கூட்டத்தில் பேசியது நினைவுக்கு வந்தது. புதுச்சேரியிலேயே பிறந்து வளர்ந்தாலும், பாரதியாரின் குயில் தோப்பைப் பார்த்ததில்லை. அது சித்தானந்த சுவாமி கோயிலுக்கு அருகே இருக்கிறதாய்க் கேள்விப்பட்டிருந்தான். குயில் தோப்பை நேரில் பார்த்தால் தான் கவிதை வரும் என்று எண்ணினான். விசுக் விசுக்கென்று சித்தானந்த சுவாமி கோயிலை நோக்கி நடந்தான்.

உச்சிவெயில் தலைதாக்கி உடம்பெல்லாம் சூடு பரப்பியது. முதுகு முழுவதும் வியர்வை ஆறாய் ஓடியது. கடற்காற்றில் நிரந்தரமாய் ஒரு பிசுபிசுப்பு இருந்தது. தொலைவில் சித்தானந்த சுவாமி கோயில் தெரிந்தது ஓர் இடுகாட்டைத் தாண்டிப் போக வேண்டியிருந்தது. இடப் பக்கம் கிறிஸ்தவப் பள்ளிக்கூடம். பள்ளிக்கூடத்தின் மஞ்சள் நிற காம்பௌண்ட் சுவர் கோயில் வாசலிலுள்ள பெட்டிக் கடைக்குப் போய், குயில் தோப்பு எங்கே என்று கேட்ட பொழுது, இடப் பக்கம் சுட்டிக் காட்டினார்கள். அது தோப்பு இல்லை. தோப்பாக இருந்த இடம். இப்பொழுது விரல் விட்டு எண்ணக்கூடிய செழுமையற்ற மாமரங்களே சில இருந்தன. மாமரம் தாண்டியுள்ள செம்மண் பூமியில், சுனை போன்ற ஒரு வறண்ட பள்ளம் இருந்தது. சுனைக்கும், தோப்புக்கும் இடையேயுள்ள இடத்தைக் கல் நட்டு, வீடு கட்டுவதற்கான இடங்களாய்ப் பிரித்துவிட்டார்கள் என்பது சுலபமாய்ப் புரிந்து போயிற்று. அப்படிக் கட்டுவதற்காக மரங்களை வெட்டியிருக்க வேண்டுமென்பதும் புரிந்தது. காடழித்து நாடாக்குவது ஒரு காலத்தில் தர்மச் செய்கை. இப்போது காடு வளர்ப்பது முக்கியமான விஷயம்.

ஜனங்களுக்கு கவிதையெல்லாம் முக்கியமேயில்லை. மொழி, மதம், கடவுள் என்று அவன் கண்டுபிடித்த நல்ல விஷயங்களைப் பற்றிக் கருத்தேயில்லை. எல்லாவற்றையும் எப்படிக் காசாக்குவது என்பதுதான் முக்கியமென்று மனிதன்



கருதுகிறான். மொழியால் என்ன லாபம் என்றுபார்க்கிறான். கடவுளால் காசு உண்டாக்க யோசிக்கிறான். மதத்தை எங்கு, எப்படி விற்பது என்று திட்டமிடுகிறான். மனிதன் உடம்பால் வாழ்கிறவன். சுகம் என்பதை உடம்பு சுகமென்று கருதுகிறவன். வயிறுபசித்திருப்பதும், உடல் பசிக்கு அலைவதும் அப்படி அலைகிற உடம்புக்கு உடுத்துக் கொண்டு பார்ப்பதும், உடம்புக்குச் சௌகர்யம் தரும் கார், பங்களா வகைகளை அதிகரித்துக் கொள்வதுமே வாழ்க்கை என்று கருதுகிறான், அதற்கு மட்டும் புத்தியை உபயோகப்படுத்துகிறான். அப்படி உபயோகப்படுத்துகிறவனே புத்திசாலி என்று பெயரெடுக்கிறான். அப்படி சம்பாதிக்காதவன் முட்டாள் என்று கருதப்படுகிறான். அப்படி நினைக்கிற நிறைய பேருக்கு சரித்திரம் தெரியவேயில்லை. இந்த உடம்பை ஒரு நொடியில் மரணம் கொண்டுபோய்விடும். என்று புரியவேயில்லை. தடுக்கி மல்லாந்து விழ, தலையில் கல்பட்டாலும் இறப்பு நேரிடும் என்கிற மெய்மை புரியவில்லை. தான் மட்டும் நெடுங்காலம் வாழ்வோம் என்கிற நம்பிக்கைதான் இவனுக்குச் சுகத்தைத் தேட வைக்கிறது. சோறு தேடுவதே நிறைய பேருக்கு வாழ்க்கையாகிவிட்டது. 'தேடிச் சோறு நிதம் தின்று', என்கிற பாரதியை யாருக்கும் புரியவேயில்லை. 'நிதம் தின்று' என்கிற பாரதியின் அலுப்பும் புரியவில்லை. தினசரி தினசரி சோறு கொட்டிக் கொண்டே ஆக வேண்டும்' ஒரு நாள் சோறு இல்லையென்றாலும் மனுஷனுடைய சுகம் செத்துப்போய் விடும். சோறுதான் வாழ்க்கை. வாழ்க்கை முழுவதும் சோறு. மனிதனுடைய புத்தியை, ஞானத்தை, இயற்கை வயிற்றில் கட்டிப் போட்டிருக்கிறது. எல்லாக் கண்டுபிடிப்புகளும் சோறு தேடுதல்களுக்கான உத்திகள். ஆனால், எத்தனை தின்றாலும் செத்துப்போவது என்பது உறுதியாகிவிட்டது. சாவை மறக்கத்தான் பல சுகங்கள் வேண்டியிருக்கிறது. அந்த மரணத்தின் வேதனையைத்தான் பாரதி குயில் பாட்டில் பாடியிருக்கிறான். போன பிறவி, இந்தப் பிறவி வரும் பிறவி, என்று பாடியிருக்கிறான்.

பிறவி பிறவியாய் சோறு தேடுதலே தொடர்கிறது. உண்ணுதலற்றுப் பிறவி என்பது இல்லை. சோகமும், துக்கமும் ஜென்மமாய்த் தொடர்கின்றன. இதை எப்படித் தடுப்பது என்கிற எண்ணம்கூட எவருக்குமில்லை. பாரதியின் கவலை குயில் பாட்டாய் இருந்திருக்கிறது. அந்தக் கவலையை இந்தத் தோப்பு கொடுத்திருக்கிறது. தன் கவலையைக் கவிதையாக்கின பாரதியை, கண்ணாடிச் சட்டம் போட்டு ஓரமாய் வைத்துவிட்டார்கள். யோசிக்கிறவனைப் பற்றி அதிகம் யோசிக்காதே என்று புறக்கணித்துவிட்டார்கள். ஒரு சரித்திரத்தை மறக்கவே மக்கள் வேறொருவர் சரித்திரத்தைப் பிடித்துக் கொள்கிறார்கள். மொஸார்ட் என்கிற கலைஞன் முப்பத்தி இரண்டு வயதிற்குள், ஐரோப்பாவின் புதிய இசை அலை வீச்சை உருவாக்கினான். அவன் உபயோகித்த ஒவ்வொரு பொருளும் இன்றும் கண்காட்சியில் வைக்கப்பட்டிருக்கின்றன. அவன் வீடு அரசாங்கத்திற்கு சொந்தமாகிவிட்டது. அவன் நடந்து திரிந்த தோட்டத்தில் புதிய ரோஜாச் செடிகள் நடப்படுகின்றன. மொஸார்ட்டின் இசையை காலம் மாறினாலும், மரபு மாறாமல் காத்து வருகிறார்கள். மேதைகளை வணங்குகிற குணம் மேல் நாட்டிலிருக்கிறது. அந்த அங்கீகரிப்பு ஒரு வளர்ச்சியான விஷயம் என்பது அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது. நமது நாட்டில் மேதைகளைக் கேலி செய்வதே வழக்கம். அவர்களுக்கு என்ன கெட்ட பழக்கம் உண்டு என்று முகர்ந்து பார்த்து, அதைப் பெரிதாக்குவதே சந்தோஷம்.

இந்தக் குயில் தோப்பு ஐரோப்பாவிலிருந்தால் ஒரு புல்கூட இடம் பெயர்ந்திருக்காது. ஆனால், தமிழர்கள் சுரணையாற்றவர்கள். காசு தேடவே கல்வி. காசு தேடவே மதம். மரண பயம் குறித்தே கடவுள். மொழி வெறியைத் தூண்டி, அதில் காசு சம்பாதித்தார்களே தவிர, மொழிக்கு எதையும் செய்துவிடவில்லை. பாரதிக்குப் பொட்டு இடுவதா வேண்டாமா என்பதுதான் பிரச்னை. மற்றபடி பாரதியின் எழுத்துகளைப் புரிந்து சொல்ல இங்கு எவருமில்லை. இதோ, குயில் தோப்பைக் காலம் தின்று கொண்டிருக்கிறது. இங்கே வீடுகள் வரும். இன்றைக்கு அரசியலில் யார் பெரியவரோ அவர் பெயர் வரும். இருக்கிற சில மரங்களும் வெட்டப்படும். தோப்பு இருந்த இடம் மொத்தமும் தார்ச்சாலை போகும். கட்டணக் கழிப்பிடம் கட்டப்படும். மிகப் பெரிய பேருந்து நிலையம் வரும். டீசல் புகை, நுரையீரல் தாக்கும். லாட்டரிச் சீட்டு விற்க, கத்திக்குத்து நடக்கும். கைது செய்தவனை விடுவிக்கக்கோரி பேரணி நடத்தப்படும். பேரணியில் போலீஸ் தடியடி நடக்கும். கண்ணீர்ப்புகை வீசப்படும். அப்போது அந்தத் தோப்பிலுள்ள குயில்களெல்லாம் வேறிடம் போகும். குயில்கள் உள்ள தோப்புக்கு எவனாவது ஒரு கவிஞன் போவான். வாழ்வின் அவலத்தைக் கவிதையாக்குவான். "தேடிச் சோறு நிதம் தின்று" வேதனையைக் கொட்டுவான். தன் வேதனையை வார்த்தைகளுக்குள் புதைத்து வைப்பான். அதை வேதாந்தமாய் விரித்துப் பொருளுரைக்க, ஏதேனும் இடமுண்டோ? என்று மற்ற புலவர்களைக் கேட்பான். சோலைக்குள்ளே அமர்ந்து இன்று பறவைகளைச் சுட, வேடர் வராத விருந்து நாள் என்பான். தத்துவக் கவிதை எழுதுவான். அவன் எழுதியது ஊருக்குப் புரியுமுன் செத்துப் போவான். செத்துப்போன பிறகே தமிழ்ச் சாதி, கவிஞனைக் கொண்டாடும். படம் திறந்து மாலை போடும். தெருவுக்குப் பெயர் சூட்டும் முச்சந்தியில் சிலை வைத்து, மாதம் ஒருநாள் சிலையின் முகம் மட்டும் கழுவி, மரப்படி அமைத்து மாலை போட்டு விட்டுப் போகும். அதற்குள் அவன் கவிதை எழுதிய சோலையை முற்றிலும் தகர்த்து, புகை கக்கும் தொழிற்சாலை வந்திருக்கும். மறுபடி குயில்கள் வேறு இடம் போகும். கவிஞன் குயில்களிருக்குமிடம் போய் நிற்பான்.

ஜென்ம ஜென்மமாய், பிறவி பிறவியாய் குயில் தோப்பும், கவிஞர்களும், குயில்களும் இடம் மாறிக்

கொண்டேயிருப்பார்கள். எந்தத் தோப்பில் எந்தக் கவிஞன் இருக்கிறான் என்று தமிழ் ஜாதி இனம் கண்டு கொள்வதே யில்லை. உண்மை பேசுபவன் உயிரோடிருக்கும்போது அவனை ஏற்றுக் கொள்வது தமிழ் ஜாதிக்குக் கடினமான காரியம். குருமூர்த்தி குயில் தோப்பு தாண்டி, செம்மண் பாதைவழியே நடந்து,மலஜலம் கழியப்பட்ட ரோடை வலம் வந்து, சுவாமிப்பிள்ளை தோப்புக்குப் போனான். சுவாமி பிள்ளை தோப்பில் ஓட்டு வீட்டுக்குள்ளே தறிபோட்டுக் கொண்டிருந்தார்கள். அங்கே சற்று நேரம் நின்று தறி நாடாவின் சத்தம் வாங்கினான். 'தறிநாடா, 'பாரதி... பாரதி... பாரதி' என்று மரக்கட்டையில் முட்டிக் கொண் டிருப்பதாகத் தோன்றியது. உள்ளே அந்த தறிக்கு இசைவாய் வார்த்தைகள் வந்து விழுந்தன. அந்தக் குயில் தோப்பில் முன்னும் பின்னும் அலையும்போது இது பாரதி நடந்த இடம், பாரதி அமர்ந்த இடம், இந்த சுனைப் பக்கம் பாரதி மல்லாந்து கிடந்திருப்பான் என்று ஒவ்வொரு இடத்தையும் தொட்டுக் கும்பிடத் தோன்றியது. 'ஹோ' என்று பாழ் நிலமாய் இருந்த இடத்தில் நிறைய பசு மரங்களும், கொடிகளும், புல் தரையுமாய் மனசு மாற்றியது. பாரதி இருந்தபோது இந்தத் தோப்பு எப்படி இருந்திருக்கும் என்ற நினைப்பில் ஒரு குளிர்ச்சி ஏற்பட்டது. ஒரு மாமரத்தின் கீழே சிறிய கரையான் புற்றருகே குருமூர்த்தி அமர்ந்து கொண்டான். நோட்டுப் புத்தகம் பிரித்தான். எழுதத் தொடங்கினான்.

முன்னைப் பழம் ஒருநாள் - எங்கள்
மூத்த பெருங் கவிஞன்
தன்னந்தனியனென - தோப்பில்
தானற்று இருக்கையிலே
கூவி அழைத்த குயில் – என்
கொல்லைப் புறத்திலிருந்து
மீண்டும் அழைத்ததுவாம் - நான்
மோனத்திருக்கையிலே



நேற்று உன் கரத்தில் - அந்த
மீசைக் கவிஞன் படம்
வண்ணத்தில் போட்டிருந்த - ஒரு
புத்தகம் பார்த்து விட்டேன்
எங்கவன் போனானென்று உனக்
கேதும் தெரியுமோடா?
பார்த்து நாளாயிற்று - கவி
பாரதி காணவில்லை.
ஆசைக்கு மீசை வைத்து - புதுவை
ஆட்களும் சுற்றுகையில்
தமிழ் தேசத்தில் மீசை வைத்த - என்
பாரதி கண்டதுண்டோ?

உயிர் மூச்சு உள்ளடக்கி – தினம்
ஓமென்ற குரல் ஒலியை
அயர்வின்றி சொல்லும் குயில் - இன்னும்
வாழ்வதில் வியப்பில்லையே.
ஆயினும் பாரதியை இந்த
ஆசைக் கருங்குயிலாள்
ஏன் இங்கு தேடுகின்றாள்
என்ற காரணம் புரியவில்லை.
யானை மிதித்ததினால் உடல்
வாதையில் படுத்திருந்து
மருந்துகள் புறக்கணித்து - நம்
பாரதி மறைந்து விட்டான்.
உள்ளது கவிதை மட்டும் - தமிழ்
அரசினர் போட்ட படம்
கடல் ஓரத்தில் பொம்மையொன்று - சிலர்
உள்ளத்தில் நினைவும் உண்டு.

குயில் தோப்பு அழித்து விட்டார் - சென்னை
வீட்டையும் விற்று விட்டார்.
ஞாபகம் கொள்வதற்கு பாரதி

பாட்டுகள் மட்டும் உண்டு.
அடி பேதைக் கருங்குயிலே - உன்னை
காதற் கருப் பொருளாய்
செய்த பாட்டுக்கு அர்த்தமென்ன - வேத
விஷயமென அவன் சொன்னதின்
சாரமென்ன?

பெட்டைக் கருங்குயில்தான் - ஒரு
கூவல் எடுத்துவிட்டு
சுற்றிப் பறந்ததுவாம்-என்னைப்
பார்த்துச் சிரித்ததுவாம்.
என் பாட்டிக்கு பாட்டியவள் - நம்
பாரதி கண்டவளாம்
எங்கள் கூட்டத்தில் சொன்ன கதை
இங்கு சொல்லவே நேர்ந்ததடா.
பாட்டியும் இறந்தொழிந்தாள் - அவள்
பாட்டியும் மறைந்து விட்டாள்.
இங்கு சேட்டது பாரதியை - அந்தக்
கூட்டத்தில் வந்த குயில்.
உடம்பென்ற பாரதியை நான்
உன்னிடப் கேட்கவில்லை.
இரும்பென உறுதி கொண்ட
ஒரு கவிஞனைத் தேடுகின்றேன்.
தோப்புகள் நாசமாகும்-கல்
வீடுகள் கரைந்தொழியும்
காலத்தின் கோலத்திலே -மலை
உச்சியும் மணற்பொடியாம்.
அட உணர்வுகள் சாகாதடா.
அது பரம்பரைப் பெருஞ் சொத்து- அந்த
பாரதி கவிஞனைப் போல்
ஏனிங்கு எவருமில்லை?
என்ன நடந்ததிங்கே-தமிழ்
சாதிக்கு நேர்ந்ததென்ன?



ஆயிரம் குயில்களுண்டு
கூவிக் கவி கதையுரைக்க.
கேட்கவும் மனிதரில்லை-வந்து
பேசவும் பொழுது இல்லை.
சித்தரின் கோயில் பக்கம்-உள்ள
தோப்புகள் போயிற்றென்றால்
குயில்களும் போய்விடுமோ-இல்லை
கவிதைகள் இறந்திடுமோ?
தோப்புகள் இன்னும் உண்டு-கூவி
இசைக்கவும் ஓர் கூட்டமுண்டு.
கேட்டு ஒளிப்பதற்கு அங்கே
நாலு தலைமுறையாய்-எங்கள்
கூவலை செவி மடுக்க-எந்தக்
குழந்தையும் வந்ததில்லை.
இயற்கையைப் புறக்கணித்து
வெறும் கரும்புகை நகரத்துள்ளே
கூட்டங்கள் நடத்துகின்றீர்-நீத்த
கடனெனப் பேசுகின்றீர்
மூச்சு திணற வைக்கும்-நகரக்
கூரைக்குள் ஆட்டம் கண்டு
பின்னர் தோப்புக்கு தனித்து வந்து
துணி தூக்கி மலங்கழிப்பீர்.
அட ஆயிரங் காலங்களாய்-நாங்கள்
கூவலை விட்டதில்லை-ஏய்
கேடு கெட்ட மனிதா-தமிழ்
பேச்சினில் மாற்றமென்ன!
நெஞ்சுக்குள் மொழி அடக்கி-தமிழ்
சாதிக்கு நீதி சொல்ல-வளர்
கல்வியில் தேர்ந்திருக்கும்-வர
கவிஞரைக்; காணவில்லை.
அந்திய மொழியினிலே வெறும்
ஆர்ப்பாட்டப் பேச்சு வைத்து

தமிழ் கண்ணியம் புறக்கணித்து
நீர் பாடுதல் நியாயமில்லை.
பாரதி நினைவுறுத்த பட்டி
மண்டபம் கூட்ட வேண்டாம்.
ஆளாளுக்கு காசு போட்டு-கல்
சிலையினில் தேட வேண்டாம்.
இன்னமும் கவிதை செய்வீர்-தமிழ்
தோய்ந்திட பாட்டிசைப்பீர்.
பரம்பரை சொத்து அது
தமிழ் வேதத்தைக்காத்திடுவீர்.
கொஞ்சம் தனித்திருந்து-எங்கள்
கூவலை செவிமடுத்தால்
உள்ளுக்குள் காதல் சிந்தும்
தமிழ் பாட்டினில் ஞானம் கூடும்.
எங்கள் கூவலைச் மறந்துவிட்டால்—வெறும்
கூச்சலே தமிழில் மிஞ்சும்.
குயில்களைத் தேடி வாரும்-தமிழ்
ராகத்தின் கருதி அது.
பாரதி போன்றதொரு தமிழ்க்
கவிஞனைத் தேடுகின்றேன்-மொழி
ஆசையில் மனமிருக்க
நல் மீசையில் முறுக்கு வரும்.
மீசை வளர்த்திடுவாய்-தமிழ்
ஓசையில் ஆசை வைப்பாய்
பாரதி உன்னுள் உண்டு-கொஞ்சம்
வேகத்தைக் கூட்டிடுவாய்.

பெட்டைக் கருங்குயிலாள்-கவி
சொல்லிப் பறந்துவிட்டாள்
இன்னொரு தோப்பு தேடி
அங்கே மோனத் தவமிருக்க
என்னுள்ளே வந்தநிந்த-ஞானப்
பெருங்கவிதை.



பாரதி நம்முள் உண்டு-அதை
மாய்த்திடப் போதல் நன்றோ?
மோனத் தவமிருப்பீர்-மொழி
சாதனை தினமும் செய்வீர்.
ஆயிரம் கவிதை நெய்வீர்
அது பரம்பரை சொத்து அன்றோ''

கவிதையை முடித்தபோது மனசு களைத்து, அந்தத் தோப்பிலேயே சுருண்டு படுத்துக் கொள்ளத் தோன்றியது. குருமூர்த்தி சுருண்டு படுத்துக் கொண்டான். பாரதி பாரதி என்று அழுதான். தமிழில் நிறைய கவிதை செய்ய வேண்டும் என்று அந்த மண்ணில் உறுதி செய்து கொண்டான். சிறிது நெற்றியில் பூசிக் கொண்டான். நீரில்லாச் சுனையை பாரதி என்று நினைத்து கைகூப்பிச் சுற்றி வந்தான். கவிதை நோட்டுடன் வீடு திரும்பினான்.

''கவிதை எழுதிட்டியாடா?'' மாலையில் சைக்கிள் பட்டாளமாய் நண்பர்கள் கேட்டுக் கொண்டே வீட்டுக்கு வந்தார்கள். சாமிநாதன் அரை நிமிடம் தாமதமாகி வந்தான்.

''உன் கவிதைய என் சொந்தக் கவிதையா படிக்கிறதுல உனக்கொன்னும் ஆட்சேபணையில்லையே?'' கேட்டான்.

''இல்லை'' குருமூர்த்தி அடிக்குரலில் பேசினான்.

''சத்தமா சொல்லு. ஆட்சேபணையில்லையே?''

''நிச்சயமா ஆட்சேபணை இல்லை. ஆனா...''

''என்ன ஆனா?''

''கவிதை நன்னா வந்திருக்குடா.''

''ஸோ வாட்....?''

''நானா எழுதினேன்னு எனக்கே தோன்றது''

"இப்ப என்னங்கற?"

"என் கவிதைய உன் சொந்தக் கவிதையா நீ மேடைல படி. ஆனா, கிழிச்சு போட்றாதே."

"உன் ஒரிஜினல் இருக்குல்ல?"

"என் கிட்ட இருக்கு. இது பாரதி பத்தின கவிதை. கவிதைய கிழிச்சுப் போட்டா பாரதியையே கிழிச்சுப் போடற மாதிரி எனக்குத் தோணறது."

"குருமூர்த்தி சென்டிமென்டலாய்ட்டான்டா."

"கவிதை எழுதறவங்க அப்படித்தான் இருப்பாங்க. அதைத் தப்பு சொல்ல முடியாது. ஆனா, நம்ம ஐடியா மாங்கொட்டைத் தலையனை வாரிக்கிறது. எங்களால கவிதையும் எழுத முடியும்; கெட்ட படம் போகவும் முடியும்னு காட்டறது. பத்து இருபது பொட்டப் பசங்க முன்னாடி, நம்ம கூட்டத்த கண்டமேனிக்கு வாரிக்கினான்ல ....அதுக்கு பழி வாங்கறது."

"குருமூர்த்தி, உனக்கது மறந்து போச்சா?"...ஒருவன் பேச, மற்றவன் முத்தாய்ப்பு வைத்தான்

"டேய்...வுடுங்கடா. நான் பேசிக்கறேன், குருமூர்த்தி! இந்த ஒரு தடவை கவிதைய கிழிக்கறதுக்கு அலவ் பண்ணு. அது உன் மனசுக்குக் கஷ்டம்தான். தயவு செய்து குருப்புக்காக இந்தத் தியாகத்த நீ செய்யணும். இதுக்குப் பிறகு உன் கவிதை எதையும் நான் கிழிக்கமாட்டேன்."

குருமூர்த்திக்கு அதன் அர்த்தம் புரியவில்லை. சரியென்று தலையசைத்தான்.

சட்டென்று சாமிநாதன் அவனைத் தோளுக்கு மேல் தூக்கிக் கொள்ள "குருமூர்த்தி...ஹிப்....ப். ஹுர்ரே.... குருமூர்த்தி ஹிப்...ப். ஹுர்ரே" என்று பலமுறை குதுக்கப்பட்டான். குருமூர்த்தியை அவன் நண்பர்கள் அப்படி தலை



மேல் தூக்கிக் கொண்டாடுவது அதுவே முதல் முறை. வீட்டுத் தோட்டத்தில் குருமூர்த்தி தன் கவிதையை வாசித்தான். நண்பர்கள் அசந்து போனார்கள்.

"கவிதையை கிழிக்க வேணாம்டா....மடிச்சு மாங்கொட்டைத் தலையன் முன்னாடி ஆட்டிட்டு வந்தா என்ன?" யாரோ ஒருவன் நெகிழ்ந்து கூற, எல்லாரும் சாமிநாதனைப் பார்த்தார்கள்.

"நோ...."சாமிநாதன்கிட்டத்தட்ட பிளிறினான். "தயவு செய்து நம்ம ப்ரோகிராம மாத்தாதீங்க. நம்ம அவமானப்படுத்தின அந்த பிரின்ஸிபால் மாங்கொட்ட தலையனை மறக்காதீங்க. இந்தக் கவிதைய கிழிக்கக் கூடாதுன்னா நான் கவிதை படிக்கிறதுக்கே வரலை. நாம் பட்ட அவமானம் நம்மகிட்டயே இருக்கட்டும். பழிக்குப் பழி வாங்க வேணாம்னு வுட்ருவம்."

பழி வாங்கியே தீரவேண்டுமென்று எல்லா நண்பர்களும் அபிப்பிராயப்பட்டார்கள். கவிதையைக் கிழித்து எறிந்த பிறகு டபுள் டெக்கர், டபுள் டெக்கர் என்று கத்த வேண்டுமென்று ஆசைப்பட்டார்கள்.

"மாங்கொட்டைத் தலையன் அப்படீன்னா என்னான்னு கேப்பான். கூட இருக்கற ஜிங்சாக் புரொபசர் அது லிட்டில ஓடற கெட்ட படம்னு அவன் காதுல சொல்வான். அந்த நேரமும் வுடக்கூடாது....பிரின்ஸி சாயந்தரம் தியேட்டருக்கு வரியான்னு கத்தணும். நாங்க கெட்ட படத்துக்குப் போவோம்டாங்கற மாதிரி அங்க கன்ஃபர்ம் பண்ணணும். நீ சொல்ற கவிதையெல்லாம் எங்களுக்கு கால் தூசுங்கற மாதிரி நடந்துக்கணும்."

சாமிநாதன் தன் முழு திட்டத்தை விளக்கி,கவிதையைப் பிரதி எடுத்துக்கொண்டு போனான். எல்லா நண்பர்களும் முன்னே போய்விட, அவன் மட்டும் குருமூர்த்தியை அனைத்

துக் கொண்டு நின்றான். வாசலில் நண்பர்கள் பணியடிக்க "நீங்க போங்கடா நான் வரேன்" என்று குரல் கொடுத்தான்.

"நீ செய்த இந்த உதவிக்கு நான் என்ன பதில் உதவி செய்வேன், குருமூர்த்தி? ஆனா, செய்தே ஆகணும். செய்யாட்டி துரோகம். என்னால முடிஞ்சது இதுதான். தயவு செய்து இத மறுக்காத வச்சுக்கணும்" ஓர் ஐம்பது ரூபாய் நோட்டை குருமூர்த்தி பையில் செருகினான்.

"ச்சிச்சி...என்னடா இதெல்லாம்..." குருமூர்த்தி நோட்டைத் திருப்பிக் கொடுக்க முயற்சி செய்தான். சாமிநாதன் அவனைத் தடுத்து நிறுத்தினான்.

"நான் ஒரு கவிதை பதிலுக்கு எழுதி உங்கிட்ட தர முடியுமா? அப்படி ஒரு புத்தி எனக்கு உண்டா? இந்தக் காசு உனக்கு வேணாம், குருமூர்த்தி! ஆனா, அம்மாவுக்கு வேண்டியிருக்கும். தயவு செய்து வாங்கிக்க."

குருமூர்த்தியால் மறுக்க முடியவில்லை. அம்மா அன்று காலையில் கூட துவரம் பருப்பு இல்லை என்று குறைபட்டுக் கொண்டாள். நாளைலேர்ந்து பருப்பில்லாத கொட்டு ரசம் தான் என்று அலுத்துக்கொண்டாள். சாமிநாதன் வெளியே போக, அந்தக் காசை குருமூர்த்தி அம்மாவிடம் கொடுத்தான்.

"ஏதுடா..." அம்மா வியப்போடு கேட்டாள்.

"சம்பாதிச்சேன்" என்று சொன்னான்.

எப்படியென்று அம்மாவும் கேட்கவில்லை. குருமூர்த்தியும் சொல்லவில்லை.

சாமிநாதன் கவிஞனில்லை. நல்ல நடிகன். இது நடிகர்களுக்கான காலம். கவிஞர்களுக்கான காலம் ஒன்று இருந்தது. அரசர்கள் கவிஞர்களை சரியாசனத்தில் வைத்து, மதித்



திருந்த காலம் ஒன்று இருந்தது. அப்போது நடிப்புக் கலைஞர்களைக் கூத்தாடிகள் என்று ஊருக்கு வெளியே குடிசை போட்டு தனித்து வைத்திருந்தார்கள். வறுமையின் காரணமாய் அந்த நடிப்புக் கலைஞர்கள், வேறு நீசத் தொழில்களுக்குப் போனதுண்டு அப்போதைய மரபு சமூகம் இதனால் கூத்தாடிகளை இன்னும் கேவலப்படுத்தியே வைத்திருந்தது. ஆனால் இது நடிகர்களுக்கான காலம். கூத்தாடிகளை இப்போது யாரும் அப்படிக் கூப்பிடுவதில்லை. அவர்கள் கேவலம் என்கிற எண்ணம் முற்றிலும் மாறிவிட்டது.

சாமிநாதன் எப்போது அந்தக் கவிதையை மனனம் செய்தான். யாருடைய உதவியால் அதை அப்படி படித்தான் என்று புரியவேயில்லை. வசனத்தை நீட்டி முழக்கியும், கவிஞனின் கூற்றை நேரிடையாகவும் இடைவெளி விட்டும், இடைவெளி விடாமலும் ஒரு கவியரங்கக் கவிஞன் போல சாதுரியமாய் படித்தான் அந்தக் கவிதை எழுதிய குருமூர்த்தியால்கூட அப்படி படித்திருக்க முடியாது.

ஹாலில் குழுமியிருந்த மாணவிகள் முதலில் சலசலத்திருந்தாலும் நாலாவது வரியில் சட்டென்று ஒன்றிவிட்டார்கள். குருமூர்த்தி அந்தக் கவிதையை அவர்கள் எப்படி ரசிக்கிறார்கள் என்று பார்த்துக் கொண்டிருந்தான். பார்க்கப் பார்க்க சந்தோஷம் பொங்கியது. பிரின்ஸிபாலுக்கு சாமிநாதன் கவிதை படிக்கிறான் என்றதும் சந்தேகம். அவனைப் பற்றி அவருக்கு ஒரு கணிப்பு இருந்தது

"இது உங்கவிதையா....இல்லை வேற யாருடையதாவதா....?" என்று மேடையேறியதும் கேட்டார். சாமிநாதன் அந்தக் கேள்வியை மிக அழகாக சமாளித்தான்.

"எங்கப்பா எழுதிக் கொடுத்த கவிதைன்னு நினைக்கறீங்களா.. எங்கப்பா ஃப்ரெஞ்ச் லெக்சரர் சார். அவருக்குத் தமிழ் சரியாத் தெரியாது. ஃப்ரெஞ்ச்ல தான் வீட்டுக் கணக்கே எழுதுவாரு"

புதுச்சேரியில் ஃப்ரான்ஸ் குடியுரிமை இருந்தவர்களுக்கு இன்னும் மதிப்பு இருந்தது. மரியாதை இருந்தது. பிரின்ஸி பால் சட்டென்று விலகிக் கொண்டார். சாமிநாதன் மைக்கை கண்டி கவிதையைப் பிரித்தான். மாணவர்களைப் பார்த்துக் கண்ணடித்தான். மாணவர்கள் ஹோவென்று சிரித்தார்கள். அந்தக் கவிதை படிக்கும் லட்சியத்தை சாமிநாதன் ஒரு கண் சிமிட்டலில் அவர்களுக்கு ஞாபகமூட்டினான். ஆனால், கவிதை படிக்கும்போது ஒரு தேர்ந்த நடிகன் போல சட்டென்று கூர்மையானான்.

''என்ன நடந்ததிங்கே-தமிழ்
சாதிக்கு நேர்ந்ததென்ன...''

அவன் ஓர் இடைவெளி கொடுத்து நிறுத்திய போது, மாணவர் கூட்டம் பெரிதாய் கைதட்டியது. தமிழ்த் துறையைச் சார்ந்த பேராசிரியர்களும் கைதட்டினார்கள்.

''துணி தூக்கி மலங்கழிப்பீர்'' என்று சொன்னபோது மாணவிகள் சிலர் முகம் சுளித்தாலும், பலர் வாய்விட்டு அந்த வரிக்குச் சிரித்தார்கள்.

''எங்கள் கூவலை மறந்துவிட்டால்
வெறும் கூச்சலே தமிழில் மிஞ்சும்
குயில்களைத் தேடிவரும்-தமிழ்
ராகத்தின் கருவே அது''

ஒரு பேராசிரியர் 'ஆஹா' என்று வியக்க, மாங்கொட்டைத் தலையர் அந்தப் பேராசிரியரை வியப்புடன் பார்த்தார்.

'பாரதி நம்முள் உண்டு-அது
மாய்ந்திடப் போதல் நன்றோ?''

இங்கும் சாமிநாதன் மிகச் சரியான ஓர் இடைவெளி கொடுத்தான். அந்தக் கல்வி அரங்கத்தில் தொக்கி நின்றது. ஒரு தமிழ்ப் பேராசிரியர் அவனைக் கைகூப்பி வணங்கினார்.



சாமிநாதன் கவிதையைப் படித்து முடித்தான். மாணவர் கூட்டம் இடைவிடாது கைதட்டியது. மாணவிகளும் கை தட்டினார்கள்.

''ஏய்....ஏ கிளாஸ் கவிதைடீ...'' ஒரு பெண் இன்னொரு பெண்ணிடம் சொல்வதை குருமூர்த்தி கவனித்துக் கொண்டான். கரவொலி அடங்கும் வரை சாமிநாதன் மைக்கை விட்டு நகரவில்லை. அடங்கியதும் மைக்கைப் பிடித்துக் கொண்டான்.

'டியர் ஃப்ரண்ட்ஸ், இந்தக் காலேஜ் பையன்களெல்லாம் பத்து பைசாவுக்குப் புண்ணியமில்லை. பொண்ணுங்கதான் பொயட்ரி எழுதி, ப்ரைஸ் வாங்குதுங்க. பையன்கள் கெட்ட படம் பார்க்கறாங்கன்னு நேத்து பிரின்ஸி சொன்னாரு. அதுக்கோசரமே ராத்திரியோட ராத்திரியா இந்தக் கவிதைய நான் எழுதினேன். யெஸ், நாங்க கெட்டபடம் பார்க்கறோம். அதே சமயம் எங்களால தமிழ் பொயட்ரியும் எழுத முடியும். இது பிரின்ஸாக்குப் புரியணும்கறதுக்காகவே இங்கே, என்னுடைய பொயட்ரிய படிச்சேன். ஸோ....இந்த பொயட்ரியோட பர்ப்பஸ் முடிஞ்சு போச்சு. தாங்க்யூ ஃபார் லிஸனிங். தாங்க் யூ ஃபார் யுவர் கார்டியல் சப்போர்ட். தாங்க் யூ வெரி மச் டு ஆல் பாய்ஸ் அண்ட் கேர்ள்ஸ்''

குருமூர்த்தியின் அந்தக் கவிதையை குறுக்காய், நெடுக்காய், சுக்கல் சுக்கலாய் கிழித்து மேடையில் குப்பையாகப் போட்டான். குருமூர்த்திக்கு நெஞ்சு வலித்தது. கண்களில் ஒரு சோக பாரம் ஏறியது.

'டபுள் டெக்கர்...டபுள் டெக்கர்...டபுள் டெக்கர்'' மாணவர்கள் இடைவிடாது திரைப்படத்தின் பெயரைச் சொல்லி கைதட்டினார்கள். மாணவிகள் அதைப் புரிந்து கொண்டு வெட்கப்பட்டார்கள். பிரின்ஸிபால் அதிர்ந்து போனார்.

கடந்துபோன சாமிநாதனை நிறுத்தி, ''என்ன இது'' என்று குப்பையைச் சுட்டிக் காட்டினார்.

''கவிதை....என் கவிதை'' கட்டை விரலால் தன் நெஞ்சு தட்டி சாமிநாதன் பெருமையுடன் சொன்னான்.

''அதைப் பொறுக்கி எடு'' பிரின்ஸிபால் கட்டளையிட்டார்.

''அதற்கு வேறு ஆளைப் பாருங்க'' என்று சாமிநாதன் அவர் பிடியை உதறி மேடையை விட்டுக் கீழே இறங்கினான். மாணவர்கள் பலமாய்க் கைதட்டினார்கள்.

வேறு ஒரு பேராசிரியர் சாமிநாதனை மடக்க முன்னேறிய போது, 'தொடாதே' என்று கூச்சலிட்டார்கள். ஆனால், பிரின்ஸிபால் யாரும் எதிர்பாராத ஒரு காரியம் செய்தார். கீழே கிடந்த குப்பைகள் எல்லாவற்றையும் அவரே பொறுக்கினார். அந்தக் குப்பைகளை இருகரங்களிலும் எடுத்துக் கொண்டார் அந்தக் கவிதைக் கிழிசல்களைக் கண்களில் ஒற்றிக் கொண்டார்.

''இந்தக் கவிதை அவருடையது. இதைக் கிழித்துப் போட அவருக்கு உரிமை உண்டு. ஆனால், இந்தக் காலேஜ் என்னுடையது. இதில் குப்பை போட எவருக்கும் உரிமையில்லை. நான் இந்தக் கல்லூரியை ஒரு தமிழ்க் கவிதையைப் போல நேசிக்கிறேன். இந்தக் கவிதைக் கிழிசலை தேர் செய்து நமது கல்லூரி விளம்பரப் பலகையில் மாட்டி வைப்பேன். மாணவர்கள் இதை மறுபடி படித்து மகிழலாம். இது ஒரு நல்ல கவிதை. இது ஒரு நல்ல கல்லூரி. இங்கே குப்பை போட்ட சாமிநாதனுக்கு ரூபாய் நூறு அபராதம். கட்டத் தவறினால் கல்லூரியிலிருந்து அவர் பெயர் நீக்கப்படும். மாணவர் சாமிநாதனின் கவிதைக்குப் பாராட்டும், அவர் நடத்தைக்குக் கண்டனமும் தெரிவித்துக் கொள்கிறேன்.



கெட்ட படங்கள் பார்ப்பதனுடைய வேதனையை' நான் இப்பொழுது சொல்லுவது புரியாவிட்டாலும் உங்கள் வாழ்க்கை உங்களுக்குக் கடுமையாகச் சொல்லித்தரும். வாழ்க்கை மிகக் குரூரமான ஆசிரியன். ஒழுக்கம் தவறியவர்களை அது தண்டிக்காமல் விட்டதேயில்லை. தண்டனைக்குப் பிறகு தான் புரியுமெனில், உங்களுக்கு என் வாழ்த்துகள்.'' குருமூர்த்திக்கு அவர் பேச்சு கேட்கையில் மனசு பிசைந்தது. ஐயோ...அது என் கவிதை என்று கூரலெடுக்க ஆசை வந்தது. பதினாறாகக் கிழிக்கப்பட்ட அவன் கவிதையை மிகக் கவனமாய் ஒன்றாக்கி கல்லூரி விளம்பரப் பலகைக் கண்ணாடி கதவுக்குப் பின்னே குத்தி வைத்த போது இது என் எழுத்து, என் சிந்தனை என்று கூவத் தோன்றியது.

''சத்தியத்துக்கு சொல்றேன்டி...இந்த சாமிநாதன் இதை எழுதியிருக்கவே மாட்டான். எங்கேயோ பத்திரிகைல வந்திருக்கும். யாராவது பெரிய கவிஞன் எழுதியிருப்பான். இவரு இங்க கொண்டாந்து, 'என்னுது'ன்னு படிச்சிட்டாரு.கவிதைய படிச்சிட்டு அவன் பேசினது பார்த்தியா....? ஒரு லோஃபர் மாதிரி பேசறவனால இப்படி கவிதை எழுத முடியுமா? இப்படிக் கவிதை எழுதினவன் அப்படிப் பேச முடியுமா? இதை சாமிநாதன் எழுதலேன்னு தெரிஞ்சுது... நான் அந்தப் பொறுக்கிய சும்மாவுடமாட்டேன். ஒரு கை உண்டு இல்லேன்னு பார்த்துருவேன்'' யாரோ ஒரு பெண் ரொம்ப தீவிரமாய் சாமிநாதனைத் திட்டினாள்.

நான் தாங்க எழுதினேன் என்று சொன்னால் பளீரென்று அந்தப் பெண் அறைவாளோ என்று குருமூர்த்திக்குத் தோன்றியது. மனசு ஏனோ புழுங்கிப் புழுங்கித் தவித்தது. யாரோடும், எது குறித்தும் பேசவே தோன்றாது போயிற்று. ஆனால், அன்று மாலையே சாமிநாதன் நூறு ரூபாய் அபாரதம் கட்டிவிட்டான். ''பயந்துட்டியாடா?'' என்று நண்பர்கள் கேட்டார்கள்.

"அதுக்கு வேற ஆளப் பாரு. நான் ஒருத்தன் குப்பை போட்டா நூறு ரூபா அபராதம். இப்ப காலேஜ் முழுக்க குப்பை போடப் போறீங்க. யார் குப்பை போட்டதுன்னு தெரியாமயே போடப் போறீங்க.எல்லாரும் உங்க நோட்ல மாங்கொட்டைத் தலையன், மாங்கொட்டைத் தலையன்னு முடிஞ்சவரை எழுதனும். எழுதினதை சுக்குச் சுக்கா கிழிச்சு காலேஜ் வராண்டா முழுக்க குப்பையா போடணும். இந்தக் குப்பையையும் அந்த பிரின்ஸிபாலே பொறுக்கட்டும்."

"ஒட்டு மொத்தமா எல்லாருக்கும் ஃபைன் போட்டா....? ஆளுக்கு அஞ்சு ரூபா அபராதம்னு தண்டனை விதிச்சா?"

"நீ போடலியே....நான் போடலியே....யாரோ ஒரு பேராசிரியர் பிரின்ஸிபால் நடவடிக்கை பிடிக்காம மாண வர்கள் செய்த மாதிரி செய்திருக்காரு. அவருக்கு உதவியா வேற சில பேராசிரியர்களும் இதில் கலந்திருக்கக் கூடும். இதுவே நடந்த உண்மை. சத்தியம். புரியுதா?" சாமிநாதன் கண்சிமிட்டினான். பையன்கள் அவன் புத்திசாலித்தனத் தைக் கண்டு ஆரவாரித்தார்கள்.

"நம்ம குருமூர்த்திய வுட்டு நூறு தடவை எழுதச் சொல்லு. அதை அம்பது காப்பி ஜெராக்ஸ் எடுத்து காலேஜ் முழுக்க கிழிச்சுப் போடலாம்" யாரோ ஐடியா கொடுக்க, குருமூர்த்திக்கு சொரேர் என்றது.

"ஆங்....அது தப்பு. கையெழுத்து கம்பேர் பண்ணி குருமூர்த்திய புடிச்சிருவாங்க. நம்மால ஒரு நல்ல பையன் பாழாகக் கூடாது. இந்தத் திட்டத்துல நான் குருமூர்த்திய சேர்க்கமாட்டேன். நம்ம குருமூர்த்தி ஒரு கவிஞன். நல்ல தொரு கவிஞன்.நான் நாயா அடிபட்டாலும் அடிபடுவேனே தவிர குருமூர்த்திய உசிரு போனாலும் காட்டித் தரமாட் டேன்."



குருமூர்த்திக்கு சந்தோஷப்படுவதா சும்மா இருப்பதா என்று தெரியவில்லை. ஆனால், சாமிநாதனை மிகுந்த நன்றியோடுதான் பார்த்தான். "ரொம்ப தாங்ஸ்டா" என்று அவன் கைதொட்டுப் பேசினான்.சாமிநாதன் அதைக் கண்டு கொள்ளவில்லை.

'யாரு மச்சி நூறுவாட்டி எழுதறது. என்னையும் வுட்டுரு. நானும் இதுல கலந்துக்கல" வேறொருவன் கழண்டு கொள்ள சாமிநாதன் அவன் சட்டையைக் கொத்தாய்ப் பிடித்தான்.

"எழுதல ...பின்னிடுவேன்."

"எழுதினா....?"

"பீர்"

"உய்...." என்று மாணவர் பட்டாளம் கூச்சலிட்டது.

கல்லூரி முடியும் நேரத்தில் தரையெங்கும் குப்பை பரப்பிவிட்டு வெளியே ஓடியது. பெரிய சைக்கிள் பட்டாள மாய் குருமூர்த்தி உட்பட கடற்கரை ஹோட்டலுக்குப் போயிற்று

"முப்பத்து மூணு பாட்டில் பீர். ஒரு குவார்ட்டர் பாட்டில் விஸ்கி" என்று சாமிநாதன் காசைக் கல்லாவில் கட்டி, ஆர்டர் செய்தான். இருபது பொட்டலம் உருளைக் கிழங்கு சிப்ஸூம், தனக்கு முந்திரிப் பருப்பு பொட்டலமும் வாங்கிக் கொண்டான்.

"குருமூர்த்திக்கு பீர் கொடுக்கலாமாப்பா?"

"வேணாம்னா அத என்கிட்ட கொடுத்துரு." யாரோ நாக்கைத் தொங்கவிட்டுப் பேச—

"கவிஞன் குடிக்கணும். குடிச்சாதான் கவிதை வரும். நம்ம கண்ணதாசன் குடிக்கலை? அவர் கவிதை எழுதலை?

பாரதி கூட கஞ்சா குடிச்சார்னு சொல்றாங்க. நீ பயப்படாத குடி குருமூர்த்தி" சாமிநாதன் உற்சாகப்படுத்தினான்.

'ஆனால், பீர் இவ்வளவு கசக்குமா? இந்தக் கசப்பையா இவ்வளவு சந்தோஷமாகக் குடிக்கிறார்கள்? மது இனிக்கும் என்றல்லவா நினைத்துக் கொண்டிருந்தேன்?' குருமூர்த்தி முதல் மிடறில் முகம் மாற—

"கசக்குதா. இந்தா முந்திரிப் பருப்பு. வாயில போட்டுக்க.... பேசர்.... இன்னொரு முந்திரிப் பருப்பு கொண்டா...."

குருமூர்த்திக்கு தனியே ஒரு தட்டில் முந்திரிப் பருப்பு கொண்டு வரப்பட்டது அந்தக் காரம் தொண்டையை எரிய வைத்தது. கமறல் கொடுத்தது. அரை பாட்டில் குடிக்க நெற்றிப் பக்கம் பொட்டருகே மெல்லியதாய் ஒரு கனம் கூடியது. கண்களில் ஒரு செருகல் ஏற்பட்டது.

தனக்கு சோடாவில் கலந்து கொடுத்த விஸ்கியை, சாமிநாதன் யாருக்கும் தெரியாமல் குருமூர்த்தியின் பீரில் கலந்து விட்டான். அந்த பீர் கசப்பில் ஒரு சுவை ஏற்பட, மீதி பாட்டிலை குருமூர்த்தி மடக் மடக்கென்று குடித்தான். குடி, கன்னம் இழுத்தது. கண்களைப் பெரிதாக்கியது. பேச்சைக் குழற வைத்தது. காதுகள் விறைப்பாயின. உடம்பில் ஓர் உற்சாகம் தொற்றிக் கொண்டது. மாங்கொட்டைத் தலையா என்று கத்தவேண்டும் போல் தோன்றியது. குருமூர்த்தி அவனை மீறி அவ்விதமே உரக்கக் கத்தி மேஜையில் ஓங்கி அடித்து, முந்திரிப்பருப்புகள் எகிற வாய் விட்டுக் கத்தினான். நண்பர்கள் அவனை விநோதமாய்ப் பார்த்தார்கள்.

"மாங்கொட்டைத் தலையா....அட
மாங்கொட்டைத் தலையா-நீ



மன்னிப்பு கேளு... ஏ....
மாங்கொட்டைத் தலையா..."

நண்பர்கள் கைதட்ட குருமூர்த்தி பாட்டு பாடினான்.

"தேங்கினெ குட்டை கம்ம காலேஜூ பேரு-நீ
ஊறின மட்டை வந்து மூஞ்சிவப்பாரு."

ஏதேதோ உளறினான். தள்ளாடினான். தடுக்கி விழுந்தான், புத்தகக் கட்டைத் தலையில் வைத்துக் கொண்டு டான்ஸ் ஆடினான்.

'கவிஞர் பீர்ல, லோக்கல் சரக்கைக் கலந்துட்டியா.'' யாரோ கண்டுபிடித்துக் கூவினார்கள். சாமிநாதன் அவர்களை அடக்கிவிட்டு குருமூர்த்தியைத் தன் சைக்கிள் முன்பக்கம் ஏற்றி...குடித்துவிட்டு குலுங்கக் குலுங்க சைக்கிளில் வந்தபின் குருமூர்த்தியால் இன்னும் நடக்க முடியவில்லை. உடம்பு இன்னும் குலுங்கிக் கொண்டேயிருந்தது. நடந்தாலும், நின்றாலும் எவர் தூண்டுதலுமின்றி வயிறு குலுங்கியது.

நேரே தன் போர்ஷனுக்குப் போய், சுவரில் ணங்கென்று முட்டிக் கொண்டான். அம்மா, அவனை ஆச்சரியத்துடன திரும்பிப் பார்த்து என்னடா என்று கேட்டாள்.

"தண்ணீ..."

"என்னது?"

"தண்ணி"

"என்ன தண்ணீ?"

"குளத்துத் தண்ணி, குழாத் தண்ணி, மீன் தண்ணி, பன்னித் தண்ணி" என்று குருமூர்த்தி குதித்தான்.

"என்ன எழவாச்சு உனக்கு?" அம்மா பல் கடித்தாள்.

"பேரெழவு.... ஊரெழவு.... நீயெழவு.... நானெழவு..." மறுபடி கவிதை மாதிரி கத்தினான்.

"குடிச்சுட்டு வந்திருக்கியா... கடன்காரா.... கொலை பண்றேன் வா உன்னை."

அம்மா கை ஓங்கினாள்.

"நீ போய் அழைத்து வாடீ...." குருமூர்த்தி பாட்டு பாடினான்.

"யாரை அழைச்சுண்டு வரணும் சனியனே....?"

"என் ஸ்வாமியை... சனியனே...."

"நீ போய் அழைத்து வாடீ..." மறுபடி பாட்டு பாடினான்.

அம்மா தடார் தடாரென்று வாசற்கதவை மூடினாள். அவன் சட்டையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய், பத்து தேய்க்கிற இடத்தில் அழுத்தி உட்கார வைத்தாள். பாண்ட்டும் சட்டையும் ஈரச் சொதப்பில் குருமூர்த்தி உட்கார்ந்தான். உடம்பில் பரவிய சூட்டுக்கு சில்லென்ற அந்தக் குளுமை அவனுக்குப் பிடித்திருந்தது.

"யார் தருவார் இந்த அரியாசனம்...." மறுபடி உரக்கப் பாடினான்.

"அப்பா வரட்டும். விளக்குமாத்தால விசிறச் சொல்றேன்."

அம்மா, அவன் தலையில் தவலை ஜலத்தைக் கவிழ்த்தாள். குருமூர்த்திக்குத் தெளிந்து போயிற்று. துக்கம் வந்தது. தூக்கம் வந்தது. சட்டையைக் கழற்றிவிட்டு ஈரப் பேண்டோடு கால் பரப்பி தூங்கினான். மேல் தளத்தில் காரை பெயர்ந்து ஓர் இடம் பெரிய தீவுபோல் தெரிந்தது.



அந்தத் தீவில் மலைகள் இருந்தன. மலைகள் ஓரம் தோப்புகள் இருந்தன. தோப்புகளில் குயில்கள் இருந்தன. அதில் ஒரு குயில் குருமூர்த்தியை நோக்கிப் பாடியது.

"காதல், காதல், காதல்,
காதல் போயின், காதல் போயின்
சாதல், சாதல், சாதல்"

குருமூர்த்தி அப்படியே தூங்கிப் போனான்.

## 3

ஆனால், இந்த முறை குப்பைகளை பிரின்ஸிபால் கையிலெடுக்கவில்லை. கண்ணில் ஒற்றிக் கொள்ளவில்லை. பாரதி கவிஞனை, குருமூர்த்தி என்கிற கவிஞன் நெஞ்சு நிறைந்து பாராட்ட, அதில் நெகிழ்ந்து போய் கவிதையை, தமிழை, பாரதியை மதிக்கும் வண்ணமாய், அவர் சாமிநாதன் கிழித்த குப்பையைக் கண்ணில் ஒற்றிக் கொண்டார். இந்த மாங்கொட்டைத் தலையன் என்கிற குப்பையை அவருக்கு வாரிப் போட மனம் வரவில்லை. மாறாய், கடும் கோபம் வந்தது. மறுநாள் காலை சீக்கிரமே வந்து, கல்லூரிக் கதவுகளை மூடச் சொன்னார். ஒவ்வொரு மாணவனின், தமிழ், ஆங்கில கையெழுத்துகள் குப்பைக் கிழிசல்களோடு ஒப்பிடப்பட்டன. முப்பத்து நான்கு பேரில் இருபத்தேழு பேர் கண்டுபிடிக்கப்பட்டனர். அப்படிக் கண்டு பிடிக்கும்போதுதான் தெரிந்தது... சாமிநாதன் நூறு முறை மாங்கொட்டைத் தலையன் என்று எழுதவேயில்லை.

சாமிநாதன் உள்ளே அனுப்பப்பட்டான். இருபத்தேழு பேர் வெளியே நிற்க வைக்கப்பட்டார்கள். மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்தால், உள்ளே போகலாம் என்கிற

கட்டளை வர்தது. இருபத்தேழு பேரும் எழுதிக் கொடுக்க மறுத்தார்கள். உள்ளே போனசாமிநாதன் என்ன ஆனானோ என்று கவலையாய் இருந்தது. உள்ளே போன சாமிநாதன் வகுப்பு வகுப்பாய் போய் மிரட்டினான்.

"இருபத்தேழு பேர் நம்ம ஸ்டூடண்ட்ஸ் வெளிய நிக்கறப்ப என்ன நினைப்பிலேடா க்ளாஸ் அட்டெண்ட் பண்றீங்க? வெளிய வாங்கடா. வெளிய வராதவன் சாயந்தரம் ஒழுங்கா வீடு போய் சேரமாட்டான். இந்த எச்சரிக்கை, கேர்ள்ஸுக்கும் சேர்த்துத்தான்" என்று கூச்சலிட்டான்.

பதினைந்து நிமிடத்தில் காலேஜ் மொத்தமும் வெளியே வந்தது. தெருவை அடைத்துக் கொண்டது. புதுச்சேரி போலீஸ் வாசலுக்கு வந்து நின்றது.

"என்ன விஷயம்?" என்று சாமிநாதனை விசாரித்தது.

"இது எங்களுக்கும் எங்க பிரின்ஸிபாலுக்கும் உண்டான தகராறு சார். வேற யாருக்கும், எந்தக் கெடுதலும் நாங்க பண்ணலை" சாமிநாதன் முன்னின்று பதில் சொன்னான்.

"தகராறு பண்றதா இருந்தா உள்ளே போய் பண்ணு. வெளிய நின்னு மறியல் பண்றதா இருந்தா, அரசாங்கத்துக் கிட்ட பர்மிஷன் வாங்கு" போலீஸ் இன்ஸ்பெக்டர் கடுப்பாய் சொல்ல...

"பர்மிஷன் தானே.... இதோ வாங்கறேன். வாங்கடா எல்லாரும் போய் மறியல் பண்ண பர்மிஷன் வாங்கலாம்."

ஆயிரத்து நூத்து நாற்பது மாணவர்கள் பெண்கள் உட்பட புதுச்சேரி சாலையில் முதல்வர் வீடு நோக்கி நடந்தார்கள்.

"என்னா கண்ணு... என்னாச்சு?" யாரோ கட்சித் தலைவர் விசாரிக்க...



"நம்ம தலைவரை கெட்ட வார்த்தைல பிரின்ஸிபால் பேசறான். தட்டிக்கேட்டா தவடைல அடிக்கிறான்." சாமிநாதன் தூண்டிவிட,

"யார்ரா அவன்?" என்று யார் யாரோ ஆடினார்கள். எது எதையோ நோக்கி கல்வீசினார்கள். தடார் தடாரென கடைகள் அடைக்கப்பட்டன. தெருவிளக்குகள் கல்பட்டு சிதறின. ஊர் ஜனங்கள் நாலா பக்கமும் ஓடினார்கள். ஒரு கவிஞன் எழுதின கைப்பிரதி புத்தகம்போல, கடற்கரை ஓரம் அமைதியாய் இருந்த பாண்டிச்சேரியின் சில பக்கங்கள் கிழிந்து தொங்கின. போலீஸ் லத்தி சார்ஜ் நடத்தியது. ஊர்வலம் முழுவதும் போலீஸ் மீதே கண் வைத்துக் கொண்டிருந்தது. குருமூர்த்தி அவர்கள் தடியோடு அணி வகுத்து நின்றதும் ஊர்வலத்திலிருந்து குறுக்கு சந்தில் புகுந்து, சேறு வாய்க்காலில் கால் வைத்துத் தாண்டி செருப்பும், காலும் பேண்ட் நுனியும் கரை படிய வீட்டு வாசலில் வந்து நின்றான்.

"இன்னிக்கும் குடிச்சுட்டு வந்திருக்கியா? சனியனே" அம்மா கத்தினாள்.

"இல்லம்மா... காலேஜ்ல கலாட்டா"

"இதென்ன கண்றாவி?" அம்மா, சேறு, படிந்த காலைச் சுட்டிக் காட்டினாள்.

"போலீஸ் லத்தி சார்ஜ் பண்றது. அதனால நான் குறுக்குத் தெருவுல பூந்து ஓடையைத் தாண்டி வீட்டுக்கு வரேன். பெரிய கலாட்டாம்மா" வேண்டுமென்றே மூச்சிரைத்தான்.

"நாமெல்லாம் ஏழைகள், குருமூர்த்தி"

"அதனாலென்னம்மா? இருபத்தேழு பேரை சஸ்பெண்ட் பண்ணப் போனா விட்ருவமா?"

"உன் போக்கு வர வர நன்னாவேயில்லை. நேத்திக்கு நீ குடிச்சிட்டு வந்தது பாத்து எனக்கு மனசே தாங்கலை. உங்கப்பாகிட்டச் சொன்னா, அவர் இடிஞ்சு போயிடுவார்ன்னு நான் சொல்லலை. நாமெல்லாம் குடிக்கலாமா, குருமூர்த்தி? இது அசிங்கமில்லையா? தலைமுறை தலைமுறையா வேத பாடமும் கோயில் பூஜையுமா இருக்கறவா இல்லையா? நாலடி உசரம். வில்வ மரம் சுத்தமா பட்டு போயிடுத்து. உங்க தாத்தா தினம் ரெண்டு கொடம் தண்ணி, அதைச் சுற்றி ஊத்தி சிவாஷ்டகம் சொல்லுவார். அதுக்கு முன்னாடி நின்னுண்டு மந்திரமாவது நீறுன்னு பாடுவார். பட்ட மரம் துளிர்த்துடுத்து தெரியுமோ? வில்வம் பட்டா பொழைக்கவே பொழைக்காது. அந்த மரம் எப்படி செத்துப் போகும், சாகவிடமாட்டேன் என்று மந்திரம் சொன்னவர் உங்க தாத்தா. நாம மரத்தை, மட்டையைக் கூட நேசிக்கிறவா. யாருக்கும் தெரியாம கூட கெடுதல் பண்ணக் கூடாதுன்னு நினைக்கிறவா. அப்படி தெரியாம பண்ண குத்தத்துக்கும் மனசார சாமிகிட்ட மன்னிப்பு கேட்கறவா. நாம குடிக்கலாமா குருமூர்த்தி? குடிச்சவனுக்கு புத்தி உண்டா? அன்பு உண்டா? அடுத்தவாளைப் பத்தி அக்கறை உண்டா? உனக்கு குருமூர்த்தின்னு ஆசை ஆசையா நான்தான்டா பேர் வைச்சேன். நாலு பேருக்கு நல்லது சொல்ற பிள்ளையா, அப்படி மனசிலயும், வாக்கிலயும் திறமை உள்ள புள்ளையா எனக்குப் பொறக்கணும்னு ஆசைப்பட்டேன். நீ உண்டாயிருக்கேன்னு தெரிஞ்ச அன்னிக்கு சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர் உபன்யாசம் போனேன். அப்பப்பா...என்ன குரல்...என்ன உச்சரிப்பு.... அவர் சொல்ற, எந்த மந்திரமும் எனக்குப் புரியலை.

"பகவானே, எனக்குத்தான் நல்ல விஷயங்கள்ளாம் தெரிஞ்சுக்க முடியாத பண்ணிட்ட. வயித்துல வளர்ற புள்ளைக்காவது அப்பேர்ப்பட்ட ஞானத்தைக் கொடு.



அவனை அனந்தராம தீக்ஷிதர் மாதிரி சபைக்கு நடுவுல, மாலை மரியாதையோட உட்காரப் பண்ணிடுன்னு வேண்டிண்டேன். தினம் பிள்ளையார் கவசம் படிச்சேன். நேத்திக்கு நீ குடிச்சுட்டு வந்து பாடின போது எனக்கு உடம்பே ஆடிப்போயிடுத்துடா, குருமூர்த்தி.

எம்மேல சத்தியமா நீ குடிக்கப்படாது. அப்படி மீறிக் குடிச்சா உங்கம்மாவை உசிரோட குழி வெட்டிப் பொதைச்சதா அர்த்தம். பண்ணு. என் தலையில அடிச்சு சத்தியம் பண்ணு" அம்மா, அவன் எதிரே தலையைக் குனிந்து கொண்டாள்.

மெல்லிய அவள் மூக்குக் கண்ணாடி ஃபிரேமில் கண்ணீர் தங்கி, திசைமாறி கன்னம் வழிந்தது. குருமூர்த்தி, அவள் பேச்சைவிட அழுகைக்கு அதிகம் அதிர்ந்து போனான். அவள் தலையில் மெல்ல கை வைத்து சத்தியம் என்றான். கைகால் அலம்பி ஸ்வாமி படத்திற்கு நமஸ்காரம் செய்து தன் கவிதை நோட்டும், பேனாவுமாய் கொல்லைப்புறம் போனான். குளத்துப் படியருகே உட்கார்ந்து கொண்டான். உள்ளே கவிதை போலும் ஏதோ ஒரு சோகம் புரண்டது. ஏதோ ஒன்று வெளிவரக் காத்துக் கொண்டிருந்தது. அவன் தலையைத் தாண்டி, ஒரு கல் பொளேக் என்று குளத்து நீரில் விழுந்தது. குருமூர்த்தி பயத்துடன் திரும்பிப் பார்த்தான். அங்கே அழகாய், வெகு அழகாய் சங்கீதா நின்று கொண்டிருந்தாள். சிரித்தாள். ஒயிலாய் ஒரு வாயில் புடவை வீசிப் பறக்க அவன் அருகே வந்து நின்றாள்.

சங்கீதா இந்த முறை ப்ளஸ் டூவாம். டென்ஸ் ஒன்னில் செமை மார்க்காம். ஒரு சேஞ்சுக்கு புதுச்சேரி வந்திருக்காளாம்.

விவரம் சொல்லிக் கொண்டேயிருந்த சங்கீதா, சட்டென்று நிறுத்தி, அவனை உற்றுப் பார்த்தாள்.

"இப்ப சாவடிக்கு யாரைத் தள்ளிண்டு போற? ஒரு வேலைக்காரக்குட்டி குறுக்க நெடுக்க அலையறாளே.... அவளையா?"

புதுச்சேரியிலேயே திமிராய் வளைய வந்து கொண்டிருந்த பெண், பட்டணத்துக்குப் போய் ரொம்பவும் திமிராகிவிட்டாள் என்று குருமூர்த்திக்கு தோன்றியது. திமிர் பிடித்தவளிடம் கவிதை பற்றி சொல்வது தேவையற்ற விஷயம் என்பதால் குருமூர்த்தி தன் நோட்டுப் புத்தகத்தை தொடைக்கடியில் மறைத்துக் கொண்டான். ஆனாலும், அவளை வியப்போடு பார்த்தான். சங்கீதாவிடமிருந்து வந்த பெண் வாசனை அவனுக்குப் பிடித்திருந்தது. பீர் குடித்தது போல ஒரு கிறக்கம் அந்த வாசனையிலும் வந்தது.

"மெட்ராஸ் லைஃப் எப்படியிருக்கு சங்கீதா?"

"ஏ க்ளாஸ். ஆனா என்ன தெரியுமா மிஸ்ஸிங்? இந்த கொல்லைப்புறம், இந்த குளம், இந்த பிள்ளையார் கோயில். நாங்க இருக்கறது அடுக்கு மாடி. பதினெட்டு போர்ஷன். பையனும் பெண்களுமா பதினோரு பேர், ப்ளஸ்டு பரீட்சை எழுதப் போறோம். மொட்டை மாடிக்குப் போற இடத்ல சின்ன இடம். அங்க ப்ளாக் போர்டு வச்சு ஒண்ணா உட்கார்ந்து படிக்கறோம். குருப் ஸ்டடி. இன்றைய தேதி வரைக்கும் நடத்தின எல்லாப் பாடமும், நான் தரோவா இருக்கேன். படிக்கறதே பொழுது போக்கு பொழுது போகலைன்னா படிக்கறது. கொஞ்சம் ரிலாக்ஸ் பண்ணிக்கணும்னு தோணித்து. சேன்ஞ் வேணும்னு மனசு ஆசைப்பட்டுது. திடீர்ன்னு இந்த சத்திரத்து மேலேயும், குளத்து மேலேயும், அரச மரத்து மேடை மேலேயும் எனக்கு லவ் வந்தது. பொட்டிய எடுத்துக்கிட்டு கிளம்பி வந்துட்டேன்."

"குளம் பார்க்கணும்னுதான் வந்தியா சங்கீதா?"



"உன்னைப் பார்க்கவும் வந்தேன் குருமூர்த்தி. ஆனா, நீ மாறியிருப்பேன்னு நினைச்சேன். இன்னும் குளத்துமேட்டிலேயே உட்கார்ந்துக்கிட்டிருக்கே. ஒருநாள் எங்க குருப்ல செக்ஸ் பத்தி பேச்சு வந்தது. நீ கிஸ் அடிச்சது பத்தி சொன்னேன்."

"நான் எங்க கிஸ் அடிச்சேன் சங்கீதா?"

"சரி நான்தான். என்ன இப்போ? உனக்கும் அது எக்ஸ்பீரியன்ஸ்தானே. நம்ம கதை சொன்னப்போ பசங்க அசந்துட்டாங்க. இப்ப குருமூர்த்தின்னா அந்தக் குருப்ல எல்லாருக்கும் தெரியும். அவ்வளவு பாப்புலராகிப் போச்சு. ஏன் காலெல்லாம் கறுப்பா இருக்கு?

"சேறு மிதிச்சுட்டேன். எத்தனை கழுவினாலும் போகலை. காலேஜ்ல கலாட்டா. போலீஸ் லத்தி சார்ஜ் பண்ணினான். ஒடி வந்துட்டேன்."

கொஞ்ச நேரம் படிப்பு பற்றியும், கல்லூரி பற்றியும் பேசினார்கள். சினிமாவைப் பற்றியும் பேசினார்கள். எதிர்காலம் பற்றிக் கவலைப்பட்டார்கள்.

"எப்படியும் தொண்ணூற்றி எட்டு பர்ஸெண்ட் ப்ளஸ்டுல வாங்கிடணும். மெடிக்கல்ல சேர்ந்துடணும். பெரிய சைக்காலஜிஸ்ட் ஆகணும். இல்லை சைல்ட் ஸ்பெஷலிஸ்ட் ஆகணும். அதுக்குத்தான் வெறிபுடிச்ச மாதிரி படிக்கறேன். தொண்ணூற்றி எட்டு பர்செண்ட் எடுத்தா எந்த ரெகமெண்டேஷனும் இல்லாம மெடிக்கல் காலேஜ் வாங்கலாம், ஐ லவ் டு பி எ டாக்டர். யூ?" சங்கீதா அவனைப் பார்த்துக் கேட்டாள்.

"நான் கவிஞனாக வேண்டும்" என்று பதில் சொல்ல குருமூர்த்தி ஆசைப்பட்டான். அவள், சிரிப்பாளோ என்று மௌனமாய் இருந்தான். மறுபடி அவள் தூண்டிக் கேட்க-

"என்ன பண்றதுன்னு தெரியல சங்கீதா! எங்கேயோ வேலைக்கு சேர்ந்து, சாப்பாட்டுக்குத் தேவையானதை சம்பாதிக்கணும். எனக்குப் பெரிய லட்சியமெல்லாம் இல்லை. லட்சியம் வச்சுக்கற அளவுக்கு எனக்கு வசதியும் இல்லை. அரிசி இல்லை. பருப்பு இல்லை. சவுக்காரம் தேய்ஞ்சு போயிடுத்து. இந்த நாற்காலி தொடிக்கறது. இன்னொரு நாற்காலி வாங்கணும்னு அடிப்படைத் தேவைகள் பூர்த்தியானா போதும். தீபாவளிக்குக் கூட, புதுசு வாங்க முடியலையேன்னு துக்கமில்லாதிருந்தா போதும். தீபாவளிக்குக்கூட புதுசு வாங்க முடியலைன்னா அதுதான் துக்கம். அதுதான் வறுமை. எனக்கு கந்தை கந்தையாக் காக வேண்டாம், சங்கீதா; காசே இல்லையே யாரைக் கடன் கேக்கறதுங்கற வறுமையும் வேண்டாம்."

"என்னடாது, எகனாமிக்ஸ் படிச்சுட்டு கடனுக்கு பயப் படற? இங்க இருக்கற அத்தனை பணக்காரனும் கடன்ல தான் வண்டி ஓட்டறா தெரியுமா? பெக்,பாரோ, ஸ்டீல்.எப் படியாவது பணக்காரியாகணும். இதுதான் என் பாலிஸி."

"அதைச் செய்ய வேண்டியதுதானே. எதுக்கு குளத்து மேடையைத் தேடிட்டு வந்தே?"

"இதுதான்.இதுதான் கடைசி, இனிமே இந்தக் குளத்து மேட்டுக்கு வரமுடியுமோ, இனிமே இந்தக் கொல்லைப் புறத்துக்கு வரமுடியுமோ முடியாதோ? அப்படியே வந்தாலும், இந்தக் கொல்லைப்புறத்தோட இனிமே ஒன்ற முடியுமோ முடியாதோ? இந்தக் கொல்லைப்புறம் ஓவர். லோ, கடைசியா ஒரு தடவை பார்த்துடுவோமேன்னு வந்தேன். உன்னால இனிமே கிட்டிப்புள் ஆட முடியுமா? கடைசி தடவையா நீ ஆடின கிட்டிப்புள் உனக்கு ஞாபகம் இல்லையா? அதை ரீகலெக்ட் பண்றபோது சந்தோஷமா இல்லையா? நான் இப்போ வந்தது ஒரு ரீகலெக்ஷனுக்கு. அதை சந்தோஷமா அனுபவிக்கறதுக்கு. இதுக்குப் பிறகு



இது ஒரு மெமரிபாய்ண்ட். இப்படி ஓர் இடம் இருக்குன்னு தெரியும். அவ்வளவுதான்."

"நீ பேசக் கத்துண்டே சங்கீதா."

"நீ மெட்ராஸுக்கு வா.ஒவ்வொரு பையனும்என்னமா பேசறான் பார். ப்ளஸ்டூதான் படிக்கறான். கம்யூனிஸத் துக்கு எதிரா அவ்வளவு தெளிவா பேசறான்."

"பேசினா முடிஞ்சு போச்சா?"

"யூ ஆர் ராங் குருமூர்த்தி. அந்தப் பையன் சத்திரத்து ஒண்டிக்குடித்தன மாமியில்லை. கார்த்தால ஆறு மணிக்கு கம்ப்யூட்டர் க்ளாஸ் போறதன். எட்டு மணிக்கு பள்ளிக் கூடம் போறான். நாலு மணிக்கு ஹிந்தி க்ளாஸ் போறான். சண்டே கார்த்தால கிரிக்கெட் மேட்ச் போறான். சண்டே சாயந்திரம் டாக்டர் படிப்புக்கு என்ட்ரன்ஸ் எக்ஸாம் எழுத ஸ்பெஷல் க்ளாஸ் போறான். பட்டணத்து பசங்கள வெறும் அலட்டல்ன்னு நினைக்காதே. அவன் அலட்டிதான். ஆனா, ஹார்ட் ஒர்க்கர். இப்படி குளத்தங்கரைல உட்கார்றதுக்கு அவனுக்கு நேரமே இல்லை. நீ ஏதாவது பண்ணணும் குருமூர்த்தி. இப்படியே உட்கார்ந்திருக்கக் கூடாது."

ஒருமுறை உடம்பால் இழுத்துக் கவர்ந்ததுபோல, இப் பொழுது பேச்சில் இழுத்துக் கவர சங்கீதா முயற்சி செய்தாள். குருமூர்த்தி, உண்மையில் இந்த முறை அவளிட மிருந்து முதலில் விடுபட்டான். காசு சம்பாதிக்க லட்சம் பேரால் முடியும். கவிதை எழுத ஒரு சிலரால்தான் இயலும்

இந்த பேச்சு இங்கு நடக்கும் நேரத்தில், சாமிநாதனை புதுச்சேரி போலீஸ் சமாதானம் பேசலாம் என்று அழைத்துப் போய், பேயறை அறைந்தது. நச்சென்று முகவாயில் குத்தியது. பூட்ஸ் காலில் மிதித்தது. சாமிநாதன் போன்ற பையன்கள் தலைவராவதில் விருப்பமுள்ளவர்கள்.அப்படித்

தலைவராக ஒருவழி தான் வன்முறை என்பது புரிந்தவர்கள், வன்முறையை உதை வாங்காமல் வெளியிட முடியாதென்பதைத் தெரிந்தவர்கள். 'நீ அடிடா. எவ்வளவு முடியுமானாலும் அடி. நீ அடிக்க அடிக்க இந்தக் காலேஜுக்கு நான் தாண்டா லீடர்'' வலியும் வேதனையும் உடம்பு முழுக்கப் பரவினாலும் உள்ளுக்குள் எதிர்காலம்பற்றி ஒரு சந்தோஷம் மின்னியது.

மாணவர்களால் சுவாமிநாதனின் அப்பாவுக்குத் தகவல் சொல்லப்பட்டு அவர் வக்கீலோடு ஓடிவந்தார். அப்பாவின் வருகை தெரிந்ததுமே பிள்ளை அதிகம் தள்ளாடினான். மூக்கிலும், உதட்டிலும் ரத்தம் வழிய, இடுப்பு ஜட்டியுடன் ஒரு கேடியைப் போல் தன் பிள்ளையை உட்கார வைத்திருந்ததைப் பார்த்து, அந்தத் தகப்பனுக்கு மனம் குமுறியது. பிள்ளை செய்த அட்டகாசங்கள் எதுவும்காதில்ஏறவில்லை. வக்கீலை வைத்து ஜாமீனில் எடுத்தார். தோளில் பிள்ளையைச் சாய்த்துக்கொண்டு போலீஸ் ஸ்டேஷனை விட்டு வெளியே வந்தார். அந்தத் தகப்பனின் ஆதரவு மாணவர்களை மறுபடியும் சூடேற்றியது. மறுபடியும் அங்கங்கே என்று கல்லெறிகள் நடந்தன.

''யாரைக்கேட்டு ஜாமீன்ல அந்தப் பையனைவிட்டீங்க மடக்கி உள்ள போடுங்க. வேற கலாட்டாவோட சம்பந்தப் படுத்துங்க.''

உயர் அதிகாரி கூவ, போலீஸார் மறுபடியும் சாமிநாதனைத் தேடினார்கள். சாமிநாதனுக்கு ஒளிந்து கொள்ள இடம் தேவைப்பட்டது.

சென்னைக்குப் போ என்றுதகப்பன்வற்புறுத்த, இல்லை குருமூர்த்தி வீட்டு கொல்லப்புறத்தில் ஒளிந்துகொள்கிறேன் என்று சாமிநாதன் சொன்னான். இரவோடு இரவாய் சாமிநாதன் குருமூர்த்தி வீட்டுக் கதவைத் தட்டினான். விஷயம் சொல்லிகொல்லைப்புறத்தில் அடைக்கலம் கேட்டான்.சாமிநாதன் வீட்டு டேபின் ஃபேனோடு, சாவடிக் கதவு திறந்து, நீத்தார் கடன் செய்யும் அந்த இடத்தில் பெட்ஷீட் விரித்துப் படுத்துக் கொண்டான். விடிந்து வெளிச்சம் வரும்வேளையில், அங்கு ஒரு தேவதை வருமென்றோ, அவனைத் தோள் உலுக்கி எழுப்புமென்றோ, அவன் பெயர் என்னவென்று கேட்குமென்றோ அவன் நினைக்கவில்லை. பெயர்கேட்ட தேவதையை, அவன் பெயர் கேட்க, சங்கீதா என்றது.



புதுச்சேரியில் வாளிபமான, வாளிப்பான, தமிழ்ப் பெண்கள் பலருண்டு. அலட்டலான ப்ரெஞ்ச் பெண்கள் உண்டு. ஆனால், இரண்டும் கலந்த கலவையாய், புதுமையாய் அவன் கனவிலிருக்கும் கன்னியாய் ஒரு பெண்ணை இங்கே சந்திப்போம் என்று அவன் நினைக்கவேயில்லை. சாமிநாதனுக்கும் அந்தக் கொல்லைப்புறம் பிடித்துப் போயிற்று. ஆனால், அதற்கான காரணம் வேறு.

## 4

''எப்படி கலாட்டா ஆரம்பிச்சது, பாரதியைப் பத்தி கவிதை எழுதியா? யார் எழுதின கவிதை? நீங்க எழுதினதா? ஆர் யு எ போயட்?

''ஹூ இஸ் நாட் எ போயட்? இங்கு யார் கவிஞரில்லை? எல்லாரிடமும் கவிதை இருக்கிறது. சிலர் எழுதுகிறார்கள். பலர் எழுதுவதில்லை. சிலர் என்பதாலேயே, எழுதுவது மிகச் சிலர் என்பதாலேயே கவிதைபோன்ற கலைகளுக்குப் பெருமை வந்துவிட்டது. நான் கவிஞன்தான். அதைப் பெருமையாக நினைத்துக் கொள்வதில்லை. இழிவுபடுத்திய பிரின்சிபாலை இடித்துக் காட்டியே கவிதை எழுதினேன்.''

''பிரின்சிபால் என்ன இழிவு படுத்தினார்?''

''கெட்ட படம் பார்க்கிற பையன்கள் என்று சொன்னார்.''

''எது கெட்ட படம்?''

''டபுள்டெக்டர். புதுச்சேரியில் மூன்றாவது வாரம்.''

''நம் ஊரிலா? கெட்ட படத்துக்கு நடுவே ப்ளூபிலிமா? ஏய் குருமூர்த்தி, நான் பார்க்கணுமே. ப்ளீஸ், என்னைக் கூட்டிண்டு போடா'' சங்கீதா அருகில் உட்கார்ந்திருந்த குருமூர்த்தியைப் பார்த்துக் கெஞ்சினாள்.

அடாவடியான சாமிநாதனுக்குக்கூட அவள் ஆர்வம் ஆச்சர்யமாக இருந்தது. குருமூர்த்தி பதில் சொல்லட்டும் என்று காத்திருந்தான்.

''எங்கம்மா என்ன செருப்பால அடிப்பா. ஒருநாள் இவன்கூட பீர் குடிச்சதுக்கே கத்திக் கதறி என் மானத்தை வாங்கிட்டா. அது தவிர, அந்த மாதிரி படங்களுக்கு ஒரே ஆம்பளை கூட்டம்தான் வரும். பொம்மனாட்டிய கூட்டிண்டு போனா எல்லாரும் தப்பா உன்னையும் பார்ப்பா. என்னையும் பார்ப்பா.''

''புல் ஷிட். பீர் குடிச்சா தப்பா? நான்கூட குடிச்சிருக்கேன்.''

''உண்மையாவா?''

ஃபிரெண்ட் ஒருத்திக்கு பர்த்டே. நாலுபாட்டில் பீர் அடிச்சோம். கிக்கே வரலை. தூக்கம்தான் வந்தது. பீர் ஒண்ணும் செய்யாது குருமூர்த்தி. உடம்புக்கு நல்லது. குளுமை, கிட்னியை நல்லா வாஷ் பண்ணிடும். யூரினரி ப்ராப்ளமே வராது.''

''அதுக்கு ஒரு ஸ்ட்ரென்த் வேணுங்க. குருமூர்த்தி பாதி பாட்டில்லேயே ஆட ஆரம்பிச்சுட்டான். ஹோட்டல்ல



பாட்டுப்பாடி, டான்ஸ் ஆடி, தடுக்கி விழுந்து ஏக கலாட்டா.''

''அது மேக் பிலீஃப்.''

''அப்படீன்னா'' குருமூர்த்தி கேட்டான்.

''போதை வந்துட்டதா நடிக்கறது. தான் நடிக்கிறதையே நம்பறது.''

''அப்படியில்லை, என் பீர்ல இவன் விஸ்கியை ஊத்திப்புட்டான். அது என்னைச் சுழட்டிடுத்து.''

''ஆடக்கூடாதுன்னு டிஸைட் பண்ணினா ஆடமாட்டோம். வலி இல்லைன்னு டிஸைட் பண்ணினா வலிக்காது. இப்ப சாமிநாதனுக்கு கன்னத்தில அடிபட்டிருக்கு. நான் விரல் வச்சு அழுத்தினா வலிக்கும். ஆனா, அப்படி வலிக்கறதையும் வாய்விட்டு கத்தாத, தாங்கிக்கன்னா தாங்கிக்கலாம். உங்களால முடியாதா சாமிநாதன்?''

''முடியும்'' சாமிநாதன் உறுதியானான். அவள் தொட மாட்டாளா என்று ஏங்கினான். சங்கீதா, அவனுக்கு அருகே மண்டியிட்டு உட்கார்ந்து, ரணப்பட்ட அவன் கன்னத்தை மெல்ல அவள் விரல்களால் பற்றி, முழு பலத்துடன் அழுத்தினாள். வலி நரம்பின் வழியே ஏறி, மண்டையைத் தாக்கியது. சாமிநாதன் மனசு ஒருமுகப்படுத்தித் தாங்கிக் கொண்டான். வலித்ததுபோல் நடிப்பவனுக்கு, வலிக்காததுபோல் நடிப்பது கடினமில்லை. நடிப்பு ஒருமனப் பயிற்சி. மிகுந்த தந்திரம் உடையவர்களுக்கே மிக நன்றாய் நடிக்க முடியும். நல்ல நடிகர்கள் தந்திரசாலிகள். நடிகர்கள் திரையில் மட்டுமில்லை, தெருவிலும் உண்டு.

ஆனால், அந்த கிள்ளல் குருமூர்த்திக்கு வலித்தது. ஒரு ரணத்தைக் கூச்சமின்றி கிள்ளுபவளைப் பார்த்து வியப்பு வந்தது. குருமூர்த்தி 'யப்பா' என்று அலறினான்.

பயத்தோடு பின்வாங்கினான். அவர்கள் இரண்டு பேரும் ஒரே கட்சி என்பது அவனுக்குப் புரிந்துவிட்டது. விலக முற்பட்டான். விலகியவனை சாமிநாதன் இறுக்கிக் கொண்டான்.

''குருமூர்த்தி, எனக்கு இப்ப நீ செய்யற உதவிக்கு நான் என்ன கைமாறு செய்யப்போறேன்?''

''ச்சீ, இதென்ன பெரிய உதவி?''

''என்னைக் காட்டிக் கொடுக்கமாட்டியே.''

''உன்னையா? நானா? ஒருநாளும் மாட்டேன்''.

''சத்தியமா?''

''எங்க அம்மா சத்தியமா, நான் காட்டிக்கொடுக்கவே மாட்டேன்.''

''சங்கீதாகிட்டகூட காட்டிக் கொடுக்கமாட்டியே.''

''என்னது?''

''உன் பொயட்ரிய என் பொயட்ரின்னு அவ நினைச்சுட்டிருக்கா,''

''அதைத்தான் உனக்குத் தந்து கொடுத்துட்டேனே.''

''தப்பா நினைச்சுக்கலேன்னா...''

''என்னது?''

''தப்பா நினைச்சுக்கலேன்னா....இன்னும் நாலைஞ்சு கொடேன். ஐ வில் காம்பன்சேட்.''

''உனக்கு ஏன் இன்னும் கவிதை?''



''சங்கீதா என்னைக் கவிஞன்னு நினைச்சுகிட்டிருக்காளே.''

''அதுக்கு ஒரு கவிதை போதாதா?''

''போதாது.''

''நீ அவளை டாவடிக்கிறியா?''

''சேச்சே...எவ்வளவு ஸ்நேகமா பழகறா. அவளைப் போயீ வெறுமனே டாவடிக்க முடியுமா?''

''அப்போ சங்கீதாவை லவ் பண்றியா?'' குருமூர்த்தி கொஞ்சம் கோபமாய் கேட்டான்.

''ஆமான்னு சொல்ல முடியலை. அப்படிச் சொல்ல அவ பர்மிஷன் வேணும். அவ என்னை லவ் பண்ணல. அவளை எனக்குப் பிடிச்சிருக்கு. இப்போதைக்கு இதுதான் சொல்ல முடியும்.''

''அவ ரொம்ப ராங்கி.''

''இல்லை டைனமிக்.''

''வெறும் ப்ளஸ் டூ. எல்லாம் கரைச்சு குடிச்சவமாதிரி அலட்டுவா.''

''தப்பு குருமூர்த்தி அவளுக்கு நிறைய தெரிஞ்சிருக்கு.''

''அவ என்னை கிஸ் அடிச்சிருக்கா. இதே சாவடில. தெரியுமா உனக்கு?''

''நான்கூடத்தான் பத்துப் பெண்களை கிஸ் அடிச்சிருக்கேன். நான் கெட்டவனா, இல்லை, அந்தப் பத்துப் பெண்களும் கெட்டவங்களா? அதுல ஒரு பெண்ணுக்குக் கல்யாணமாகிக் குழந்தைகூடப் பொறந்திடுச்சு. ஒரு பொண்ணு கிரிமினல் லாயர். கிஸ் அடிச்ச யாரும் கெட்டுப்

போகமாட்டாங்க. ஆல் இன் த கேம். எனக்கு உதவிசெய் குருமூர்த்தி! நான் உனக்கு உதவி செய்யறேன்.''

''என்ன உதவி?''

மறுபடி சாமிநாதன் கவிதை இரவல் கேட்கிறான் என்பது மறந்துபோய் குருமூர்த்தி கேட்க, சாமிநாதன் அந்தத் தவறை நேராய்த் தாக்கினான்.

''ஒரு கவிதைக்கு நூறு ரூபாய் தரேன். வெதர் இட் இஸ் ஸ்மால் ஆர் பிக். ஹன்ட்ரட் ருபீஸ் ஈச்.''

பேண்டைப் பிரித்து அண்டர்வேரில் நூறு ரூபாய் கட்டெடுத்துக் காட்டினான். இரண்டு நோட்டுகள் உருவி அட்வான்ஸ் என்று நீட்டினான். நூறு ரூபாய் நோட்டு கட்டையே வாழ்க்கையில் முதன்முதலாகப் பார்த்த குருமூர்த்திக்கு மூச்சடைத்து தொண்டைக்குள் காற்று சுழன்றது. 'ஹாக்' என்று அங்கேயே கொஞ்ச நேரம் நின்றது.

குருமூர்த்திக்கு பெரிய வறுமை இல்லையெனினும், தன் காலில் சிக்கிய தங்கச் சங்கிலியை உதறிப் போட மனசு வரவில்லை. பணம் லட்சுமியல்லவா? உதறலாமா? என்று யோசனை வந்தது. அம்மா நான் சம்பாதித்தேன் என்ற கூக்குரல் வந்தது. கவிதையை எழுதிய பின் இந்த கூக்குரல் வருமா என்கிற சந்தேகம் வந்தது. என்னால் ஆயிரம் கவிதை எழுத முடியும். அதில் ஐந்நூறு விற்றால் என்ன தப்பு? இந்த காசில் அம்மாவுக்கு ஒன்பது கெஜப் புடைவை ஒன்று வாங்கிக் கொடுக்கலாம்.

''குடிச்சுட்டு வரயா, தத்தாரின்னு கோவிச்சுக் கிட்டேல்ல, இப்ப இட்டு பார்க்கலாம்.'' என்று எதிரில் நிற்கலாம். அம்மாவுக்குப் பிடித்த புடைவையாய், பிடித்த டிஸைனாய் எடுக்கலாம். அம்மாவை பல நாள் அழ வைத்திருக்கிறேனே தவிர, ஒருநாளும் சந்தோஷப்படுத்திய



தில்லை. அம்மா நல்லவள். நான் குடித்ததை அப்பாவிடம் சொல்லாத நல்ல குணம். என்னை வயிற்றில் சுமந்தபோது, பிள்ளையார் கவசம் சொன்ன பெரிய குணம். அம்மா' நீ நினைப்பதுபோல் உன் பிள்ளை சாக்கடைக் காலன் அல்ல. கவிஞன். கவிதை எழுதி சம்பாதிப்பவன். அப்படி சம்பாதித்த காசில், உனக்குப் புடைவை வாங்கித் தருபவன். குருமூர்த்திக்கு தன் கவிதை மறந்துபோய் தன் குடும்பமே கண் முன் நின்றது.

''இன்னிக்கு நம்ம ஆத்துல பச்சை மிளகாயும், மோர் சாதமும்தான். அமிர்தம் அமிர்தம்னு எல்லாரும் சாப்பிடணும். யாரும் நொடிச்சுக்கக் கூடாது. நொடிச்சா இந்த சாதமும் கிடைக்காம போய்டும். எங்க பார்ப்போம். எல்லாரும் ஒரு கவளம் முழுங்கிட்டு அமிர்தம்...அமிர்தம்னு சொல்லுங்கோ''

சொல்லியிருக்கிறார்கள்.

வரிசையாய் அண்ணா, தம்பி, தங்கை என்று உட்கார்ந்து புளித்த மோர் சாதத்தை அமிர்தம், அமிர்தம் என்று சொல்லியிருக்கிறார்கள். வறுமையைக்கூட அம்மா சந்தோஷமாக்கியிருக்கிறாள். வசதியின்மையை மறக்கடித்திருக்கிறாள். அந்த அம்மாவுக்குப் புடைவை வாங்கித் தருவது முக்கியமில்லையா? நாலு கவிதைகள் இவனுக்கு எழுதித் தருவது கஷ்டமா? எதையோ கிறுக்கிக் கொடுத்து, இதுதான் கவிதை என்று சொன்னால் போயிற்று.

ஆனால், கவிதை எழுத மரத்தடியில் உட்காரும்போது எதையோ கிறுக்கிக் கொடுக்க மனசு ஒப்பவில்லை. சிலரால் எதன் பொருட்டும், எந்த நேரத்திலும், போலியாய் இருக்க முடியாது. போலியாய் இருக்க, பொய் சொல்லத் தெரிய வேண்டும். கூசாது பொய் சொல்ல நெஞ்சுரம் இருக்க வேண்டும். நெஞ்சுரமில்லாது, மென்மையாய், அன்று பூத்த

பூவாய் இருப்பவனுக்குத்தான் கவிதை வரும். குருமூர்த்தி பேனாவைத் திறந்து கவிதை எழுதத் தொடங்கினான்.

"வாழ்க்கைக் கூட்டம் முன் தள்ள
வழியை எதிர்ப்பு தடை செய்ய
யாரோ அடித்தார் கன்னத்தில்,
உதடு கரித்தது ரத்தத்தில்.
போரில் தோல்வி புறமுதுகு
ஊரில் வெறுப்பு தலைமறைவு
உயிரே துடிக்கும் வேதனையில்
சுருண்டு கிடந்தேன் குளத்தருகில்.
உறக்கம் விழிப்பு இல்லாத
என் உணர்வு ஊசல் ஆடுகையில்
உயிரை உருவும் சப்தம் போல்
யாரோ அருகே சுவாசித்தார்.
கண்ணை விழித்தேன் கனவானேன்
எதிரே தேவதை வியப்பானேன்
யாரது என்று வெலவெலத்து
கனவில் எழுந்தேன் மெதுவாக.
என் பெயர் கேட்ட தேவதையோ
தன் பெயர் சொல்லிச் சிரிக்கையிலே
முதுகில் ஓடிய கள்ளெறும்பு
கடிக்கையில் துடித்தேன் வலியோடே
வலியா ரணமா உடம்பெல்லாம்
எதற்கு கூச்சல் இவ்விதமாய்
உணர்வை அறுக்க உன்னுள்ளே
புத்தி என்ற மருந்துண்டு
மெல்லக் கிள்ளி உன் ரணத்தை
துடிக்கச் செய்வேன் இப்போது
தள்ளிப் போடேன் பெருவலியை
தைரியம் கொள்ளேன் முழுமனசாய்.
வெள்ளைப் புடைவை நீலப் பூ



மேகக் கூந்தல் புன்சிரிப்பாய்
தேவதை கிள்ளி ரணமழுத்த
துடித்தேன் நிறுத்தி வலியறுத்தேன்.
கன்னிப் பெண்ணாள் பூங்கொடியாள்
மல்லிச் செடிபோல் வாசனையாள்
சொல்லிக் கொடுத்தாள் வலியறுக்க
நான் கனவில்கற்றேன் முதல் பாடம்."

சிலீரென்று கவிதை வந்து விட்டதென்று தோன்றிற்று. உரக்க நாலு முறை வாசிக்க, இன்னும் பிடித்துப் போயிற்று. யாரிடமாவது காட்டி பெருமைப்பட்டுக் கொள்ளலாமென்று தோன்றியது. ஓர் ஓவியம்போல், புடைவை முதற்கொண்டு வர்ணித்து சங்கீதாவை அந்தக் கவிதைக்குள் செருகிவிட்டதாய்த் தோன்றியது. சங்கீதாவின் உடம்பில் எப்பொழுதும் ஒரு நெடியான வாசனை இருக்கும். மல்லிச்செடி போல் வாசனை என்று சொன்னால், எந்தப் பெண்ணையும் பரவசப்படுத்தும். அதையெல்லாம் விட கண்ணெதிரே நடந்த நிகழ்ச்சியை தன்னால் கவிதையாய்ச் சொல்ல முடியும் என்கிற கர்வம். புதுசுமில்லாமல், மரபுமில்லாமல் இரண்டுக்கும் இடைப்பட்டு, சீர்தட்டாது சொல்லும் லாகவம் வெகு சுலபமாய் தனக்கு வந்து விட்டதென்று தோன்றிற்று.

சாமிநாதனின் அப்பா ரகசியமாய் சில ஆட்களை அனுப்பி சாவடிக்குள் அவனுக்கு வேண்டிய வசதி செய்து கொடுத்திருந்தார். மருந்து மாத்திரையும், மெத்தையும் தலையணையும், சாக்லேட், பிஸ்கட் வகையறாவும், படிக்க நிறைய படம் போட்ட புத்தகங்களும் அனுப்பியிருந்தார். டேப் ரிக்கார்டர், கொசுவர்த்திச் சுருள், வில்ஸ் பில்டர் சிகரெட்டுகள். அந்த இடம் லாட்ஜ் மாதிரி மாறியது. போலீஸ் இன்னும் சாமிநாதனைத் தேடிக் கொண்டிருப்பதாகச் சொன்னார்கள்.

"நாங்க தேடற மாதிரி தேடறோம். அவரு இருக்கற இடத்லேயே கொஞ்ச நாள் இருக்கட்டும். சூடு ஆறின பிறகு சரண்டராயிட சொல்லுங்க. அப்பால கேஸை ஒன்னுமில்லாம பண்ணிடலாம்" என்று சொன்னதாகவும் சொன்னார்கள். இப்போதைக்கு வெளியே வா என்று சாமிநாதனை யாரும் அழைக்கவில்லை. அவனும் போவதாய் இல்லை. மறுநாள் குருமூர்த்தியின் கவிதையை, தன் கவிதையாக சாமிநாதன் வாசித்துக் காட்டியபோது, குருமூர்த்தி சற்று தொலைவில் போய் நின்றுகொண்டான். சங்கீதா அந்தக் கவிதைக்கு என்ன சொன்னாள் என்று தெரியவில்லை. ஆனால், அந்தக் கவிதையை மடித்து ரவிக்கையில் செருகிக்கொண்டு, அவள் வெளியேறியது தெரிந்தது.

"அந்தக் கவிதை என் கையெழுத்துல இருக்கா. உன் கையெழுத்துல இருக்கா" குருமூர்த்தி ஏதோ ஓர் ஆசை உந்த சாமிநாதனிடம் கேட்டான்.

"அதெப்படி உன் கையெழுத்துல இருக்கும்? நான் அதைக் காப்பி பண்ணி, உன் ஒரிஜினலை சுக்கு சுக்கா கிழிச்சுப் போட்டுட்டேன். நான் என்ன அத்தனை முட்டாளா?"

சாமிநாதன் பேச்சில் ஓர் எக்காளமிருந்தது. ஒருவேளை நான்தான் முட்டாளோ என்கிற எண்ணம் குருமூர்த்திக்கு வந்தது. அவனால் முடிவு செய்ய முடியவில்லை. முடிவு செய்ய முடியாதவர்களுக்கு வாழ்க்கை எப்போதும் பேரவஸ்தை. அடுத்த நூறு ரூபாய்க்குண்டான கவிதை என்று சாமிநாதன் அதட்டிக் கேட்டதுதான் மிகக் கொடுமை.

# 5

ஒரு பெண்ணுக்கும், ஆணுக்கும் நடுவே காதல் வருவதற்கு என்ன காரணம்? குருமூர்த்திக்கு யோசிக்கத் தோன்றியது. பொய்கள்தான் காரணம் என்பதாய் அவனுக்குத் தோன்றிற்று. பொய்களை உண்மை என்று எண்ணும் மனப்பான்மையுடையவர்கள்தான் காதலிக்கத் தொடங்குகிறார்கள் என்கிற எண்ணம் வந்தது. அப்படிப்பட்ட எண்ணம் வர, சுடர் போன்ற அறிவிருக்கக் கூடாது. கொஞ்சம் குழம்பியிருக்க வேண்டும். சதா ஒரு போதையில் ஆழ்ந்திருக்க வேண்டும். பீர் குடித்தபோது நச்சென்று ஏதோ மூளையில் தாக்கி, விழிப் பாப்பாக்களை விரிய வைத்ததே, அப்படிப்பட்ட போதை வேண்டும். இங்கே எது போதை? அறியாமை. மேக் பிலீஃப். சங்கீதா சொன்னாளே அந்த மேக்பிலீஃப். அதாவது கற்பிதம். தான் காதலிக்கப்படுவதாய், காதலிப்பதாய் மனம் கொண்ட கற்பிதம். புத்தி சுடர் போலிருந்தால், கற்பிதம் வராது. கற்பிதம் வராவிட்டால் காதல் வராது. காதலோடு கூடிய கனவுகள் வராது. புத்தி கூர்மையாக இருந்தால் மரண பயம்தான் வரும். தான் மல மூத்திர தாரியாக நிற்பதுதான் நினைவில் நிற்கும். எல்லார் உடம்பிலும் மலம், மூத்திரம் தான் இருக்கின்றன என்கிற வெறுப்பு வேர்விடும். அப்போதுதான் உடம்பையும் விநோதமாய்ப் பார்க்கத் தோன்றும். அதற்கு எந்தப் பவிசும் கொடுக்கத் தோன்றாது. தன் உடம்புக்கு பவிசு செய்துகொள்ளாதவன் வேறு ஓர் உடம்பைப் பார்த்து மோகிக்கமாட்டான். ஒரு கையிலே நோய கண்டு அது வெட்டியெடுக்கப்பட்டால், வெட்டியெடுத்ததை மடியில் வைத்துக் கொள்வோமா? சீச்சீ... தூர கொண்டு போ எங்கேனும் ஆழப் புதை என்றுதானே கத்துவோம். இதுதான் உடம்போடு சம்பந்தப்பட்ட

வாழ்க்கை. கை அழுகியது போல உடம்பு ஒருநாள் அழுகும் என்ற கவனம் வந்துவிட்டால் மனசுக்குள்ளேயே உடம்பை நாலில்லை என்று பிரித்துவிடலாம். உயிரோடிருக்கும்பொழுதே உடம்போடிருக்கும் எண்ணத்தைப் புதைத்துவிடலாம். இதற்குப் பெயர்தான் 'தான் செத்துப் போதல்'. அப்போது. நான், நீ என்ற பிரிவினை ஏதுமில்லை. உடம்பாய் உன்னைக் கொண்டபொழுதுதான், இன்னொரு உடம்புக்கென்று பெயரும், பிரிவுகளும் வருகின்றன. அப்பொழுதுதான் கவர்தலும், கவிழ்த்தலும் வந்துவிடுகின்றன. அவன், அவள், அவர்கள், அவை என்கிற பிரிவினை ஏற்பட்டு விடுகிறது. தான் உடம்பு என்கிற எண்ணம் இல்லாதபோது வரும் காதல், பிரம்மாண்டமானது எல்லாவற்றிலுமிருப்பது நானே என்று தெரிந்துவிடுகிறது. அது தன்னையே எல்லா இடத்திலும் காண்கிறது. எல்லாம் ஒன்று என்றால், நான், நீ உண்டா? நானே எல்லாம என்று தெரிந்துவிட்டால், நீ என்று அழைப்பதெப்படி? தன்மை முன்னிலையாகுமா? இது எவ்வளவு பெரிய க்ராமாடிகல் மிஸ்டேக்! குருமூர்த்தி மரத்தடியில் படுத்து ஆழ, ஆழ சங்கிலித் தொடராய் யோசித்துக் கொண்டிருந்தான்.

ஆனால், தனியே கிடந்து யோசிக்கின்றவை நேரே ஆள் பார்க்கும்போது சிதறிவிடுகிறது. யோசிப்பு வேறாகவும், நடப்பு வேறாகவும் போய்விடுகிறது. யோசிப்பில் வந்த தெளிவை நிஜ வாழ்க்கையில் கொண்டு வரவே முடியவில்லை. சங்கீதா கிணற்று நீரில் குளித்துவிட்டு, தன் போர்ஷனுக்கு ஈரப்பாவாடையுடன் ஓடும்போது, அவள் உடம்புதான் கண்களைத் தாக்கிற்று. கண்ணால் மனசு தாக்கப்பட்டது. மனசு மல்லாக்கத் தள்ளப்பட்டு, யானையால் மிதிக்கப்பட்டவனைப் போல குழைந்தது. சிந்தனைக்கு செயல் ரூபம் வருவதே முடியாதோ என்று ஏக்கம் வந்தது. இத்தனை நாள் இந்த உலகம் சொல்லிக் கொடுத்ததை மறக்க, காதல், காமம், படிப்பு. பணிவு.



நல்லது, கெட்டது, மேன்மை, கீழ்மை எல்லாம் ஒன்றாகத் தவித்தன.

இரவு ஒருமணிக்கு கரெண்ட் நின்றுபோக வீட்டிலுள்ள சீலிங் பேன் சுழற்சி நிற்க, புழுக்கம் வந்தது. தூக்கம் கலைந்தது. சாவடியில் அதிகம் புழுங்குமே, சாமிநாதனை குளத்துமேடைக்கு அழைத்துப் போகலாமா? அவனிடம் டார்ச் இருக்கிறதா? நேற்று தலையணைக்குக் கீழ் பார்த்ததாக நினைவு. டார்ச் வைத்துக் கொண்டு, சிமெண்ட் பெஞ்சுக்கு சாமிநாதன் பாதை கண்டு பிடித்துவிடுவானா? கொல்லைப்புறத்தில் இருட்டு இன்னும் அதிகமாக இருக்குமே. குருமூர்த்தி வீட்டைச் சுற்றி நடந்துபோனான். உள்ளங்காலில் மண் பகை மாறுவதைத் தெரிந்து கொண்டு அந்தக் கும்மிருட்டில் மெல்ல, மெல்ல சாவடியை அடைந்தான்.

"ப்ளீஸ், இன்னிக்கு விட்டுரு சாமி. நாளைக்கு ராத்திரி நிச்சயமா வரேன். இப்ப கரெண்ட் கட்டாயிடுச்சு வீட்ல முழிச்சுக்குவாங்க." சாவடிக்குள்ளே சங்கீதாவின் குரல் கேட்டது. அந்தக் குரலிலுள்ள சிணுங்கல் அதிர்ச்சியைக் கொடுத்தது. அந்த அதிர்ச்சியில் மனசு ஆடினபோது, சாமிநாதன் என்ன சொன்னான் என்பதைக் கேட்க முடியாமல் போயிற்று

"ஐ டோண்ட் கேர், நாளைக்கு நிச்சயமா வருவேன். பகல்லேயும் வருவேன். சும்மா பேசறதுக்கு. என் ராஜாவில்லியா இப்ப விட்டுடு." சிரமப்பட்டு விலகுகிறாள் என்பதை சில ஓசைகள் சொல்லிக் கொடுத்தன. குருமூர்த்தி ஒரு வலியை உணர்ந்தான். இப்போது இருட்டில் எங்கு கால் வைத்தாலும் மலத்தைத்தான் மிதிப்போம் என்று நினைத்துக் கொண்டான். சாவடி கதவு திறந்து. சாமிநாதன் டார்ச் நாலாபக்கமும் அலைந்து வாசல் கதவு திறந்த சங்கீதாவின் மீது நின்றது; சங்கீதா அதிகம் கலவரத்துவிடாத

வாழ்க்கை. கை அழுகியது போல உடம்பு ஒருநாள் அழுகும் என்ற கவனம் வந்துவிட்டால் மனசுக்குள்ளேயே உடம்பை நானில்லை என்று பிரித்துவிடலாம். உயிரோடிருக்கும்பொழுதே உடம்போடிருக்கும் எண்ணத்தைப் புதைத்துவிடலாம். இதற்குப் பெயர்தான் 'தான் செத்துப் போதல், அப்போது. நான், நீ என்ற பிரிவினை ஏதுமில்லை. உடம்பாய் உன்னைக் கொண்டபொழுதுதான், இன்னொரு உடம்புக்கென்று பெயரும், பிரிவுகளும் வருகின்றன. அப்பொழுதுதான் கவர்தலும், கவிழ்த்தலும் வந்துவிடுகின்றன. அவன், அவள், அவர்கள், அவை என்கிற பிரிவினை ஏற்பட்டு விடுகிறது. தான் உடம்பு என்கிற எண்ணம் இல்லாதபோது வரும் காதல், பிரம்மாண்டமானது எல்லாவற்றிலுமிருப்பது நானே என்று தெரிந்துவிடுகிறது. அது தன்னையே எல்லா இடத்திலும் காண்கிறது. எல்லாம் ஒன்று என்றால், நான்.நீ உண்டா? நானே எல்லாம என்று தெரிந்துவிட்டால், நீ என்று அழைப்பதெப்படி? தன்மை முன்னிலையாகுமா? இது எவ்வளவு பெரிய க்ராமாடிகல் மிஸ்டேக்! குருமூர்த்தி மரத்தடியில் படுத்து ஆழ. ஆழ சங்கிலித் தொடராய் யோசித்துக் கொண்டிருந்தான்.

ஆனால், தனியே கிடந்து யோசிக்கின்றவை நேரே ஆள் பார்க்கும்போது சிதறிவிடுகிறது. யோசிப்பு வேறாகவும், நடப்பு வேறாகவும் போய்விடுகிறது. யோசிப்பில் வந்த தெளிவை நிஜ வாழ்க்கையில் கொண்டு வரவே முடியவில்லை. சங்கீதா கிணற்று நீரில் குளித்துவிட்டு, தன் போர்ஷனுக்கு ஈரப்பாவாடையுடன் ஓடும்போது, அவள் உடம்புதான் கண்களைத் தாக்கிற்று. கண்ணால் மனசு தாக்கப்பட்டது. மனசு மல்லாக்கத் தள்ளப்பட்டு, யானையால் மிதிக்கப்பட்டவனைப் போல குழைந்தது சிந்தனைக்கு செயல் ரூபம் வருவதே முடியாதோ என்று ஏக்கம் வந்தது. இத்தனை நாள் இந்த உலகம் சொல்லிக் கொடுத்ததை மறக்க, காதல், காமம், படிப்பு, பணிவு,



நல்லது, கெட்டது, மேன்மை, கீழ்மை எல்லாம் ஒன்றாகத் தவித்தன.

இரவு ஒருமணிக்கு கரெண்ட் நின்றுபோக வீட்டிலுள்ள சீலிங் பேன் சுழற்சி நிற்க, புழுக்கம் வந்தது. தூக்கம் கலைந்தது. சாவடியில் அதிகம் புழுங்குமே, சாமிநாதனை குளத்துமேடைக்கு அழைத்துப் போகலாமா? அவனிடம் டார்ச் இருக்கிறதா? நேற்று தலையணைக்குக் கீழ் பார்த்ததாக நினைவு. டார்ச் வைத்துக் கொண்டு, சிகெரெட் பெஞ்சுக்கு சாமிநாதன் பாதை கண்டுபிடித்துவிடுவானா? கொல்லைப்புறத்தில் இருட்டு இன்னும் அதிகமாக இருக்குமே. குருமூர்த்தி வீட்டைச் சுற்றி நடந்துபோனான். உள்ளங்காலில் மண் வகை மாறுவதைத் தெரிந்து கொண்டு அந்தக் கும்மிருட்டில் மெல்ல, மெல்ல சாவடியை அடைந்தான்.

''ப்ளீஸ், இன்னிக்கு விட்டுரு சாமி. நாளைக்கு ராத்திரி நிச்சயமா வரேன். இப்ப கரெண்ட் கட்டாயிருக்கு. வீட்ல முழிச்சுக்குவாங்க.'' சாவடிக்குள்ளே சங்கீதாவின் குரல் கேட்டது. அந்தக் குரலிலுள்ள சிணுங்கல் அதிர்ச்சியைக் கொடுத்தது. அந்த அதிர்ச்சியில் மனசு ஆடினபோது, சாமிநாதன் என்ன சொன்னான் என்பதைக் கேட்கமுடியாமல் போயிற்று.

''ஐ டோண்ட் கேர், நாளைக்கு நிச்சயமா வருவேன். பகல்லேயும் வருவேன். சும்மா பேசறதுக்கு. என் ராஜால்லியா இப்ப விட்டுடு.'' சிரமப்பட்டு விலகுகிறாள் என்பதை சில ஓசைகள் சொல்லிக் கொடுத்தன. குருமூர்த்தி ஒரு வலியை உணர்ந்தான். இப்போது இருட்டில் எந்த கால் வைத்தாலும் மலத்தைத்தான் மிதிப்போம் என்று நினைத்துக் கொண்டான். சாவடி கதவு திறந்தது. சாமிநாதன் டார்ச் நாலாபக்கமும் அலைந்து வாசல் கதவு திறக்க சங்கீதாவின் மீது நின்றது; சங்கீதா அதிகம் கலைந்திருந்த

தான். குளித்துவிட்டு ஈரப் பாவாடையுடன் ஓடும்போது இருந்ததைவிட மோசமாய்க் காட்சியளித்தாள்.

''நீ பண்றது தப்பு சங்கீதா' குருமூர்த்தி பொருமலாய் தனக்குள் பேசினான். தான் ஏன் இங்கு நின்றுகொண்டிருக்கிறோம் என்று வேதனைப்பட்டான். டார்ச் ஒளி தன் மீது பட்டுவிடுமோ என்று நித்தியமல்லிச் செடிகளுக்குள் பதுங்கிக் கொண்டான். சங்கீதா வெளியே வந்து கதவு சாத்தினாள். மறுபடியும் இருள் கவ்விக்கொண்டது. சங்கீதா எங்கு' எப்படி நகர்ந்து போகிறாள் என்பது தெரியவில்லை. இந்த வழியாகத்தான் நடக்கவேண்டும். ஏன் வேறு திசையில் காலடியோசை கேட்கிறதென்று புரியவில்லை.

''சே, என்ன இருட்டு'' சங்கீதா தனக்குள் பேசுவது சற்று தொலைவில் கேட்டது. இரண்டு மரங்களுக்கு நடுவே அவள் நகர்வது உற்றுப் பார்க்கையில் தெரிந்தது. அவள், அதே போக்கில் நடந்தால் குளக்கரைதான் வரும். அந்தப் பக்கக் குளக்கரைப்படிகள் நொடிக்கின்றவை. குருமூர்த்தி சங்கீதாவை நோக்கி முன்னேறினான்.

'சங்கீதா இந்தப் பக்கம் வா. அது குளம்.''

''ஐயோ'' சங்கீதா பயத்தில் மெல்லக் கூவினாள்.

''நான் குருமூர்த்தி. பயப்படாதே. நாலடி இடப் பக்கமா நகர்ந்து வா.'' அவள் நகர, அவன் மீது முட்டிக் கொண்டாள். அவள் கையைப் பற்றிக் கொண்டாள்.

''குருமூர்த்தி, நீயா?'' என்று தேவையில்லாமல் கேட்டாள். முன் கைகளை விட்டு, புஜத்தைப் பிடித்துக் கொண்டாள்.

''நான்தான் பயப்படாத வா'' தன் இடப் புஜத்தைப் பற்றியிருந்த கைகளை வலக் கையால் பற்றிக்கொண்டு குருமூர்த்தி சரியான பாதைக்கு அவளை நகர்த்திவந்தான்.



''ரொம்ப இருட்டா இருக்கே.''

''லைட் போட்டா எல்லாரும் பார்ப்பாங்க.''

''அதுக்கு சொல்லலை, எப்படிப் போறது?''

''எனக்குத் தெரியும். தினம் நடந்து பழக்கம்.''

தடாரென்று தூரத்தில் கொல்லைக் கதவு திறக்கும் ஓசை கேட்டது. இருவருக்குமே தூக்கிவாரிப் போட்டது

''இரு'' என்று அவளை, அவன் தடுத்து நிறுத்தியபோது அவன் உள்ளங்கையில் மெத்தென்று அவள் மார்பு. பச்சை மார்பு அழுந்திப்பட்டது. குருமூர்த்தி தடுமாறினான். கொல்லைக் கதவு விரியத் திறந்து, சிம்னி விளக்குடன் கடைசி போர்ஷன்காரர் வெளியே வந்தார்.

''நகரு நகரு'' முணுமுணுப்பாய் சங்கீதாவை அவன் நித்திய மல்லிச் செடியின் மறைப்புக்குக் கொண்டு போனான். மண்ணில் சாய்த்து வைத்த குடை மாதிரியிருந்த செடியின் பரப்புக்குள் அவளை அழுத்தினான். அவனும் உட்கார்ந்து கொண்டான்.

''குருமூர்த்தி இங்க என்னமோ ஓடறதே''

''ஓணானா இருக்கும்.''

''ஐயோ''

''ஸ்...'' குருமூர்த்தி, அவள் வாயைப் பொத்தினான். இன்னும் நெருக்கமாய் குத்திட்டு உட்கார்ந்து கொண்டான். சிம்னி விளக்கு பிள்ளையார் மேடையில் வைக்கப்பட்டது. வந்தவர் வேட்டி உதறி, கணநேரம் அம்மணமாய் நின்று மறுபடி உடுத்திக் கொள்வது மெல்லிய வெளிச்சத்தில் தெரிந்தது. வேட்டியை மடித்துக் கட்டி, அவர் மல்லிகைச் செடிக்கருகே உட்கார்ந்தார். சிறுநீர் கழிக்கும் சத்தம் கேட்டது. சத்தம் நின்ற பிறகு ஆள் எழுந்திருக்கவில்லை.

உட்கார்ந்தபடியே தூங்கி விட்டாரா என்கிற கவலை வந்தது. சங்கீதா, அவன் தோளை அணைத்துக் கொண்டாள். இப்போது இடப் புஜத்தில், அவள் மார்பு இடித்தது. குருமூர்த்தியும் அவளைக் கட்டிக் கொள்ள ஆசைப்பட்டான். நான் உடம்பல்ல, நான் உடம்பல்ல என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

அமர்ந்தவர் எழுந்தார். விளக்குத் தூக்கினார். கதவருகே நடந்தார். திறந்து உள்ளே போனார். தாழிட்டார்.

"தாழ்ப்பாள் போட்டுடுத்தே பீடை" சங்கீதா அடிக்குரலில் கத்தினாள்.

"கத்திப் போகலாம்."

"உன் போர்ஷன் தாண்டியில்ல போகணும்?"

"அதனால என்ன?"

"உங்கப்பா முழிச்சிண்டிருந்தா?"

அதற்கு வாய்ப்பிருந்தது. அப்பா கோழித் தூக்கமாய் தூங்குபவர். சின்ன சத்தம் கேட்டாலும் விழித்துக் கொள்ள சந்தர்ப்பமிருக்கிறது. குருமூர்த்தியும் பயந்தான். என்ன செய்வதென்று கேட்டான்.

"என்னைக் கதவு பக்கம் கொண்டு போய்விடு" அவள், அவனை முன்னே தள்ளி இரண்டு கைகளையும் தோளில் வைத்துக் கொண்டாள். அவன் முன்னே நடக்க, பின்னால் நடந்தாள். கால்கள் இடித்தன. இடுப்பு உரசியது. பிள்ளையார் மரம், துளசி மாடம் தாண்டி, கொல்லைக் கதவருகே குருமூர்த்தி நின்றான். சங்கீதா, அவனை உரசிக் கொண்டு முன்னே போனாள். திரும்பிப் பார்த்து 'நீ போ' என்று கத்தினாள்.



"என்ன பண்ணப் போறே?"

"கதவு தட்டப்போறேன்."

"ஐயோ யாராவது கேட்டா?"

"நான் பேசிக்கறேன் நீ போ"

"இரு. நான் என் போர்ஷனுக்குப் போனதுக்குப் பின்னால கதவு தட்டு"

ஆனால், சங்கீதா காத்திருக்கவில்லை. உடனே கதவு தட்டினாள். குருமூர்த்தி பயந்துபோய், அடித்துத் துரத்தப்பட்ட சாரைப் பாம்புபோல நித்திய மல்லிச் செடிக்கருகே ஓடினான். செடிக்குள் குந்திட்டு உட்கார்ந்து கொண்டு, அவள் கதவு தட்டுவதைப் பார்த்தான். அவர் இரண்டு முறை தட்டியதும் கதவு திறந்து கொண்டது. "யாரது?"

உள்ளேயிருந்து ஆண்குரல் கேட்டது.

"நான்தான்."

"'நான்தான்னா?'

"சங்கீதா-எதுக்கு கதவை சாத்தினேள்?"

தடாரென்று கதவு திறக்கப்பட்டது. வெளியே வந்தவரே மறுபடி கதவு திறந்தார்.

"நீ என்ன பண்ற கொல்லைப்பக்கம்."?

"பண்றேன். பானையும் சட்டியும். உள்ளபோயி லொடக்குன்னு கதவைப் பூட்டிண்டேளே. வயத்த கலக்கிடுத்துன்னு பின்னால வந்தேன். நீங்க லைட்டோட அலைஞ்சுட்டிருந்தேள். சரி போகட்டும்னு நினைச்சேன். தபதபன்னு போயி கதவை சாத்தினா என்ன அர்த்தம்?"

"ஸாரி, கதவை ராத்திரி சாத்த மறந்துட்டாளோன்னு நினைச்சேன்."

"வழி விடுங்கோ"

"வேற யாரும் இருக்காளா?"

"இவ்வளவு நீளத்துக்கு ஒரு சாரைப் பாம்பு போச்சு"

"எங்க?"

"நித்ய மல்லிகிட்ட"

கதவு திறந்தவன் சிம்னியைத் தூக்கிப் பார்த்தான். குரு மூர்த்தி தன்னை இன்னும் குறுக்கிக் கொண்டான்.

"தடி கூட இல்லை."

"தடி எதுக்கு? பாம்பு வரும் போகும். நான் உள்ளே போறேன். கதவை சாத்திடுங்கோ"

பெண் பிள்ளையைத் தொடர்ந்து தானும் உள்ளே போவது கேவலத்திற்கு ஒப்பாகும் என்று அவரும் நினைத்திருக்கக் கூடும். சற்று நேரம் கழித்து அவர் உள்ளே போனார். கதவு தாழிட்டார். எப்போது சங்கீதா ரவிக்கை பட்டன்களைப் போட்டுக் கொண்டாள் என்று குருமூர்த்தி யோசித்தான். மெல்ல செடி விட்டு நகர்ந்து தன் போர்ஷனுக்கு வந்தான்.

"என்னடா பண்றான் உன் ஃப்ரெண்ட்."

அவன் சடக்கும்போது அப்பா எழுந்து கேட்டார்.

"தூங்கறாம்ப்பா"

"வந்து நாளாயிடுத்தே. இன்னுமா போலீஸ் கேஸ்? அவனை வீட்டுக்குப் போகச் சொல்லு"

"ஏம்ப்பா?"



"வயசுப் பையன் ரொம்ப நாள் நம்மாத்ல இருக்க வேண்டாம். அதுதவிர, நாளைக்கு ஒரு பத்து இருக்கு. நடராஜனோட மாப்பிள்ளை தவறிப் போயிட்டானாம். இடம் கேட்டிருக்கான்."

அவர் சொன்னதுபோல விடிந்து ஏழு மணிக்கு சாமிநாதன் வீடு. அவனையும், அவன் பொருள்களையும் எடுத்துக் கொண்டு போன பிறகு, அவன் படுத்துக் கிடந்த இடத்தில், குருமூர்த்தியின் கவிதையை வாசித்த இடத்தில், சங்கீதா கொஞ்சிக் குலவிப்போன இடத்தில் உப்பில்லாத சோறு கொட்டி, அதைச் சுற்றி உப்பில்லாத தோசை அடுக்கி, நிறைய காய்கறிகள் நறுக்கிப் போட்ட உப்பில்லாத சோறு, குழம்பை தன் கைக்குழந்தையை வலக்கையால் அணைத்துக் கொண்டு, கதறிக் கதறி அழுதாள்.

"அவர் சாகலை, அவர் சாகலை, அவர் சாகப்படாது! அவருக்கு இப்படி உப்பில்லாத சாதம் போடப்படாது' அவருக்குக் காரம் ஆகாது. வெளியிலெல்லாம் சாப்பிட்டு அவருக்கு வாயில் புண் வந்துடுத்து மாமி. உன் சமையல் தாண்டி என்னால சந்தோஷமா சாப்பிட முடியறதுன்னு சொல்லுவார். அவருக்கு உப்பில்லாம போடலாமா? நான் போய்உப்பு வாங்கிண்டு வரேன். இங்க இருக்கற ஒரு வீட்ல போய் உப்பு கேட்டுண்டு வரேன். செத்துப்போன ஆளுக்குத் தானே உப்பில்லாத சாப்பாடு போடறது? அவர் சாகலை. அவர் சாகமாட்டார். அவர் கல்கத்தாக்குப் போயிருக்கார் மாமி. வந்து என்னை நாகப்பட்டினம் கூட்டிண்டு போறேன்னு சொல்லியிருக்கார். நான், நாகப்பட்டினம் போணும் வழிவிடுங்கோ." அந்தப் பெண் சரப்புடைவையை இறுக்கிக் கொண்டு வெளியே வந்தாள். புருஷன் சாகவில்லை என்ற ஒரு திடமான நம்பிக்கை அந்த முகத்திலிருந்தது. இவள் பைத்தியமா? இல்லை துக்கத்தினால் ஏற்பட்ட சிறிது நேர மனக்கலக்கமா? தெரியவில்லை. அவளுக்கு அந்த சாவடியில் இருப்புக் கொள்ளவில்லை. எல்லாரும் துரத்த

தோப்புக்குள் மறைந்தாள். இழுத்துப் பிடித்து நிறுத்திய போதும் சோறுபோடமாட்டேன்னு கத்தினாள். உயிரோட இருக்கற ஆளுக்கு உப்பில்லாத சாதம் போடப்படாது. அது மகாபாவம்" என்று அலறினாள். இறுக்கிப் பிடித்த பெண்களை உதறி நித்திய மல்லிச் செடிகளைத் தாண்டி, சத்திரம் இருக்கும் பக்கம் ஓடி வந்தாள். சத்திரத்தைச் சுற்றி வெளியே போக முயன்றாள்.

அப்பாவிற்கு யார் தகவல் சொன்னார்கள் என்று தெரியவில்லை. அப்பா, அவர் வரும் பாதையை மறித்து, இடுப்பில் கைவைத்து அவளை உறுத்துப் பார்த்தார். வழியில் நிற்கிறவரை மிரண்டு போய் அந்தப் பெண் நிமிர்ந்து பார்த்து மெல்ல செடி மறைவில் ஒதுங்கினாள்.

"என்ன?" அப்பா, அவளை நோக்கிச் சீறினார். அந்தப் பெண் நிதானமாய்த் திரும்பி சாவடி நோக்கி நடந்தாள். சாவடிக்கு அருகேயுள்ள தென்னை மரத்தில் முகத்தைப் பொத்திக்கொண்டு விம்மினாள்.

"என்னைக் கொஞ்ச நேரங்கூட பொய்யா இருக்க விடமாட்டேங்கறேளே. நிஜத்த சொல்லி, நிஜத்த சொல்லி சாகடிக்கறேளே. எல்லாருக்கும் நடுவில என்னை அனாதையா விட்டுட்டுப் போயிடுத்தே" அந்தப் பெண்ணை அவள் உறவினர் பெண்கள் மெல்ல அழைத்துக் கொண்டு சாவடிக்குள் போனார்கள். குழம்புக் கரண்டியை கையில் திணித்து ஊற்றச் சொன்னார்கள். இரண்டு கரண்டி உப்பில்லாத குழம்பு ஊற்றிவிட்டு, அந்தப் பெண் நெஞ்சிலடித்துக் கொண்டு அழுதாள். அந்தப் பெண் சொன்ன கடைசி வார்த்தை குருமூர்த்தியை உலுக்கிப் போட்டது.

"என்னைக் கொஞ்ச நேரங்கூட பொய்யா இருக்க விடமாட்டேங்கறேளே. நிஜத்தை சொல்லி சாகடிக்கறேளே" மேக் பிலீவ் செய்ய, கற்பிதமாய் இருக்க அந்தப்



பெண் ஆசைப்பட்டாள். ஆனால், உண்மை விடவில்லை. அவள் புருஷன் செத்துப் போனது உண்மை. எத்தனை ஆயிரம் முறை அவள் மறுத்தாலும் அந்த உண்மை அவளைத் துரத்தும். துரத்திப் பற்றிச் சுடும் உண்மையின் கையில தன்னைக் கொடுத்து உயிரோடு எரிய வேண்டும். அந்தப் பெண் மட்டுமல்ல, எல்லாருக்கும் ஒருநாள் உண்மை தெரியவரும். தாக்கிப் பதற வைக்கும். குருமூர்த்தி கண்மூடி உட்கார்ந்து கொண்டான். அந்தப் பெண் நாலா பக்கமும் அலைந்த காட்சியே மனசுக்குள் ஓடிற்று. தானும் அதே போல், அதே தோப்பில் சரத்துணியோடு அலைவது போன்ற ஒரு காட்சி வந்தது. ஆனால், என்ன செத்துப் போயிற்று, எதற்கு ஓடுகிறோம் என்று புரியவில்லை. அன்று மாலை சாமிநாதன் இரண்டு மணி நேரத்திற்குள் இன்னொரு கவிதையை எழுதித் தரும்படி கட்டளையிட்டான். இல்லையெனில் நூறு ரூபாயைத் திருப்பிக் கொடுக்க, உத்தரவிட்டான். இரண்டு மூன்று கவிதைகள் சேர்த்துக் கொடுத்துவிட்டால் உடனடியாகக் காசு தருவதாய் ஆசை காட்டினான். அவற்றை முன்பணமாகவே கொடுப்பதற்குத் தயாராய் இருப்பதாய்ச் சொன்னான்.

பிரிவுத் துயர் வச்சு எழுது. சின்னதா எழுது போதும். பொயட்ரி நல்லா வரணும். கொஞ்சம் செக்ஸ்கூட கொடுக்கலாம். ஆனா, ஜாஸ்தி கலந்துராதே. லேசா சரிகை கலந்த மாதிரி செய்.

சாமிநாதன் செருப்பு தைக்க ஆர்டர் கொடுப்பதுபோல், தான் செருப்புத் தைப்பது போல் குருமூர்த்திக்குப் பட்டது.

சைக்கிளில் திரும்பிப் போகிற பொழுது, 'கொஞ்சம் புதுக்கவிதையா எழுதுறா. டங்கு டங்குன்னு தறியடிக்கற மாதிரி எழுதாதே" செருப்பின் நிறம் சொல்லி விட்டுப் போனதாகக் குருமூர்த்திக்குத் தோன்றியது.

நீ
நின்றிருந்த இடத்துப்
புல் ஒன்றை
நேற்று
வேரோடு பறித்து
என் வீட்டில் பதியனிட்டேன்
உள்ளங்கை நீர்விட்டேன்.
புல்லுக்கு
இன்று பிள்ளை பிறந்து விட்டது.
வேறொரு குட்டிப் புல்
அதன் வேரருகே எட்டிப் பார்க்கிறது.
புற்கள் பெருகிப் பெருகி
என் வீட்டை வளைத்துக் கொள்ளு முன்
என்னிடம் வா.
நானும்
பல்கிப் பெருக வேண்டும்
உன்னோடு.

அடுத்த பேப்பரை நீவி, பேனாவை உதறி இன்னொரு கவிதை எழுதினான்.

இரவின் தனிமையில்
என்னைத் தொடுபவை
ஏராளம் ஏராளம்
தெற்கத்திக் காற்றும்
நாகலிங்கப் பூந்தாதும்
ஒற்றைக்குயில் குரலும்
ஓணானின் சரசரப்பும்
ஜன்னலோடு ஒட்டிக் கொண்டு
நான் வெறிக்க
எட்டி முகம் உதைக்கும்
திரைச் சீலையும்
தெருவோர டீக்கடையும்



சினிமாப் பாட்டும்
தூக்கம் கலைக்கின்றன.
தொட்டுத் தொந்தரவு செய்கின்றன.
நான்
உன்னைத் தொட்ட நினைவுகள்
என் உயிரைப் பிழிய
உட்கார்ந்திருக்கிறேன்
அசையாது.

இன்னொன்றும் எழுதினால், அப்பாவிற்கும் வேட்டி வாங்கலாமென்று தோன்றியது. வேட்டி, மேல் துண்டு, புடைவை, ஜாக்கெட்டோடு இருவரையும் நிற்க வைத்து வணங்கலாமென்று ஆசை வந்தது. அடுத்த கவிதை எழுதத் தொடங்கினான்.

உள்ளுக்குள் மோகனராகம்
நெஞ்சுக்குள் உந்தன் நினைவு
கையிலே பரீட்சை புத்தகம்
கனவுக்குள் நடக்கும் காதலி.

புத்தகம் குழலாய் சுருட்டி
தேர்ந்ததோர் கலைஞன் போல
உதட்டருகே மெல்ல வைத்து
மோகனம் இசைக்கத் தொடங்க

அக்கற்பிதம் பிடித்திருந்தாலும்
உள்ளுக்குள் பெரிய துக்கம்
பிரிவினில் சுகமும் உண்டு
பிரிந்ததில் வருத்தம் உண்டு.

நீ எதிரே இல்லா நேரம்
கனவுக்குள் சுருண்டு கொள்வேன்
கனவுக்குள் சுருளச் சுருள
நான் உன்னைக் கண்டபோது
அக்கனவே தொடர்ந்து வளரும்

கனவுகள் வளர்த்த காதல்
கனவாகப் போகாதிருக்க
என் கனவுக்குள் வாழும் தோழி
நினைவாக நேரில் வாழ
நிறைவாக நேரில் வரினும்
எனக்கு கனவாகத் தெரியக்கூடும்
இது கனவில்லை என்று காட்ட
என் காயத்தை அழுத்திப் போடி.

மூன்று கவிதைகளையும் எடுத்துக்கொண்டு குருமூர்த்தி சாமிநாதன் வீட்டிற்குப் போனான். பழைய பாக்கி நூறு கழித்து புதிதாய் இருநூறுரூபாய் வாங்கினான். அம்மாவுக்கு புடவையும் அப்பாவுக்கு வேட்டியும் வாங்கினான். இருவரையும் கிழக்கே நிற்க வைத்து நமஸ்கரித்தான். பையில் வைத்திருந்த துணிகளை அவர்களிடம் நீட்டினான்

''ஏதுடா, ஏதுடா?'' அம்மா பரபரத்தாள்.

''சம்பாதிச்சேம்மா. சாமிநாதன் அப்பா அவருக்குத் தெரிஞ்ச பிரஸ்ல ப்ரூஃப் பாக்கற வேலை வாங்கிக் கொடுத்தார்'' பொய் சொன்னான்.

சங்கீதாவைப் பற்றி இனிமேல் அதிகம் மனசு அலட்டிக் கொள்ளக் கூடாது என்று தீர்மானித்து, மாமரத்துச் சிமெண்ட் மேடையில் தனியே அமர்ந்திருந்தான். ஈரப் பாவாடையோ, உலர்ந்த தாவணியோ கட்டிக்கொண்டு சங்கீதா முன்னால் போனாலும் மனசு அவளைப் பின் தொடரக் கூடாது என்று கண்களை மூடிக் கொண்டான். சாமிநாதனில்லாத கொல்லைப்புறத்துக்கு சங்கீதாவுக்கு வர விருப்பமில்லை போலும். அவளையும் பிரிவுகள் பாடாய்ப் படுத்துகின்றன போலும். ஒரு வாரம் ஒரே வீட்டிலிருந்தும் சங்கீதாலைச் சந்திக்கும்வாய்ப்பு கிடைக்கவில்லை. சனனிலிருந்து திரும்பி வந்து, வீட்டைச் சுற்றி வந்து இடுப்புத் துண்டோடு கிணற்றில் தண்ணீர் இறைத்துக்



குளித்துக் கொண்டிருக்கும்போது சங்கீதா வந்து எட்ட நின்றாள்.

''உன்கூட பேசணும். குளிச்சுட்டு வரியா?''

வெயில் உச்சிக்குப் போய் வீட்டிலுள்ளவர்கள் ஞாயிறு, டி.வி.யில் பகல் சினிமா பார்க்க உட்கார்ந்து கொண்டிருந்த போது, குருமூர்த்தியும் சங்கீதாவும் கல் மேடையில் அமர்ந்து பேச ஆரம்பித்தார்கள்.

''நீ சாமிநாதனைப் பத்தி என்ன நினைக்கறே குருமூர்த்தி?''

''ஏன்?''

''அது என்னை உயிருக்குயிரா நேசிக்கறது.''

''சரி, என்ன அதனால?''

''கல்யாணம் பண்ணின்டா என்னைத்தான் பண்ணிப்பானாம்.''

''ரொம்ப சந்தோஷம். எப்ப கல்யாணம்?''

'நான் படிச்சு முடிச்ச பிறகு.''

''ப்ளஸ் டு பரீட்சைக்கு மறுநாளா?''

''ச்சீய்....எம்.பி.பி.எஸ்''

''உனக்கு யார் சீட் தரப்போறா?''

''தொன்னூற்றி எட்டு பர்செண்ட் வாங்கினா டெஃபனெட்டா கிடைக்கும்.''

''லவ்வு கிவ்வுன்னு பேசறியே, தொன்னூற்றி எட்டு பர்செண்ட் வாங்க முடியுமா? உங்க வீடு உன் படிப்பை நம்பிண்டிருக்கு.''

"படிப்பு வேற, காதல் வேற. சாமிநாதன் மாதிரி ஒரு டைனமிக் பர்ஸனை கல்யாணம் பண்ணின்டா வாழ்க்கைல வேகமா முன்னுக்கு வந்துடலாம். அவங்க அப்பாக்கு திண்டிவனம் கிட்டக்க பதினைஞ்சு ஏக்கர் வயல் இருக்காம். புதுச்சேரிலேயும் ஃபாஸ்ட் ஃபுட் ஆரம்பிக்கப் போறாளாம். சாமிநாதனும் ஒரு டைரக்டராம்."

"சபாஷ். அவன் சமையல்காரன், நீடாக்டரா? நன்னா ஒத்துப் போகும்."

"ஏன் இப்படி கடிச்சுப் பேசற? உனக்குப் பொறாமையா இருக்கா?"

"எனக்கென்ன பொறாமை? நான் குருக்கள் வீட்டுப் பையன். குமாஸ்தாவுக்கு படிக்கறவன்."

"அதனாலதான் உன்கிட்ட ஓர் உதவி கேக்கறேன். உனக்கு நிறைய தமிழ் பாட்டு தெரியும்லியா? பழைய சாமி பாட்டெல்லாம் தெரியுமில்லியா?"

"தெரியும்."

"அதெல்லாம் கலந்து ஒரு தமிழ்க் கவிதை மாதிரி எழுதிக் கொடேன்."

"தமிழ்க் கவிதை மாதிரியா? என்ன சொல்ற?...."

"சாம் நல்லா பொயட்ரி எழுதுது குரு. நான் எத்தனையோ ட்ரைபண்ணி பாக்கறேன். எனக்கு வரலை. காற்று வெளியினிலே கண்ணம்மான்னு ஒரு பொயட்ரி எழுதிக் குடுத்தது. அவ்வளவு நல்லாருந்துச்சு பொயட்ரி."

குருமூர்த்தி தலையில் கல் விழுந்தவன் போல எழுந்து நின்றான்.

"அது பாரதியார் பொயட்ரி."

"அப்படியா? அது தன் பொயட்ரின்னு சொல்லுச்சே. உன்னுக்குள் மோகன ராகம் நெஞ்சுக்குள் உந்தன் நினைவு. யார் பொயட்ரி?"



குருமூர்த்தி தலைகுனிந்து கொண்டான்.

"தெரியலை. அவனுதா தான் இருக்கும்."

"எப்படி சொல்ற?"

"சுமாராதானே இருக்கு. அதனால சொல்றேன்."

"ச்சீ....சாமிநாதனைக் கண்டா உனக்குப் பொறாமை."

"சத்தியமா இல்லை. உனக்கு என்ன வேணும்?"

"நான் இங்கிலீஷ்மீடியம் குருமூர்த்தி. தமிழ் அவ்வளவா வராது. சாம் வச்சு எனக்கொரு லவ் பொயட்ரி எழுதிக் கொடேன்."

சட்டென்று உள்ளே ஒரு பாம்பு படமெடுத்தது.எனக்கு என்ன கொடுப்பே? என்ற கேள்வி நெஞ்சு வரை வந்து விட்டது. 'சாவடிக்கு வா. தொடு, கட்டிக்கோ. முத்தம் கொடு. சாமிநாதனுக்கு என்ன கொடுத்தியோ அதெல்லாம் எனக்கும் கொடு. அப்ப ஒரு கவிதை என்ன, நூறு கவிதை தரேன். காசே வாங்காத இலவசமா தரேன்' பைத்தியக்காரத்தனமாய் உள்ளே எண்ணங்கள் ஓடின. குருமூர்த்தி கண்களை மூடிக்கொண்டான். உள்ளே ஒரு பெண் ஈரத் துணியோடு 'அவர் சாகலை. அவர் சாகலை. அவரை சாக விடமாட்டேன்" என்று ஓடினாள்.

"ப்ளீஸ் குருமூர்த்தி உன்னை கெஞ்சிக் கேட்டுக்கறேன், ஒரே ஒரு பொயட்ரி. நல்ல பொயட்ரியா எழுதிக் குடுப்பா" அருகே சங்கீதாவின் குரல் கேட்டது.

"அப்படியே மனசைக் கரைக்கற மாதிரி, சாமிநாதன் எப்பவுமே என்னை நினைச்சுக்கற மாதிரி நான் எழுதற மாதிரி ஒரு பொயட்ரி எழுதிக்குடு. உன்னை வாழ்க்கை முழுக்க மறக்கமாட்டேன்.நான் சாமிநாதனை உசிருக்குசிரா

நேசிக்கறேன் குருமூர்த்தி. அதை எக்ஸ்பிரஸ் பண்ற மாதிரி ஒரு பொயட்ரி எழுது. நாளை கார்த்தால பஸ்ல மெட்ராஸ் போறேன். இன்னும் ஒன் அவர்ல பொயட்ரி எழுதிக் குடுத்துடுவியா? அட்லீஸ்ட் சாயந்திரம் நாலு மணிக்குள்ள யாவது தரியா?''

குருமூர்த்தி கண் திறக்காமல் சரி என்று சொன்னான். சங்கீதா எழுந்து போகும் சத்தம் கேட்டது. குருமூர்த்தி வாழ்க்கையைப் பற்றி ஒரு வியப்போடு மௌனமாய் உட்கார்ந்திருந்தான். இந்த முறை கவிதை எழுதும்போது கனமாய் ஏனோ ஒரு துக்கம் பற்றிக் கொண்டது. காதல் என்கிற விஷயத்தின் கனபரிமாணம் காதலிக்காமலேயே புரிந்தது போலிருந்தது. குருமூர்த்தி எழுதத் தொடங் கினான்

வெயிலில் கண்கள் இருட்ட
குளத்தினில் வீழ்ந்தது போல
உள்ளுக்குள் தனிமை தகிக்க உன்
காதலில் சொக்கிப் போனேன்.
குளமது நூறாள் ஆழம்
கரையில் ஆயிரம் ஆட்கள்
கோடைக்கு இதமிருந்தாலும்-என்
சாவுக்கும் குளமே காரணம்.
கைகால்கள் உதைத்துத் தவிக்க
கரையாட்கள் உரக்கச் சிரிப்பார்கள்
நாங்கெல்லாம் சூடு தாங்கலை-அடி
உனக்கெதுக்கு இந்தக் கொழுப்பு.
ஆளுக்கொரு கல்லை எடுத்து
ஆத்திரமாய் அடித்தார் என்னை.
தூக்கிலே போடும் முன்னர்
சவுக்கினால்'அடிக்கும் உலகம்.
காதலோ உயிர்வதை செய்ய



கண்டவர் சூடு போட
சாவதே சிறப்பு என்று ஆழக்
குளத்தினில் என்னை இழந்தேன்.
குளத்திடை ஆழம்போக
வேருலகம் கண்டேன் அங்கே.
வெளிச்சத்தில் சூடு இல்லை
வேர்களில் பிடிப்பு இல்லை
துளைந்திடும் மீன்கள் ஆயிரம்
தூணாக எவரும் இல்லை
சைகையே பேச்சு அங்கே-பெரும்
சப்தமாய் எதுவும் இல்லை.
கனவுகள் நீர்க்குளம் போல
கண்டிக்க எவரும் இல்லை
வாழ்வது எளிது அங்கே
வம்புக்கு மதிப்போர் இல்லை
நான் மட்டும் கனவில் மூழ்கி
உன் காதல் ரசித்திருப்பேன்
தொடர நீ இல்லை எனினும்
என் காதல் என்னைக் காக்கும்

சட்டென்று ஒரு பெரிய அயர்ச்சி குருமூர்த்தியை சுற்றிக் கொண்டது. நோட்டுப் புத்தகத்தைக் கீழே வைத்து விட்டு மல்லாக்கப் படுத்துக் கொண்டான். யாருமே என்னைக் காதலிக்கவில்லை. நானும் யாரையும் காதலிக்கவில்லை. என்னால் எப்படி, இப்படி எழுத முடிகிறது?

யார் சொல்லித் தந்தார் எனக்கு?

யாரும் சொல்லித் தரவில்லை.

காதலின் சூட்சும வேலை? தன் யோசிப்புகூட ஏன் கவிதை நடையிலிருக்கிறது? ஒருவேளை காதல் குளத்தினில் மூழ்கியது நான்தானா? சங்கீதாவோ, சாமிநாதனோ இல்லையா? அவர்கள் பிராக்டிகலான ஆட்களா? நான் கனவுகள் விற்பவனா? இந்தக் கவிதையும் என்னுடையது

இல்லையா? எப்போதோ கொடுத்த முத்தத்துக்கு இப்போது தத்தம் செய்யப் போகிறேனா? சீ என்ன கொடுமை. ஏன் இப்படி இழிவு காரியம் செய்கிறேன்? என்னால் முடியாது என்று ஏன் ஒதுங்கவில்லை? சங்கீதா அந்தக் கவிதையை வாங்கிக் கொண்டு போனாள். அவன் முகத்தை தன் விரல்களால் வருடி தன் விரல்களுக்கு ஒரு முத்தம் கொடுத்தாள். குருமூர்த்திக்கு சிரிப்பு வந்தது. எச்சிலூற அவன் முத்தம் கொடுத்தது ஞாபகம் வந்தது. உதடு துடைத்துப் போனது மனதில் மின்னிற்று. சட்டென்று பத்தினியாகிவிட்டாளோ என்ற சிரிப்பு வந்தது.

சங்கீதா சென்னைக்குப் புறப்பட்டுப் போனாள் சாமிநாதன் வாரா வாரம் கவிதை கேட்டான். இருபத்தொன்பது கவிதைகள் என்று கணக்கு வைத்துக் கொண்டான். அதில் ஏழு கவிதைக்கு மட்டுமே பணம் கொடுத்தான்.

''எங்கிட்ட அவ்வளவு பணம் இல்லை. கொஞ்சம் குறைச்சுக்கோ'' என்றான். மீதிக்கு கடன் சொன்னான்.

''நான் காலேஜ் முடிச்சவுடனே கடை திறந்திடுவேன். நைட் ஹோட்டல் பாஸ்ட் ஃபுட் தந்தூரி சிக்கன், எறாப் புட்டு, நெத்திலிய மாவில தோய்ச்சு பஜ்ஜி கணக்கா போடப் போறோம். நீ சாப்பிடறதா இருந்தா சாப்பிடலாம். உன்கிட்ட காசு வாங்கமாட்டேன். வியாபாரம் புடிக்கட்டும். சப்ஜாடா உன் கணக்கு தீர்த்தர்றேன்.''

சங்கீதாவைப் பார்க்க சாமிநாதன் சென்னைக்கு நாலு முறை போனான். குருமூர்த்தியைத் தவிர்த்து விட்டு, வேறு நண்பர்களோடு ரகசியமாகப் பேசினான். பர்ஸில் அவள் போட்டோவை வைத்துக்கொண்டு அதை எல்லாருக்கும் காட்டினான். அவனிடம் ஒழுக்கமில்லை, மாறாய் ஒரு திமிர் இருந்தது. ஓர் அலட்டல் இருந்தது. சாமிநாதனுக்கு இரண்டு பேப்பர் போயிற்று. குருமூர்த்தி முதல் வகுப்பில் பாஸ் செய்தான்.



மணக்குள விநாயகர் கோயிலுக்கு வந்த முதல்வரின் மனைவியிடம் அப்பா கெஞ்சிக் கூத்தாடி அரசாங்கக் கருவூலத்தில் குருமூர்த்திக்கு குமாஸ்தா வேலை வாங்கிக் கொடுத்தார். ''வேலை நிரந்தரமாகும் வரைக்கும் கவிதையெல்லாம் எழுதாதே. கொல்லைப்புறத்ல படுத்துத் தூங்காதே'' என்று கட்டளையிட்டார்.

அண்ணாவுக்கு கல்யாணம் நடந்தது. மன்னி ஒருநாள் சாதம் போடும்போது அவன் கவிதையைப் பற்றிக் கேட்டாள்.

''கொல்லைப் புறத்ல உட்கார்ந்து எழுதிண்டேருப்பேளாமே. ஒன்னுகூட நான் பார்க்கலையே.''

எல்லாம் விற்றுவிட்டது என்று சொல்ல வாய் திறந்தான். ஆனால், சொல்லவில்லை. அண்ணாவுக்கும், மன்னிக்கும் எதாவது பரிசளிக்க சாமிநாதனிடம் போய்க் காசு கேட்டான்.

''எல்லா துட்டும் ஹோட்டல்ல போட்டுட்டேன் குருமூர்த்தி. உங்க அண்ணா தலைக்கறி சாப்பிடுவாரா? பார்சல் தரேன். எடுத்துட்டுப் போ. இப்போதைக்கு என்னால அதுதான் தரமுடியும்.''

''உனக்கு மறுபடி கவிதை வேண்டாமா?'' குருமூர்த்தி ஆத்திரத்துடன் கேட்க சிரித்தான்.

''இப்ப நானே கவிதை எழுதறேன்.''

''அடடே, அப்படியா...?''

''எங்கிட்ட அந்த வேலை கத்துக்கணும்னா நீ நூறு ரூபாய் தரணும். உனக்கு உட்கார்ந்து கேட்க நேரமில்லைன்னா இந்த புஸ்தகம் படி''

அட்டை கிழிந்த கொக்கோகம் அவன் கையிலிருந்தது. குருமூர்த்தி வாங்கிப் புரட்டிப் பார்த்துவிட்டு, அவனிடமே கொடுத்து விட்டான். ''சங்கீதா மறுபடியும் புதுச்சேரிக்கு

வரட்டும். அப்ப சொல்றேன். நான் உன்னைப் பத்தி...'' மனசுக்குள் கறுவிக் கொண்டான். திடீரென்று சங்கீதா ஒரு நாள் புதுச்சேரிக்கு ஓடி வந்தாள். துணிப் பையை வைத்து விட்டு சாமிநாதனைத் தேடிப் போனாள். திரும்பி வந்து தன் போர்ஷனுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தாள். மறுநாள் காலை மறுபடியும் சாமிநாதன் வீடு எது என்று குருமூர்த்தியிடம் விசாரித்து விட்டுப் போனாள். பிற்பகலில் திரும்பவில்லை. மாலையாயிற்று வரவில்லை. ''சங்கீதா எங்கடா? சங்கீதா எங்கடா?'' என்று அவன் வீட்டில் கேட்டார்கள். இருட்டிய பிறகு திரும்பி வந்தாள். அவள் வீட்டில் கேட்டதற்கு எதிர்த்துப் பேசினாள். அவள் அம்மாவிடம் பளீர், பளீரென்று அடிபட்டாள்.

''எழுபத்தாறு பர்ஸெண்ட் வாங்கியிருக்கே. எந்த காலேஜ்லேடி இடம் கிடைக்கும் உனக்கு? போஸ்டல்ல பி. ஏ. படிக்க மெட்ராஸ் என்ன? நீ திரும்பி மெட்ராஸ் போகக்கூடாது'' அவள் அம்மா சத்தம் போடுவது தெரிந்தது. சங்கீதா மெட்ராஸ் போகவில்லை. சாமிநாதன் வீட்டை விட்டு எங்கேயும் நகரவில்லை.

சட்டென்று ஒருநாள் புதுச்சேரி சுவர் முழுக்க சாமிநாதன் படம் ஒட்டியிருந்தது. 'அவளுக்காக'...கவிஞர் சாமிநாதனின் கவிதை நூல்வெளியீட்டு விழா. பேராசிரியை கலைமதி வெளியிடுகிறார். வாழ்த்துவோர் என்று நிறையப் பெயர்கள் போட்டிருந்தது. குருமூர்த்தி திடுக்கிட்டான். சாமிநாதன் கடைக்கு ஓடினான். ஹோட்டல் சத்குருவில், விழா ஏற்பாட்டிற்காக போயிருப்பதாகச் சொன்னார்கள். சத்குருவிலும் சாமிநாதன் இல்லை.பேராசிரியை வீட்டுக்குப் போயிருப்பதாகச் சொன்னார்கள். பேராசிரியை வீட்டுக்கு ஓட, சாமிநாதன் எதிர்ப்பட்டான்.

''என்னது கவிதை புத்தகம்?''

''ஏன்? நான் எழுதினதுதான்.''



''அது நான் எழுதினதில்லையா?''

''அதுதான் வித்துட்டியே.''

''எதுக்காக வாங்கின?''

''எதுக்கோ வாங்கினேன். வாங்கின பிறகு அது என் சொத்து. நான் என்ன வேணாலும் பண்ணுவேன். நீ கேக்க முடியாது.''

''நான் உண்மைய சொல்விட்டா.''

''யாரும் நம்பமாட்டாங்க. உன் கவிதைய மனப்பாடம் பண்ணி, ஹோட்டல்லியே உட்கார்ந்து அப்பதான் எழுதற மாதிரி நடிச்சு, சாப்பிட வந்த பேராசிரியைகிட்ட காண்பித்தேன். பேராசிரியைதான் புஸ்தகமா போடச் சொன்னாங்க.''

''மீதிக் காசுகூடக் கொடுக்கலையே...''

''புஸ்தகம் விக்கட்டும். தரேன்.''

''நான் ஒத்துக்கலேன்னா.''

''உதைபடுவே.''

''அடிடா பார்க்கறேன்.'' குருமூர்த்தி எகிறி சாமிநாதன் சட்டையைப் பற்றிக் கொண்டான். சாமிநாதன் முழுபலத்துடன் தள்ள, மல்லாக்க விழுந்தவனை எழுப்பி நிற்க வைத்தான்.

''ஸ்நேகிதக்காரனாச்சேன்னு இத்தோட விடறேன். எதுனா ஏடாகூடம் பண்ணினே, நம்ம கடைல கறிகொத்தறவன் வீட்டுக்குள் பூந்து அடிப்பான். ஆயிரம் ரூபா இது வரைக்கும் குடுத்திருக்கேன். நக்கித் தின்னுட்டு எதிர்த்துப் பேசாதே. இத்தோட கணக்கு முடிஞ்சு போச்சு.''

உதறிவிட்டு சைக்கிளில் ஏறிக் கிளம்பினான். குருமூர்த்திக்கு அழுகை வந்தது. கோபம் வந்தது. பீர் குடிக்கிற தாகம் வந்தது.

இந்த முறை பீர் கசக்கவில்லை. குமட்டவில்லை. நாலு பாட்டில் குடித்த பிறகுதான் உடம்பு ஆடியது. சத்குருவின் ரெஸ்டாரெண்டில், கவிதை நூல் வெளியீட்டு விழா நடந்தது. படியிலமர்ந்து எதிரேயுள்ள பெரிய நிலைக் கண்ணாடியில் தன் முகம் பார்த்து அடிக்கடி சிரித்துக் கொண்டிருந்தான். அவன் நகர்ந்தால் அழுத்தி, அடிக்கும்படி இரண்டு ஆட்களை சாமிநாதன் அமர்த்தியிருந்தான்.

சாமிநாதனுக்கு 'கவிதை இளவரசு' என்று பட்டமளிக்கப்பட்டது. 'அகத்துறை அருட்கவி' என்று பாராட்டப்பட்டான். கவிதைப் புத்தகத்தை வெளியிட்டு, பேராசிரியை அதை உயர்த்திக் காட்டியபோது உடம்பெல்லாம் கொதித்தது.

"டேய் சோம்பேறி, திருட்டுப் பையா" போதையில் எழுந்த குருமூர்த்தியை பொத்து, பொத்தென்று அடித்தார்கள். கவிஞனுக்கு எதிர்ப்பு வரவரத்தான் அவன் பலம் கூடும் என்று பேராசிரியை பேசத் தொடங்கினார். குருமூர்த்தியை ஆட்டோவில் போட்டு அவன் வீட்டில் தள்ளினார்கள். ஆட்டோவில் போகும்போது லொட் லொட்டென்று தலையிலடித்தார்கள். "கொதிக்கற எண்ணெய முகத்தில ஊத்திடுவோம்." பயமுறுத்தினார்கள். வாசல் கம்பிக் கதவுகளைப் பிடித்து குருமூர்த்தி வெகுநேரம் தெருவையே வெறித்துக் கொண்டிருந்தான். "ஐயோ, ஐயோ" என்று யாரோ கொல்லைப்புறம் ஓடுவது தெரிந்தது. லாந்தரும், சிம்னியும், டார்ச்விளக்கும் கொல்லைப்புற இருட்டைத் தொண்டர்கள் கூட்டம்போல் விலக்கிக் கொண்டு நடந்தன.



"ஐயோ என் தலைல கல்லைப் போட்டுட்டியேடி. பரிட்சைல மார்க் வாங்கலேன்னு திட்டினதுக்கு என்னை பழிவாங்கிட்டியேடி" குளத்துக்கரையில் ஊறிக்கிடந்த சங்கீதாவின் உடலைப் பார்த்து சங்கீதாவின் அம்மா கத்தினாள்.

குருமூர்த்தியின் போதையேறிய மண்டைக்குள் சிவ்வென்று அந்தச் சாவு தாக்கியது. தள்ளாடிப் போய் சிமெண்ட் பெஞ்சைப் பிடித்துக் கொண்டான். வயிறு புரட்டிப் புரட்டி வாய்க்கு வந்தது. கண்கள் யாரோ நூல் கட்டி மேலே இழுத்தது போல் செருகின. 'தொப்'பென்று பெஞ்சில் உட்கார்ந்தான். பிருஷ்டத்தை செங்கல் தாக்கியது. கல்லைத் தூக்கி வீசினான். அடியில் கடிதமிருந்தது. எடுத்துப் பிரித்தான், அது சங்கீதாவின் கையெழுத்து. மடமடவென்று நகர்ந்துபோய், கொல்லைப்புற பல்பு வெளிச்சத்தில் கடிதம் பிரித்தான். தொலைவில் குளத்தருகே விளக்குகள் புருஷனை இழந்த பெண் போல் இங்கும் அங்கும் அலைந்துகொண்டிருந்தன.

இனிய குருமூர்த்திக்கு,

நான் செத்துப் போவது என்று தீர்மானித்துவிட்டேன். சாவதற்கு முன் சில வார்த்தைகள் உன்னோடு மட்டும் பேச ஆசைப்படுகிறேன். குருமூர்த்தி. இந்த உலகில் சாவுதான் கனவு மாதிரியான இடம். சௌகர்யமான இடம். அங்கு யாரும், யாரையும் ஏமாத்தமாட்டார்கள். எல்லாம்செய்து விட்டு எனக்குத் தெரியாது என்று பொய் சொல்ல மாட்டார்கள்.

சாமிநாதன் என்னையும், என் வயிற்றில் வளரும் அவன் குழந்தையையும் நிராகரித்துவிட்டான். 'நான் மட்டுந்தான் உன்னைத் தொட்டேனா?' என்று கேட்டுவிட்டான். குருமூர்த்திக்குக் கூடதான் நீ கிஸ் குடுத்தியாம். இது அவன் குழந்தையா இருக்கக் கூடாதா? என்று சந்தேகப்பட்டான்.

குருமூர்த்தி நான் செத்துப்போவது அவமானத்தால் அல்ல. ஆண்களை எனக்கு எடைபோடத் தெரியவில்லையே என்ற வெறுப்பில் சாகிறேன். யாரையும் எதற்கும் நம்பவே முடியாது என்கிற தனிமை வேதனையில் சாகிறேன்

பொங்கிப் பொங்கி இத்தனை கவிதை எழுதிவிட்டு இப்பொழுது காதலே இல்லையென்று சொல்கிறாயேடா என்று சாமிநாதனைக் கேட்டேன். அந்தப் பொய்யன் முதன் முதலாய் ஓர் உண்மை சொன்னான். எல்லாக் கவிதையும் உன்னிடம் காசு கொடுத்து வாங்கியது என்று சொன்னான்.

குருமூர்த்தி பாவம். என்னைப் போல் நீயும் கற்பிழந்து விட்டாய். மிக உன்னதமான கவிதைகளை ஓர் அயோக்கிய விடம் அடகு வைத்துவிட்டாய். குருமூர்த்தி, நான் சாமிநாதனை நேசிக்க அந்தக் கவிதைகளே காரணம். அவை உன்னுடையது என்ற உண்மை தெரிந்த பிறகும், ஏனோ உன்னை நேசிக்க விரும்பவில்லை.

குருமூர்த்தி, தயவு செய்து இனி உன் கவிதைகளை விற்காதே. எத்தனை தேவையிருந்தாலும், என்ன வறுமையிருந்தாலும் உன் மனசை, பெருமையை, கல்வியை, கவிதையை யாருக்கும் அடகு வைக்காதே. சாமிநாதனை அவன் வாழ்க்கை தண்டிக்கும். அவன் மரணம் என்னுடையதைவிடக் கோரமாக இருக்கும். எனக்கு என்மீது தான் கோபம். அவனுக்காக என்னைப் பற்றி, நீ வியந்து என்னை எழுதிய உன் கவிதைகளோடு நான், நம் குளத்தில் விழுந்து செத்துப் போகிறேன்.

கரையோரம் கல்பிடித்து நின்று மெட்டி எடுத்துக் கொடுத்தேனே தவிர நான் நீச்சல் கற்றுக் கொள்ளவேயில்லையே குருமூர்த்தி. கெட்டிக்காரியாய், தைரியசாலியாய், நடித்தேனே தவிர, அது உண்மையில்லை குருமூர்த்தி.



நான் போய் வருகிறேன். எங்கேனும் ஒரு தேசத்தில் ஏதேனும் ஒரு யுகத்தில் நாம் மறுபடி சந்திப்போம். பரஸ்பரம் கவிதை படிப்போம்.

உன் இனிய ஸ்நேகிதி.

சங்கீதா.

குருமூர்த்தி கடிதத்தைக் கசக்கி அலறினான். இருட்டில் 'திபுதிபு'வென்று விளக்குகள் நோக்கி ஓடினான். குளப்படிகளில் இறங்கினான். ஒரு கல் புரள, இடக்கால் பக்கம் வலக் கால் வைத்து, வலக் காலை எங்கோ வைத்து கடிதத்தோடு குளத்துக்குள் தடுக்கி விழுந்தான் சேறு இழுக்க, உதறி கரைக்கு வந்தான். ஈரம் சொட்டச் சொட்ட ''சங்கீதா, சங்கீதா'' என்று அலறி ஓடினான்

டார்ச்சோடு நின்றிருந்த அவன் அப்பா சட்டென்று திரும்பிப் பார்த்தார். அவன் அலறலிலுள்ள கலவரம் கவனித்தார். இந்த நேரத்தில் ஏதாவது காதல் மண்ணாங்கட்டி, தெருப்புழுதி என்று சொல்லி விடுமோ என்று பயந்தார். நாலடி முன்னே வந்து அவனைத் தடுத்து நிறுத்தினார். தள்ளிக் கொண்டு போனார்.

''அப்பா அப்பா என் கவிதையெல்லாம் போயிடுதுப்பா. என்னை விட்டுட்டு எல்லாமே போயிடுதுப்பா'' கத்திய பிள்ளையின் வாயைப் பொத்தினார். இன்னும் விலக்கி அழைத்துக் கொண்டு போனார். ஈரம் சொட்ட சுருண்டிருந்த கடிதத்தை அவன் கையிலிருந்து பிடுங்கி குளத்தில் எறிந்தார்.

''பேசப்படாது. எதுவும் பேசப்படாது. இப்ப பேசவே படாது.''

அவன் தலையை உலுக்கி அடக்கினார். ஓர் இளம் பெண் சாவில், தன் மகன் இணைத்துப் பேசப்படக் கூடாது

என்று விரும்பினார். அவனைத் தரதரவென்று வீட்டிற்கு இழுத்துப் போனார். அவன் அழுகையில் கலந்து வந்த பீர் நாற்றம் அவருக்கு அருவெறுப்பு கொடுத்தது.

"உன் போக்கு சரியில்லடா. நீ செய்யற காரியம் எதுவும் சரியில்லை. உன்னையும் பாழ்பண்ணி, என்னையும் பாழ் பண்ணிடாதே. கத்தறதை நிறுத்து" அவனைச் சுவற்றில் வைத்து முகத்தில் அறைந்தார்.

புருஷன் பிடியில் வாய் பொத்திக்கிடந்த பிள்ளையை அம்மா நிதானமாய்ப் பார்த்தாள்.

"உன்னை வெட்டிப் போடணும்டி கடங்காரி. இவன் குடிக்கற பழக்கத்தை எங்கிட்டேர்ந்து நீ மறைச்சுட்டேல்ல. நீ சொல்லாத போனா, வெளில வராமப் போயிடுமா? குழந்தைகளைக் கெடுக்கறதுக்குன்னே வந்திருக்கியேடி பாவி" அம்மாவைப் பார்த்துக் கத்தினார், ஒன்றும்புரியாமல் அண்ணி வாசலிலேயே நின்றாள். தூங்கிக் கொண்டிருந்த அண்ணா, மலங்க மலங்க விழித்தான். தங்கையும், தம்பியும் குருமூர்த்தியை வியப்போடு பார்த்தார்கள். அம்மா விளக்கேற்றினாள். குனிந்து வேங்கடாசலபதி படத்திற்கு நமஸ்காரம் செய்தாள். நமஸ்காரம் பண்ணும்போது குலுங்கிக் குலுங்கி அழுதாள். மெல்லப் பாடத் தொடங்கினாள்.

தெரியேன் பாலகனாய் பல
தீமைகள் செய்துமிட்டேன்
பெரியேன் ஆயின் பின்
பிறர்க்கே உழைத்து ஏழையானேன்
கல்தேன் பூம்பொழில்சூழ்
தணமாமலை வேங்கடவா
அரியே வந்தடைந்தேன்
அடியேனை ஆட்கொண்டருளே.



பற்றே ஒன்றுமில்லேன்
பாவமே செய்து பாவியானேன்
மற்றே ஒன்றறியேன்
மாயனே எங்கள் மாதவனே
கல்தேன் பாய்ந்தொழுகும்
கமலச்சுனை வேங்கடவா
அற்றேன் வந்தடைந்தேன்
அடியேனை ஆட்கொண்டருளே.

அம்மா பாசுரம் பாடப்பாட அவனும் அழுதான். அவன் அப்பா அழுதார். அண்ணா கண்களைத் துடைத்துக் கொண்டான். மன்னி தலைப்பால் வாய் பொத்திக் கொண்டாள். அவன் வேதனை தாங்காமல் அவன் வீடும் அவனோடு அழுதது.

அம்மா பாடிய பிரபந்தச் செய்யுட்கள் யார் பாடியது என்று சிறிது நேரம் யோசித்தான். அது திருமங்கையாழ்வார் என்பதை ஞாபகப்படுத்திக் கொண்டான். எப்போதோ பாடிய அந்த சந்தக் கவிதைகள் இப்போது எவ்வளவு சொந்தமாய் எனக்கு நானே பாடியது போலிருக்கின்றன என்று வியந்தான்.

தாயே தந்தையென்றும்
தாரமே கிளை மக்களென்றும்
நோயே பட்டொழிந்தேன்
உன்னைக் காண்பதோர் ஆசையினால்
வேயேய் பூம்பொழில் சூழ்
விரையார் திருவேங்கடவா
நாயேன் வந்தடைந்தேன்
நல்கி ஆளென்னைக் கொண்டருளே.

அவன் தொடர்ந்து பாடத் தொடங்கினான். அது, அவன் கவிதை அல்ல. அவனுக்கு இந்த நேரம் பொருத்தமாய் திருமங்கையாழ்வார் ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு எழுதிய கவிதை. அவன் இப்போது கடன் வாங்கிப் பாடுகிற இரவல் கவிதை. திருமங்கையாழ்வார் அதற்குக் காசு கொடு என்று அவனைக் கேட்கமாட்டார். அவனையே கொடு என்று கேட்பார். குருமூர்த்தி தன்னைக் கொடுக்கச் சித்தமானான்.

(முற்றும்)

வட்டார நூலகம்
அசோக நகர், சென்னை - 83

# காற்றுக்கென்ன வேலி?

## 1

என்றுமில்லாதபடிக்கு ஆபீஸ் போவது அன்று சந்தோஷமாக இருந்தது. ஸ்கூட்டர் ஓட்டுவதில் ஓர் அதிகமான விரைவும், அதே சமயம் ஒரு கவனமும் தோன்றின. வாகனங்களை ஓவர்டேக் செய்கிறபொழுது மனசு முற்றிலும் ஸ்கூட்டர் ஓட்டுவதில் படிந்து விரையும் குறையாமல், குழப்பமும் ஏற்படாமல் கடக்க முடிந்தது.

சில சமயம் இதே விதமான முந்துதல் சரிவரச் செய்யப்படாமல் வயிறு கலங்கடிக்கப்பட்டதுண்டு. வசவுகள் வாங்கித் தந்ததுண்டு. இன்று என்னவோ ஓவர்டேக்கில் சுலபமான கணக்காய், யாரையும் பதற்றப்படுத்தாத தன்மையாய், சந்தோஷமாய் இருந்தது.

இன்னும் மூன்று நிமிடத்தில் ஆபீஸ் போய் விடலாம். இன்னும் இரண்டு மணி நேரத்தில் ஜெனரல் மேனேஜர் உள்ளே கூப்பிடலாம். அவரது கண்ணாடி அறைக்குள் நுழைந்ததும் கை குலுக்கலாம். அமரச் சொல்லலாம்.

''சுந்தரம்! இன்றிலிருந்து இந்தக் கம்பெனியில் உதவி மேனேஜராகப் பதவி உயர்வு பெறுகிறீர்கள். எக்ஸிக்யூட்டிவ்

என்கிற வட்டத்திற்குள் வந்து விடுகிறீர்கள். இது ஆர்டர்.'' கவர் நீட்டலாம். மறுபடி கை குலுக்கலாம்.

''சுந்தரம்! இந்த கம்பெனி உங்களைப் போன்ற இளைஞர்களை உற்சாகப்படுத்தி முழுவதுமாய் அவர்கள் திறனை உபயோகப்படுத்திக் கொள்ள நினைக்கிறது. கம்பெனி நன்றாக இருந்தால் நாம் நலமாக இருப்போம். நாம் நலமாக இருந்தால் கம்பெனி நன்றாக இருக்கும். பரஸ்பரம் இந்த நன்மைக்காக நீங்கள் இன்னும் கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும். இந்தப் புதிய பொறுப்பில் பிரச்னைகள் அதிகம். எந்தப் பிரச்னையாயினும் என்னிடம் நேரே பேசலாம். எப்போது வேண்டுமானாலும் தொந்தரவு செய்யலாம். ஏனெனில் நாம் வேறு. கம்பெனி வேறு அல்ல. இன்னும் மூன்று மாதத்தில் கம்பெனி உங்களுக்கு கார் தரும். உங்கள் வீட்டு டெலிபோன் பில்லை கம்பெனி பார்த்துக் கொள்ளும். உங்கள் குடும்பம் உட்பட மருத்துவச் செலவை கம்பெனி ஏற்கும். குழந்தைகளின் படிப்பை, அதற்கு உண்டான செலவுகளை, கம்பெனி தரும். இரண்டாயிரம் ரூபாய் வரை வீட்டு வாடகையை கம்பெனி கொடுக்கும். சொந்த வீடிருப்பின் பராமரிப்புச் செலவு ஏற்கப்படும். வருடத்திற்கு ஒருமுறை பதினைந்து நாள்கள் ரூபாய் பதினைந்தாயிரத்துடன் கட்டாய லீவு. இந்தக் காசை வங்கியில் போட்டு விட்டு வீட்டில் இருக்கக்கூடாது. குடும்பத்துடன் வெளியூர் போயே ஆக வேண்டும். பதிலுக்கு கம்பெனி உங்களிடம் எதிர்பார்ப்பது ஒன்றே ஒன்றுதான். இந்தக் கம்பெனியின் வளர்ச்சியைத் தவிர வேறு எதுவும் உங்கள் சிந்தனையில் இருக்கக் கூடாது என்பதுதான். நாளையில் இருந்து டை அணிந்து கொண்டு வாருங்கள். இது என் தனிப்பட்ட பரிசு.'' ஒரு டை பின் தரலாம்.

சுந்தரம் வண்டியின் ஓட்டத்தை இன்னும் குறைத்தான். வண்டி ஐம்பத்தைந்தில் இருந்து ஐம்பதுக்கு இறங்கியது. இன்னும் மெதுவாகி நாற்பத்தைந்தில் நின்றது.



ஒருவேளை இந்த சந்தோஷம்தான் வண்டியைத் திறமையாக ஓட்ட வைத்ததா? இன்றைக்கு பிரமோஷன் கிடைக்கப் போகிறது என்பதால்தான் முழுவதுமாய் மனசு வண்டியோட்டுவதில் ஒன்றியதா? வாகனங்களைப் பதற்றமின்றி முந்த மனது முற்றிலும் தயாராயிற்றா? வண்டியோட்டுவது போலத்தான் ஒரு கம்பெனியும், அங்குள்ள வேலையும். வண்டி ஓட்டுகிறபொழுது வண்டி ஓட்டுவது தவிர வேறு எந்த சிந்தனையும் இல்லாதிருப்பது போல்தான் இங்கும் இருக்க வேண்டும். வீட்டு சிந்தனை கம்பெனிக்கு வந்தால் மேலும் குழப்பமாகும். கம்பெனி சிந்தனை வீட்டுக்கு வர, வீடு கஷ்டமாகும். தான் வெற்றி பெற்ற காரணமும், இந்த நியதியின் அடிப்படையில்தான். வீடு பற்றி எந்தக் குழப்பமுமின்றி கம்பெனியை நேசித்ததுதான். வீடு குழப்பம் இல்லாமல் இருக்கக் காரணம் கிரிஜா. கிரிஜா குழப்பமே இல்லாமல் இருக்கக் காரணம், கம்பெனி. கம்பெனி தரும் நாலாயிரம்.

''நேத்தைக்கு வழக்கத்தை விட சீக்கிரமாக கிளம்பிட்டேள். சீக்கிரம் போகணும்னு முன்னேயே சொல்லப் படாதோ? ஹிண்டு பேப்பர் கையில வச்சண்டு ஏதோ எழுதிட்டிருந்தேளா, தொந்தரவு பண்ணக் கூடாதுன்னு நகர்ந்துட்டேன். நீங்க குளிச்சதும் தெரியல, பூஜை பண்ணினதும் தெரியல. நான் வரட்டுமான்னு படி இறங்கிட்டேள். அப்புறம் எப்படி நிறுத்தறது? செக்கில கையெழுத்து வாங்கணும்னு நினைச்சேன். வாங்கலே. கீழ் போர்ஷன் மாமிகிட்டே நூறு ரூபா கடன் வாங்கிண்டு நாளைக்கு கொடுத்துடறேன் மாமினு சொல்லிட்டுப் போனேன். எங்க பள்ளிக்கூடத்துல சீட்டு ஆரம்பிக்கறா. தன்னு சீட்டு. தீபாவளிக்கு முடியும். நான் சேர்ந்துட்டேன். தடக்குன்னு ரெண்டாயிரம் ரூபா தீபாவளிம் போது தேடாதசீட்டுப் பணம் ஆயிரமும், நீங்க கொடுக்கற காசும் இருந்தா இன்னும் நல்ல புடவையா எடுத்துக்கலாமோன்னோ?''

"அதாவது மூவாயிரம் ரூபா புடவை."

"ஆமா மூவாயிரம். என்ன இப்போ?..."

"ஒண்ணுமில்லே..."

"கல்யாணப் புடவைக்கப்புறம் வேற நல்ல புடவை எனக்கு அமையவே இல்லை. கல்யாணப் புடவை கொஞ்சம் மங்கிடுத்து. இந்த தடவை நல்ல புடவை வாங்கணும்னு தான் சீட்டு சேர்த்தேன். தப்பா?"

"சீட்டு சேர்த்தது தப்பில்லே. காலங்காத்தால கீழ போயி நூறு ரூபாய்க்கு நின்னே பாரு. அதுதான் கஷ்டமா யிருக்கு."

"ஐயோ அந்த மாமி ஒண்ணுமே சொல்லலை. மொள்ளக் குடு. அவசரமே இல்லேன்னுட்டா. டக்குன்னு எடுத்து குடுத்துட்டா. எனக்கும் கடன் வாங்கறமே இப்படின்னுதான் இருந்தது. என்ன பண்றது? நீங்க சீக்கிரம் போயிட்டேளே!"

கீழ் வீட்டு மாமி டக்கென்று காசு கொடுக்க கம்பெனி காரணம். கம்பெனியின் வசீகர காரணம். இந்த உத்தியோகம் காரணம். அவள் பெண்ணுக்கு கம்பெனி ஜெனரல் மேனேஜர் சொல்லி குயின்மேரீஸில் பி.எஸ்ஸி., நியூட்ரிஷன் கிடைத்தது.

"ஒரே ஒரு பொய் சொல்லணும் மாமி! உங்க பொண்ணை எங்க அக்கா பொண்ணுன்னு சொல்லியிருக்கேன். நீங்களும் அந்த மாதிரியே சொல்லணும்."

"இதுல பொய் என்ன? நீங்க எனக்கு உடன் பொறந்தான்தான். இப்ப என்ன குடித்தனக்காரா மாதிரியா பழகறோம்? நியூட்ரிஷனுக்கு நல்ல ஸ்கோப் இருக்குங்கறா. இது கிடைச்சா எந்த ஜென்மத்துக்கும் மறக்க மாட்டோம்."

இரட்டைப் பின்னலும், கறுப்பு தாவணியும், மஞ்சள் சோளியும், மஞ்சள் பாவாடையுமாய் மாமியின் பெண்



ஸ்கூட்டருக்குப் பின்னால் அமர, ஜெனரல் மேனேஜர் வீட்டுக்குப் போனான். பைஜாமாவும், தொள தொள சட்டையுமாய் அமர்ந்திருந்த ஜி.எம்.மோடு பேசினான். ஜி.எம். டெலிபோனில் இரண்டு நிமிடத்தில் சீட்டுக்கு ஏற்பாடு செய்து விட்டார். மீதி அரைமணி கம்பெனி பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். இது என்ன? அது என்ன என்று தகவல் கேட்டார். வளைகுடாப் போர் வரும் என்று ஐரோப்பிய விஞ்ஞானி சொல்லியிருந்த அறிக்கையை அவன் சுட்டிக்காட்டினான். அப்படி வந்தால் கம்பெனி நிலைமை என்ன ஆகும் என்று பட்டியல் போட்டான்.

சுந்தரத்தின் கம்பெனி டயர்கள் உற்பத்தி செய்யும் கம்பெனி. டயருக்கு, ரப்பர் அடிப்படைப் பொருள். ரப்பர் கோக்கல் விஷயம். அதை உருக்க எரிபொருள் மிக அவசியம். எரிபொருளில் முக்கியமானது டீசல், ஃபர்னஸ் ஆயில். டயரின் இன்னொரு விஷயம் நைலான் நூல். நைலான் பிளாஸ்டிக்கின் இன்னொரு வடிவம். பிளாஸ்டிக் பூமியிலிருந்து எடுக்கப்படும் எண்ணெயின் ஒரு பிரிவு. வளைகுடாப் போர் வர சகலமும் விலை ஏறும். கம்பெனியின் ஒருநாள் எண்ணெய் செலவு, நைலான் கணக்குக் காட்டினான். இப்போது இருப்பது போல நான்கு மடங்கு ஸ்டாக் செய்தால் விலை உயர்வு வர, டயர் விலை ஏற லாபமென்ன, கணக்குச் சொன்னான். நாலு மடங்கு முதலீட்டின் வட்டி கழித்தான். நிகர லாபம் காட்டினான். நிகர லாபமே பல கோடிகளில் இருந்தது.

"சரி, சுந்தரம்! வளைகுடாப் போர் வரவில்லையெனில்..."

"சார்! கேலி செய்யாமலிருந்தால் இன்னொரு தகவலும் சொல்கிறேன். இந்த பூமியின் ஜாதகப்படி இப்பொழுது சனி ஆறில் செவ்வாய் பத்தில். யுத்தம் வந்தே தீரும். மிக மோசமான யுத்தமாக அது இருக்கும்."

ஜி.எம். சிரித்தார்.

"கம்பெனி மீது உனக்குள்ள அக்கறையை நான் பாராட்டுகிறேன். நாலு மடங்கு ஸ்டாக் வைப்பது இயலாத காரியம். இரண்டு மடங்கு வைக்கலாம். எனக்கும் வளைகுடாப் போர் வருமென்று தோன்றுகிறது. அதற்குக் காரணம் சனியோ, செவ்வாயோ என்று நான் நினைக்கவில்லை. சதாம் உசேன் பேச்சு சரியாக இல்லை. நீ சொன்னது போல அந்த விஞ்ஞானி பெரிய ஆள். அவர் கணிப்பு தவறியதில்லை. நாளை காலை ஒரு தனி மீட்டிங் ஏற்பாடு செய்வோம். நீயும் வா."

"சார் இந்த காலேஜ் சீட்."

"இந்த பெண் உன்னோடு வந்தாள் அல்லவா? சுந்தரம் கேட்டு நான் மறுத்ததுண்டா? அவளுக்கு சீட் கிடைத்து விட்டதென்றே நினைத்துக் கொள்ளலாம்" விடை கொடுத்தார்.

மூன்றாம் நாள் அவளுக்கு சீட் கிடைத்து விட்டது. சுந்தரம் உனக்கு என்ன வேண்டும் என்று பிரின்சிபால் கேட்டாராம். அந்தப் பெண் கொஞ்சம் முழித்துவிட்டு, சொந்த மாமா என்று சொல்லியிருக்கிறாள். அட்மிஷன் கார்டோடு வீட்டிற்கு வந்தாள். கீழ் வீட்டு மாமி பூ வாரித் தலையில் கொட்டவில்லை என்பதுதான் குறை.

"அடியே கிரிஜா! எம் பொண்ணுக்கு நியூட்ரிஷன் கிடைச்சுடுத்து."

அவளின் மொத்த வீடும் தபதபவென்று வீட்டிற்குள் நுழைந்தது. சுந்தரத்தின் குழந்தையைக் கொஞ்சியது. மனைவியைப் பாராட்டியது. சட்டி நிறைய அல்வாக் கிளறி பரிசளித்தது. முதல்நாள் காலேஜ்க்கு போகும்போது அந்த அழகி சுந்தரத்தைத் தேடினாளாம். சுந்தரம் ஆபீஸ் போய்



விட, கிரிஜாவை நமஸ்காரம் பண்ணிவிட்டுப் போனாளாம். என்ன மரியாதை, எவ்வளவு அன்பு. கிரிஜா கீழ் வீட்டை வியந்தாள்.

இது கம்பெனி கொடுத்த மரியாதை. உத்தியோகம் கொடுத்த மதிப்பு. இந்த உத்தியோகம் இன்னும் உயரப் போகிறது. உயரதிகாரி வட்டத்தில் சுந்தரம் சேரப் போகிறான். ஆபீஸ் பியட் கார் தரும். கம்பெனி பெயர் பொறித்த 'டை பின்' தரும். வாடகை உயர்வு வசதிகள் தரும். டெலிபோன் பில் தரும். குடும்பத்தோடு வருஷத்துக்கு ஒருமுறை ஊர்சுற்றக் காசு தரும். எல்லாம் கொடுத்துவிட்டு எதிர்பார்க்கும். நாயாய் பேயாய் உழைக்கச் சொல்லும்.

அம்பத்தூர் நெருங்கி கம்பெனி வாசல் தெரிய சுந்தரம் வண்டியின் வேகத்தை முப்பதுக்குக் குறைத்தான். அவன் நுழைய செக்யூரிட்டி கதவை வேகமாகத் திறந்தார். பெரிய கம்பிக் கதவு ஆடிக்கொண்டு அவனை நோக்கி வந்தது.

"சார் கொஞ்சம் இருங்க. ப்ளீஸ்...." செக்யூரிட்டி கத்தினார்.

உள்ளேயிருந்து வெளியே வரும் டீசல் லாரிக்கு கதவு திறப்பது புரிந்தது. ஆடிக்கொண்டு வந்த கம்பிக் கதவு ஸ்கூட்டரின் முன்பக்கம் நச்சென்று இடித்தது. இரும்புக் கதவின் நுனி பட்டு ஸ்கூட்டரின் முன்பக்கம் சொட்டையாயிற்று.

"என்னய்யா இது?" சுந்தரம் கத்தினான்.

"ஸாரி சார். நான் கவனிக்கலே" செக்யூரிட்டி பதில் சொன்னார்.

சுந்தரத்துக்கு ஸ்கூட்டர் தாக்கப்பட்டது பிடிக்கவில்லை. மனதின் ஓரம் ஒரு வளைவு விழுந்தது. பயம் வந்தது. சுந்தரம் உள்ளே போனான்.

# 2

கிரிஜா அன்றைக்கும் பள்ளிக்கூடத்திற்கு லேட். வழக்கத்தைவிட அதிக தாமதம். பஸ்ஸிற்கு நின்று பார்த்து அது வராத படபடப்பில் ஆட்டோவைத் தேடி, ஐந்து ரூபாய் அநியாயமாய் ஆட்டோவுக்குக் கொடுத்தும் பதினைந்து நிமிட தாமதம். ப்ரேயர் முடிந்து குழந்தைகள் வகுப்புகளுக்குப் போய் விட்டார்கள். அங்கங்கே அட்டெண்டன்ஸ் எடுக்கும் சத்தம் வந்து கொண்டிருந்தது. ஆனால் இன்னும் டீச்சர்ஸ் ரெஜிஸ்டர் எடுக்கப்படாமல் இருந்தது. கையெழுத்துப் போட்டுவிட்டு, கிளாசிற்கு ஓடிவிடலாம் என்கிறபோது தலைமை ஆசிரியை கூப்பிடுவதாக ப்யூன் சொன்னான்.

"பஸ் நிறுத்திட்டான் மேடம்! சி.எம். க்ராஸ் பண்ணி னாங்க" வழக்கமான பொய் சொல்லத் தயாரானாள். தள்ளு கதவைத் தாண்டி உள்ளே நுழைந்தாள். தலைமைக் கிழவி தலை நிமிர்ந்தது.

"கிரிஜா, உன்னதான் பார்க்கணும்னு நினைச்சுக்கிட்டு இருந்தேன். எனக்கு ரெண்டு கார் டயர் வேணுமே. அம்பாசிடர் கார். உம் புருஷன் செகண்ட்ஸ் வாங்கித் தாராறாமே. சிப்பா, பி.டி. இன்ஸ்ட்ரக்டர் உஷா சொன்னா. அவ மொபட்டுக்கு படு சீப்பா வாங்கிக் கொடுத்தியாமே. கார் டயர் கிடைக்குமா சீப்பா?"

"கிடைக்கும் மேடம்! எனக்கு சைஸ் எழுதிக்கொடுங்க"

"காசு?"

"அப்புறம் வாங்கிக்கறேன்"

"உடனே வேணும் கிரிஜா. ரெண்டு ஃப்ரண்ட் டயரும் ஃபால்ட். நேத்து பஞ்சராகி ரொம்ப அவஸ்தைப் பட்டுட் டேன்."



"இப்பவே ஃபோன் பண்ணி சொல்லிட்டா நாளைக்கு கிடைச்சுடும்."

"பண்ணு" தலைமை ஆசிரியை போன் நகர்த்தினாள். கிரிஜா நம்பர் சுழற்றினாள்.

"சுந்தரம் இருக்காரா? நான் அவர் மிஸஸ் பேசறேன். கொஞ்சம் அர்ஜெண்டா பேசணும்."

ஹெச்.எம். எதிர் சேரில் உட்கார்ந்து கொண்டார். நல்லவேளை தாமதமாய் வந்தது கிழவிக்குத் தெரிய வில்லை. ஒருவேளை தெரிந்தும தன் காரியத்துக்காக சும்மா இருக்கிறதோ என்னவோ?

"சுந்தரம் வேணும். நான் அவர் மிஸஸ் கிரிஜா பேசறேன்" மறுபடியும் சொன்னாள்.

"என்னம்மா?"

எதிர்பக்கத்தில் சுந்தரத்தின் உற்சாகமான குரல் கேட்டது.

"எங்க ஹெச்.எம்.க்கு ரெண்டு பழைய டயர் வேணுமாம்."

"ஏய் பழசில்ல, செகண்ட்ஸ் டயர் வேணும்" தலைமைக் கிழவி கத்தியது.

"எங்க கம்பெனில பழைய டயர் பண்றதில்லைம்மா" சுந்தரம் எதிர் ஃபோனில் கொக்கரித்தான்.

"ஸாரிப்பா. செகண்ட்ஸ் டயர்."

"என்ன டயர் சொல்லு."

"அதுதான் செகண்ட்ஸ்ங்கறேனே"

"செகண்ட்ஸ்ல என்ன டயர்? லாரியா, டிராக்டரா? புல்டோஸரா, ஏரோப்ளேனா?"

"அம்பாசிடர் கார்"

"அம்பாசிடர் கார்ல என்ன டயர் வொய்ட் வாலா, பிளாக் வாலா, சிக்ஸ் ப்ளையா, எய்ட்ப்ளையா, ரேடியலா, நான்ரேடியலா, நைலானா, ஆர்டினரியா... இப்படி ஏகப்பட்ட வெரைட்டி இருக்கே,"

கிரிஜா குழம்பினாள். "மேடம் நீங்க பேசுங்க." போனை தலைமைக் கிழவியிடம் கொடுத்தாள்.

"மிஸ்டர் சுந்தரம்" கிழவி கொஞ்சியது. தன் தேவையைச் சொல்லியது. அங்கே சுந்தரம் சட்டென்று உஷாராகி தலைமைக் கிழவியிடம் மிக இதமாகப் பேசி, 'ரெண்டு போதுமா? நாலா வாங்கிக்கங்களேன். லாபமாச்சே' என்று கேட்டிருக்க வேண்டும். கிழவி டயர் பஞ்சரானது சொன்னவுடன் உடனே உதவி செய்வதாய்ச் சொல்லியிருக்க வேண்டும். அந்தப் பள்ளிக்கூடத்திலேயே ஐந்தாவது படிக்கும் தன் பையனைப் பற்றி விசாரித்திருக்க வேண்டும். கிழவி பையனைப் பாராட்டியது. அவன் படிப்புக்குத் தான் பொறுப்பேற்றுக் கொள்வதாகச் சொல்லியது. 'கிரிஜா உன்கூட பேசணுங்கறாரு' கிழவி ஃபோன் கொடுத்தது.

"என்ன? உங்க கிழவிய பற்றி ஆலூன்னு பயமுறுத்தினே. ரொம்ப கொஞ்சிக் கொஞ்சிப் பேசறா. நேரா பார்த்தா கட்டி முத்தம் கொடுத்துடுவா போலிருக்கே."

கிரிஜா அவன் பேச்சைப் புறக்கணித்தாள்.

"சாயங்காலம் சீக்கிரம் வருவேளா." சம்பந்தமில்லாமல் கேட்டாள்.

"எட்டு மணிக்கு கம்பெனிக்குள்ள இருக்கணும். எத்தனை மணிக்கு வெளில வர்றோமோ அது கடவுளுக்குத்தான் தெரியும். நான் டயர் அனுப்பறேன்" சுந்தரம் ஃபோன் வைத்தான்.



பின்னால் ஹைஸ்கூல் டீச்சர் கெமிஸ்ட்ரி வசந்தா தாமதமாகி, கைபிசைந்து தலைமைக் கிழவியிடம் எதிரே நிற்பது தெரிந்தது.

"'டோண்ட் கிவ் மீ த சேம் ரீஸன் எவரிடே' தலைமைக் கிழவி கத்தினாள். இத்தனை பேரு ஸ்கூலுக்கு கரெக்ட்டா வரலை? உன்னை மட்டும்தான் சி.எம். வழிமறிச்சாங்களா? சி.எம். இன்னிக்கு ஊர்லேயே இல்ல. ஏம்மா பொய் சொல்றீங்க?"

"யாரோ சிவப்பு லைட் எரியற கார்ல போனாங்க மேடம்! அது சி.எம்.மான்னு தெரியாது. பத்து நிமிஷம் ட்ராஃபிக் ஜாமாயிடுச்சு."

"அந்த பத்து நிமிஷம் கழிச்சாலும் நீ லேட்தான். 'திஸ் இஸ் த ஃபர்ஸ்ட் வார்னிங்' மறுபடியும் லேட்டா வந்தா கெட்ட கோபம் வரும். டென்த் ஸ்டாண்டர்ட் ஃபர்ஸ்ட் பீரியட் கெமிஸ்ட்ரி. இருபது நிமிஷம் போச்சு. இன்னும் முப்பது நிமிஷத்துல என்ன சொல்லிக் கொடுப்பே? போன தடவை டென்த் ரிசல்ட் போனதே கெமிஸ்ட்ரியால தான். உன்னாலதான். இஷ்டமில்லேன்னா விட்டுட்டுப் போ வசந்தா."

கிரிஜா விடைபெற்று வெளியே வந்தாள். உள்ளே தொடர்ந்து உரத்த குரல் கேட்டது. நின்று கவனித்தாள்.

நல்லவேளை. தலைமைக் கிழவி இன்று திட்டவில்லை. தன் திட்டையும் சேர்த்து வசந்தா வாங்கிக் கொண்டாள். வசந்தா பாவம். அவளுக்கு புருஷன் சரியில்லை. புருஷனும் சரியில்லாமல் வேலைக்கும் போக வேண்டிய நிலை பெரிய வேதனை.

புருஷனே இல்லாமலிருந்தால், வேலைக்குப் போகலாம். புருஷன் நல்லவனாக இருந்தாலும் வேலைக்குப்போகலாம்.

புருஷன் நல்லவனாக இருந்து கை நிறைய சம்பாதிப்பவனாக இருந்தால் இன்னும் சந்தோஷம். இப்படி இருப்பதில் பெண்ணுக்கு அசாத்திய மதிப்பு வந்துவிடும். சுந்தரம் புருஷனாக கிடைத்தது பெரும் பாக்கியம்.

ஆனால் பெண் பார்க்க வரும்போதே தெரிந்து போயிற்று. அவன் துடிப்பான புருஷன். வேறு மாதிரியான ஆள் என்பது தெரிந்து போயிற்று.

வந்தவர்களுக்கு வெள்ளி டம்ளரில் காபி கொடுக்க வேண்டும் என்று அம்மாவுக்கு ஆசை. அக்கம் பக்கம் கடன் வாங்கி, இன்னும் ஏழு வெள்ளி டம்ளர் சம்பாதித்து கொதிக்கக் கொதிக்க வெள்ளி டம்ளரில் காபி கொடுக்க, சுந்தரம் வெள்ளி டம்ளரைக் கீழே வைத்து விட்டான்.

"காபி பிடிக்காதா?" அம்மா கொஞ்சலாய்க்கேட்டாள்.

"ரொம்ப பிடிக்கும். வெள்ளி டம்ளரைத்தான் கையில பிடிக்க முடியல" சுந்தரம் பதில் சொன்னான். வீடு சிரித்தது.

கண்ணாடி டம்ளர் கேட்டு வாங்கி, காபியை அதில் ஊற்றிக் குடித்தான். பாட்டு கேட்டு, பஜ்ஜி தின்று கிளம்புகிற நேரம் நாற்காலி அடியில், பீரோ ஓரம், ஜன்னல் விளிம்பில் வைத்த எல்லா வெள்ளி டம்ளரையும் சுட்டிக் காட்டி எடுத்துப் போகச் சொன்னான்.

"ஒன்பது டம்ளர் ஹாலுக்கு கொண்டு வந்தேள். ஒன்பது இருக்கா பார்த்துக்கோங்கோ" வலியுறுத்தினான்.

"அது கிடக்கு நாங்க பார்த்துக்கறோம்" அப்பா அலட்சியப்படுத்தினார். "பொண்ணு பிடிச்சிருக்கா சொல்லுங்கோ" அவசரப்படுத்தினார்.

"சார்! பொண்ணு பிடிச்சிருக்கு. வெள்ளி டம்ளர் பிடிக்கல. அங்கே இங்கே கடன் வாங்கி பெண் பார்க்க



வரோம்னு ஏற்பாடு பண்ணியிருக்கேள். திருப்பி ஜாக்கிரதையா தர வேண்டாமா?"

"தரணும். தரணும்." அப்பா முகம் மாறினார்.

"எதுக்கு சொல்றேன்னா போன தடவை ஓர் இடத்தில பொண்ணு பார்த்தோம். எனக்குப் பிடிக்கலைன்னு அங்கேயே சொல்லிட்டேன். காரணம் என்னை விட அவ உயரம். நிச்சயமா அந்தப் பொண்ணுக்கும் என்னைப் பிடிச்சிருக்காது. வீட்டுக்கு வந்ததும் ஒரு ஃபோன். ஒரு வெள்ளி டம்ளர் குறையறது. தவறி உங்க பையில வந்துட்டுத்தான்னு பாருங்கோன்னு சொல்றா. ஆமா இருக்குன்னு சொல்லி ஒரு புது வெள்ளி டம்ளர் வாங்கிக் கொடுத்துடலாம்னு நினைச்சேன்." வீடு மறுபடியும் மெலிதாய் சிரித்தது.

"எதுக்கு இந்த வேஷம்? நாம மிடில் க்ளாஸ். ஒன்பது வெள்ளி டம்ளர் நம்ம வீட்ல எப்படி இருக்கும்? கடன் வாங்கி அந்தஸ்து காட்டணும்னு என்ன அவசியம்? எங்க வீட்ல ஒரு வெள்ளி டம்ளர்தான் சார் இருக்கு. நாங்க அதை எடுக்கறதே இல்லை. கிரிஜா எதாவது வெள்ளில கொண்டு வந்தா அதுவும் உள்ளதான் இருக்கும். உபயோகப்படுத்த மாட்டோம்."

வீடு சந்தோஷமாய் வாய் விட்டு சிரித்தது. இந்தக் கதையை உறவினர்களிடம் எல்லாம் சொல்லி சந்தோஷப்பட்டது. அப்படிச் சொன்னதன் விளைவு அற்புதமாக இருந்தது. சிறிதும், பெரிதுமாய் பதினொரு வெள்ளி டம்ளர்கள் உறவினர்களால், நண்பர்களால் ஒதியிடப்பட்டன.

"நான் அன்னைக்கு அப்படி டயலாக் அடிச்சதே இப்படியொரு ரிசல்ட் வரணும்னுதான். வந்துட்டுது. எல்லா டம்ளர்களையும் மடியில கட்டிக்கோ." அக்னி முன்பு அமர்ந்திருந்த சுந்தரம் காதோரம் கிரிஜாவிடம் பேசினான்.

கிரிஜா 'சீய்' என்று வெட்கப்பட்டாள். முதலிரவில் வெள்ளிச் சொம்பும், அதில் பாலும். வெள்ளி டபரா செட்டும் கொடுத்து அனுப்பினார்கள்.

"பால் சூடாதான் இருக்கு. ஆனா ஆத்தி குடிக்க வெள்ளி டபரா செட் கொடுத்திருக்கோம். மாப்ளே... சந்தோஷமா சாப்பிடுங்கோ" சொந்தக்காரர்கள் கெக்கலித்தார்கள்.

"ஒருவேளை ஆறி அவலாச் சாப்பிட்டுதான் பழக்கமோ என்னவோ, மாப்பிள்ளை மூஞ்சியில தூக்கம் சொக்கறதே" இன்னொரு பெண் கூச்சலிட்டாள்.

"கிரிஜாவ பொண்ணு பார்த்துட்டு வந்து கொதிக்க கொதிக்க சாப்பிட கத்துண்டுட்டேன். யாரும் கவலைப்பட வேண்டாம். கிரிஜா, சீக்கிரம் கதவை சாத்து" சுந்தரம் கண் சிமிட்டினான். கூட்டம் 'ஹோ'வென்று சிரித்தது. சுந்தரம் வெறும் சிரிப்பான மனுஷன் மட்டும் அல்ல. நிறைய சிந்திக்கிறவன் என்பது மறுநாள் புரிந்தது.

ஓதியிட்ட எல்லாப் பொருள்களையும் கணக்குப் பார்த்து எடுத்துக் கொள்ளும் பொழுது சுந்தரம் இரண்டு வெள்ளி டம்ளர்களை எடுத்து கிரிஜாவின் அம்மாவிடம் நீட்டினான்.

"ஐயோ எனக்கென்னத்துக்கு? இது உங்க பொருள்" அம்மா வெட்கப்பட்டாள்.

"உங்களுக்கு இன்னொரு பொண்ணு கல்யாணத்துக்கு இருக்காளே. அவளை பெண் பார்க்க நாலு பேர் வருவாளே. பக்கத்து வீட்ல போய் மறுபடி வெள்ளி டம்ளர் கடன் வாங்கணுமா? இது உங்க கிட்டேயே இருக்கட்டும். இன்னொரு பொண்ணைக் கேட்டு மனுஷா வரப்போ எங்களுக்கு சொல்லி அனுப்புங்கோ. நானும் கிரிஜாவும் மீதி வெள்ளி டம்ளர்களோட வரோம்" அம்மா விழி விரிய



சுந்தரத்தைப் பார்த்து இரண்டு வெள்ளி டம்ளர்களையும் வாங்கிக் கொண்டாள். அன்று மாலையே டம்ளர்களில் கி.சு.கி.சு. என்று பெயர் அடித்து விட்டான். என்றைக்கு இருந்தாலும் அது கிரிஜாவின் பொருளாம். வேறு யாருக்கும் அதைத் தரப் போவதில்லையாம். அன்று ஆரம்பித்த மாப்பிள்ளை மாமியார் ஒட்டுதல் பல்கிப் பெருகியது. சங்கரனைப் பிள்ளை பெற வீட்டுக்கு வந்த போது சுந்தரம் அடிக்கடி வந்து பார்ப்பான். அம்மா ஓடி ஓடி உபசரிப்பாள். அம்மாவுக்கு ஹேப்பி பர்த்டே சொன்ன முதல் ஆள் சுந்தரமாகத்தான் இருப்பான். புருஷனல்லாது அம்மா புடைவை வாங்கிக் கொண்டது சுந்தரத்திடம்தான்.

சுந்தரம் இரக்கமுள்ளவன். இனிமையானவன்.

"நூத்தி அறுபது ரூபா புடைவை உங்கம்மாவுக்கு கொடுத்தது நான் குறைஞ்சிடமாட்டேன் கிரிஜா. தானம் பண்றது ஒரு சந்தோஷம். மனசு ஆரோக்கியம். நாலு பேருக்கு கொடுக்கறதுக்காகவே சம்பாதிக்கணும்னு எனக்கு சின்ன வயசிலேர்ந்து ஓர் எண்ணம். ஏன் தெரியுமா? நான் நாலணா காசில்லாம பள்ளிக்கூடம் போயிருக்கேன். நாற்பத்தி எட்டு ரூபா பீஸ் கட்ட பணமில்லாம அவஸ்தை பட்டிருக்கேன். நல்ல சட்டை இல்லைன்னு அழுதிருக்கேன். தீபாவளி அன்னைக்கு கிழிசல் பனியனோட நின்னிருக்கேன். காசு முக்கியமில்லை, கிரிஜா! சந்தோஷம் முக்கியம். அந்த சந்தோஷத்தை காசு தருமானால், அப்பதான் காசும் முக்கியம்" சுந்தரம் ஊதாரியில்லை. உபகாரி. வீட்டில் பெரிய சேமிப்பில்லை. ஆனால் சந்தோஷமிருந்தது. சொந்த வீடோ, நிலபுலன்களோ இல்லை. ஆனால் அமைதியும், அன்பும் நிறைந்திருந்தன.

இன்று பள்ளிக்கூடத்திற்கு லேட்டாக வந்ததற்கு அந்த சந்தோஷம் காரணம்.

"நாளைலேர்ந்து நான் அசிஸ்டெண்ட் மேனேஜர். நான் சொல்றது காதுல விழறதா?"

"ம்....விழறது."

"நாலு மாசத்துல கார் வந்துரும்."

"வரட்டும்."

"காஷ்மீர்லேர்ந்து கன்னியாகுமரி வரைக்கும் எங்க வேணாலும் போகலாம் கம்பெனி செலவில.'

"காஷ்மீர் போகலாம்."

"ஏன் கன்னியாகுமரி பார்த்துட்டியா?"

"பார்க்கலை. அதும் பார்க்கணும்?"

"அசிஸ்டெண்ட் மேனேஜர்னா கொஞ்சம் பார்ட்டிக்குப் போக வேண்டியிருக்கும். பார்ட்டிக்குப் போனா நான் கொஞ்சம் குடிக்க வேண்டியிருக்கும்."

"ஏய்!" அவள் எழுந்து உட்கார்ந்தாள். "என்ன ஆனாலும் குடிக்கக் கூடாது. குடிக்கறவாளை எனக்குப் பிடிக்காது." சின்னதாய் ஒரு கூச்சல் போட்டாள்.

"கத்தினா முடிஞ்சு போச்சா? அசிஸ்டெண்ட் மேனேஜர்னா வேலை ஜாஸ்தி. கவலை ஜாஸ்தி. இப்டவே நான் அந்த வேலைதான் செய்துண்டிருக்கேன். கண்ணை மூடினா டயரா நிக்கறதே தவிர தூக்கம் வர மாட்டேங்கறது. தூங்கறதுக்காகத்தான் குடிக்கறது."

"குடிக்காமத் தூங்க முடியாதா?"

"இத்தனை நாள் நீ ஹெல்ப் பண்ணினே தூங்கினேன். வரவர ஹெல்ப்பே பண்றதில்லையே."

அவளுக்குப் புரிந்தது. அவனை நெருங்கி அணைத்துக் கொண்டாள். தலைகோதி விட்டாள். 'வாங்கோ'என்றாள்.



அவன் கிறங்கித் தூங்கிப் போனான். அவள் தூக்கம் கலைந்து போயிற்று. விடியலில் தூக்கம் வந்து எழுந்து கொள்வதில் தாமதமாயிற்று. அந்தத் தாமதம் பள்ளிக்கூட வாசல் வரை வந்தது. நல்லவேளை கிழவி கத்தவில்லை. ஒரு கவலை ஒழிந்தது. ஆனால் டயர் வர வேண்டுமே! இன்னொரு கவலை பிடித்துக் கொண்டது. பிற்பகல் மூன்று மணிக்கு ஒரு டெம்ப்போவில் நாலு டயர்கள் கீழே இறங்கின. வந்தவன் கிரிஜாவைத் தேடி, பிளாஸ்டிக் பேப்பர் சுற்றிய டயரைக் கொடுத்து விட்டுப் போனான். நாலு டயரை இரண்டு இரண்டு பெண்களாகத் தூக்கச் சொல்லி கிரிஜா தலைமை ஆசிரியையிடம் ஊர்வலம் போனாள்.

"எவ்வளவு காசு கிரிஜா?"கிழவிக்கு வாயெல்லாம் பல்.... ஒன்றிரண்டு தவிர!

"தெரியலை மேடம். நாளைக்குச் சொல்றேன்."

"தேங்க்யூ வெரிமச், கிரிஜா. டைம்லி ஹெல்ப். என்னுடைய மனமார்ந்த நன்றியை உன் கணவர் சுந்தரத்துக்குத் தெரிவிக்கவும்" நாலு பேருக்கு நடுவே கிழவி கொஞ்சியது கிரிஜாவுக்கு சந்தோஷமாக இருந்தது. இந்த சந்தோஷம் கொடுத்த புருஷனை இன்றிரவும் சந்தோஷப்படுத்த வேண்டும் என்று தோன்றியது. டயர் வந்து சேர்ந்தது என்று சொல்ல அவன் கம்பெனிக்கு ஃபோன் செய்தாள். சுந்தர் சீட்டிலில்லை. ஜெனரல் மேனேஜருடன் பேசப் போயிருக்கிறார் என்று சொன்னார்கள். டயர் வந்த தகவலைச் சொல்லிவிடுமாறு வேண்டிக் கொண்டு ஃபோன் வைத்தாள். சுந்தரம் ஜெனரல் மேனேஜர் அறைக்கு வெளியே அவர் அழைப்பிற்காக உற்சாகத்துடன் காத்திருந்தான். அவன் மனதுக்குள் ஏனோ வாசல் கதவு மோதி ஸ்கூட்டர் சொட்டையானது நினைவுக்கு வந்து கொண்டிருந்தது.

# 3

கம்பெனியின் வெவ்வேறு இடங்களில் உள்ள ஆறு பேருக்கு புரொமோஷன் என்பதாய் பேச்சு அடிபட்டுக் கொண்டு இருந்தது. சுந்தரம் வேலை செய்கிற செக்ஷனிலேயே இரண்டு புரொமோஷன். ஒன்று சுந்தரத்திற்கு. மற்றது வரதராஜனுக்கு என்பதாகத்தான் பேச்சு அடிபட்டது. வரதராஜனைத்தான் முதலில் கூப்பிட்டார்கள். வரதராஜன் சுந்தரத்தைவிட பத்து வருடம் சீனியர். கிட்டத்தட்ட சுந்தரம் வேலை கற்றுக் கொண்டது அவரிடம்தான். அந்த செக்ஷனுக்கு ஃப்யூயல் செக்ஷன் என்று பெயர். விதவிதமான எரிபொருள் ரப்பரை உருக்க, வெவ்வேறு தளத்திற்குக் கொண்டு போக வேண்டி இருந்தது. எரிபொருள் மட்டுமல்லாது உச்ச வெப்ப, உயர் அழுத்த நீராவியும் தேவையாக இருந்தது. தொழிற்சாலை முழுவதும் ஆயிரக்கணக்கான அடியில் பல்வேறு விதக் குழாய்கள் ஓடும். ஒரு குழாயில் டீசல் ஓடும். ஒரு குழாயில் அடுப்பு நின்று எரிய கறுப்பு எண்ணெய் ஓடும். ஒரு குழாயில் காற்று ஓடும். ஒரு குழாயில் நீராவி போகும். அடுப்பின் ஆரம்ப சூட்டுக்காக எரிவாயு ஓடும் குழாய்கூட ஒன்று உண்டு. தொழிற்சாலையின் மூலையில் தண்ணீர் பாதுகாப்பாய் இருக்கும்.

தொட்டியிலிருந்து பாய்லர் எரிந்து, இவை போகும் குழாய்கள்தான் தொழிற்சாலையின் நரம்புகள். ஒன்று கூட அறுபடக் கூடாது. தடைபடக் கூடாது. தடைபட நேரம், பொருள் இரண்டும் பலமாய் சேதமாகும். கூட கொத்திப் பாம்பாய்ச் சுற்ற வேண்டும். இந்தக் குழாய்களைப் பராமரிக்க பிளம்பர், வெல்டர், பாய்லர் ஆபரேட்டர் என்று பெரிய படையே உண்டு. சுந்தரத்தின் கடும் உழைப்பினால் எரிபொருள் சிக்கனம், இடைவிடாது எரிதல் எல்லாம்



நடந்து இருக்கிறது. எங்கு, என்று குழாய் தடைபட்டாலும் சுந்தரம், சுந்தரம் என்கிற கூச்சல்தான் எழும். கீழிருந்து மேல் வரை புகார் போகும்.

ஒருநாள் முதல் பர்னஸ் முழு வேகத்தில் இயங்கவில்லை. எண்ணெய் வீச்சு அபாரமாக இருந்தும் தழல் சுழன்று எரியவில்லை. லேடக்ஸ் என்கிற பச்சை ரப்பர் உருகல் தாமதமாயிற்று.

"குத்தி விடு கண்ணா". தொழிலாளியிடம் நீண்ட கம்பி வாங்கிக் குத்தி விட்டான். புகார் வந்ததும் நேரே போய் கவனித்தான்.

"நானும் வெட்டியான் மாதிரி காலைல ஏழு மணிலேர்ந்து நிற்கிறேன். பொணம் எரியற மாதிரிதான் அடுப்பு எரியுதே தவிர அடுப்பு அடுப்பாயில்லை" தொழிலாளி புகார் சொன்னான்.

காற்றுக் குழாயில் கைவைத்துப் பார்த்தபோதும் வேகம் குறைவாக இருப்பது தெரிந்தது. குழாயின் ஒவ்வோர் இடமாகக் கைவைத்து காற்று வேகத்தை உள்ளங்கை உணர ஓர் இடத்தில் காற்று மட்டுப்படுவது தெரிந்தது. ஏதோ தடை செய்வதை உணர முடிந்தது. அந்தத் தடை முன்னும், பின்னும் நகர்ந்தது. இடதும், வலதும் இரண்டு பிளம்பரை நிறுத்தி இரண்டு பக்க ஜாயிண்டையும் மடமடவென்று கழற்றச் சொன்னான். அதற்குள் ஜெனரல் மேனேஜரிலிருந்து தலைமை என்ஜினீயரிலிருந்து பல அதிகாரிகள் அங்கே குழுமி விட்டனர்.

"சுந்தரம், என்ன பண்ற, சொல்லிவிட்டு செய்" என்ஜினீயர் கத்தினார்.

"பிளீஸ் சும்மா இருங்க சார்" சுந்தரம் கைகூப்பினான். இரண்டு தொழிலாளர்களையும் வேகம், வேகமென்று துரிதப்

படுத்தினான். அவர்கள் கழற்றின பதினாறு அடி டியூபை அப்படியே தூக்கி நடுவில் போட்டான்.

''எலி, எலி'' என்று யாரோ கத்தினார்கள். குழாயின் ஓர் ஓரம் எலி எட்டிப் பார்த்துவிட்டு உள்ளே ஓடியது. இடப்பக்கம் பைப்பைத் தூக்க வலப்பக்கம் பெரிய எலி கீழே விழுந்தது. உடனே அடித்துக் கொன்றார்கள்.

''இவ்வளவு பெரிய எலி எப்படி பைப்பில்?'' ஜி.எம். கேட்டார்.

''இது ரொம்ப நாளா இங்குள்ள பிரச்சினை. பூனைக்கு யார் மணிகட்டப் போறான்னு முழிச்சுக்கிட்டு இருந்தோம். இப்ப நான் கட்டறேன். தொழிற்சாலைக்குள்ள காலை டிபன் சாப்பிட்டுட்டு அப்படியே போட்டுட றாங்க. அதுக்கு நூத்துக்கணக்கா எலி வருது. ஆள் இல்லாத நேரம் பாக்டரி முழுக்க சுத்தறது. ஆள் இருந்தா எங்கேயாவது போயி ஒளியுது''

''எலி அடுப்பில எரி பைப்ல போகுதா? என்ன அய்யரே கதை விடறே:'' போர்மேன் கத்தினான்.

''ரெண்டு நாள் லீவு. நீங்க அடுப்பை அணைச்சுட்டு வீட்டுக்குப் போயிட்டுங்க. செங்கல் அடுப்பு கதகதன்னு இருக்கும். எலி அங்கதான் சுத்தும். ஞாயிற்றுக்கிழமை எண்ணெய் தேய்ச்சு குளிச்சிட்டு கம்பெனிக்கு வாங்க. உங்க அடுப்பில நூறு எலி காட்டறேன்.,'

''வாட் நான்சென்ஸ் இஸ் திஸ்? ஏன் பாக்டரிக்குள்ள சாப்பிடறாங்க?'' ஜி.எம். கால் உதைத்தார். ஒருவரும், ஒருநாளும் தொழிற்சாலைக்குள் உணவெடுக்கக் கூடாது என்று கட்டளையிட்டார். நிறைய பேருக்கு இது வருத்தம். ஆனால் வாய் திறக்க முடியவில்லை.

''அதெப்படி இங்கதான் எலி இருக்கும்னு கண்டு பிடிச்சே?''



''டியூப்ல ஒவ்வோர் இடமா தொட்டுண்டு வந்தேன். ஒரு இடத்துல டியூப் சாக்கடையோட போகுமே அங்கேயும் இறங்கி தொட்டேன். என் டிபார்ட்மெண்டால புரொடக்ஷன் போச்சுன்னு இருக்கக் கூடாது சார். அது தடுக்க எங்க வேணாலும் இறங்குவேன். என்ன வேணாலும் செய்வேன்'' இந்த அசிஸ்டெண்ட் மேனேஜர் பதவி உயர்வு பேசப்பட இதுவும் காரணமாக இருக்கலாம். ஜெனரல் மேனேஜருக்கு சுந்தரத்தை மிகவும் பிடித்துப் போனது.

வெளியே பஸ்ஸர் அடித்தது. சுந்தரம் நிமிர்ந்து உட்கார்ந்தான். பியூன் உள்ளே போய் வெளியே வந்தான். அவனை அழைத்தான். சுந்தரத்திற்கு சந்தோஷத்தால் வயிறு குழைந்தது.

''உட்கார் சுந்தரம்''

ஜெனரல் மேனேஜரின் முகம் சரியாக இல்லை. இறுகிக் கிடந்தது.

''சுந்தரம் நான் உனக்கு நல்ல செய்தி சொல்வதாக இல்லை'' இடிபோல் வார்த்தைகள் இறங்கின.

''உன்னுடைய படிப்புக்கு, உன்னுடைய சர்வீசுக்கு உனக்கு உதவி மேனேஜர் பதவி தருவது அதிகம் என்று கம்பெனி டைரக்டர்கள் எதிர்க்கிறார்கள். என்னால் முடிந்த வரை வாதாடிப் பார்த்தேன். வரதராஜனுக்கு அவனுடைய சர்வீஸ் துணையாக நின்றது. உன் உழைப்பையும் திறமையையும் உயர்வுபடுத்திச் சொன்னேன். 'ஓர் இன்க்ரிமெண்ட் அதிகம் கொடு. உதவி மேனேஜர் பதவி பெரியது' என்று சொல்லிவிட்டார்கள். சுந்தரம் நான் வருத்தப்படுகிறேன். நீ சோர்ந்துவிடக் கூடாது. வேறு ஒரு சிக்கலும் எழுந்திருக்கிறது. டைரக்டருக்கு வேண்டிய என்ஜினீயரின் பையன் உன் செக்ஷனுக்கு உதவி மேனேஜராக வரப் போகிறான். உன் செக்ஷனுக்கு மூன்று உதவி மேனேஜர்கள் தேவை

யில்லை. அவனை நம்பி மொத்த வேலையையும் விட முடியாது. அவனுக்குத் துணையாய் உன்னைப் போடுகிறேன் நீ மனச்சோர்வு அடைவாய். எனக்குப் புரிகிறது. ஆனால் இங்கே தனிப்பட்ட நபர்கள் முக்கியமில்லை. கம்பெனி முக்கியம். இந்த கம்பெனி நன்றாக இருந்தால்தான் நாம் நன்றாக இருக்க முடியும், நாம் நன்றாக இருந்தால்தான் கம்பெனி நன்றாக இருக்கும். உனக்கு இன்றையிலிருந்து கூடுதல் இன்க்ரிமெண்ட்.'' நீளமான வெள்ளை கவர் நீட்டினார். ''நாலாயிரத்து நூறிலிருந்து நாலாயிரத்து முந்நூறு சம்பளம், என் வாழ்த்துகள்.''

சுந்தரம் மிகுந்த சோர்வோடு தன்னுடைய சீட்டுக்கு வந்தான். அந்த விஷயம் பத்து நிமிடத்தில் கம்பெனி முழுவதும் எதிரொலித்துவிட்டது. அரைநாள் லீவு கேட்டான். உடனே தரப்பட்டது. ஸ்கூட்டரை எடுத்து வீடு நோக்கி நிதானமாய் வந்தான். அன்று காலையில் ஏற்பட்ட முன்பக்க நசுங்கல் கண்களை உறுத்திக்கொண்டே வந்தது. பூட்டின வீட்டை சாவி போட்டுத் திறந்தான். களைத்துக் கட்டிலில் விழுந்தான். தனக்கு மிகப் பெரிய துரோகம் நிகழ்ந்து விட்டதாய் மனது ஆரவாரித்தது.

சுந்தரத்திடம் அந்தப் பொருமல் ஸ்கூட்டரின் முன்பக்க நசுங்கல் மாதிரியாய் நிலையாய் நின்றுவிட்டது. நான்கு நாள்களில் புதிய மேனேஜர் வர நசுங்கிய இடம் துருப்பிடித்தது. துருப்பிடித்த இடத்தில் மெல்லிய விரிசல்கள் ஏற்பட்டன. ஒருநாள் அங்கு ஓட்டை விழுந்தது. சுந்தரம் ராஜினாமா செய்துவிடுவது என்று தீர்மானித்தான். விவரமாகக் கடிதம் எழுதி, தன் டிராயரில் பூட்டி வைத்துக் கொண்டான். அதைக் கொடுக்கும் முன்பு தீவிரமாய் யோசிக்க வேண்டும் என்று ஒரு வாரம் மெடிக்கல் லீவு போட்டான்.

''ரிசைன் பண்றதா? ரிசைன் பண்ணிட்டு என்ன பண்றது?'' கிரிஜா அலறினாள். அந்தக் கேள்விக்கு பதில் சொல்ல சுந்தரத்திற்குத் தெரியவில்லை.



அந்த புதிய மேனேஜர் வேறு ஏதோ பேப்பர் தேடறயன்று, பூட்டியிருந்த சுந்தரத்தின் மேஜை டிராயரை வேறு சாவி போட்டுத் திறந்து, அதில் அவன் ராஜினாமா கடிதம் பார்த்துவிட்டு அதிர்ந்து, வெகு உண்மையாய் கம்பெனியிலேயே ஒரு ஜெராக்ஸ் எடுத்து ஜி.எம்.மிடம் சமர்ப்பித்தான். சுந்தரம் கடைசியாகத் தர வேண்டிய ராஜினாமா கடிதத்தை நிறைய பேர் முன்னதாகவே படித்துவிட்டார்கள். சுந்தரம் அவனைப் பற்றி முடிவெடுப்பதற்குள் அவன் கம்பெனி அவனைப் பற்றி ஒரு முடிவுக்கு வந்துவிட்டது. ஸ்கூட்டரில் விழுந்த சொட்டையை மெக்கானிக் விரல் வைத்து அழுத்தியதும் பொத்தென்று நாலங்குல ஓட்டை விழுந்துவிட்டது.

''பத்த வச்சா சரியா வராது. வேற மட்கார்டு மாத்திடு சார்'' அந்த மெக்கானிக் வார்த்தை ஏதோ ஓர் அசரீரியாய் சுந்தரத்திற்குப் பட்டது.

## 4

எதிர்பார்ப்பு இல்லாத வாழ்க்கை என்று சொல்ல சுலபமாக இருக்குமே தவிர, நடைமுறையில் சாத்தியம் இல்லாதது. நாளை என்கிற எண்ணமில்லாமல் இன்று இல்லை. இன்றைய உணவு உண்ணவே நாளைய உயிர் வாழ்க்கை குறித்துத்தான். இப்போது தூங்குவதே எழுவோம் என்பதற்காகத்தான். இப்போது மூச்சு விடுவதே அடுத்த நிமிட ரத்த ஓட்டத்திற்காகத்தான். எதிர்பார்ப்பு இல்லாது இருப்பது இயலாத காரியம். ஆனால் எதிர்பார்த்து எது வந்தாலும் ஏற்பது வேறொரு விஷயம். இது எதிர்பார்ப்பின் உக்கிரத்தோடு சம்பந்தப்பட்ட செயல். தனக்கு பதவி கிடைப்பதில் லேசாய் ஒரு சந்தேகம் ஏற்பட்டு இருப்பினும் சுந்தரத்தால் சமாளித்துக் கொண்டு இருக்க முடியும்.

சந்தேகமே இல்லை. நிச்சயம் பதவி உயர்வு என்றுதான் சொன்னார்கள். அந்தப் பூரிப்பில் ஒரு மிதப்பு வர, இல்லை என்பது தெரிய வர, பரிசு வாங்கப் போகும்போது படி தடுக்கிப் பல் உடைந்தது போலாயிற்று. பரிசு வாங்காமல் ஆஸ்பத்திரிக்குப் போகும்படியாயிற்று.

பரிசு வாங்காதது மட்டும் வேதனையில்லை. பல்வலியும், ஆஸ்பத்திரியும்தான் வேதனை. பதவி உயர்வு இல்லாது போனதுகூட வேதனையில்லை. தலைக்கு மேல் ஒரு திருடனை அதிகாரியாகப் போட்டதுதான் வேதனை.

ராமன் உழைப்புத் திருடனென்று இரண்டாவது நாளே தெரிந்து போயிற்று. மொத்த பைப் லைனையும் அவனுக்கு நடம் காட்டிக்கொண்டு வந்தபோது அதை அவன் மனசுக்குள் குறித்துக் கொள்ளவே இல்லை.

“இதுக்கு புளு பிரிண்ட் இருக்கா, இதுக்கு புளு பிரிண்ட் இருக்கா?” என்று கேட்டுக் கொண்டே வந்தான்.

“ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்து ரெண்டுல கம்பெனி ரெண்டாவது ஸ்டேஜ் உயர்ந்தபோது ஓர் புளு பிரிண்ட் போட்டோம். அதுக்குப் பிறகு நிறைய மாற்றம். புளு பிரிண்ட் போடலை. புளு பிரிண்ட் போட்ட ஆறு மாசத்துல மறுபடியும் மாறும். மாசத்துக்கு ரெண்டு மிஷின் இறங்கறது. ஒரு வருஷத்துக்கு பத்து மோல்ட் ஸ்க்ராப் ஆகறது. கெட்டுப் போன மோல்டை எடுத்துட்டு புது மோல்ட் போட ஆறுமாசமாகுது. டெம்பரரியா கனெக்ஷன் எடுத்திருக்கோம். எது டெம்பரரி, எது பர்மனென்ட்னு கண்டுபிடிக்கறதே பெரிய வேலை.”

“என்னய்யா பெரிய ரோதனையா இருக்கு? இவ்வளவு பெரிய கம்பெனில இப்படியா பைப் லைன் இருக்கறது? ஒரு சிஸ்டம் இருக்க வேண்டாமா? இதைத் தெரிஞ்சுக்கவே எனக்கு ரொம்ப நாளாகும் போலிருக்கே. இன்னிக்கி எப்படி பைப் லைன் இருக்குன்னு ஒரு புளு பிரிண்ட் எடுக்க முடியுமா?”



“வரதராஜன் எடுத்திருக்கார் சார். அவரைப் போய்ப் பாருங்க”

உடனே போய் வரதராஜனிடமிருந்து புளு பிரிண்டைப் பறித்துவிடும் வேகத்தோடு அந்த ராமன் நகர்ந்து போனான்.

வரதராஜன் தஞ்சாவூர்க்காரன். நழுவுகிற மீனில் நழுவுகிற மீன்.

“புளு பிரிண்டா? பென்சில் பிரிண்ட்தான் இருக்கு. கம்மா ஒரு குத்து மதிப்பா நானா எழுதியிருக்கேன். இதிலேயே ஆறு இடம் மாறிடுத்து. புரிஞ்சா பாருங்கோ” எட்டடிக்கு நாலடி பேப்பரைப் பிரித்துப் போட, ராமனுக்கு எதுவும் புரியவில்லை. ஒரு புளு பிரிண்டைப் படிக்க அந்த இடத்தோடு பரிச்சயம் வேண்டும். சுவர் ஓரமாய் பதினைந்து இடம் வரைந்து இருப்பதைக் காட்டி, “இது என்ன இடம்?” என்று ராமன் கேட்க....

“கக்கூஸ்” என்று புகையிலை வாயுடன் வரதராஜன் சொன்னான்.

“கக்கூஸ் பக்கம் பைப் லைனெல்லாம் ஏன் போறது?” ராமன் சீற....

“கக்கூசுக்கு பைப் லைன் போகலை சார். பைப் லைன் போற வழியில கக்கூஸ் இருக்கு.”

அறையிலிருந்த என்ஜினீயர்கள் ஒரு சேர இடி மாதிரி சிரித்தார்கள். ராமனின் கோபம் சுந்தரத்தின் மீது திரும்பியது.

“இட் இஸ் ரெடிகுலஸ். இந்த சிஸ்டமே தப்பு. நான் ஜி.எம்.கிட்ட பேசப் போறேன்”

ஜி.எம்.க்கு ராமன் அவசரப்படுகிறான் என்பது தெரிந்திருக்க வேண்டும். மாறுதல் செய்ய வேண்டுமெனில்

சுந்தரத்திடம் கேட்டுச் செய் என்று சொன்னது எரிச்ச லூட்டியிருக்க வேண்டும். அரைமணி நேரம் பாக்டரியைச் சுற்றிச் சுற்றி வந்து விட்டு அலுத்துப் போய் டேபிளில் உட்கார்ந்தான்.

"நீங்க என்ன ரிப்பேர் பண்ணினாலும் என்கிட்டே கேட்டுத்தான் பண்ணனும்" என்று சுந்தரத்திடம் சொன்னான். "எங்கிட்ட கையெழுத்து வாங்கின பிறகுதான் மாறுதலே செய்யணும்" என்று கட்டளையிட்டான். "அந்தக் கட்டளை முட்டாள்தனமானது. ஒரு வால்வு பிடுங்கிக் கொண்டு டீசல் கொட்டுகிறபோது யாரைக் கேட்பது? யாரிடம் கையெழுத்து வாங்குவது? ஒரு வால்வு எப்போது பிடுங்கிக் கொள்ளும் என்று யாருக்குத் தெரியும்? நிமிடத்திற்கு மூன்று லிட்டர் டீசல் வெளியே வரும் வேகம் முக்கியமா? அனுமதி முக்கியமா?" சுந்தரம் விளக்கியபோது தலையைச் சொறிந்தான்.

"அப்ப உடனே ரிப்பேர் பண்ணிட்டு என்கிட்ட கையெழுத்து வாங்குங்க"

"இது இன்னொரு பெரிய முட்டாள்தனம். ஒரு காரியம் செய்து முடித்துவிட்டு அப்படி செய்ததற்கு அனுமதி வாங்க வேண்டும் என்று கையெழுத்து வாங்குவது உயர்ரக முட்டாள்தனம்." இதை விளக்கியபோதும் ராமனுக்குக் கோபம் வந்தது.

"அப்ப நான் எதுக்கு இருக்கேன்?" ராமன் கத்தினான்.

"அந்தக் கடவுளுக்கும், போர்ட் ஆப் டைக்ரடர்ஸ்க்கும் தான் தெரியும்" என்று சுந்தரம் பதில் சொன்னான். அந்த பதில் ராமனுக்கு மிகவும் வலித்திருக்க வேண்டும்.

இதைத் தவிர வேறொரு தப்பும் நடந்தது. ஒரு இடத்தில் பைப் லைன் க்ராக் விட்டிருக்கிறது என்று கண்டு பிடித்து அந்த இடத்தில் வேறு பைப் போட ஆள்



அனுப்பியபோது ராமன் தேவையில்லாமல் மேற்பார்வைக் குப் போய் நின்று கொண்டான். டெம்பரரி பைபாஸ் என்று ஏற்பாடு பண்ணி பழைய லைனை அறுத்துக்கொண்டு இருக்கும்போது டெம்பரரி பைபாசின் வால்வு என்னவோ கசிகிறது என்று இறுக கைப்பட மூடிவிட்டான். அடுப்பு நின்றுவிட்டது. ரப்பர் உருக்கும் ஆள்கள் பேய் மாதிரி ஓடி வந்தார்கள்.

அவர்கள் வருவதைப் பார்த்து மடமடவென்று வால்வைத் திறந்து விட்டான். ஏன் அடுப்பு நின்றுவிட்டது என்று அருகிலிருந்து பார்த்தவர்கள்மீது படேலென்று டீசல் தெறித்தது. நெருப்பு மறுபடியும் தகதகக்க ஆரம்பித்தது. நல்லவேளை யாருக்கும் தீக்காயமில்லை. சட்டென்று விலகி ஓடிவிட்டார்கள். அடுத்த செட் ஓடிவந்து தரக்குறைவான வார்த்தையில் பேச ஆரம்பித்தார்கள். ராமன், தான் புதுசு என்றும், ரிப்பேர் செய்த தொழிலாளியைக் கேட்க வேண்டும் என்றும் சொல்லிவிட்டான்.

"எல்லாந் தெரிஞ்ச மனுஷன் மாதிரி நீ வால்வை மூடிட்டு என்னையா கை காட்டறே? இவன் புண்ணாக்கு என்ஜினியருப்பா. சுந்தரத்தைக் கீழே தள்ளிட்டு இவன் வந்துட்டான். வேலை தெரியாத வேலை செய்துட்டு நம்மளைப் போட்டுக் கேக்கறான். இனிமே எங்கம்மா சத்தியமா நீ இருக்கும்போது நான் ஸ்பானர் பிடிக்க மாட்டேன்" தொழிலாளி சத்தம் போட, ஏக களேபரம் நடந்தது. சுந்தரம் தலையிடவே இல்லை. தலையிடாததே குற்றமாயிற்று.

"நாம எதுனா லைன்ல தப்பு பண்ணினாக்கூட சுந்தரம் முன்னால வந்து என்னாலதான் ஆச்சுன்னு பேர் சொல்வாரு. இந்த மனுஷன், நம்மள காட்டிக் கொடுத்தான் பாத்தியா?" கெட்ட பெயர் ராமனுக்கு வந்தது.

தொழிலாளி மனோதத்துவம் ஒரு தனிப்பாடம். அனுபவ வேதம். பழகிப் பழகி நட்பு வளர்க்க வேண்டிய

விஷயம் நம்பிக்கை வந்து விட்ட தொழிலாளி, அதிகாரிக்காக எதுவும் செய்வான்.

"சுந்தரம் சார்! இதைக் கழட்ட முடியாது" ரிஞ்சைக் கீழே போட்டு ஒரு தொழிலாளி நகர்ந்தபோது, "நான் கழட்டிக் காட்டறேன். என்ன பெட் கட்றே?" சுந்தரம் கை மடித்து இறங்கியதுண்டு. சாலினாய்ட் வால்வுக்குள்ள ரப்பர் உயர் அழுத்தத்தில் கொஞ்சம் விரைத்துக்கொண்டு நிற்கும். உணவு இடைவேளையின்போது அழுத்தத்தைச் சற்று குறைத்து, வால்வு ஸ்பான்ர் போட்டுத் திருக பிடி தளர விட்டது.

"அடடே, இதுதான் சமாச்சாரமா?" தொழிலாளி வியந்தபோது, அவன் முதுகில் தட்டிக் கொடுத்து மிச்ச வேலையைச் செய் என்று உத்தரவிடப்பட்டது.

என்ன பெட் என்பதை மறுபடியும் பேசக்கூடாது. தொழிலாளி மனசைக் காயப்படுத்தக்கூடாது. கண்டு கொள்ளாமல் விட்டுவிட வேண்டும். அப்படி விட்டுவிட்டது மிகுந்த நன்றியோடு ஏற்றுக் கொள்ளப்படும். பதிலுக்குக் காட்டப்படும்.

ராமனுக்கு இந்த அடிப்படை புரியாமலேயே இருந்தது. தொழிலாளிக்கு அவன் முட்டாள்தனம் எளிதாய் புரிந்தது. டபாய்த்தார்கள்.

"இப்ப என்னா பண்ணனும்னு சொல்லு. அதைப் பண்றேன். நான் எதுனா பண்ணிட்டு, நீ அதைக் காட்டிக் குடுத்து, வம்பா அது?"

"என்னா பண்ணனும்னு சுந்தரத்துகிட்ட இன்ஸ்ட்ரக்ஷன் சொல்லி அனுப்பறேன். அதன்படி செய்யுங்க" ராமன் விறைப்பாய்ச் சொல்லிவிட்டுப் போனான்.

"சுந்தரம் சார், என்னவோ எழுதிக் கொடுத்தனுப்பறேன்னு சொல்லிவிட்டுப் போனாரே, எங்க அது?"



ரிப்பேர் பைப் லைன், நியர் செகன்ட் கேட் என்றுதான் எழுதி இருந்தது.

"இது என் புள்ளை கூட எழுதிக் கொடுப்பானே! இதுக்கு என்ஜினியர் எதுக்கு? நீ அரை நாள் லீவு போட்டுடு. எப்படி ரிப்பேர்னு நான் கேட்டுட்டு வரேன்" ஒரு தொழிலாளி ஆலோசனை சொன்னான். சுந்தரம் தீர்மானமாக மறுத்து விட்டான். கம்பெனிதான் முக்கியம். தனி நபர் அல்ல என்று சொன்னான். டீசலுக்குத் தட்டுப்பாடான நேரம் அது. ஆயில் கம்பெனியில் டீசல் கோட்டாவைப் பெரிதும் குறைத்துவிட்டார்கள். வெளியில் வாங்க முயற்சி செய்து நாற்பது டிரம் டீசல் பிடித்துக்கொண்டு வந்தார்கள். டிரம்மில் இருந்து ஓவர்ஹெட் டாங்கிற்கு டீசல் போக வேண்டும். ஓவர்ஹெட் டாங்கிற்கு கீழே எண்ணெய் சிந்தி, சிந்தி வழுக்கலான இடம். ஒரு டீசல் டிரம்மை உருட்டி, நிமிர்த்தி மூடித் திறந்த பிறகு, கால் வழுக்கி ஓர் ஆள் டீசல் டிரம்மில் மோத, இருநூறு லிட்டர் டீசல் தரையில் பரவி, சாக்கடையில் சேர்ந்தது. ராமன் தொழிலாளியைத் தேவையில்லாமல் கடிந்து கொள்ள, சுந்தரத்தின் மீதும் புகார் சொல்லி, ராமன் ஜி.எம்.மிற்கு தெரிவிக்க தேவையில்லாத என்கொயரி நடந்து, வழுக்கி டீசல் உருட்டியவனை இரண்டு நாள் சஸ்பெண்ட் செய்தார்கள். விஷயம் யூனியனுக்குப் போய் கடும் எதிர்ப்புக் கிளம்பியது.

"மனுஷன் வேலை செய்வானா இந்த இடத்துல?" எண்ணெய் குழம்பிய ஓவர்ஹெட் இடத்தை யூனியன் ஆள்கள் காரணமாக எடுத்துக் கொண்டார்கள். அந்த இடத்தை வேலைக்கேற்றபடி வைக்காதது நிர்வாகத் தவறு என்றார்கள். பழி சுந்தரத்தின் மீது விழுந்தது. எச்சரிப்பு நோட்டீஸ் தரப்பட்டது.

"முடி வெட்டற இடமெல்லாம் முடியாத்தானிருக்கும். எண்ணெய் வைக்கற இடம் எண்ணெயாத்தான் இருக்கும்"

யூனியன் சுந்தரத்திற்கு பரிந்து பேசியது. ஒரு முட்டாளிடம் மாட்டிக் கொண்டு விட்டோமே என்று வெறுத்துப் போய், சுந்தரம் ராஜினாமாக் கடிதம் எழுதினான். இன்னும் தீவிரமாக யோசிப்பதற்குத்தான் மெடிக்கல் லீவு போட்டான். இரவு தன் அருகே அமர்ந்து வெற்றிலை போட்டுக் கொண்ட மனைவியிடம், ''உனக்கு என்ன சம்பளம்?'' என்று கேட்டான்.

''ஆயிரத்து அறுநூத்து அம்பது ரூபா வர்றது. ஏன்? எதுக்கு என்னிக்குமில்லாத இந்தக் கேள்வி?''

''ஒருவேளை எனக்கு வேலை போயிடுத்துன்னா ரெண்டு, மூணு மாசம் சமாளிக்க முடியாது.''

''வேலை போயிடுத்தா. ஐயோ'' கிரிஜா கத்தினாள்.

''போயிடுத்துன்னா, ரெண்டு மாசம் தாக்குப் பிடிக்க முடியாதா?''

''எனக்கு வேலையை விடறது பிடிக்கலை.''

''எனக்கு மட்டும் பிடிக்கறதா? வேற வழி இல்லைன்னு தான்...''

''வழி வந்துதான் ஆகணும். யார் கையில, கால்ல விழுந்தாவது...''

''எனக்கு யார் கால்லேயும் விழ முடியாது கிரிஜா! என்கிட்ட திறமை இருக்கு''

''இது திமிர். நண்டு கொழுத்தா வளையிலே தங்காது.''

''ஒரு விதத்துல சரி. அந்தக் கம்பெனி எனக்கு வளை மாதிரிப் போயிடுச்சு. என்னால அங்கே இருக்க முடியாது''

''நான் வெங்கடாசலபதிக்கு வேண்டிக்கறேன். நாளைக்கே போய் ஜாய்ன் பண்ணிடுங்கோ'' அவள் தூக்கக் கலக்கத்துடன் படுத்துக் கொண்டாள். தூங்கும்முன் ஒரு கேள்வி கேட்டாள்.



''அடுத்த மாதம் புடவை சீட்டுநூறு ரூபா கட்டட்டுமா? இல்லை இத்தோட போதும் வேண்டாம்னு நிறுத்திடட்டுமா?'' அது சாதாரணக் கேள்வியல்ல. மிகப்பெரிய கேள்வி. எதிர்காலம் பற்றிய கேள்வி. எதிர்காலம் என்பது எதிர்பார்ப்புகள் உள்ள காலம் என்பதுதான் அர்த்தம். கிரிஜாவின் எதிர்பார்ப்புகள் எளிமையானவையாக இருக்கலாம். வெறும் பட்டுப்புடவை என்று முடியலாம். ஆனால் அதைக்கூட நிறைவேற்ற முடியாமல் ஒரு சிரமம் வருமென்று சுந்தரம் நினைக்கவே இல்லை.

## 5

ஒரு வார லீவு நாளின் கடைசி நாள் மனது வேறு விதமாக மாறியது. இன்னும் ஒருமுறை கம்பெனியில் தாங்கமுடியாத சிக்கல் ஏற்பட்டால் அப்போது ராஜினாமா செய்துவிடுவது, அதுவரை யார் ஆண்டால் என்ன என்று பொறுமையாய் இருந்து விடுவது என்கிற தீர்மானம் வந்தது.

ஆனால் இப்படியிருக்க ஒரு தனி மனப்பக்குவம் வேண்டும். அநீதி கண்டு கொதித்தெழாத மனசு வேண்டும். யார் என்ன சொன்னாலும், 'எஸ் சார்' என்று பதில் சொல்லி விட்டுப் போக வேண்டும். சில ஜென்மங்களுக்கு இப்படி அடங்கிப் போவது முடியாத காரியம். போராட்டம் பிடித்துப் போனால் எதற்கும் அமைதியாய் இருப்பது சிரமம். தொட்டதற்கெல்லாம் மனசு துள்ளும் அப்படித் துள்ளாமல் இருக்க வேண்டுமே என்று சுந்தரம் கவலைப்

பட்டான். பிரார்த்தனை செய்தான். லீவு முடிந்து ஆபிசிற்கு கிளம்பும்போது தனக்கு சம்பந்தமே இல்லாத ஓர் இடத்திற்கு தான் போவதாக மனசில் ஒரு நெருடல் ஏற்பட்டது. இதே ஆபீசுக்குப் பரக்கப் பரக்க ஓடியது ஞாபகம் வந்தது. ராத்திரி இரண்டு மணிக்கு மழை வந்த போது டெம்பரரி கனெக்‌ஷன் பற்றிக்கவலைப்பட்டு ஆபீசிற்கு போன் செய்து, 'நல்ல மழை பெய்யுதுய்யா, பைபாஸ் போட்டிருந்தமே என்னாச்சுன்னு போயி பாரு' என்று கட்டளையிட 'இங்க பொட்டு மழை இல்ல சார். எதுக்கும் பார்த்துடறேன்' என்று பதில் பெற முடிந்தது. இன்று ஏனோ பைப்லைனைப் பற்றி எல்லாமே மறந்து விட்டதாய் ஓர் எண்ணம் தோன்றியது.

நாற்பதுக்கு மேல் ஸ்கூட்டரை விரட்ட முடியவில்லை. ஸ்கூட்டர் ஓட்டுவதுகூடச் சோர்வாக இருந்தது. ஆவடி ரோட்டில் ராமன் பியட் காரில் தாண்டிப் போவதைப் பார்த்தான். எண்பத்தி எட்டு பதினேழு. தனக்கு வர வேண்டிய பியட் கார். நேற்று மழையில் கார் நனைந்து இருக்கவேண்டும். சுதவெல்லாம் சேறாக இருந்தது. தனக்குக் கொடுத்த காரைக் கூடத் துடைக்காத சோம்பேறி கம்பெனியை எப்படி கவனிக்கப் போகிறான். இந்த வாரம் எங்கு வாய்ப்பு கிடைத்தாலும் இவனைச் சரியானபடி மாட்டி விடவேண்டும்.

கம்பெனிக்குள் நுழைந்து ஸ்கூட்டரை ஸ்டாண்டில் வைத்துவிட்டு, பர்ஸனல் டிபார்ட்மெண்டில் மீண்டும் வேலைக்குச் செல்வதை அறிவித்து விட்டு தொழிற்சாலை நோக்கி நடந்தான்.

''என்னப்பா நீ பாட்டுக்கு சொல்லாம கொள்ளாம லீவு போட்டுட்டுப் போயிட்டே.''

''குட்மார்னிங்....''



''பெரிய பிராப்ளம் ஆயிடுத்து தெரியுமா? அந்தப் பென்சில எழுதின வரதராஜன் ப்ளூ பிரிண்ட் எங்கே?''

''குட்மார்னிங்.''

''இட்ஸ் கோயிங் டு எ பேட் மார்னிங். ரெண்டு அடுப்பு எரியலை. வரதராஜனைப் புடிச்சு கத்து கத்துன்னு கத்தறார் ஜி. எம். ப்ரொடக்‌ஷன் லாஸ்னு திட்டறாரு''

சாவி போட்டு மேஜையைத் திறந்தபோது சகலமும் யாரோ கலைத்திருப்பது தெரிந்தது. சுந்தரம் கோபமாக டைப்பிஸ்டை நோக்கித் திரும்பினான்.

''கிருஷ்ணராஜ், யாரு என் டேபிளைத் திறந்து பார்த்தது?''

''நான் தான்யா!''

''அந்த பென்சில் ப்ளூ பிரிண்ட் எங்கே?''

''இந்த மேஜைக்குள்ள ஆபீஸ் டாக்குமெண்ட்ஸ் எதுவும் இல்லை. இருக்கவும் இருக்காது. இது எல்லாருக்கும் தெரியும்.''

''எனக்குத் தெரியாதே. நான்தான் தேடினேன். என்ன இப்ப?''

''கிருஷ்ணராஜ், உனக்குத் தெரியுமா, தெரியாதா? நீ ராமன்கிட்ட சொல்லக் கூடாதா?''

''சார் இவர் யாரையும் எதிலேயும் கன்சல்ட் பண்ற தில்ல. எது கேட்டாலும் ஜி.எம். ஜி.எம்.ங்கறாரு. உங்க டிராயரை ஜி.எம். திறந்து பார்க்கச் சொன்னாராம்.''

''ஆமா, சுந்தரத்துக்கிட்டதான் பென்சில் டிராயிங் இருக்கும். பாருங்கன்னாரு. நான் எந்தப் பேப்பரும் எடுக்கல, தேடிப் பார்த்துட்டு அப்படியே வச்சுட்டேன்.''

"ரெண்டு அடுப்பு எரியலைய்யா. வா போய் பார்க்கலாம்."

"நீங்க போயி பாருங்க சார். என்ன பண்ணணும்னு வந்து சொல்லுங்க. செய்யறேன்."

சுந்தரம் சேரில் அசைந்து உட்கார்ந்து கொண்டான். கோபமா? பயமா? கலவரமா? தெரியவில்லை. ஏனோ பசித்தது. இது பசியா என்றும் புரியவில்லை. வயிற்றில் ஒரு அமிலம் படர்ந்து, ஏதாவது சாப்பிட்டால்தான் சரியாகும் என்று தோன்றியது. ராமன் வேகமாக வெளியேறினான். அவன் வெளியே போனதும் கிருஷ்ணராஜ் சுந்தரத்திற்கு அருகே வந்தான்.

"ரிஸைன் பண்ணப் போறீங்களா சார்?"

"இல்லையே. ஏன்?"

"அப்ப என்னத்துக்கு ரெசிக்னேஷன் லெட்டர் எழுதி வச்சிருக்கீங்க? அதை ஒரு ஜெராக்ஸ் எடுத்து ஜி.எம். கிட்ட ராமன் அனுப்பிச் சுட்டான். ரொம்ப மோசமான ஆளு சார். ரெண்டு அடுப்பு நின்னதுக்கு இவன்தான் காரணம். டீசல் பைப்ல பர்னஸ் ஆயிலும், பர்னஸ் பைப்ல டீசல் ஆயிலும் மாத்திட்டாரு. மொத்த பைப்பும் மாத்தறாங்க. ஆயிரத்து நூறு அடிக்கு நாலு நாள் முன்னாடி ஆர்டர் போட்டு பாதி பைப் இறங்கிடுச்சு. பாதி பைப் வரணும். ஓவர் டைம் போட்டு ஒர்க் பண்றாங்க."

சுந்தரம் குழப்பத்தில் ஆழ்ந்தான். அவனுக்கு அதிகம் பசித்தது.

"கேண்டீன்ல இன்னிக்கு பொங்கலா?"

"இல்லை சார். எலுமிச்சம் பழச் சாதம்."

"ச்சேய், ஒரே பசி. எலுமிச்சை சாதம் தொண்டையல்ல அடைக்கும்?"



"நான் இட்லி வச்சிருக்கேன் சார். சாப்பிடறீங்களா?" கிருஷ்ணராஜ் டிபன் பாக்ஸ் திறந்தான். உள்ளே வெள்ளையாய், மெல்லியதாய் பன்னிரண்டு இட்லிகள் இருந்தன. பாதி பாதியாய் பிரித்துக் கொண்டார்கள். மேஜையில் நியூஸ் பேப்பர் போட்டுப் பரப்பினார்கள். ஐஸ் வாட்டர் ஒரு பாட்டில் எடுத்து வைத்துக் கொண்டார்கள். சாப்பிடத் தொடங்கினார்கள். சாப்பிடத் தொடங்கிய நேரம் மோசமான நேரம். நான்காவது இட்லி சாப்பிடுகிற பொழுது வெளியே ஆள்கள் பரபரப்பாவது தெரிந்தது.

"வேர் இஸ் சுந்தரம்? வாட் இஸ் ஹி டு யிங்?"

ஜி.எம். செக்ஷனுக்குள் நுழைந்தார். வாயில் ஒரு விள்ளலும், கையில் ஒரு விள்ளலுமாய் சுந்தரம் எழுந்து நின்றான். கிருஷ்ணராஜ் சட்டென்று தன் டிபன் பாக்ஸை டிராயருக்குள் போட்டுத் தள்ளினான். பேன்ட் பாக்கெட்டிற்குள் கையை விட்டு சரசரவென்று துடைத்துக் கொண்டான். அவன் இட்லி சாப்பிட்டதற்கான அடையாளத்தை அரை நிமிடத்திற்கும் குறைவான நேரத்தில் அழித்தான். ஏதுவுமே நடக்காதது போல் டைப் ரைட்டிங் மெஷினில் செருகியிருந்த கடிதத்தை அடிக்கத் தொடங்கினான். சுந்தரத்தால் இட்லியை மறைக்க முடியவில்லை. மறைக்க வேண்டும் என்று தோன்றவுமில்லை.

"வாட் ஆர் யு டுயிங், சுந்தரம்?"

"ஈட்டிங் சார்."

சில சமயம் சில பதில்கள் மோசமான விளைவைத் தரக் கூடும். எதிர்மறையாய் மாறக் கூடும். மாறியது.

"இது சாப்பிடுகிற இடமல்லவே, உனக்கு இந்த கம்பெனியில் சாப்பிடவா சம்பளம் தருகிறார்கள்? இரண்டு அடுப்பு எரியவில்லை என்பது உனக்குத் தெரியுமா?"

''ஒரு வாரம் மெடிக்கல் லீவ் சார். இன்றுதான் வேலையில் சேர்ந்தேன்.''

''என்ன உன் உடம்புக்கு?''

''டைபாய்டு சிம்ப்டம்ஸ் சார்.''

''இட்லியும், மிளகாய்ப் பொடியும் மருந்தாகச் சாப்பிடச் சொன்னார்களா? நீ ஏன் இப்படி மாறிப் போனாய் சுந்தரம்? புரமோஷன் கொடுக்காததற்குப் பழி வாங்குகிறாயா? ஒரு தனி நபர் முக்கியமல்ல சுந்தரம். கம்பெனி முக்கியம். இதை உனக்குப் பலமுறை சொல்லி இருக்கிறேன். வேலைகள் தலைக்கு மேலிருக்க, வெட்கமின்றி எப்படி இட்லி சாப்பிடுகிறாய்?''

''தனி நபர் முக்கியமில்லை சார். கம்பெனிதான் முக்கியம். கம்பெனி என்ன கட்டளையிடும் என்று காத்து இருக்கிறேன். என் அதிகாரி எனக்கு எந்த வேலையும் இது வரை தரவில்லை.''

''நான் உத்தரவிடுகிறேன். வா என் பின்னால்...''

ஏனோ சுந்தரம் அறியாமல் ஓர் அலட்சியம் அவனுக்குள் வந்தது.

''நீங்கள் முன்னே ராமனுடன்சேர்ந்து கொள்ளுங்கள். நான் பின்னே வந்து சேர்ந்து கொள்கிறேன்'' இன்னும் ஓர் இட்லித் துண்டை வாயில் திணித்துக் கொண்டான். பக்கத்தில் உள்ளவர்கள் வியந்தார்கள். ஜி.எம். அவனை வெறித்துவிட்டு வெல்டிங் செக்ஷனை நோக்கிப் போனார். வயது காரணத்தினால் அவரது இரண்டு முழங்காலிலும் வலிஇருந்தது. நடக்க நடக்க வலி அதிகரித்தது. தன்னை இப்படி அலைய விடுகிறார்களே என்று கோபம் வந்தது. அந்தக்கோபம் சுந்தரத்தின்மீது குறி வைத்தது. என்ன திமிர் என்று பொருமவைத்தது.



சுந்தரம் அடுப்பெரியும் இடம் போகாமல் டீசல் டாங்க் அருகே போனான். அங்கே நின்று பைப் லைனைத் தொட்டுக் கொண்டே வந்தான். வியாதியின் வேர் நாடி, வேர் மூலம் நாடி என்று வைத்திய சாஸ்திரம் சொல்கிறது. நூறு கெஜ தொலைவில் உள்ள பர்னஸ் சரியாக எரியாததற்கு இங்கேயும் காரணம் இருக்கலாம் ஐம்பது கெஜ தூரத்திலேயே காரணம் தெரிந்து விட்டது. ஏர்லாக். ஒரு ஸாலினாய்ட் வால்வ் இறுக்கப்பட்டும், ரப்பர் ரீலீசாகவில்லை. இம்மாதிரி எப்போதாவது நடக்கும். மட்டமான வால்வு ஏமாற்றும். வால்வுக்கு எதிரே சாக்பீசால் கோடு போட்டு ரிப்பேர் என்று எழுதினான். தொடர்ந்து கண்டுபிடித்துப் போனான். ஒரு பைபாஸிலும், பிரச்னை இருந்தது. ஓர் அங்குலக் குழாயை அரை அங்குல பைபாஸிற்கு மாற்றி மறுபடியும் ஓர் அங்குலக் குழாய்க்கு மாற்றி இருந்தார்கள். இது முட்டாள் வேலை. பிரஷர் குறைந்து மறுபடியும் சீறும். வளைந்து, மெலிந்து நீளுகிற குழாயில் கிட்டத்தட்ட ஐம்பது பவுண்ட் வேகம் கூடும். அங்கேயும் பெரிய பெருக்கல் குறி போட்டான். அடுப்புக்கு அருகே போனான்.

அடுப்பில் இருந்து மெல்லிய கம்பி விட்டு குழாயை நோண்டிக் கொண்டு இருந்தார்கள். ஓர் அளவிற்குமேல் கம்பி போகாது. ஆனால் ராமன் போகச் சொல்லி உத்தரவிட்டுக் கொண்டு இருந்தான். ஜி.எம். கவலையோடு அதைப் பார்த்துக் கொண்டு இருந்தார்.

''என்ன செய்கிறீர்கள் ராமன்?''

''எலி இருக்கும், குத்துன்றாரு சார்'' தொழிலாளி அலுப்புடன் பதில் சொன்னான்.

''எலி இருக்கும்னு யாருய்யா சொன்னது?'' சுந்தரம் கேட்டான்.

''ஏன், என்ன இப்ப நான்தான் சொன்னேன்''

"பிராப்ளத்தை புரிஞ்சுகிட்டு செய்யறீங்களா? இல்லை குத்து மதிப்பா செய்யறீங்களா?" சுந்தரம், ராமனை அதட்டினான்.

"இவருக்கு பைப் லைன் நடமே புரியலை. இவரு எங்கேயிருந்து பிரச்சனையைப் புரியறது?" அந்த மூத்த தொழிலாளிக்கு கடும் வெறுப்பு ஏற்பட்டு இருக்கவேண்டும்.

"பிரச்சனை எங்கே சுந்தரம்?" ஜி.எம். அவனைத் திருப்பிக் கேட்டார்.

"ஐம்பது ஜெனத்திற்கு அப்பால் ஸாலினாய்ட் ஏர் பிளாக். என்கூட வாருங்கள் சார். யோல் பெரிசு, ஸ்டோர்ல போயி ஒரு ஸாலினாய்ட் வால்வ் உடனே வாங்கிட்டு வா. பேப்பர் ஒர்க் பின்னாடி பார்த்துக்கலாம். ஜி.எம். கேக்கறார்னு சொல்லு"

ஏர் பிளாக் ஆன இடத்திற்கு அருகே கூட்டமாய் வந்தார்கள். சுந்தரமே ஸ்பானர் போட்டு வால்வ் கழற்றினான். கடைசி சுற்றில் ரப்பர் தளர்ந்து கொண்டது.

"சார் கொஞ்சம் தள்ளிக்கோங்க. சுந்தசாமி நீ அடுத்த வால்வ்கிட்ட போயி கையை வச்சு நில்லு" எல்லாரும் விலகிக் கொள்ள மசல் சரேலென்று பொங்கி அடித்தது. சுந்தரம் முகம் முழுவதும் தெறித்தது. சுந்தசாமி அடுத்த வால்வை வேகமாக மூடினான். வால்வு கழற்றிய இடத்தில் மசல் வேகம் குறைந்தது.

பெரிசு புதிய ஸாலினாய்ட் வால்வைப் பொருத்தி படபடவென்று மாட்ட.

"முனுசாமி அடுப்பாண்ட போயி நில்லு. மசல் வருதா சொல்லு. மசல் வந்தபிறகு கேஸை ரெகுலேட் செய்து பத்த வை"



"வருதேய்!" தொலைவில் இருந்து முனுசாமி கூச்சல் கேட்டது.

"அடுப்பு பத்த வை!" வாயில் கைகுவித்து சுந்தரம் அவனுக்கு உத்தரவிட்டான். ஆனால் ஒரு தவறு நிகழ்ந்தது. குழாய் போன்ற தாமிரக் கம்பியை எவி இருக்கிறதா என்று உள்ளே பார்த்துக் குத்திவிட்டு பெரிசு குழாயில் இருக்கும் வண்ணமே விட்டு விட்டார். அடுப்புப் பற்ற வைத்த முனுசாமியும், அதைப் பார்க்காது விட்டு விட்டான். அந்தக் குறிப்பிட்ட பகுதி மசல் அந்தக் குழாய் வழியாக அடுப்புக்கு வெளியே வர, அடுப்புச்சூடு தாமிரக் குழாயைத் தாக்க, தாமிரக் குழாய் சூடு மசலில் பிடிக்க, தாமிரக் குழாய் வழியே மசல் திரளாக வெளியே வந்தது. தரையில் பரவி நெருப்பாக வழிந்து நாலா பக்கமும் பரவியது. தொழிலாளர்கள் துள்ளி விலகி ஓடினார்கள். யாரோ ஒருவன் நெருப்பணைக்கும் கருவியைத் தரையில் அடித்து பரவும் தீயைப் பார்த்து முழு வேகத்தில் செலுத்தினான். இன்னொருவன் ஃபயர் அலாரம் எழுப்பினான். அருகேயுள்ள லேடில் ரப்பரில் நெருப்பு படாமலிருக்க சட்டென்று மணல் கொட்டித் தடுத்தார்கள்.

"குழாய் மூடு, குழாய் மூடு!" முனுசாமி பேய் மாதிரிக் கத்திக் கொண்டு இருந்தான். ஜி.எம். பயத்தில் வெலவெலத்துப் போனார். கம்பெனி பயர் என்ஜின் பிசாசு மாதிரி சீறிக்கொண்டு தொழிற்சாலைக்குள் நுழைந்தது.

"குளோஸ் ஆல் த பைப்ஸ்!" நெருப்பணைக்கும் அதிகாரி உத்தரவிட்டார். சுந்தரம் ஓடிப்போய் மெயின் பைப்பை மூடினான். கம்பெனியின் பன்னிரண்டு அடுப்புகளும் ஒரு சேர அணைந்தன.

ராமன் துள்ளிக் குதித்து "இவன்தான், இவன்தான் காரணம்" என்று சொல்ல எல்லாரும் சுந்தரத்தைப் பார்த்தார்கள். அன்றைய நஷ்டம் லட்சக்கணக்கில்

இருக்கும் என்று எல்லாருக்கும் தெரிந்து போயிற்று. சுந்தரத்தின் மீது என்கொயரி வந்தது.

'சுந்தரம்! ஒரு போட்டி மனப்பான்மையுடன் உயர் அதிகாரியை அவமானப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன், உனக்குத்தான் எல்லாம் தெரியும் என்ற ஆணவத்துடன் நீ செயல்படுவதை நான் நேரடியாகக் கண்டேன். உன் செயலால் இன்று கம்பெனிக்கு நஷ்டம் பதினெட்டு லட்ச ரூபாய். இதற்காக உன்னை வேலையில் இருந்து நீக்க முடியும். ஆனால் இதுவரை கம்பெனிக்கு நீ செய்த சேவையைக் கருதியும், உன் எதிர்காலம் குறித்த கவலையோடும் உனக்கு ஒரு தனிப்பட்ட சலுகை அளிக்கிறேன். நீ இந்த வேலையை ராஜினாமா செய்துவிட்டுப் போகலாம். இன்னும் இருபத்தி நாலு மணி நேரத்திற்குள் உன் ராஜினாமா கடிதம் எனக்கு வந்தாக வேண்டும்' கையெழுத்தில் எழுதப்பட்ட ஒரு சிறிய குறிப்பு சுந்தரத்திற்கு அடுத்த இரண்டு மணி நேரத்தில் கிடைத்தது. உணவு இடைவேளையின்போது சுந்தரம் ராஜினாமா கடிதம் கொடுத்தான். பகல் இரண்டு மணிக்கு ஸ்கூட்டர் ஸ்டாண்ட் அருகில் வண்டியெடுத்த போது பதினைந்து தொழிலாளர்கள் அவனைச் சுற்றிக் கொண்டார்கள். மவுனமாய் நின்றார்கள். அவர்கள் எல்லார் முகத்திலும் ஒரு கவலை இருந்தது.

"நான் இப்ப சொல்றேன். இந்த கம்பெனி உருப்படாது, தொரை. வேலை தெரிஞ்ச ஒருவனைக் கன்ல ஜலம் வரவழைச்சு வெளில அனுப்பறாங்கள்ல. இந்த்க கம்பெனி உருப்படாது" பெரிசு கத்தினார்.

"அப்படிச் சொல்லாத பெரிசு. நீங்க நல்லாயிருந்தாத்தான் கம்பெனி நல்லா இருக்க முடியும், கம்பெனி நல்லா இருந்தாத்தான் நீங்க நல்லா இருக்க முடியும். கம்பெனி நல்லாயிருக்கட்டும்"



"நீ குடித்தனக்காரனாச்சேப்பா, என்ன பண்ணுவே சாப்பாட்டுக்கு?" பெரிசு மறுபடியும் வினவினான். சுந்தரம் தன் புஜம் தட்டிக் காண்பித்தான். அவர்களை நோக்கி நன்றியுடன் கைகூப்பினான்.

"அந்த ராமன் ஒரு பன்னாடை. அவன்கிட்ட மாட்டிட்டு சாகப்போறோம். அதுதான் கவலையா இருக்கு" சுந்தரம் பதில் சொல்லவில்லை. ஸ்கூட்டர் எடுத்து கம்பெனி வாசலுக்கு வர மனசு நெகிழ்ந்தது. ஸ்கூட்டரில் கால் ஊன்றி தொழிற்சாலையைத் திரும்பிப் பார்த்தான். 'இனிமேல் இது என் இடம் அல்ல. இங்கே உப்பு அவ்வளவுதான். போய் வருகிறேன்' என்று கம்பெனியிடம் மானசீகமாய்ப் பேசினான். ஸ்கூட்டரைக் கிளப்பி வெளியே வந்தான்.

இனி அம்பத்தூர் பக்கமே வரவேண்டிய அவசியமில்லை. ஆவடி ரோடு நோக்கி வரவேண்டிய அவசியமில்லை. இந்த மரம் இனிமேல் பார்க்கப் போவதில்லை. இந்தக் கடையில் சிகரெட் வாங்கப் போவதில்லை. இந்தத் திறந்தவெளி சுடுகாட்டைப் பார்க்கப் போவதில்லை. இந்தப் பிள்ளையார் கோயில் தரிசனம் இனி நிகழப் போவதில்லை. என் இடம் வேறு. என் வேலை வேறு. ஸ்கூட்டர் வேகம் அதிகரித்தது.

## 6

உடுப்பி ஓட்டலில் முழு சாப்பாடு சாப்பிட்டு, ஸ்கூட்டரின் முன்பக்க மட்கார்ட் புதியது மாற்றி என்ஜினை டியூனர் செய்து இரண்டு டயர்களையும் காற்றளவு பார்த்து வீடு போய்ச் சேர்ந்தபோது மணி ஐந்து.

"ரெண்டாயிரத்து நானூறு ரூபா டயருக்காக ஹெச்.எம் கொடுத்தா. பைல வச்சிருக்கேன். நாளைக்கு ஆபீஸ் போகும்போது ஞாபகமா எடுத்துண்டு போங்கோ"

சுந்தரத்துக்கு சிரிப்பு வந்தது. கிரிஜாவுக்கு விஷயம் தெரிந்தால் என்ன ஆகும் என்ற கவலை வந்தது. உடைகள் மாற்றிக் கொண்டு காபி டம்ளரோடு உட்கார்ந்தபோது போன் மணியடித்தது. கிரிஜா போன் எடுத்தாள்.

"ஆமா சுந்தர் வீடுதான். நீங்க யாரு?"

"..............."

"ஆமா. நான் கிரிஜாதான் பேசறேன். சவுக்கியமா? என்ன வீட்டுப் பக்கமே வர்றதில்லை? அவர் இங்கதான் இருக்கார். என்ன விஷயம்?"

போன் எதிர்முனையில் உள்ளவன் விஷயத்தை சொல்லியிருப்பான் போல. 'ரிசைன் பண்ணிட்டாரா? எங்கவீட்டுக்காரரா? எனக்குத் தெரியாதே?" சற்று அதிரலாய்க் கத்தினாள். சுந்தரம் அவளிடமிருந்து போன் வாங்கிக் கொண்டான். அது டீசல் ஆயில் காண்ட்ராக்ட் ஆள். ஆயில் கம்பெனிகளில் டீசல் கிடைக்காதபோது பேரல்களில் சப்ளை செய்தவர். வருடத்திற்கு இரண்டாயிரம், மூவாயிரம் பேரல்கள் அவரிடம் வாங்குவது வழக்கம்.

டீசல் வாங்குவதை சுந்தரம் தான் முடிவு செய்ய வேண்டும் என்பதால் சுந்தரத்தையும் அவன் அடிக்கடி வந்து சந்தித்து விட்டுப் போவான். தீபாவளியன்று சட்டைத் துணியும், பட்டாசுக் கட்டும், இனிப்பும் கொடுத்து விட்டுப் போவான்.

அவனுடைய பங்க் பக்கம் போனால் ஸ்கூட்டருக்கு புல்டாங்க் பெட்ரோல் போட்டு விட்டு காசு வாங்கமாட்டான். அவனிடம் நூறு பேரல் வாங்குவதற்கு கம்பெனி காசு தர வேண்டும். அவன் விஷயம் கேள்விப்பட்டு, காசுக்கு கவலைப்பட்டு போன் செய்திருக்கிறான். டீசல் வாங்கியது



பர்சேஸ் டிபார்ட்மெண்ட் என்றாலும், டீசல் வாங்கி விட்டு டீசல் பெற்றுக் கொண்டேன், அளவு குறையாமலிருந்தது என்று சுந்தரம் கையெழுத்துப் போட வேண்டும்.

சுந்தரம் கையெழுத்துப் போட்டு விட்டானா என்ற கவலைதான் இப்பொழுது முக்கியம். ஆனால் சுந்தரம் ராஜினாமா செய்த செய்தி கிரிஜாவுக்கு அதிர்ச்சி போல எட்டியது ஒரு துரதிர்ஷ்டம். காண்ட்ராக்டரை சுந்தரம் டெலிபோனில் சமாதானப்படுத்தினான். அவ்வளவு பெரிய கம்பெனி காசு ஏமாற்றாது என்றும், இந்த சுந்தரம் இல்லாவிட்டால் யாராவது மந்திரம் அந்தக் காரியத்தைச் செய்வானென்றாலும், உதவி மேனேஜர் ராமனைத் தொடர்பு கொள்ளும்படியும் சொன்னான். போனைக் கீழே வைத்த போது, சமையலறைக்குள் சுவரில் சாய்ந்து கிரிஜா அழத் தொடங்கியிருப்பது தெரிந்தது. அந்த சமையலறைச் சுவர் கிரிஜாவின் தாய்வீடு போல. மனக் கஷ்டம் வரும்போது கிரிஜா அந்த சுவர்ப் பக்கம் போய் விடுகிறாள். அழத் தொடங்குகிறாள் எவ்வளவு சமாதானப்படுத்தினாலும் ஒரு குரல் அழுது விட்டுத்தான் வருவாள்.

சரி அழுது முடித்து விட்டு வரட்டும் என்று சுந்தரம் காலை பேப்பருடன் ஹாலில் உட்கார்ந்து கொண்டான். அவனையும் மீறி 'வான்டட்' காலத்தை அவன் கண்கள் மேய்ந்தன. ஹைபிரஷர் பைப் லைன் சூபர்வைசர் நாலைந்து கம்பெனிகள் கேட்டிருந்தன. ஆனால் எல்லாக் கம்பெனியும் வடஇந்தியாவில் இருந்தன. குஜராத்தில் ஒரு கம்பெனி பதினாறு கிலோமீட்டர் நீள பைப்லைனைப் பராமரிக்க வேண்டும் என்று சொன்னது. ஆறு சூபர்வைசர்கள் தேவையாம். படிப்பை விட, அனுபவத்திற்கு முதலிடமாம். ஆறாயிரம் ரூபாய் சம்பளமாம், ஆறாயிரம் கொட்டை எழுத்திலிருந்தது. இந்தக் காசுக் கவர்ச்சியில் யாராவது வர மாட்டார்களா என்கிற தாபம் போலும். முன்பின் தெரியாத குஜராத்தில் என்ன சம்பாதித்து, என்ன குடித்தனம்

செய்து....ஆறாயிரமும் காணாதுபோகும் குளிரும், மழையும், புயலும் ஒத்துக் கொள்ளவில்லையென்று ஊர் திரும்பும்படியாகும். கிரிஜா ஹாலுக்கு வந்தாள். அவள் வருகையில் ஒரு வேகமிருந்தது.

"இப்ப என்ன செய்றதா உத்தேசம்?" கோபமாய்க் கேட்டாள்.

"குஜராத் போகப் போறேன். ஆறாயிரம் ரூபாய் சம்பளம்"

"நீங்க மட்டும் தனியாவா?"

"நீயும் வர்றதா இருந்தா வரலாம். குஜராத்ல பால், தயிரெல்லாம் சீப்பா கிடைக்கும்"

"நான் வரலைன்னு சொன்னா?"

"நான் மட்டும் தனியா போவேன்"

"ஒரு நல்ல வேலையத் தொலைச்சிட்டு வந்து ஏன் இப்படி நிக்கறேள்?" கிரிஜா அழுத குரலில் உரக்கக் கத்தினாள். கிரிஜா அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை. அவளுக்குத் தனியார் கம்பெனியின் தன்மைகள் புரியவில்லை. தொலைச்சுட்டு வந்து நிக்கறனே என்பது பெரிய வார்த்தை. குடித்துவிட்டோ, சூதாடியோ, சாமான் திருடியோ, பொய்க் கணக்கு எழுதியோ, லஞ்சம் வாங்கியோ இந்த வேலை போகவில்லை. ஒரு துரதிருஷ்டம்...பாசி சறுக்கி படியில் மல்லாந்தது போன்ற துரதிருஷ்டம். சனியனே ஏன் விழுந்தே என்று சறுக்கின குழந்தையைக் கண்டிப்பது முட்டாள்தனம். உணர்ச்சிவசப்பட்ட யாரும் முட்டாளாகத்தான் இருப்பார்கள். கிரிஜா உணர்ச்சிவசப்பட்டிருக்கிறாள். ஏன் ராஜினாமா செய்தீர்கள் என்று கேள்வி கேட்காமல் இருக்கிறாள். கேட்டால் பதில் சொல்லலாம்.

"ஏதாவது செய்வேன் கிரிஜா,நீ ஏன் கவலைப்படறே?"



"ஒரு மாதம் வீட்டுக்கு எவ்வளவு செலவாகறது தெரியுமா உங்களுக்கு?"

"இது இன்னொரு முட்டாள்தனம். புருஷனால் அல்ல, தன்னாலேயே குடித்தனம் நடக்கிறது என்ற அகங்காரம் புருஷனை மடையன் என்று நினைத்துக் கொள்கிற சுபாவம்'

"வர வர நாலாயிரம் ரூபா போதறதில்லை. தெரியுமா உங்களுக்கு? போன மாசம் ஏழரை ரூபாய்க்கு வாங்கின அரிசி இப்ப ஒன்பது ரூபா"

"உனக்கு என்ன வேணும்?"

"என்ன செய்யப் போறேள் நீங்க?"

"என்ன செய்யணும்?"

"மாசம் ஐயாயிரம் ரூபா கொடுக்கணும்"

"கொடுக்கலைன்னா?"

அந்தக் கேள்விக்குப் பிறகு இருவருமே பேசவில்லை. குடித்தனமென்பது காசால் மட்டுமே நடப்பதால் உண்டான பரிதாபம் இது. கொடுக்கலைன்னா என்பது மிகப் பெரிய கேள்வி. காசு கொடுத்தால் சோறு போடுவேன் சீராட்டுவேன், படுத்துக் கொள்வேன், கொஞ்சுவேன், கொண்டாடுவேன். நிறையக் காசு கொடுத்தால் நிறைய கொஞ்சுவேன். நிறைய கொண்டாடுவேன் என்பதாய்தான் இதற்கு பதில் சொல்ல வேண்டியிருக்கும். இந்த பதிலின் எல்லை மிகுந்த அசிங்கத்தில் கொண்டு போய்விடும். சகதியின் அருகே சேர்த்து விடும். புருஷனைக் காசாய் மதிப்பது கேவலம் என்பது கிரிஜாவுக்குத் தெரியும். இருந்தாலும் எதிர்காலம் பற்றிய அதிர்ச்சியில் இப்படிப் பேசுகிறாள் என்று வைத்துக் கொள்ளலாம். ஆனால் ஒரு கெட்டிக்காரப் பெண் இந்த நேரம் இதைப் பேசமாட்டாள். கிரிஜா நல்லவள். கெட்டிக்காரியில்லை. உணர்ச்சி வசப்பட்டவள். அவளிடம் சூட்சமம்

இல்லை. ஆனால் சூட்சமம் உள்ள பெண்ணோடு குடித்தனம் செய்வதில் ஒரு கஷ்டம் இருக்கிறது. அந்த வகை பெண்களுக்கு எத்தனை கம்பீரம் காட்டினாலும் அலட்சியம் தான் இருக்கும். நீ ஒன்றும் பிரமாதமா சாதிச்சுடல என்கிற கேலி இருக்கும். அதிக சூட்சுமமில்லாமலும், வேகமாய் உணர்ச்சிவசப்படாமலிருக்கக் கூடிய வலுவான பெண் கிடைப்பது மிகவும் கடினம். கிரிஜாவுடன் பேசாது போனால் மிருந்த புலம்பல்களாகவே முடியும்.

பாவம் கிரிஜா, அவள் அளவில் பதைப்பு நிஜம். புருஷன் தோல்வியில் அவள் கம்பீரம் குறைவது வாஸ்தவம்,

'ஐயாயிரம்தானே கேட்டே, பத்தாயிரம் சம்பாதிக்கறேன். போதுமா?' என்று சமாதானப்படுத்த வேண்டும். எப்படி சம்பாதிப்பது என்ற கவலையை யாரோடும் பகிர்ந்து கொள்ளாமல் தான் மட்டுமே நின்று அனுபவிக்க வேண்டும். கவலையை வெளியே காட்டிக் கொள்ளாது காரியம் செய்ய வேண்டும். தனக்கு வேலை போயிற்று என்ற அதிர்ச்சி தனக்கு நீங்கவே இன்னும் இரண்டு நாளாகும். கிரிஜா கொண்டு வந்து கொடுத்த காபியைக் குடித்து விட்டு எந்த இலக்குமின்றி சுந்தரம் வெளியே கிளம்பினான். இருட்டத் தொடங்கிய நேரம் கடற்கரைக்குப் போய் நின்றான்.

''என்ன சுந்தரம், எப்படியிருக்கே'' யாரோ உற்சாகமாய்க் கூப்பிட்டார்கள். அவனோடு ஹிண்டு ஹைஸ்கூலில் படித்த சடகோபன். வேறு யார் காரிலிருந்தோ கீழிறங்கி அவனை நோக்கி வந்தான்.

''சுந்தரம் இது நம்ம பார்ட்னர். பேரு கருணை முத்து. பெரிய லாண்ட் லார்ட். புழலேரி கிட்டக்க வயல் வயலா நிலம் வளைச்சுப் போட்டிருக்காரு. ஏதாவது லேண்ட் வாங்கற ஐடியா இருந்தா சொல்லு டக்குன்னு முடிச்சிடலாம்.''



''முத்துசார்! இவரு சுந்தரம். நம்ம க்ளாஸ் மேட். டயர் கம்பெனில பெரிய அதிகாரி. ஏதும் வீடு கட்டற ஐடியா இருந்தாச் சொல்லு சுந்தரம். முத்து சாரே ஹெல்ப் செய்வாரு. போரூர்ல ரெண்டு ப்ளாட் கட்டிட்டிருக்காரு. சுந்தரம், ஒண்ணு வாங்கிப்போட்டேன். எம்.எம்.டி.ஏ. சாங்ஷன் ஆன இடம். ஆயிரம் ஸ்கொயர் ஃபீட் மூணு லட்ச ரூபா. சும்மா வாங்கிப் போட்டு வை. ரெண்டு வருஷத்ல ஆறு லட்ச ரூபா ஆயிடும். உன்ன மாதிரி ஆபீசருக்கு நிறைய கடன் கிடைக்கும்பா. அதுக்கு கூட நாங்க ஏற்பாடு செய்யறோம். முத்து சார்! விசிட்டிங் கார்டு குடுங்களேன்''

சடகோபன் இடதும் வலதும் மாறி மாறிப் பேசிக் கொண்டிருந்தான். தன்னுடைய கம்பெனி பெயர் போட்ட விசிட்டிங் கார்டை முத்துவுக்குக் கொடுப்பதா என்று சந்தேகம் சுந்தரத்திற்கு வந்தது. முத்துவின் கார்டு வாங்கி விலாசம் பார்த்து விட்டு பையில் வைத்துக் கொண்டான். சள சள வென்று பேசும் சடகோபனை விட முத்துவிடம் பேசுவது நல்லது என்று அவனுக்குப்பட்டது.

''புழலேரி பக்கம் வயல் வாங்கிப் போட்டு என்னங்க புண்ணியம்? யார் வாங்குவாங்க?''

''அப்படித்தான் அஞ்சு வருஷத்துக்கு முன்னாடி போரூரை நினைச்சோம். அப்படித்தான் பத்து வருஷத்துக்கு முன்னாடி வடபழனிய சொன்னாங்க. இப்ப போய்ப் பார். எல்லா ஏரியாவும் மைலாப்பூர் மாதிரி மாறிப் போச்சு. இவரு புழலேரில வாங்கும்போது கிரவுண்ட் நாலாயிரம். இப்ப நாற்பதாயிரத்துக்குக் கேக்கறாங்க. தரமாட்டேங்கறாரு.''

''புழலேரில கிரவுண்ட் வாங்கி என்ன செய்யறது?''

''உங்களுக்கு எங்க சார் கிரவுண்ட் வேணும்?'' கருணை முத்து வியாபாரமாய் கேள்வி கேட்க சுந்தரத்திற்குப் பதில்

சொல்ல முடியவில்லை. அடுத்த மாத சம்பளமே கேள்விக் குறியாய் இருக்கிறபோது நிலம் வாங்குவதெப்படி? ஆனால் இவரோடு பேசுவதில் ஏதாவது தெரிந்து கொள்ளலாம்.

''நீங்க ஏரியாவும், விலையும் சொல்லுங்க சார்? நான் யோசனை பண்றேன்?''

''அப்ப வாங்க, காபி சாப்பிடலாம்'' கருணைமுத்து கடற்கரை ஹோட்டலுக்குள் நுழைந்தார். சுந்தரம் மறுபடியும் தயங்கினான். தொடர்ந்தான். தென்பகுதியிலெல்லாம் ஒரு லட்சத்திற்கு மேல்தான் கிரவுண்ட் விலை இருந்தது. கருணைமுத்துவுக்கு அங்கே சொந்தமாய் எதுவுமில்லை. ஆனால் வாங்கித் தரமுடியும் என்கிற உறுதியிருந்தது. பல தகவல்களைக் கேட்டுக்கொண்டு சுந்தரம் காபிக்குத் தானே முன்வந்து காசு கொடுத்தான்.

''நான் தானே வியாபாரத்துக்கு கூப்பிட்டேன். நான் தானே காபிக்கு காசு கொடுக்கணும்'' கருணைமுத்து கேட்டார்.

''நான் இதை வியாபாரமாப் பார்க்கலை. நட்பா பார்க்கறேன்'' சுந்தரம் அவரைத் தடுத்து விட்டுக் காசு கொடுத்தான்.

''நான் கிளம்பறேன், சடகோபன், கோயிலுக்குப் போகணும். லேட்டாயிடுச்சு'' கருணைமுத்து எழுந்து விட்டார்.

''தினம் எதுனா கோயிலுக்குப் போயிட்டுத்தான் ராத்திரி சாப்பாடே சாப்பிடுவார். அவர் போகட்டும். நாம பேசிட்டிருக்கலாம்'' சடகோபன் அவரை வழியனுப்பினான். சுந்தரத்திற்கும், கருணைமுத்துவோடு கோயிலுக்குப் போக வேண்டுமென்ற ஆசை வந்தது. அதே சமயம் சடகோபனோடு பேச வேண்டும் என்றும் தோன்றியது.



கருணைமுத்துவிடம் வேலைக்குச் சேரலாமா என்கிற எண்ணம் வந்தது. ரியல் எஸ்டேட் பிசினசை அவரிடம் கற்றுக் கொண்டால் என்ன என்று தோன்றியது. கருணைமுத்து யார் என்று தெரிந்து கொள்ள சடகோபனிடம் தனியாகப் பேசுவது பயன்தரும் என்கிற எண்ணம் வந்தது.

''கருணைமுத்து தனியா ஆபீஸ் வச்சிருக்காரா?''

''இருக்கே பனகல்பார்க் கிட்டக்க? பெரிய ஆபீஸ் இருக்கு''

''என்னை வேலைக்குச் சேர்த்துக்குவாரா?'' சுந்தரம் கேட்க, சடகோபன் திகைத்தான். சுந்தரம் சுருக்கமாய் தன் நிலைமையைச் சொல்ல, சடகோபன் கைகுலுக்கி, 'வா ராஜா வா' என்றான். அவனை எவ்வளவு தூரம் நம்புவதென்று சுந்தரத்திற்குத் தெரியவில்லை.

# 7

காலையில் எட்டு மணிக்கு உடுத்திக் கொண்டு கிளம்பிய போது கிரிஜா அவனை விழி விரியப் பார்த்தாள்.

''கம்பெனிக்குப் போறேளா?''

''இல்லை. ஏன் கேட்கறே?''

''மறுபடி கம்பெனிக்குப் போய் மன்னிப்பு கடுதாசி எழுதிக் கொடுத்து வேலைல சேரப் போறேளோன்னு நினைச்சேன்?''

''ஏன் மன்னிப்பு கடுதாசி எழுதிக் கொடுக்கணும்?''

''தப்பு செய்ததுனாலதானே வேலைலேர்ந்து நிறுத்திட்டா? மன்னிப்புக் கடிதம் கொடுத்தா மறுபடி சேர்த்துக்க மாட்டாளா?''

சுந்தரத்திற்கு சிரிப்பு வந்தது. இது செமத்தியான லாஜிக். ஆனால் செயல்படுத்த முடியுமா? என்னவென்று மன்னிப்பு கேட்பது, எதற்கு கேட்பது? அந்தக் கம்பெனி வெடித்துச் சிதறி விட்டது அல்லது கடலில் மூழ்கி விட்டது. அப்போது கம்பெனி வேலை செய்பவனை வெளியே துரத்தினால் என்ன செய்வது என்ற கேள்வி வராதா? மூடின கம்பெனியின் முன்னால் தூக்கு மாட்டிக்கொண்டு சாகவா முடியும்? உயிர் வாழ்தலில் வேறு முயற்சிகள் தோன்றாதா? இதை கிரிஜாவிடம் விளக்கிப் பேச முடியுமா? விளக்கினால் புரிந்து கொள்வாளா? பதில் பேசி எதிர்ப்பாள்.

அவளுக்கு வேண்டியது காசு, குடித்தனம் பண்ணுவதற்கு காசு. ரியல் எஸ்டேட் பண்ணுவதற்கு காசு. ரியல் எஸ்டேட் பிசினசில் பத்தாயிரம் வந்தால் மறுபடி டயர் கம்பெனிக்குப் போ என்று சொல்வாளா, இதையே எப்படியாவது டெவலப் பண்ணி, பத்தாயிரத்தை இருபதாயிரமா மாற்றி...என்று பேசி...நாக்கு புரளும். டயர் கம்பெனி ஒரு தண்டக் கம்பெனி என்று எதிர்ப்புறம் பேசும். எல்லாப் பெண்களுக்கும் சம்பாதிக்கிற புருஷன் தான் வேண்டும். சங்கடமில்லாத வாழ்க்கைதான் வேண்டும். சங்கடமே படாமல் சம்பாதிக்கிற புருஷன் யாராவது உண்டா?

கிரிஜாவின் கேள்விகளுக்கு பதில் சொல்வதைத் தவிர்த்தான். மனம் கருணைமுத்து அலுவலகத்தை நோக்கிச் செல்லத் தூண்டியது.

ஏ.சி. அறையில் உட்கார்ந்திருந்த கருணைமுத்து நிமிர்ந்து பார்த்தார்.



''உங்க வேலை போயிடுச்சுங்களா? ரியல் எஸ்டேட் வேலைக்கு வர்றீங்களா? நல்லா வாங்க. இது ஒரு வேலைன்னு நான் ஒத்துக்க மாட்டேன். இது ஒர் ஆடு புலி ஆட்டம். நாலு ஆடு சேர்ந்து ஒரு புலிய மடக்கணும். தனியா போனா புலி தின்னுடும். ஒரு புலியை மடக்கி நாலா பங்கு போட்டுக்கணும். மாசம் பொறந்தா சம்பளம் வாங்கிட்டு புலி வேட்டைக்குப் போறது கஷ்டம். ஒரு புலிய முதல்ல மடக்கிட்டீங்கன்னா அப்புறம் வேட்டை மொத்தமும் புரிஞ்சிடும். அந்த ஒரு புலி நாளைக்கு சிக்கலாம். நாலு நாளைக்குப் பிறகும் சிக்கலாம். நாலு வருஷம்கூட ஆகலாம். நான் எதைப் புலின்னு சொல்றேன்னு புரியுதுங்களா? கிரவுண்ட் ஆறு லட்சம் விலைல பத்து கிரவுண்ட் கேக்கற கஸ்டமர் புடிச்சா இது புலிய புடிச்சா மாதிரி. உங்க ஒருத்தனை நம்பி அறுபது லட்ச ரூபாய் யாரும் கைமாத்த மாட்டான். நாலு புரோக்கரை விசாரிப்பான். அந்த நாலு புரோக்கரும் கைகோர்த்துக்கிட்டம்னா புலிய ஒரு இடத்துல ஓரம் கட்டிடலாம். முன்ன பின்ன புரோக்கரும் அலைஞ்சா சந்துல புலி புகுந்து நாலையும் சாப்பிட்டுடும். இங்கே புலி எப்ப அம்புடும்? கடவுளைக் கேக்கணும். கடவுளுக்குத்தான் வெளிச்சம். நான் தினம் கோயிலுக்குப் போறது புலி கிடைக்கணும்னுதான். புரியுதுங்களா.''

''சடகோபனோட நாலு இடம் சுத்துங்க நிறைய பிடிபடும். அதுக்கு முன்னாடி ஒரு விஷயம். உங்க சடகோபன் ஆடா, ஓநாயான்னு எனக்குத் தெரியலை, அதை தெரிஞ்சுக்கங்க?''

ஏ.சி. ரூமை விட்டு வெளியே வந்தார். சடகோபனும், சுந்தரமும் அவர் பின்னால் போக—

''நீங்க ரெண்டு பேரும் இங்கேயே இருந்து எதுனா புலி வருதான்னு பார்த்துட்டு இருங்க. எனக்கு வேலை இருக்கு?''

அலுத்துக் கொண்டது போல் கிளம்பினார். பனகல் பார்க் எதிரே உள்ள கட்டடத்தின் மேல்மாடியில் பதினைந்துக்கு பதினைந்தடி அறையில் புலி வருமாவென்று சுந்தரம் உட்கார்ந்தபடி காத்திருந்தான். சடகோபன் இரண்டு மேஜைகளை இழுத்துப் போட்டு, தலைப்பக்கம் சில ரெஜிஸ்டர்கள் வைத்து தூங்கிப் போனான். அவன் தூங்குவதும், சுந்தரம் உட்கார்ந்திருப்பதுமாய் ஒரு மாதம் கழிந்தது. புலி எந்த திசையில் இருக்கிறது என்பது கூட யாருக்கும் தெரியவில்லை.

''இதோ பக்கத்துல போயிட்டு வர்றேன்'' என்று வழக்கமாய் கிளம்பிய கருணைமுத்து பத்து நிமிடத்தில் திரும்பி வந்தார். தூங்கிக் கொண்டிருந்த சடகோபனை வெறித்துப் பார்த்தார். அவனைத் தட்டியெழுப்பினார்.

''நான் அவசரமா பாம்பே போறேன். வர ஒரு வாரம் ஆகும். நீங்க இரண்டு பேரும் ஒரு வாரத்துக்கு அப்புறம் ஆபீஸ் வாங்க'' என்று ஆபீஸ் கதவைத் தாழ் போட்டார். பூட்டிக்கொண்டு கிளம்பினார். அந்த இடத்தின் உப்பும் அவ்வளவுதான் என்று சுந்தரத்திற்கு தெரிந்தது. ஒரு பைசா கூட சம்பாதிக்காமல் கைக்காசு கரைந்து கொண்டிருப்பது உறுத்தியது. சுந்தரம் தனியே புலி வேட்டைக்குப் போவதென்று தீர்மானித்தான்.

## 8

கட்டடம் கட்டுபவர்களை அணுகி தானே போய்ப் பேசி அவனுக்கு கட்டடம் கட்ட நிலம் தேவையா என்று விசாரிக்கத் தீர்மானம் செய்தான். பத்தடுக்கு மாடி கட்டிக் கொண்டிருந்த சுனில் அகர்வாலிடம் போய் நின்றான்.



''மிகத் தெளிவான ஆங்கிலம் பேசுகிறீர்களே, புரோக்கர் தானா நீங்கள்?'' அறுபது வயது சுனில் அகர்வால் அவனை உற்றுப் பார்த்தபடியே கேட்டார். புரோக்கர் என்ற வார்த்தை சுந்தரத்தின் முகத்தில் அடித்தது. அந்த ஆங்கில வார்த்தை எதனால் மோசமாயிற்று என்ற கவலை வந்தது.

''ஐயம் நாட் எ புரோக்கர். ஐயாம் எ கன்சல்ட்டண்ட்''

''என்னளவில் இரண்டும் ஒன்றுதான். சரி, இதற்கு முன்னால் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?''

சுந்தரம் சுருக்கமாக தன் கதையைச் சொன்னான். அடிமை வேலை பிடிக்கவில்லையென்று தனியாய் வந்ததாய் மாற்றிச் சொன்னான்.

''வெரிகுட், எனக்கு குறைந்த பட்சம் ஆறு கிரவுண்ட் நிலம் தேவை. தென்சென்னை பக்கமாக இருப்பின் உடனே வியாபாரம் முடிக்கலாம். பழைய கட்டடம் இருப்பினும் இடித்து விட்டு கட்டடம் கட்டலாம். ஆனால் ஆறு கிரவுண்டிற்கு குறையாமல் இருக்க வேண்டும்''

''இரண்டு நாளில் உங்களை வந்து பார்க்கிறேன் ஐயா'' சுந்தரம் சொல்லிவிட்டு வெளியே வந்தான். மயிலாப்பூர், மாம்பலம் சென்று ஸ்கூட்டரில் நாய் போல அலைந்தான். நிறைய புரோக்கர்களுக்கு ஆறு கிரவுண்ட் நிலங்கள் தெரிந்திருந்தன. அந்த நிலத்தின் ஓனர் யார் என்று தெரிந்து கொள்வது மிகக் கடினமான காரியமாக இருந்தது.

''ஓனர் யாருன்னு உங்கிட்ட சொன்னா நீ முடிச்சுக் கிட்டு போயிடுவே. என் கதி, என் பர்சண்டேஜ்?'' ஆறு நாள் கழிந்த பிறகு ஒரு புரோக்கர் வாய் திறந்தான். அவனை சமாதானப்படுத்தி அகர்வாலிடம் அழைத்துச் செல்ல இரண்டு நாள்களாயிற்று. அகர்வாலிடம் அழைத்துப் போன போது அந்த புரோக்கர் இன்னொரு குண்டைத் தூக்கிப் போட்டான்.

"அந்த நிலம் லாண்ட்சீலிங்ல மாட்டிக்கினுருக்கு சுந்தரம். வாங்கறதில பிரச்சினை இருக்கு"

"என்ன சொல்கிறான் உன் புரோக்கர்?" அகர்வால் கூர்மையாகக் கேட்டார்.

"அந்த இடம் நில உச்ச வரம்பு சட்டத்தில் சிக்கியிருக்கிறது சார்"

"பிறகு ஏன் என்னைப் பார்க்க வருகிறாய்? என் நேரத்தை ஏன் பாழடிக்கிறாய்! வெளியே போ" அகர்வால் சீற, அடிபட்டதுபோல் இருவரும் வெளியே வந்தார்கள்.

"ஏன்யா, இதை எங்கிட்ட முன்னாடி சொல்லக் கூடாதா?"

"கவர்ன்மெண்ட் செல்வாக்கு இருந்தா லாண்ட்சீலிங் நிலத்தையும் வாங்கலாம். இந்தாளு ஒரு வடநாட்டான். அதைச் சொல்லியிருந்தா வந்திருக்கவே மாட்டேன். என்னை அசிங்கப்படுத்திட்டே" புரோக்கரும் சீறினான்.

"லாண்ட் சீலிங்னா என்னய்யா"

"யாருக்குத் தெரியும்? எல்லாரும் சொல்றாங்க. நானும் சொல்றேன்"

தெரிந்து கொள்ள படிக்க வேண்டியிருந்தது. படிக்க புத்தகம் வாங்க வேண்டியிருந்தது. புத்தகம் வாங்க காசு வேண்டியிருந்தது. காசுக்கு கிரிஜாவிடம் நிற்க வேண்டியிருந்தது. கிரிஜா கை வளையல்களைக் கழற்றித் தர வேண்டியிருந்தது.

'உங்க ஆபீஸ் காசு வர்றபோது, கூட அரை பவுன் போட்டு எனக்கு வேறு வளையல் வாங்கிக் குடுத்துடுங்கோ' அவள் சொல்ல, கோபம் வந்தது.



"நாலு பவுன் வளையலுக்கு அரை பவுன் வட்டியா? திமிர் தானே உனக்கு?" சுந்தரம் கோபத்தில் கத்தினான்.

"இது நாலேகால் பவுன் வளையல். தேய்ஞ்சு ஒட்டை விழுந்து மறுபடியும் பத்த வச்ச வளையல். இன்னும் அரை பவுனு கூடப் போட்டா தேயாது, கனமாயிருக்கும்னு சொன்னேன். உங்ககிட்ட வட்டியா கேட்டேன்? உங்களுக்கு வேலை போனதிலேர்ந்து பைத்தியம் பிடிச்சுடுத்து. யார் என்ன சொன்னாலும் தப்பாவே படறது. தாலிக் கொடி தவிர வேற நகையே நான் போட்டுக்கப் போறதில்லை. போட்டாதானே தேயும்? தேயறது தானே குத்தம்?"

தாலிக் கொடி தவிர மற்ற எல்லா நகைகளையும், காது தோடு உள்பட பீரோவில் வைத்து விட்டு, பித்தளை நகைகளை மாட்டிக் கொண்டாள். தனக்குத்தானே பேசி அழுது கொண்டு சமையல் செய்தாள்.

சுந்தரம் லேசாய் அவள் தோளைத் தொட்டு மன்னிப்பு கேட்க வெடுக்கென்று விலகிப் போனாள். அன்று மாலை கிரிஜாவின் அப்பாவும், அம்மாவும் சாதாரணமாய் வருவது போல் வந்து அவன் வேலை போனதுக்கு துக்கம் கேட்டார்கள்.

"ரியல்எஸ்டேட் வேலையா? அது ப்ராட் பிசினஸ்னா, நமக்கு சரிப்பட்டு வருமோ?" கிரிஜாவின் அப்பா கேட்கும் போது மனசில் பொங்கிய கோபத்தை புகையிலைக் கொத்துப் போல் வாய்க்குள் அடக்கி கடைவாய்ப் பற்களில் கடித்து அதக்கிக் கொள்ள வேண்டியிருந்தது. ஒரு அவமானம் புகையிலைக் காரம் போல் தலைக்கேறிற்று. அந்த அவமான காரத்தில் கண்ணில் ஜலம் கட்டியது.

சுந்தரம் இரவும், பகலுமாய் லாண்ட்சீலிங் பற்றியும், எம்.எம்.டி.ஏ. சாங்ஷன் பற்றியும் ஒரு வரி விடாமல் படித்தான். நில உச்சவரம்பிலிருந்து நிலத்தை மீட்க என்ன

செய்ய வேண்டுமென்று தெரிந்து கொண்டான். அந்த ஆறு கிரவுண்ட் நிலச் சொந்தக்காரரிடம் போய் தான் படித்துத் தெரிந்த விவரங்களைப் பரிமாறிக் கொண்டு, அவருடைய பத்திரங்களை வாங்கிப் படித்தான்.

"இந்த நிலத்தைப் பத்தி கவர்ன்மெண்ட்டுக்கு நீங்க சரியா டிக்ளேர் பண்ணல. உங்க அப்பா உயில்ல உங்க நிலம் பத்தி தெளிவா இருக்கு. தன்னுடைய பேரன்களான உங்களுடைய பசங்க இரண்டு பேருக்கும், உங்க மனைவிக்கும் இதை சமபங்கா எழுதி வச்சிருக்காரு. இந்த நிலம் மூணு பேர் சொத்து. மாத்தாத விட்டுட்டீங்க. செத்துப் போன உங்கப்பா பேர்ல, உங்கப்பா செத்த பிறகு லாண்ட்சீலிங் வந்திருக்கு. இதை கவர்ன்மெண்ட்டுக்கு தெளிவா சொல்லி இப்ப மாத்தலாம். நிலத்தை மாத்தணும்னா ரெஜிஸ்ட்ரேஷன் பீஸ் ஒன்றரை லட்ச ரூபாய் வரும். அப்ப நிலம் லாண்ட் சீலிங்லேர்ந்து விடுபடும். நான் கவர்ன்மெண்ட்டுல போராடி இதை சீலிங்லேர்ந்து விடுவிச்சுத் தர்றேன். ஆனா ஒரே ஒரு கண்டிஷன், இந்த நிலத்தை என் மூலமாதான் விற்கணும்"

அவர் சம்மதம் சொன்னார். அதே சமயம் அவர் பத்தாயிரம்கூட பணம் இல்லை என்று சொன்னார். தன் கழுத்தை அறுத்தாலும் ஒன்றரை லட்சம் காசு தேறாது என்றார். ஏற்கெனவே அவருக்குக் கடன்கள் இருந்தன. அவர் மேலும் கடன் வாங்கத் தயாராக இல்லை. அந்த நிலம்விற்றால் சந்தோஷம். கடன் அடையும். சுந்தரத்திடம் ஒன்றரை லட்சம் புரட்டித் தரமுடியுமா என்று கேட்டார். அப்படி தந்தால் சுந்தரத்தை வைத்தே நில விற்பனையை முடிப்பதாக சொன்னார். சுந்தரம் அகர்வாலிடம் விவரம் சொல்லி, "ஒன்றரை லட்சம் கடன் தரமுடியுமா?" என்று கேட்க, அகர்வால் வாய்விட்டுச் சிரித்தார்.

"ஏற்கனவே அவனைக் கடன்காரன்என்று சொல்கிறாய். எதை நம்பி ஒன்றரை லட்சம் கடன் தருவது? அப்படி தந்த பிறகு நிலத்தை எனக்கு விற்கவில்லையெனில் என் காசுக்கு என்ன பதில்?"

"இதைச் சொல்லி நிலத்தை சீப்பா வாங்கலாம் சார்"

"பணம் கட்டி சீலிங்லேர்ந்து வெளியே வந்தபிறகு அவன் வாய்க்கு வந்தவிலை சொன்னால், உன்னை விட்டுட்டு வேற புரோக்கர் பார்த்தால் என்ன கியாரண்டி? இது என்ன பிசினஸ். முதலில் சீலிங்லிருந்து வெளியே கொண்டு வரச் சொல். அப்புறம் ரேட் பேசலாம்"

அகர்வால் திட்டவட்டமாகப் பணம் கொடுக்க மறுத்து விட்டார். சோர்வோடு வீட்டுக்கு வர எண்பத்தைந்தாயிரம் ரூபாய்க்கு அவன் கம்பெனியிலிருந்து அவன் அக்கவுண்ட் செட்டிலாகி செக் வந்திருந்தது. சுந்தரம் பீரோவைத் திறந்தான். கிரிஜா கழற்றி வைத்திருந்த எல்லா நகைகளையும் தோராயமாக எடை போட்டு கணக்குப் பார்த்தான். ஒரு லட்சத்து நாற்பதாயிரம் வந்தது. கிரிஜாவைக் கேட்டு செய்யலாமா, கேட்காமல் செய்யலாமா என்ற கேள்வி வந்தது. யார் என்ன சொன்னாலும் இந்த நகைகளுக்கு நான்தானே சொந்தக்காரன்? கேள்வி வந்தது. நகைகளைப் பெட்டியில் போட்டுக் கொண்டு, எண்பத்தைந்தாயிரம் செக்கை பையில் வைத்துக்கொண்டு சுந்தரம் கபாலீஸ்வரர் கோயிலுக்குப் போனான்.

இத்தனை கவலையும், வேதனையுமாய் அவன் கோயிலுக்குப் போவது இதுவே முதல் தடவை. தான் செய்வது இருட்டா, தெளிவா என்பது புரியவில்லை. எந்தப் கோயில் சன்னதியில் மனசு ஒருமுகப்படவில்லை. எந்தப் பாட்டும் வரவில்லை. கிரிஜா நெஞ்சிலடித்துக் கொண்டு அழுவது போன்ற தோற்றம்தான் மறுபடி மறுபடி மனசுக்குள் வந்தது.

"நீ சொல். நான் இந்த வியாபாரத்தில் ஈடுபடட்டுமா? நீ சொல்" அவன் கரம் கூப்பி கற்பகாம்பாளை வேண்டி

னான். தலைக்கிரீடம் அசைவது போல் ஒரு பிரமை ஏற்பட்டது. மறுபடி வேண்டினான். மறுபடி கிரீடம் அசைந்தது. 'சரி'யென்று உறுதியோடு திரும்பினான். மாலைவேளை பூஜைக்காக கபாலி கோயில் காண்டா மணி அடிக்கத் தொடங்கியது. ஒரு லட்சத்து நாற்பத்து ரெண்டா யிரம்ரூபாய் ரொக்கமாகமாற்றினான். இரண்டாயிரத்தைப் பையில் வைத்துக் கொண்டு மீதிப் பணத்தில் ஒரு லட்சத்து நாற்பதாயிரம் ரூபாய் அந்த நிலச் சொந்தக்காரருக்குக் கொடுத்து கடனாகப் பெற்றுக் கொண்டேன் என்று ஒரு ஸ்டாம்ப் பேப்பரில் கையெழுத்து வாங்கினான்.

அன்று இரவு அவனுக்கும் கிரிஜாவுக்கும் சண்டை வந்து விட்டது. கிரிஜா காபி டம்ளரை தரையில் வீச, அவன் கோபத்துடன் எழுந்து அவளைப் பிடரியில் அடித்தான். கிரிஜா வாய்விட்டு அலறினாள். பிள்ளை சங்கரன் அம்மா வைப் பிடித்துக்கொண்டு அழுதான். கோயிலில் தோன்றிய மனச்சித்திரம் அங்கே நிஜமாயிற்று.!

'கற்பகவல்லித்தாயே இது மட்டும்தான் நிஜமாகுமா? நீ தலையசைத்தது நிஜமாகாதா?' சுந்தரத்துக்குள் வேதனை படர்ந்தது. எது என்ன ஆகும் என்று அந்த க்ஷணம் அவனுக்குத் தெரியவேயில்லை. ஏழைமை இத்தனை ரவுத்திரமாய் முகத்தில் தாக்குமா? நாலாயிரம் நாலாயிர மாய் சம்பாதித்தவனுக்கு நாற்பது ரூபாய் காசுகூட இல்லாமல் போகுமா? ஒருவேளை கட்டில், மேஜை, பித்தளைப் பாத்திரம், பீரோ எல்லாம் விற்க வேண்டியும் வருமோ? இது எங்க அப்பா கொடுத்தது. இதை விற்க விடமாட்டேன் என்று கிரிஜா வழி மறிப்பாளோ?'

"இதெல்லாம் இங்க இருந்தாதானே விற்கத் தோணும்? எங்கப்பா ஆத்துல கொண்டு போயி போட்டுடறேன்" எல்லாப் பொருள்களையும் அப்பாவிடம் கொண்டு போய் சேர்க்கும்படியாகுமோ அல்லது காசு சம்பாதித்து



என் வீட்டுக்கு வா என்று கதவைப் பூட்டிக் கொண்டு விடுவாளோ? நான் ஏன் கிரிஜாவை இத்தனை மட்டமாக யோசிக்கிறேன்? எதற்காக என் மனைவியை எதிரியாக நினைக்கிறேன்? புருஷனுக்கும், மனைவிக்கும் நடுவில் பணம்தானா பிணைப்பு? காசு எடைதானா குடித்தனம்?"

எனக்கு பயம். எது பற்றியும் கலவரம். தர்மர் சூது ஆடினது போல் என் காசையும், கிரிஜா நகைகளையும் சதுரங்கத்தில் வைத்துக் காத்திருக்கிறேன். எதிராளியாக இருப்பவன் சகுனியாக இருப்பின் எல்லாம் போயிற்று.

"உங்ககிட்ட காசு வாங்கினது நிஜம்தான். இப்போ தைக்குத் தரமுடியாது. உன்னையே புரோக்கரா வச்சுக்க றேன்னு என்ன எழுதியா கொடுத்திருக்கேன்? வேற புரோக்கர் வச்சு முடிச்சுட்டேன். அந்த புரோக்கர் எங்கப்பாவுக்குத் தெரிஞ்சவர். அவனை வச்சுதான் எங்க நிலத்தை விக்கணும்னு சொல்லிட்டு செத்தாரு. செத்துப் போன எங்கப்பா முக்கியமா? உசிரோட இருக்கற நீ முக்கியமா? வித்த துட்டு கைக்கு வரட்டும், கொஞ்சம் கொஞ்சமா உன் கடனை அடைச்சிடறேன். உனக்கு இது மட்டுந்தாம்பா கடன். எனக்கு ஊர்ப்பட்ட கடன். இப்ப யார் கடன் வாங்கல சொல்லு. இவ்வளவு பெரிய இந்தியாவே கடன் வாங்கறபோது நாம எந்த மூலைக்கு?" வாங்கிய அயோக்யன் சிரித்து, சிரித்துப் பேசி கதவு சாத்தி விட்டால் என் கதி? கடன் கொடுத்தார் நெஞ்சம் போல கலங்கினான் இலங்கை வேந்தன். இதுதான் இராவணக் கலக்கமா, இதுதான் இராட்சச வேதனையா?"

இனி தினம் போய் அவர் வீட்டுவாசலில் நிற்கவேண்டும். இந்த ஒன்றரை லட்சத்தை அவர் வேறெங்கும் கொடுத்து விடாதிருக்க வேண்டும். 'கொடுடா காசை' என்று வேறெவரும் அந்த நிலச்சொந்தக்காரரிடமிருந்து தட்டிப் பறிக்காமலிருக்க வேண்டும். நாளை விடிந்தவுடன் அவர் வீட்டு வாசலில் போய் நிற்க வேண்டும்.

அந்த வீட்டின் சிவப்புப் படிகள், பச்சைக் கதவு, கறுப்பு நாதாங்கி, காரை பெயர்ந்த சுவர், இருபது வருடங்களுக்கு முன்பு எவனோ போட்ட பாசிமணி வெல்கம், அந்த நிலச் சொந்தக்காரனின், செத்துப் போன அப்பாவின் காவியேறிய படம் எல்லாம் மனக் கண்ணில் வந்து மறைந்தன. சுந்தரம் தூக்கம் வராது புரண்டான். பால்கனியில் நின்று சிகரெட் பிடித்தான். மூன்றே முக்காலுக்கு குயில்கள் கூவின. சிறிது நேரம் படுத்தான். தூங்கிப் போனான். ஐந்தரை மணிக்கு டக்கென்று அவன் புத்தி அவனை எழுப்பிப் போட்டது. தடுமாறி பின்பக்கம் போய் பல் தேய்த்தான். குளித்தான். கண்கள் அமிலம் பட்டது போல் எரிந்தன. கிரிஜா தூங்கிக் கொண்டிருந்தான். மெல்ல கதவு திறந்து வீட்டுக்கு வெளியே வந்து ஸ்கூட்டரை ஸ்டார்ட் செய்த சுந்தரம் மாம்பலம் நோக்கிப் போனான்.

## 9

ஆறரை மணிக்கு அந்த வீட்டு வாசலில் நிற்கும்போது கோலம் போட்டுக் கொண்டிருந்த அம்மாள் தலைநிமிர்த்தி சுந்தரத்தைப் பார்த்துவிட்டு எதுவும் சொல்லாது உள்ளே போனாள்.

அந்தப் பார்வையில் ஒரு செய்தி இருந்தது. "அனாவசியமா என்கிட்ட பேசாத. எனக்கு இதெல்லாம் ஒண்ணும் தெரியாது. உள்ள இருக்கறவனைக் கூப்புடறேன். அது வரைக்கும் இங்கேயே நில்லு. உள்ள வந்துராத" சொல்லாமல் ஒரு செய்தி சொல்லப்பட்டதாய் தோன்றியது.

தூங்கிய முகமாய் அந்த வீட்டுச் சொந்தக்காரர் வெளியே வந்தார். "என்ன?" என்று கேட்டார்.



"சும்மா பார்க்க வந்தேன்" சுந்தரம் பதில்சொன்னான்.

"எட்டரை மணிக்கு வந்தாப் போதும். இப்படி காலங் கார்த்தால பார்த்து என்னத்த செய்யப் போறோம்?

"சரி. இனிமே எட்டரை மணிக்கு வரேன்"

"இந்தத் தேய் பிறை போகட்டும். இன்னும் நாலு நாள்ல அமாவாசை வருது. அப்ப அந்த ரிஜிஸ்ட்ரேஷன் வேலைக்கு அலைவோம். நாளைக்கு வரணும்னு அவசியமும் இல்லை. காத்தால தூங்கறச்ச எழுப்பினா எனக்குக் கோவம்தான் வரும். எழுந்துக்கறபோது கோவப்பட்டா அன்னி முழுக்க ஒருமாதிரியாதான் இருக்கு. நான் சொல்றது புரியறதா?"

சுந்தரம் எந்த பதிலும் பேசாது அவரையே பார்த்துக் கொண்டு மௌனமாய் நின்றான்.

'எதை எதையோ வித்து ஒன்றரை லட்சம் கடன் கொடுத்திருக்கிறேன். என் பயம் உனக்குப் புரியாது' என்று நினைத்துக் கொண்டான்.

சுந்தரத்தின் மௌனம் அவரை பாதித்திருக்கவேண்டும்.

"ஒரு டம்ளர் காபி சாப்பிட்டுப் போறீங்களா?"

சுந்தரம் தலையசைத்தான். அதுவரை மறைந்திருந்த பசி சட்டென்று வயிறு முறுக்கிக் கிளம்பியது. இன்னும் இருபது வினாடிகளில் எனக்கு ஏதாவது போடு என்று பயமுறுத்தியது. அவர் கதவு அகலத் திறந்து வாசற்படியில் உட்கார்ந்து கொண்டார். அருகே இருக்கிற படியில் அவனுக்கு இடம் காட்டினார். சுந்தரம் உட்கார்ந்த மூன்று நிமிடத்தில் காபி வந்தது. குடித்துவிட்டு நிமிர்ந்தபோது அவர் சரி என்று சொன்னார். எனக்கு வேலை இருக்கிறது. நீ கிளம்பு என்று சொல்வதாய் அந்தப் பார்வை பட்டது. சுந்தரம் கை கூப்பிவிட்டு வெளியே வந்தான்.

ஸ்கூட்டரை ஓட்டிக்கொண்டு நிதான கதியில் பலகல் பார்க்க வந்தான். இந்த நில விற்பனை மட்டுமே நம்பிக் கொண்டு இருக்காமல் வேறு ஏதாவது சிக்குமா என்று புரோக்கர்களோடு புரோக்கராய் காத்திருந்தான். ஆயிரத்து இருநூறில் வாடகைக்கு வீடு வேண்டும் என்று கேட்ட அம்மாளை, அதற்கான புரோக்கரிடம் கொண்டு சேர்த்தான். எம்.எம்.டி.ஏ. சட்டம் பற்றி இரண்டு புரோக்கர்களுக்குச் சண்டை வந்தபோது, மனப்பாடம் செய்திருந்த சட்டத்தை அவர்களுக்குத் தெளிவாக எடுத்துச் சொன்னான். அதை மொழிபெயர்த்து அவர்களுக்கு அர்த்தம் சொன்னான்.

''ஏங்க, டயர் கம்பெனில பெரிய உத்தியோகம் பண்ணிங்களாமே. அத வுட்டுட்டு இங்க வந்துட்டீங்களாமே'' வெறுமே நின்று கொண்டிருந்த புரோக்கர் விவரம் கேட்க, இந்தத் தொழிலில் ஒற்றுமையாய் இருந்தால் எவ்வளவு சம்பாதிக்கலாம் என்று கோடி காட்டினான்.

''ஒரு வெள்ளைக்காரன் தோட்டத்தோட வீடு கேக்கறான். எனக்குப் பாஷை புரியலை. என்கூட வரியா. அவன் பேசறத எனக்குச் சொல்லி, நான் பேசற அவனுக்குச் சொல்லணும். கமிஷன் கிடையாது. கழுத்தறுக்கக் கூடாது. ஒரு நாளைக்கு இருவத்தஞ்சு ரூபா. பத்து நிமிஷம் பேசினாலும் சரி, பன்னெண்டு மணி நேரம் பேசினாலும் சரி.''

சுந்தரம் சரியென்று சொல்ல, அவன் ஸ்கூட்டர் பின்னால் ஏறிக் கொண்டான். இரண்டு லிட்டர் பெட்ரோல் போடுவதாக வாக்களித்தான். இரண்டு பொறை பிஸ்கெட்டும், டீயும் வாங்கிக் கொடுத்தான். எட்டு வயதில் பொறை பிஸ்கெட் சாப்பிட்டது... இருபத்திரண்டு வருடம் கழித்து மறுபடி சாப்பிட, அந்தப் பசிவேளையில் அமிர்தமாயிருந்தது. பையனுக்கு கால் கிலோ வாங்கிக் கொண்டு போய் கொடுக்க வேண்டுமென்று ஆசை வந்தது.



தென்னிந்தியக் கோயில்கள் பற்றி ஆராய்ச்சி செய்து வந்த வெள்ளைக்காரனுக்கு ஒரு வருடத்துக்கு மட்டும் தோட்டத்தோடு கூடிய வீடு தேவைப்பட்டது. பெட் பங்க் நடத்துகிற செட்டியார் வீட்டை அவருக்காகப் பேசி முடித்தார்கள். மூன்று நாள்களில் மூன்று இருபத்தைந்து ரூபாய் கிடைத்தது. அந்த புரோக்கரே மனமுவந்து நூறு ரூபாய் கொடுத்தான். அந்த புரோக்கருக்கு இரண்டாயிரம் ரூபாய் கமிஷன். நியாயப்படி ஆயிரம் ரூபாய் இவனுக்குக் கிடைக்க வேண்டும். ஆனால் ஒப்பந்தம் அவ்விதமில்லை. துபாஷி வேலைக்குக் கூலியாக இருபத்தைந்துதான் பேசப்பட்டது. நூறு ரூபாய் கொடுத்தது மரியாதை. பெரிய தானம். ஆனாலும் அனுபவம் மிகுந்த அந்த புரோக்கரின் நுட்பங்கள் பலதும் பிடிபட்டன.

''யாரு புரோக்கரா? வாசல்ல இரு வரேன்'' என்று செட்டியார் அதட்டியபோது, அந்த புரோக்கர் கொஞ்சம் கூட அவமானப்படாது தெருவில் காத்துக் கிடந்தான்.

''நீ படிச்சவன் சுந்தரம். ஒரு கம்பெனி ஆபீசரா இருந்தவன். அதனால உனக்குத் தெருவுல நிக்கறது அவமானமாப்படுது. உக்கார ஒரு சேர்கூட கொடுக்கலியேன்னு கோவம் வருது. புரோக்கரைக் கண்டா யாருக்கும் புடிக்காது. முதலே போடாது நடுவுல பூந்து காசு திருடறவன்னுதான் தெரியும். ஒருவிதத்துல அது நியாயம். பொம்பளையக் கூட்டிக் குடுக்கறவன்கிட்ட கூட சிநேகமா இருந்துடுவாங்க. வீடு வாங்கித் தரும் புரோக்கர்கிட்டே யாரும் எப்பவும் சிநேகமா இருக்கறதில்லை. இது மரியாதையான தொழில் இல்லை. வீடு கை மாத்திக் கொடுத்து கமிஷன் கேட்டபோது வித்தவனும், வாங்கினவனும் கைகோத்துக்கிட்டு என்னை நடுரோட்ல பொத்து பொத்துன்னு போட்டு அடிச்சானுங்க. போலீசுக்குப் போய் சொன்னேன். ரெண்டு பேரும் ஒரே குரல்ல இந்தாளைப் பார்த்ததே இல்லைன்னுட்டானுங்க.

நான் கெட்ட வார்த்தைல திட்டினதா அவனுங்க கேஸ் போட்டாங்க. நான் பண்ணது தப்புன்னு அவனுங்க கால்ல விழுந்துட்டுக் கேஸ் இல்லாது வந்துட்டேன். அன்னிலேர்ந்து வாசல்ல நில்லுடான்னா நின்னுடுவேன். வெளிய போடான்னா போயிடுவேன். பாவப்பட்டவன்தான் இந்தத் தொழிலுக்கு வருவான் சுந்தரம். நாலு ஆடு ஒண்ணா சேர்ந்து ஒரு புலியைச் கவுக்கறதா... எந்த மடையன் சொன்னான்? ரெண்டு புலிங்க ஒண்ணா சேர்ந்துட்டா ஆடுங்க கதி என்ன? விக்கறவனும், வாங்கறவனும் ஒண்ணாயிட்டா புரோக்கர் மூஞ்சில எச்சில் துப்பிடுவானுங்க. ஒண்ணாவாக பார்த்துக்க. ஒண்ணாயிடக் கூடாதேன்னு வேண்டிக்க.''

''ஆமா சுந்தரம், நீ எதுனா புலி புடிச்சியா?'' அவனே கேட்டான்.

சுந்தரம் மெல்ல தான் செய்து கொண்டிருந்த விஷயங்களைச் சொன்னான்.

''விக்கிற ஆளுக்கு ஒன்றரை லட்சம் நீ குடுத்தியா? உன்னை மாதிரி பைத்தியக்காரன் உண்டா? ஒன்றரை லட்ச ரூபாய்க்கு வட்டி என்னாசுக? எவன் தரப் போறான்? இல்லைன்னு சொல்லிட்டான்... என்ன செய்வ? ஆமா, அது எத்திராஜ் பார்ட்டி இல்ல....ஒன்றரை லட்சம் கடன் குடுத்து நீ மடக்கிட்டியா? நீ பண்றது சரியில்லை''

அவன் எதைச் சொன்னான் என்று மறுநாள்தான் புரிந்தது. மறுநாள் எத்திராஜ் அவனை பனகல் பார்க்கில் மடக்கினான். கொத்தாய்ச் சட்டையைப் பிடித்துக் கொண்டான். ''எம் பார்ட்டிய இவன் துட்டு குடுத்து தட்டிக்கினு போயிட்டான். என் கமிஷனுக்கு என்னா வழி? நான் சொல்லித்தான் அவனுக்குப் பார்ட்டி தெரிஞ்சுது. என் கமிஷனுக்கு என்னா வழி?'' அவன் உரக்கக் கத்த, பனகல் பார்க்கில் நின்ற பத்து புரோக்கர்களும் பொது ஜனங்களும்



வட்டமாய்ச் சுற்றிக்கொண்டு, அந்தச் சண்டையை வேடிக்கை பார்த்தார்கள். காட்டிக் கொடுத்த புரோக்கரே சமாதானத்திலும் ஈடுபட்டான். பிள்ளையைக் கிள்ளிவிட்டு தொட்டிலை ஆட்டுவது அங்கே தெளிவாய்ப் புரிந்தது.

''அந்த புரோக்கர்கிட்ட பேசி சமாதானப்படுத்தி வைக்கிறேன். எனக்கு ஆயிரம் ரூபா தரியா?'' சண்டையை மூட்டி விட்டவனே சமரசத்திற்குக் கூலி கேட்டான். புரோக்கரேஜ் என்பதன் உச்சக்கட்டம் சுந்தரத்துக்கு அங்கு புரிந்து ஐநூறு ரூபாய் தருவதாகப் பேசினான். எழுநூற்றைம்பது என்று முடிவாயிற்று. பெண்டாட்டி நகையை விற்று அவனிடம் முதலீடு செய்திருப்பதால் சுந்தரம் பக்கம் அதிகம் நியாயம் இருக்கிறது என்று சொல்லி, அதே சமயம் ஓர் அநியாயம் இருப்பதாகவும் காட்டி அந்த நிலத்தை எப்போது எங்கே விற்றாலும் ஏழாயிரம் ரூபாய் அந்த நிலம் பற்றி சொன்ன புரோக்கருக்கு சுந்தரம் தந்து விட வேண்டும் என்று தீர்மானமாயிற்று.

ஏழாயிரம் ரூபாய் கொடுக்காமல் ஓடிவிட்டால் என்ன செய்வது என்ற கேள்வி வந்தது. ஸ்கூட்டரின் ஆர்.சி. புக்கை அந்த புரோக்கர் பிடுங்கிக் கொண்டான். ஆர்.சி. புக்கை ஜெராக்ஸ் காப்பி எடுத்துக் கொள்ள அனுமதித்தான். சுந்தரம் விரும்பாமல் சுந்தரத்தின் ஸ்கூட்டர் இப்பொழுது ஓர் அடமானத்தில் இருந்தது.

அந்த ஸ்கூட்டருக்கு ஒரு காலத்தில் டயர் கம்பெனியில் ஒரு மரியாதை இருந்தது. டயர் கம்பெனியில் வேலை செய்கிற கேஷுவல் லேபர்கள், பாலிஷ் நிரம்பிய சுந்தைத் துணியால் சுந்தரம் கட்டளை இடாமலேயே துடைத்து வைப்பார்கள். பளபளவென்று எப்பொழுதும் புதிதாய் இருக்கும்படி பார்த்துக் கொள்வார்கள். வாரா வாரம் சுந்தரம் வேலை தர வேண்டும் என்பதற்காக ஸ்கூட்டருக்கு

அழகு செய்வார்கள். மொத்த வாழ்க்கையும் இசை மாறிய வேதனை, சுந்தரத்தின் நெஞ்சை அடைத்தது. எதிர்ப்பில்லாமல் டயர் கம்பெனியிலேயே இருந்திருக்கலாமோ என்று தோன்றியது.

"நீ ஒரு முட்டாள்தனம் பண்றே சுந்தரம்" விடை பெறும் போது, டயர் கம்பெனியிலிருந்த சுந்தரத்தின் சீனியர் வரதராஜன் ஒரு வார்த்தை சொன்னான்.

"அந்த ராமன் ஒரு பி.ஈ. மெக்கானிக்கல். எத்தனை நாள் பைப் லைன் மெயின்டனென்ஸ்ல வேலை செய்வான்னு நினைக்கிற. இந்தப் பன்னாடை உத்தியோகத்துக்கு [வரவா அவன் பி.ஈ. படிச்சான்? ஆறு மாசம். மிஞ்சிப் போனா ஒரு வருஷம். இதவிட நல்ல வேலை கிடைச்சா அங்க எகிறிடுவான் அல்லது இங்கேயே இன்னும் நல்ல உத்யோகத்துக்கு மாறுவான். அப்ப இன்னொரு பி.ஈ. தேட மாட்டாங்க. உன்னைத்தான் புரமோட் பண்ணுவாங்க. பதினாறு வருஷம் காத்திருந்தியே, இன்னும் ஒரு வருஷம் காத்திருக்க முடியலையா? இராமன் வந்தா என்ன, இராவணன் வந்தா என்ன? நம்ம வேலைய நாம செய்வோம்னு அமைதியா இருக்கத் தெரியாதா? நாலாயிரத்து நானூறு சம்பளம், நம்ம எல்.எம்.இ. படிப்புக்கு யார் தருவா? நீ ஒரு முட்டாள் சுந்தரம்."

அந்த வாஜிக் அப்போது புரியவில்லை. இப்போது புரிந்தது. பனகல் பார்க்கில் சட்டையைப் பிடித்து யாரோ உலுக்கியபோது டயர் கம்பெனியின் சுகம் ஞாபகத்துக்கு வந்தது.

பனகல் பார்க் பெஞ்சில் படுத்துக் கொண்டிருந்தபோது ஒரு கழிவிரக்கத்தால் அழுகை வந்தது. அழுகையும், துக்கமும் அதிகப் பசியைக் கொடுத்தன.

வீட்டுக்குள் போய் சமையலறையைத் திறந்தபோது வெறும் சாதம் மட்டுமே இருந்தது. உள்ளங்கையளவு மோர்



புளிப்பேறிக் கசந்து கிடந்தது. சாதத்தில் நீர் ஊற்றி, உப்பு போட்டுப் பிசைந்து சாப்பிட்டான். குடும்பத்தோடு ஓர் இரவுச் சாப்பாட்டுக்கு முன்னூறு ரூபாய் செலவு செய்தது ஞாபகத்துக்கு வந்தது. மிகப் பெரிய தவறு செய்து விட்டோமோ என்கிற வெலவெலப்பு ஏற்பட்டது. குடலுக்குள் சோறு ஒட்டாது வெறுமே உருள்வது போல் தெரிந்தது.

நாலு மணிக்கு கிரிஜா உள்ளே பையனுடன் நுழைந்தாள். அவள் நுழைந்த பத்து நிமிடத்தில் அவளுடைய அப்பாவும், அம்மாவும் வந்தார்கள். சிவப்பு பத்திரிகையும், மஞ்சள் அட்சதையும் எடுத்துக் கொண்டு வந்தார்கள். வரும் வாரம் மருமகளுக்கு சீமந்தமாம். ஸ்கேன் செய்து பார்த்ததில் ஆண் குழந்தை என்று தெரிந்து விட்டதாம். மகனுக்கு மிகவும் சந்தோஷமாம். நல்லபடியாகக் குழந்தை பிறக்க வேண்டும் என்பதற்காகப் பத்து வைதீகர்களை வைத்து நவக்கிரக ஹோமத்தோடு சீமந்தத்தை தடபுடலாய் செய்யப் போகிறானாம். மருமகள் வீட்டில் மாப்பிள்ளையின் உற்சாகம் பார்த்துப் பத்து சவரன் வளையல்கள் போட்டு வளைகாப்புச் செய்ய உத்தேசித்து இருக்கிறார்களாம். தேக்கு மரத் தொட்டிலுக்கு இப்பவே ஆர்டர் கொடுத்து விட்டார்களாம். வளைகாப்புக்கும், சீமந்தத்துக்கும் வீட்டு மூத்த மாப்பிள்ளையாய் வந்திருந்து வாழ்த்தி அருளும்படி கேட்டிருந்தார்கள். கிரிஜாவோடு சமையலறையில் குசுகுசுவென்று பேசி விட்டு நிலைமையைத் தெரிந்து கொண்டு போனார்கள்.

"நல்ல வேலையைத் தொலைச்சுட்டு நிக்கறேன். பகவான் மறுபடியும் கண் தொறந்து உங்களை நல்லபடியா வைக்கணும்" மாமனார் போகும்போது சொல்லி விட்டுப் போனது நெஞ்சு முழுக்க வலித்தது. பாண்டிபஜாரில் எவனோ சட்டையைப் பிடித்ததைவிட இந்த ஆசீர்வாதம் அவமானமாய் இருந்தது.

அவர்கள் தலை மறைந்ததும் கிரிஜா கேட்டாள்:

"நீங்க எத்தனைக்குச் செய்வேன்? நியாயத்துக்கு ஆயிரம் ரூபாயாவது கொடுக்கணும். முடியலை. ஐநூறாவது செய்ய வேண்டாமா? நான் சொந்த அத்தை பிறக்கப் போற பையனுக்கு. வெள்ளிப் பாலாடை வச்சுக்கோடின்னு தம்பி பொண்டாட்டிக்குத் தர வேண்டாமா? இன்றையத் தேதிக்கு ஐநூறு ரூபா இல்லாம பாலாடை கிடைக்குமா? என்ன செய்யப் போறேன்!"

சுந்தரத்திடம் அன்று அப்போது ஐந்து ரூபாய்தான் இருந்தது. அதுவும் அடுத்த வாரம் இருக்குமா என்பது தெரியவில்லை.

மறுநாள் அமாவாசை. எல்லாக் கவலையும் மறந்து விட்டு நிலச் சொந்தக்காரனிடம் போனான். இரண்டு பேரும் பத்து மணிக்குக் கிளம்பி லாண்ட் சீலிங் அலுவலகத்தை அடைந்து அதிகாரிக்குக் காண்பித்து உயிலையும், உரிமைப் பத்திரத்தையும் காண்பித்து தங்கள் பக்கம் நியாயம் சொல்லி வாதாடினார்கள்.

"நீங்க யாரு இவருக்கு அட்வகேட்டா?" சுந்தரத்தைப் பார்த்து அந்த அதிகாரி கேட்டார்.

"ஏன் சார் கேக்கறீங்க?"

"விட்டு மனைச் சட்டம் பேசறீங்க; நல்ல இங்கிலீஷ்ல தெளிவா சட்டம் பேசறீங்க. நீங்க அட்வகேட்டா?"

அத்தனை துக்கத்திலும் அவர் பாராட்டு சட்டென்று சந்தோஷம் கொடுக்க, சுந்தரம் அருகே போய் அவர் கைகளை எடுத்து உணர்ச்சிவசத்துடன் கண்களில் ஒற்றிக் கொண்டான். அந்த அதிகாரி திகைத்தார். அந்த நிலச் சொந்தக்காரருக்கும் அந்தச் செய்கை பரவசம் கொடுத்து விட்டது போலும்.



"இவர் ஒரு நல்ல கம்பெனில வேலை செய்து வேலைய வுட்டுட்டு விட்டுப் புரோக்கரா வந்திருக்கார் சார். இதான் இவர் முதல் பிசினஸ். இதுக்காக தன் வீட்டு நகையெல்லாம் வித்திருக்காரு. இன்னிக்குத்தான் எல்லாத்தையும் எங்கிட்டச் சொன்னார். அடிமையா வேலை செய்யறத விட தனியா தொழில் செய்யலாம்னு இறங்கிட்டார். நிறைய கஷ்டம் பார்த்துட்டார்!"

சரியான நேரத்தில் சரியானபடி அவரை அறிமுகப் படுத்திய அந்த வாசகங்கள் அங்கே அற்புதம் நிகழ்த்தின. அரசாங்க அதிகாரியும் உள் மனசில் தனி மனிதன்தான். அந்தப் பேச்சு அவரை எங்கேயோ ஆட்டியிருக்க வேண்டும். அவருடைய அடிமை உத்தியோகம் நினைவுக்கு வந்திருக்க வேண்டும்.

"ஐ வில் டு மை லெவல் பெஸ்ட். இது குறித்து வேறு யாரையும் சந்திக்க வேண்டாம். இரண்டு நாள்கள் கழித்து வந்து பாருங்கள். இந்தக் கேசை தெளிவாகப் படித்து விட்டு மறுபடி சொல்கிறேன்" சுந்தரத்தின் டெலிபோன் நம்பர் வாங்கிக் கொண்டார்.

இரண்டு நாள்கள் கழித்துப் போன பிறகு அரசு பக்கத்தின் நியாயம் சொன்னார். நிலச் சொந்தக்காரர் பத்திரம் மாற்றாதது தவறு என்று சொன்னார்.

சுந்தரம் அந்தத் தவறை ஒப்புக்கொண்டு, அவ்விதத் தவறுக்கு அபராதமோ அல்லது எச்சரிக்கைக் கடிதமோ கொடுத்து நிலத்தை உச்ச வரம்புச் சட்டத்திலிருந்து மீட்க முடியும் என்கிற சட்டக் குறிப்பைக் காட்டினான். அப்படி அதைத் தீர்மானிக்கும் பொறுப்பு நில உச்ச வரம்பு மேல் அதிகாரியிடம் இருக்கிறது என்பதை உறுதிப்படுத்தினான். அதற்கான அரசுக் குறிப்பையும் காட்டினான். அந்த இலாகாவின் மேல் அதிகாரியைச் சந்திக்க ஒருவாரம் கழித்து ஒருநாள் குறிக்கப்பட்டது.

வெற்றி பெறுவோம் என்கிற நம்பிக்கையில் வீடு திரும்பினார்கள். வெற்றி பெற வேண்டும் என்று சுந்தரமும், நிலச் சொந்தக்காரரும் கடவுளை வேண்டிக் கொண்டார்கள். அன்றைக்கு ஜாங்கிரியும், மசால் தோசையும் சுந்தரத்துக்கு நிலச் சொந்தக்காரர் வாங்கிக் கொடுத்தார்.

மறுநாள் மைத்துனன் மனைவிக்கு சீமந்தம். அன்று மாலை வளைகாப்பு. சுந்தரத்துக்கு எதிரே உட்கார்ந்திருந்த நிலச் சொந்தக்காரரிடம் ஐநூறு ரூபாய் கடன் கேட்கலாமா என்று ஆசை தோன்றியது. வேண்டாம் என்று புத்தி தீர்மானித்தது.

மாலை வீட்டுக்குப் போகும்போது வீடு பூட்டியிருந்தது. பூட்டில் ஒரு கடிதம் செருகி வைக்கப்பட்டு இருந்தது. கிரிஜா எழுதியிருந்தாள்.

"நான் சத்திரத்துக்குப் போகிறேன். நாளை காலை நீங்கள் வந்தால் போதும். ஒதியிட நூற்றியொரு ரூபாயாவது கொண்டு வரவும்"

சுந்தரத்திடம் எழுபத்தைந்து காசுகள்தான் இருந்தன.

# 10

அன்றைக்கும் நீர் விட்ட சாதம்தான். ஆனால் சாப்பிடும்போது வருத்தமாகவே இல்லை. இரண்டு ஸ்பூன் நல்லெண்ணெய் விட்டுக் கொண்டபோது பழைய சாதம் வாசனையாகவே இருந்தது. சாப்பிடப் பிடித்துப் போயிற்று. மறுநாள் காலை சீமந்தம் போக காசு வேண்டுமே என்று கவலை வந்தபோது நாளை காலை கவலைப்பட்டுக்கொள்ளலாம் என்று மனசு ஒத்திப் போட்டது. கவலை பழக்கமாகி விட்டது என்று தோன்றியது.



விடிந்ததும் இளைத்துப் போயிருந்த டூத்பேஸ்ட் டியூபை அழுத்திச் சிறிதளவு எடுத்துக் கொண்டு பல் தேய்த்து, குளித்து விட்டு கீழே வரும்போது பசித்தது. கீழ் போர்ஷன் மாமி வாசல் வராண்டாவில் உட்கார்ந்து நறிண்டு பேப்பர் படித்துக் கொண்டிருந்தாள். அவனைப் பார்த்ததும் மரியாதைக்காக எழுந்து கொண்டாள். அந்த மரியாதை அவளிடம் நூறு ரூபாய் கடன் கேட்டால் என்ன என்று யோசிக்க வைத்தது.

"குட்மார்னிங்" என்று அந்த மாமிக்கு முகமன் கூறி சுந்தரம் நூறு ரூபாய் கடன் கேட்டான்.

மாமி சட்டென்று "இல்லையே" என்றாள். உடனே சுதாரித்துக் கொண்டு "கொஞ்சம் இருங்கோ" என்று சொன்னாள். உள்ளே இருந்து ஐம்பது ரூபாய் கொண்டு வந்து கொடுத்தாள். "சாமிக்கு முடிஞ்சு வைக்கணும்னு நினைச்சிண்டிருந்த காசு. அதைத் தரேன். இப்படி கடன் கேட்கறவாளா நீங்க...? எல்லாருக்கும், எல்லா உதவியும் செய்து கடைசில உங்க நிலைமை எப்படி ஆயிடுத்து பாருங்கோ. டயர் கம்பெனி வேலை எவ்வளவு மரியாதை பகவானேன்னு மறுபடியும் அந்த வேலை கிடைக்கணும். என்னமோ மன்னிப்புக் கேட்கணுமாமே? கேட்டுடறது தானே? எதுக்கு இப்படி அல்லாடணும்? எதுக்கு எல்லா நகையும் வித்து பிஸினஸ் பண்ணணும்? காசு, பணம் இருக்கறவளுக்குத்தான் பிஸினஸ். நமக்கு சரிப்படுமா?" அவள் நீட்டிய ஐம்பது ரூபாயை வாங்கிக் கொண்ட ஒரே பாவத்துக்காக எல்லாவற்றையும் கேட்டுக் கொள்ள வேண்டியிருந்தது.

கீழ் வீட்டுக்கு எப்போதோ வந்து அரைகுறையாய்ச் சொல்லி, கிரிஜா ஏதாவது அழுதிருக்க வேண்டும். அதை அரைகுறையாய்க் கேட்டு இந்த மாதிரி உபதேசம் செய்கிறாள். உபதேசம் மிக எளிது. ஆற்று விளிம்பில் உட்கார்ந்து ஆற்று நீரையே தானம் செய்கிற காரியம் அது.

இரண்டு டம்ளர் ஆற்று ஜலம் மொண்டு இந்தா குடி என்று சொல்லுகிற முட்டாள் தனம். ஒருவேளை குருடனுக்கும், முடவனுக்கும் அந்த தானம் உவப்பாகலாம். இந்த சுந்தரம் குருடனில்லை. முடவனில்லை என்று மனது உறுமிற்று.

இருபது ரூபாய்க்கு பெட்ரோல் போட்டுக்கொண்டு சுந்தரம் சத்திரம் நோக்கிப் போனான். ஸ்கூட்டரை ஸ்டாண்ட் போட்டு நிறுத்தி, உள்ளே போகவில்லை என்றால் என்ன... தன் வருகை யாருக்கு லாபம், வராது போனால் என்ன நஷ்டம்....என்று யோசித்தான். கிரிஜா தம்பியின் மனைவி வீட்டில் விசாரிப்பார்கள். மூத்த மாப்பிள்ளை வரலையா என்று மாமனாரை விசாரிப் பார்கள், கிரிஜா மறுபடியும் ஏதாவது அரைகுறையாய் அந்தக் கேள்விகளுக்கு உளறலாம்.போய் நிற்பதே உத்தமம். சுந்தரம் உள்ளே போனான். அவன் பிள்ளை ஓடிவந்து அவனைக் கட்டிக்கொண்டு 'கேசரி டக்கரா இருக்குப்பா. சாப்பிட வா' என்று கூப்பிட்டது. மாமனார் கைப்பிடித்து சாப்பிட அழைத்துப் போனார். அவர் சம்பந்திகளுக்கு அறிமுகப்படுத்தினார். கிரிஜா சாப்பிடும்போது அருகே நின்று, "காசு கொண்டு வந்தேளா?" என்று கேட்டாள். 'இல்லை' என்று சுந்தரம் உதடு பிதுக்கியதும் சரட்டென்று அவனை விட்டு நீங்கினாள். பிள்ளை அம்மாவோடு ஓடாமல் அவன் கையைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தது ஆறுதலாய் இருந்தது. மைத்துனனின் ஆபீஸ் ஆட்கள், மைத்துனன் மனைவியின் உறவினர்கள் என்று ஏகக் கூட்டம்.

சீமந்தம், பிள்ளை வீட்டுக்காரர்களால் நடத்தப்படுவது. பெண் வீட்டார் அங்கு விருந்தாளிகள். மரியாதைக்கு உகந்தவர்கள். அவர்களுக்கு முதல் உபசரிப்பு. இது எல்லா இடத்திலும் உண்டான வழக்கம். அங்கேயும் அப்படித்தான்



இருந்தது. ஒதியிட ஆரம்பித்ததும் மைத்துனனின் மனைவி பக்கமிருந்து அவள் அண்ணன் ஆயிரம் ரூபாயும், மூன்று பவுனில் டிஸ்கோ செயினும், பெருமிதத்துடன் முதல் மரியாதையாக ஒதியிட்டார்.

தொடர்ந்து ஐநூறுக்குக் குறையாமலும், வெள்ளிப் பாத்திர வகையறாக்களும் அவள் பக்கம் ஒதியிடப்பட்டன. கிரிஜாவின் அப்பா எழுந்து நின்று தன்பக்க முதல் மரியாதையாக தன் மாப்பிள்ளை காசாக கிரிஜாவின் பெயரையும் சொல்லி ஆயிரத்தொரு ரூபாய் ஒதியிட்டார். சட்டென்று ஒரு நன்றியும், வலியும் சுந்தரத்துக்குத் தோன்றின. அந்த சபையில் மாமனார் தன்னை விட்டுக் கொடுக்கவில்லையென்றாலும், அந்த ஆயிரத்தொரு ரூபாயை என்றைக்கிருந்தாலும் தான் திருப்பிக் கொடுக்க வேண்டியது அவசியம் என்று சுந்தரம் உணர்ந்தான். தலைகுனிந்து பேசாமல் இருந்தான்.

ஆனால் சாப்பிட யாரோ கூப்பிட்டபோது அந்த இடத்தை விட்டுப் போக வேண்டும் என்கிற அவசரத்தில் முதல் பந்திக்கு அமர்ந்தது மைத்துனன் பார்வையில் குற்றமாய்ப் போயிற்று.

"கிரிஜா, உங்காத்துக்காரரை எழுந்துக்கச் சொல்லு. என் கொய்ப் பக்கத்திலுள்ளவாள்ளாம் உட்காரட்டும்.இவர் ரெண்டாவது பந்தில சாப்பிட்டா போறாதா?"

கிரிஜா எப்படி சொல்வது என்று தயங்கினாள். ஆனால் சுந்தரத்தின் பிள்ளை ஓடிவந்து சகலமும் சொல்லிவிட்டான். ஓர் உருளைக் கிழங்கு சிப்ஸ் வாயில் போட்டதோடு எழுந்திருக்க வேண்டியதாயிற்று. அந்த இலையை அப்புறப்படுத்தி வேறு இலை போட்டார்கள். அதுவும் வேதனைப்படுத்திற்று.

"நம்மாத்து மாப்பிள்ளையை ஏண்டா எழுப்பறே? அறிவிருக்கா உனக்கு?" கிரிஜாவின் அப்பா சத்தம் போட்டார்.

"ஒதியிடறனையும் நாம ஒதியிடணும். உட்கார வைக்கறதும் முத பந்தியா இருக்கணும். உங்க மாப்பிள்ளை என்ன மகாராஜாவா? கொஞ்சமாவது இங்கிதம் தெரிய வேண்டாமா?" மைத்துனன் உரத்துக் கடுகடுக்க, உடம்பெல்லாம் கோபத்தில் பதறியது.

"ஆயிரத்தொரு ரூபா கொடுத்தா முத பந்தில உட்கார சரிம்பியா?" சுந்தரம் நேருக்கு நேர் அவனைக் கேட்க, "அதில்லை அத்திம்பேர்..." என்று அவன் கைபிடித்துக் கொண்டான்.

சுந்தரம் அவன் கையை உதறிவிட்டு வெளியே வந்தான். கிரிஜாவும், அவன் அப்பாவும் பின்னாலேயே ஓடி வந்தார்கள்.

"எங்கப்பா சாப்பிடலைன்னா நானும் சாப்பிட மாட்டேன்" என்று பிள்ளை ஸ்கூட்டரில் ஏறிக் கொண்டான். அப்பனும், பிள்ளையுமாய் சத்திரத்திலிருந்து கிளம்பினார்கள். ஒரு ஹோட்டலுக்குப் போய் ஆளுக்கு ஏழு ரூபாய் அளவு சாப்பாடு சாப்பிட்டார்கள். வீட்டுக்கு வந்து பேசாமல் உட்கார்ந்து கொண்டார்கள்.

"சாப்பாடு பிடிச்சதாடா?"

"ம்..." பிள்ளை வார்த்தையில்லாது பதில் சொன்னான். அந்த பதில் அவ்வளவாய் பிடிக்கவில்லை என்பதாய்க் காட்டியது.

"நீ பாட்டுக்கு மேந்த சாப்பாடு சாப்பிட்டிருக்க வேண்டியது தானே. ஏன் எம் பின்னாடி வந்தே"

"உன்கூட எப்பவுமே யாருமே இல்லேன்னா உனக்கு கஷ்டமா இருக்காதா? எல்லாரும் உன்னைத் திட்டறா. உன்னைத் திட்டறது கேட்டு எனக்கும் கோபம் வந்துடுத்து. அதுதான் உன் பின்னால வந்துட்டேன்"



"யார்றா திட்டினது?"

"மாமா, மாமி ரெண்டு பேரும்?"

"என்ன திட்டறாங்க?"

"உன் திமிருக்கு ஏத்த தண்டனை கெடைச்சதாம். உனக்குத்தான் வேலை இல்லையே, கூடமாட வந்து ஒத்தாசை செய்தா என்ன? வீட்டு மாப்பிள்ளைன்னா கொம்பா முளைச்சிருக்குன்னு கேட்டார்"

"யார்?"

"மாமா"

"அதுக்கு அம்மா என்ன சொன்னா?" கேள்வி கேட்கும் போதே உடம்பில் ரத்த வேகம் அதிகரித்தது.

"அம்மா ஒண்ணும் சொல்லலை. தாத்தாதான் திட்டினார். என்னவோ பழமொழி சொன்னார். என்ன சொன்னார்ன்னு எனக்குத் தெரியலை"

"அப்புறம்?"

"உன் மாப்பிள்ளையை நீயே கொண்டாடிக்கோ. சுந்தரம் வராட்டாலும் சீமந்தம் நடக்கும்னு மாமா சத்தம் போட்டார்"

"இதுக்கும் அம்மா ஒண்ணும் சொல்லலையா?"

"அழுதா மாதிரி தோணித்து. ஒண்ணும் சொல்லலை:"

'போயிருக்கக் கூடாதோ...' உள்ளே யோசனை, கோபத்தோடு வந்தது.

"உனக்கு மறுபடியும் வேலை கெடைக்குமாப்பா?" பிள்ளை முகம் முழுக்கக் கவலையோடு கேட்டான்.

"கெடைக்கும். ஏன் கேட்கறே?"

"நீ ஏன் அப்பா அம்மா நகையைத் திருடினே?"

"சீச்சீ... நான் திருடலை கண்ணப்பா"

"அம்மா அப்படித்தானே எல்லா இடத்திலேயும் சொல்றா. அதை சொல்லித்தானே கீழ்வீட்டு மாமிகிட்டே செயின் கடன் வாங்கிப் போட்டுக்கிட்டுப் போயிருக்கா"

'பத்து வயசுப் பிள்ளைக்கும் முப்பத்தைந்து வயது அப்பனுக்கும் நடுவே தாயாகவும், மனைவியாகவும் இருக்கும் பெண், ஏன் பிளவு ஏற்படுத்துகிறாள் என்று புரியவே இல்லை. "உங்கப்பா நல்லவனில்லை, கெட்டவன். திருடன், அம்மா எவ்வளவு கஷ்டப்படறேன் பாத்தியா? நீ பெரியவனாகி அம்மாவைக் கண் கலங்காம வச்சுக்கணும். வச்சுப்பியா, இல்லை உன் பொண்டாட்டி வந்த உடனே அம்மாவை மறந்துடுவியா?" நூற்றுக்குத் தொண்ணூறு அம்மாக்கள், பையன்களிடம் இப்படித்தான் கேட்கிறார்கள். புருஷனை விட பிள்ளை முக்கியமாவது காபந்து கருதியா, நீ விட்டுட்டுப் போனா என்ன, என் பிள்ளை இருக்கான் என்னை காப்பாத்தறதுக்கு என்ற பாதுகாப்பு வளையமா? பிரித்தாளும் சூழ்ச்சியா? பிள்ளைக்கு என்ன தெரியும்? அப்பா சரியா, அம்மா சரியா என்று பத்து வயதில் எதற்கு இவன் ஆலோசனை செய்ய வேண்டும்? அம்மாதான் சரி, அப்பா அயோக்யன் என்ற கல்மிஷத்தை, துவேஷத்தை எதற்கு இவனுக்குள் விதைக்க வேண்டும்? பெற்றோர் என்று ஒருமையுடன் வணங்குவதை விட்டு விட்டு ஏன் இரண்டாகப் பிரிக்க வேண்டும்? இதிலென்ன லாபம்? யாருக்கு லாபம்? இந்தக் குழந்தைக்கு இது வேதனையில்லையா? பெரிய அன்பு நஷ்டமில்லையா?

'உங்கப்பனை ஒழுங்கா இருக்கச் சொல்லுடா' என்று யாரேனும் இந்தப் பிள்ளையிடம் சொல்லலாம். சொன்னால் என்ன நினைத்துக் கொள்வான்? யார் பக்கம் சேருவான்?



"நான் பிளஸ் டூ முடிச்ச உடனே டக்குன்னு வேலைக்குப் போயிடறேம்பா" பிள்ளை தானாய் சொல்லிற்று. "ஏதாவது வேலைக்குப் போய் நானும் காசு கொண்டு வரேன் வீட்டுக்கு"

"ஏண்டா?"

"கார்த்தால மோர் சாதம், மத்யானம் மோர் சாதம், ராத்திரி மோர் சாதம். அம்மா காயே பண்றதில்லே."

கொடிது கொடிது வறுமை கொடிது. அதனினும் கொடிது இளமையில் வறுமை. அதனினும் கொடிது பிள்ளையின் வறுமையை, பெற்றவன் பார்ப்பது. உண்ணவும், உடுத்தவும் வகையில்லாது குழந்தை வளர்ப்பது.

'இல்லை...என் குழந்தையை நான் வறுமையில் வளர விட மாட்டேன். ஏதேனும் செய்து என் குழந்தையைக் காப்பாற்றுவேன். வளர வைப்பேன். மலர வைப்பேன்.' உள்ளுக்குள் கோபம் பொங்கியது.

"வா, வெளியே போகலாம்" பிள்ளையைக் கூட்டிக் கொண்டு, அகர்வாலைப் பார்க்க ஸ்கூட்டரைக் கிளப்பினான். நாலு மாடி கட்டடத்தின் உச்சியில் நின்று அகர்வால் கத்திக் கொண்டிருந்தார். இவனைக் கண்டதும் "என்ன" என்று சீறினார்.

"பெரிய விசேஷமில்லை. இங்கே என்ன பிரச்சினை என்று நான் தெரிந்து கொள்ளலாமா?"

"சொன்னால் தீர்த்து வைத்து விடுவாயா?"

"பிரச்சினைகளை உருவாக்குவது நாம். தீர்த்து வைப்பது கடவுள்"

"உன்னைக் கடவுள் என்று சொல்லிக் கொள்கிறாயா?"

"இல்லை. என் மூலமாய் கடவுள் உங்கள் பிரச்சினையைத் தீர்த்து வைக்கக் கூடும் என்று நம்புகிறேன்"

"உன்னால் பிரச்சினை தீராவிட்டால்...?"

"என்னிலும் வலியவன் ஒருவனைக் கடவுள் அனுப்புவார், உங்கள் பிரச்சினையைத் தீர்க்க. தீராத பிரச்சினை என்று இவ்வுலகில் எதுவுமில்லை. ஒன்றைத் தவிர"

"என்ன அது?"

"மரணம்"

அகர்வால் அவனை உறுத்துப் பார்த்தார். தொட்டிக்கு நீரேற்றுகிற பைப்பும், தொட்டியிலிருந்து நீர் வருகிற பைப்பும் எங்கோ தவறாக இணைக்கப்பட்டு, மூன்றாம் மாடி முழுக்க நீர் பொங்குகிறது. நாலாம் மாடிக்கும், தொட்டிக்கும் நீர் வரவேயில்லை. எல்லா பைப்பும் சுவருக்குள் புதைக்கப்பட்டு சிமெண்ட் பூசியாகி விட்டது. கண்டுபிடிக்க பல இடங்களில் சுவர் இடிக்க வேண்டும். படித்த என்ஜினீயரிடம் காண்ட்ராசட் கொடுக்காமல், படிக்காத மேஸ்திரியிடம் காண்ட்ராக்ட் கொடுத்ததன் விளைவு. மேஸ்திரிக்கு வேலை தெரியும், அவனுக்குக் கீழே வேலை செய்யும் பிளம்பர் எங்கோ தவறு செய்து இருக்கிறான், சிக்கலைக் கண்டுபிடிக்க இரண்டு நாள் ஆகும் என்று சொல்கிறான். மேல்தளம் ஜல்லி அடிக்க நாளைக்கு கூலி ஆளுக்கு ஏற்பாடு செய்தாகி விட்டது. நான்காம் மாடியிலிருந்து மூன்றாவது மாடிக்கு தண்ணீர் கொண்டு வருவது கடினம். அதற்கு பத்து ஆளாவது போட வேண்டும். அல்லது அதற்குள் பிரச்சினையைக் கண்டுபிடித்துத் தீர்க்க வேண்டும். எது செய்யலாம் என்று தெரியாததால்தான் கோபம்.

"தயவு செய்து கட்டடத்தின் புளு பிரிண்ட் கொடுங்கள்" சுந்தரம் கேட்டான்.

"எதற்கு?"

"எங்கே தவறு நிகழ வாய்ப்பிருக்கிறது என்று பார்க்க விரும்புகிறேன்"



"பார்த்தால் கண்டுபிடித்து விடுவாயா?"

"நான் பதினாறு வருடம் பைப் லைன் வேலையிலிருந்தவன். எங்கே தொழிலாளி குழம்புவான் என்று ஓரளவுக்கு எனக்குத் தெரியும்"

அவனுக்கு புளு பிரிண்ட் தரப்பட்டது. முதல் மாடியின் அழுக்குத் தரையில் அதைப் பரப்பி சுந்தரம் பார்க்க, அவன் பிள்ளையும் அதை ஆவலாய்ப் பார்த்தான்.

கட்டடத்தின் உள்பக்கம் நீரேற்றுகிற பைப் யாரும் வைக்க மாட்டார்கள். இந்தக் கட்டடத்துக்கு ஏதனாலோ அது உள்பக்கம் வைக்கப்பட்டு இருந்தது. வெளித்தோற்றத்திற்கு அழகாய் இருக்க வேண்டும் என்பதற்காக அவ்விதம் செய்திருக்கக் கூடும். மூன்று இடங்கள் ஏறுகிற பைப்பும் இறங்குகிற பைப்பும் அருகருகே வந்தன. காற்றும், வெளிச்சமும் வேண்டுமென்று கட்டடத்திற்கு நடுவிலே இடம் விடப்பட்டு இருந்தது. அங்கேதான் எல்லாக் குழாய்களும் ஓடின. அந்த ஒரு முற்றத்திலிருந்து அண்ணாந்து பார்க்க, எந்த மூன்று இடங்களில் சந்தேகமோ அதை மனசு குறித்துக் கொண்டது.

"கீழே போயி மோட்டார் போடு. நான் அணைக்கச் சொன்னதும் அணைச்சுடு. எப்படி போடணும்னு நான் காட்டறேன் வா" பிள்ளையை அழைத்துக் கொண்டு போய், மோட்டார் சுவிட்சைக் காட்டினான். இரண்டு முறை போட்டு அணைத்தான். இரட்டை ஏணியை சாத்தி, குறிப்பிட்ட இடத்தில் கையை வைத்து, "மோட்டார் போடு" என்று கத்தினான். மோட்டார் போட்டதும் தண்ணீர் அங்கே அலை பாய்வது தெரிந்தது. குழாயைத் தொட்டபடியே ஏணியில் ஏறினான். சட்டென்று ஓர் இடம் அதிர்வு குறைந்தது.

குழாய் தடம் பார்க்க உள்ளே போவது தெரிந்தது. "மோட்டார் ஆப்" என்று மறுபடியும் கத்தினான். மறுபடி

போடச் சொன்னான். ஏணியிலிருந்து கீழிறங்கி மூன்றாம் மாடிக்குத் தாவி ஓடினான். "மோட்டார் போடு" மறுபடி கத்தினான். சுவரில் கை வைத்துக் கொண்டே வந்தான். நீர் திசை மாற்றம் துல்லியமாய்த் தெரிந்தது. இரும்பு உளியால் ஓர் இடத்தில் சுவர் பெயர்த்தான். இணைப்பு தவறு புரிந்து விட்டது. பையனைக் கூப்பிட்டு ஸ்பானர் வாங்கி வரச் சொன்னான். இணைப்பு கழற்றினான். மூன்றாம் மாடிக்கு வரும் குழாயை அடைத்து விட்டு மறுபடி போய் மோட்டார் போடச் சொன்னான்.

"தண்ணி வருது, தண்ணி வருது" மேல்மாடியிலிருந்து எல்லாரும் கத்தினார்கள். பிள்ளைக்கு குரல் கொடுத்து, அவன் மூன்றாம் மாடிக்கு ஓடிவர, அவனுடன் அகர்வாலிடம் போய் நின்றான்.

"எப்படி இது, இவ்வளவு சீக்கிரமாய்... சரி, பதினாறு வருஷப் பயிற்சியில்லையா?" அகர்வாலே தொடர்ந்து சொன்னார்.

"இதற்காக எனக்கு ஒரு பில் அனுப்பு. நான் பணம் தருகிறேன்" என்றார்.

"நட்பிற்கெல்லாம் பில் அனுப்ப முடியாது. பணமும் வாங்க முடியாது" சுந்தரம் பதில் சொல்ல, சகலத்தையும் பணமாய்ப் பார்க்கிற அந்த வட இந்தியன் அவனை வியப் போடு பார்த்தான்.

"உங்களுக்கு வேறொரு சிக்கல் வரக் கூடும்" என்று சுந்தரம் சொல்ல, "என்ன?" என்று அகர்வால் அக்கறையோடு கேட்டார்.

"இந்தக் கிணற்றில் ஐந்தடி தண்ணீர்தான் இருக்கிறது. ஆளில்லாத கட்டடத்திற்கு இதுபோதும். ஆள்கள் குடியேறினால் அரை நாள் கூட தண்ணீர் இருக்காது"



"உங்கள் சென்னை பட்டணத்தில் எந்த இடத்திலும் நீரில்லை. இங்கு மட்டும் எப்படியிருக்கும்?" வட இந்தியன் இடக்குப் பேசினான்.

"கிணற்றில் உறை போட்டால் நீர் வரவு அதிகமாகும்"

"உறை என்றால் என்ன?" வட இந்தியன் வினவ, கிணற்றின் நாலு பக்கமும் துளை போடுவது என்று சுந்தரம் விவரிக்க, "யார் செய்வார்கள்?" என்று வட இந்தியன் வினவ, "நானே" என்று சுந்தரம் சொல்ல, நாலாயிரம் பேசி, ஆயிரம் ரூபாய் அட்வான்ஸ் அங்கேயே கொடுக்கப் பட்டது. பையிலிருக்கிற ஆறு ரூபாயோடு அந்த ஆயிரமும் சேர்ந்து கொண்டது.

"இவன் உன் பிள்ளையா? நீதான் அப்பாவுக்கு உதவி செய்தாயா? நன்றாய் படி படித்து விட்டு உன் அப்பாவுக்கு உதவி செய். உன் அப்பா கெட்டிக்காரர். அவரிடம் நீ நிறைய தெரிந்து கொள்ளலாம்" அகர்வால் பிள்ளையைத் தட்டிக் கொடுக்க, பிள்ளை பல் தெரிய அப்பாவைப் பார்த்து சிரிக்க.... பத்து வயசுப் பிள்ளையும், முப்பத்தைந்து வயது அப்பாவும் வீட்டிலுள்ள எல்லாக் கஷ்டங்களையும் தாண்டி, அங்கே அந்த நேரம் நட்பானார்கள்.

ஒருவராய் இந்தக் காரியம் செய்திருக்க முடியாது. வேறு எவரையும் துணைக்கு வைத்துக் கொண்டிருந்தாலும் இத்தனை அழகாய் கீழ்ப்படிந்திருக்க மாட்டார்கள். பிள்ளையை இங்கே அழைத்துக் கொண்டு வந்தது பெரிய லாபம். ஆயிரம் ரூபாய் லாபம். கடவுள் மனித ரூபம். இங்கே கடவுள் காசு தந்த அகர்வாலா, தப்பு செய்த மேஸ்திரியா, உதவி செய்த பிள்ளையா? இல்லை எல்லாம் உதறி, ஒரு சரியான நேரத்திற்கு இங்கே வந்து சேர்ந்த என் புத்தியா? எல்லாம்தான், எல்லாம் கடவுள்தான்.

ஸ்கூட்டர் டாங்க் முழுதுமாய்ப் பெட்ரோல் நிரப்பிக் கொண்டான். பிள்ளையோடு ஹோட்டலுக்குப் போய் ஜாங்கிரி, போண்டா, காபி சாப்பிட்டான். அவனையும் அழைத்துக் கொண்டு சந்து பொந்தெல்லாம் போய் உறை போடுகிறவனைத் தேடினான். இரண்டு பேரை அழைத்துக் கொண்டு, பிள்ளையை அவர்களோடு வரச்சொல்லி, ஆட்டோவோடு அகர்வால் கட்டடத்திற்குப் போய் நின்றான். ஆள்கள் நீர்த்தடம் பார்க்க கிணற்றில் இறங்கினார்கள். பிள்ளை அருகே வந்து காதைக் கடித்தான்.

"போன தடவை நானூறு கொடுத்தியாமே, இந்தத் தடவை அறநூறு கேக்கனும்னு சொல்றாங்க. ஆட்டோல பேசிக்கிட்டாங்க. என் பேரு கேட்டாங்க. நான் இங்கிலீஷ்ல அதுக்கு பதில் சொன்னேன். தமிழ் தெரியுமான்னு கேட்டாங்க. நல்லாத் தெரியாதுன்னு சொல்லிட்டேன். ஆனா அவங்க பேசினதெல்லாம் கேட்டுக்கிட்டேன்" சுந்தரம் வாய்விட்டுச் சிரித்தான். பிள்ளையை அணைத்துக் கொண்டான்.

உள்ளுக்குள் கம்பி கட்டி, டியூப் லைட் இறக்கி, இரவோடு இரவாக உறை போடத் தீர்மானமாயிற்று. நைட் கூலி என்று, கூடக் கேட்கப்பட்டது. வேலை முடிந்ததும் காசு தருவதாகவும், உடனே வேலையைத் தொடங்குமாறும் சொல்லிவிட்டு, பிள்ளையைக் காவலுக்கு வைத்து விட்டு சுந்தரம், அகர்வால் வீட்டுக்குப் போனான்.

"வேலை தொடங்கி விட்டாயா? இவ்வளவு சீக்கிரமா? கிரேட்"

"மூன்று உறைகள் போடவேண்டும். உறை ஒன்றுக்கு எண்ணூறு ரூபாய். இரண்டு ஆள்கள் நைட் கூலி நானூறு ரூபாய். கருவிகள் வாடகை இருநூறு ரூபாய். என்னுடைய பில் ஆயிரம் ரூபாய். விடிகாலை மூன்று மணிக்கு வேலை முடிந்துவிடும். நாளை காலை தளம் போட கங்கை போல



ஜலம் கிடைக்கும். காலையில் உறை போட இறங்கினால் தளம் போடுவது தடைபடும். அதை நினைவில் வைத்தே உடனே ஆள்களை இறக்கிவிட்டேன்" என்று சொன்னான்.

அவன் வாஜ்க் அகர்வாலுக்குப் பிடித்திருந்தது. சொன்ன உடனேயே வேலை செய்யத் தொடங்கிவிட்டான் என்பது சந்தோஷமாக இருந்தது. மீதி மூவாயிரம் நாளை காலை பத்து மணிக்கு தருகிறேன்.

"கிணற்றிலிருந்து வெளியே வருபவனுக்கு காசு தராவிட்டால் அது அசிங்கம். உங்களிடம் இப்போது காசில்லாவிட்டால் என் ஸ்கூட்டரை விற்றாவது நான் காசு தரவேண்டும்"

"வேண்டாம். சற்று இரு. இரண்டு மணி நேரம் பொறுத்து வா"

"இல்லை. உறை தோண்ட ஆரம்பித்து விட்டால் நான் அந்த இடத்தைவிட்டு நகரமாட்டேன். அது ஆபத்து நிறைந்த வேலை. மண்சரிவு போன்றவை நிகழலாம். நான் அங்கு இருந்தேயாக வேண்டும். இரண்டு மணி நேரம் கழித்து நான் என் மகனை அனுப்புகிறேன். அவனிடம் காசு கொடுத்து அனுப்புங்கள்"

"பத்து வயசுப் பிள்ளையிடம் மூவாயிரம் ரூபாய் எப்படி நம்பிக் கொடுத்தனுப்புவது?"

"கடவுளை நம்பிக் கொடுத்தனுப்புங்கள். எல்லாம் நல்லபடியாய் முடியும். தயவு செய்து காசு மட்டும் இல்லையென்று சொல்லி விடாதீர்கள். நான் அசிங்கப் பட்டுவிடுவேன்."

சுந்தரம் வண்டியில் கிளம்பி அகர்வாலின் கட்டடத்திற்கு வந்து உறை வேலையை கவனிக்க ஆரம்பித்தான்.

அவனும் கிணற்றில் இறங்கி நீர் சொட்டும் இடங்களை ஆராய்ந்து தடம் சொன்னான். பையனை மோட்டார் போட்டு கிணற்றில் உள்ள தண்ணீரை வெளியேற்றச் சொன்னான். ஐந்தடி நீரில் ஓர் அடி நீர் குறைந்தது. இன்னும் பல நீர்த்தடங்கள் தெரிந்தன. மிகச்சரியாய் இரண்டு தடம் தேர்ந்து எடுத்துக் கொடுத்துவிட்டு இரண்டு உறைகள் போதும் என்று மேலே வந்து விட்டான்.

இரண்டு உறை போட்டதுமே நீர் குபுகுபுவென்று நிரம்பியது. ஆள்கள் கயிறு பிடித்து மேலே வர, மூன்றே கால் மணி. குழாய் திறந்து குளித்து, சப்பாத்தியும் சோறும் சாப்பிட நாலு மணி. ஆள்கள் துண்டு விரித்துப் படுத்துக் கொண்டார்கள். சுந்தரம், பிள்ளைக்கு அருகே படுத்துக் கொண்டான். கண்விழிக்க ஐந்தேமுக்கால், வாய் கொப்பளித்து விட்டு கிணற்றை எட்டிப் பார்த்தான். சவுக்குக் கம்பு விட்டுப் பார்க்க பத்தடி ஜலமிருந்தது.

ஆள்களுக்கு இரண்டு உறைக்கும், நைட் கூலியும், சாமான்கள் கூலியும் கொடுத்தான். அவர்கள் வெளியேற பையனை உலுக்கி முகம் கழுவச் சொன்னான். ஏழுமணிக்கு அகர்வால் வீட்டில் மணியடித்து வெளியே வந்தவரிடம் பதினோரு அடி அளவுக்குத் தண்ணீர் இருக்கிறதென்று சொல்லி விடைபெற்றுக் கிளம்பினான். அப்பாவும், பிள்ளையும் இட்லி, வடை, சாம்பார் சாப்பிட்டு கிரிஜாவுக்கு பொங்கல், தோசை பார்சல் வாங்கிக்கொண்டு வீட்டுப் படியேற, அவர்களைப் பார்த்ததும் 'ஹோ'வென்று கிரிஜா அழுதாள். கிரிஜா அழுவாள் என்று சுந்தரம் எதிர்பார்த்தான். அவள் அழுதது அவனுக்குப் பிடித்திருந்தது.

# 11

"எங்க போயிட்டேள் அப்பாவும், பிள்ளையும் என்னை சாகடிச்சுட்டு?" கிரிஜா பால்கனியில் நின்று நாலு பேருக்குக் கேட்கும்படியாகக் கத்தினாள்.

"எங்க, எங்க...எங்கடா ஒழிஞ்ச நீ?" பிள்ளையின் தலைமயிரைப் பிடித்து இழுத்தாள்.

"கையை எடும்மா" பிள்ளை ஆங்காரத்துடன் அவள் கையைத் தட்டிவிட்டான்.

"அப்படியென்ன ஓர்) ஆணவம்? வயசில பெரியவா எங்கப்பா கெஞ்சிக் கெஞ்சி கேட்கறபோது பதிலே பேசாத போற ஆணவம்"

"உங்கப்பாக்காகத்தான் நான் பேசாத போனேன். இல்ல உன் தம்பிய நாலு அறை விட்டுட்டுப் போயிருப்பேன். இன்னிக்கென்னவோ பெரிய லார்டுமாதிரி பேசறான். அவனுக்கு சப்போர்ட் செய்து நீயும் கத்தறயா? நீ உன் புருஷனை மதிச்சாதாண்டி உன்னை உன் வீடு மதிக்கும். நீ பணிவா இருந்தாதாண்டி உன் வீடு என்கிட்ட பணிவா இருக்கும். நேத்தைக்கு காசு இல்லேன்னுதானடி நீயும் மூஞ்சியத் தூக்கிண்டு நின்னே? இந்தா காசு. மொத்தத்தையும் உன் தம்பிக்கு ஒதிட்டு வா" பாக்கெட்டில் கைவிட்டு நாலாயிரத்தின் மீதியை அவள்மீது வீசி எறிந்தான்.

அவள் கூச்சல் கேட்டு கீழ் வீட்டு மாமி படியேறி வந்தாள்.

"என்ன சுந்தரம்? எதுக்கு அவளைப் படுத்தறே? வந்ததும், வராததுமா என்ன சண்டை? என்னது காசெல்

லாம் கீழே கிடக்கு" குனிந்து நோட்டுகளைப் பொறுக்க ஆரம்பித்தாள்.

"அது நானும், எம்புள்ளையும் சம்பாதிச்ச காசு மாமி. ஒரே ராத்திரில இணைத்துக்கு உறை போட வச்சு சம்பாதிச்ச காசு. உங்க மாப்பிள்ளை சாப்பிட உட்கார்ந்தா, 'அப்புறம் சாப்பிடறா'ன்னு கையப் பிடிச்சு எழுப்புவேளா?"

"ஐயோ அது எப்படி முடியும்? பொண்ணு கொடுத்த இடத்துல பகைச்சுக்க முடியுமா?"

'எனக்கு யார் மேலேயும் பகை இல்லை மாமி. இனி அந்த வீட்டுப்படி நான் ஏறமாட்டேன். முத பந்தியில மாப்பிள்ளை உட்காரக்கூடாதுன்னு சொன்னவங்க வீட்டுக்கு நான் போக மாட்டேன்"

"சரி, அதுக்கு கிரிஜா என்ன செய்வா? பாவம்! அவ பொண்ணாப் பொறந்த வேளை"

"நான் அவளை ஒன்னும் சொல்லலை. எனக்கு அவமேல கோபம் இல்லை. ஆம்படையானை அவமதிச்ச இடத்துல பொண்டாட்டி கை நனைக்கலாமா? உட்கார்ந்து விருந்து சாப்பிடலாமா? எனக்கு அசிங்கமில்லையா இது? பதினாலு வருஷ குடித்தனத்துல இன்னிக்குத்தானே எங்கிட்ட காசு இல்லாத போச்சு. தூக்கி எறிஞ்சிடுவியா? காசு கொண்டு வந்தாதான் சிரிப்பேன்னா, நீ குடித்தனம் செய்யற பொம்பளையா வேற எவளாவதா?"

"ச்சு. என்ன பேச்சு இது? நேத்து மத்தியானத்திலேர்ந்து அவ சாப்பிடவே இல்லை. சாயந்தரம் ஆறு மணிக்கு வந்தா, எல்லாத்தையும் சொல்லி ஒன்னு அழுதா. ஒருவாய் மோர் சாதமாவது சாப்பிடுடீன்னேன். மாட்டேன்னு சொல்லி படுத்துண்டுட்டா. நீ நினைக்கிறமாதிரி அவ உன்னை அவமதிக்கிற பொம்மனாட்டியில்லை



சுந்தரம். அவளுக்கு ரெண்டு பக்கமும் விட்டுக் கொடுக்க முடியலை. கிடந்து அல்லாடறா. நானும் இப்படி பட்டிருக்கேன். பகவானே, பொம்மனாட்டியா பொறக்கவேபடாது" மாமி தன் துக்கம் பொங்கியோ, கிரிஜாவின் துக்கம் தாக்கியோ அல்லது இரண்டையும் தாங்க முடியாமலோ விசும்பி அழுதாள்.

புடைவைத் தலைப்பால் கண்களை மூடிக்கொண்டாள். சுந்தரம் அதிர்ந்து போய் நின்றான். அவன் அதிர்ச்சியைப் புரிந்துகொண்டு கிரிஜா மடமடவென்று உள்ளே போனாள். மாமி பொறுக்கிக் கொடுத்த நோட்டை வாங்கிக் கொண்டு சுந்தரம் அவளைப் பின்தொடர்ந்து போனான். புருஷனுக்கும், மனைவிக்கும் சமாதானமாகி விட்டதை உணர்ந்த மாமி, கீழிறங்கிப் போனாள். பிள்ளை வராண்டாவில் அமர்ந்து பெஞ்சிற்குக் கீழேயிருக்கிற பந்தைத் தேடி விளையாடத் தொடங்கினான்.

"நேத்திலேர்ந்து ஏதும் சாப்பிடலையா?" சமையலறை ஓரம் நின்ற கிரிஜாவின் தோளில் சுந்தரம் கை வைத்தான்.

கிரிஜா மௌனமாய் நின்றாள்.

"பொங்கல், தோசை வாங்கிண்டு வந்திருக்கேன். முதல்ல சாப்பிடு"

"நான் அங்கே கை நனைப்பேன்னு நீங்க எப்படி எதிர்பார்த்தேள்? நீங்க பேசினது ரொம்ப கஷ்டமாயிருக்கு"

"வந்ததும் வராததுமா கத்தினியா, உடனே எனக்கும் கோபம் வந்துடுத்து. சாரி"

"எனக்கு வேண்டாம்"

"பிடிவாதம் பிடிக்காதே. ஏதாவது சாப்பிடு"

"எனக்கு மனசு சரியில்லை"

''எம்மேல கோபம். அவ்வளவுதானே. பளார்னு என்னை ஒருதடவை அறைஞ்சுட்டு சாப்பிடு.''

''அது உங்க புத்தி. நான் அப்படி வளரலை.''

''நீ ரொம்ப நல்ல வளர்ப்புதான். உன் தம்பிதான் தத்தாரி.''

''ஏன் அவங்களைக் கரிச்சுக் கொட்டறேள்?''

''உடன்பொறந்தானை தயவுசெய்து தலைல வச்சுண்டு ஆடாதே. இதே நாட்டுப்புறத்துல நடந்திருந்தா கையக் காலை வெட்டியிருப்பானுங்க''

''வெட்டுங்களேன், அது ஒண்ணுதான் பாக்கி. அந்தக் கூத்தும் நடக்கட்டும்''

''நீ இப்ப சாப்பிடப் போறியா, இல்லை உன்னை கழுத்தை நெரிச்சுக் கொல்லட்டுமா?'' அவள் கழுத்தைப் பிடித்து அழுத்தினான். கோபத்தில் நெரிப்பதற்கும், கொஞ்சலில் நெரிப்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது. முன் கைகள் கழுத்தை நெரிக்க, முழங்கைகள் வேறெங்கோ விஷமம் செய்தன. புருஷனின் உரசலில் அன்பிருப்பதைக் கண்ட கிரிஜா, அந்த பிரேமை தாங்காது வாய்விட்டு அழுதாள்.

''ஏன்னா, ஏன் நமக்கு இவ்வளவு கஷ்டம் வந்துடுத்து? இவ்வளவு அவமானம் ஏன் வந்தது?'' முகம் பொத்திக் கொண்டு கேவினாள்.

''ஆபத்து இல்லாத வேட்டை உண்டா? அவமானப் படாத குடித்தனம் உண்டா? நல்லது கெட்டது எல்லாருக்கும் வரும். வந்தா ஏத்துக்கத்தான் வேணும். இப்படி அழுது ஆர்ப்பாட்டம் செய்யப்படாது. சும்மா இரு'' அவள் முதுகு தடவி அணைத்துக் கொண்டான். மெல்ல அவள் உச்சியை முத்தமிட்டான். கன்னத்தைக் கொத்தாய் பிடித்து முகர்ந்தான். இடுப்பில் கைகோர்த்து இறுக்கி டைனிங்



டேபிளுக்கு அவளை அழைத்து வந்தான். பொங்கலையும், தோசையையும் பிரித்து வைத்தான். சிறிதுநேரம் மவுனமாயிருந்து விட்டு கிரிஜா சாப்பிடத் தொடங்கினாள். வாயில் பொங்கலை வைத்துக் கொண்டு, ''ஏது காசு?'' என்று கேட்டாள். அப்பாவும், பிள்ளையும் மாறி மாறி பணம் சம்பாதித்த கதையைச் சொல்ல, பிள்ளையை இடக்கையால் ஆதரத்துடன் அணைத்துக் கொண்டாள். ''ஒரு போன் செய்திருக்கப்படாதோடா?'' செல்லமாய்க் கோபித்துக் கொண்டாள்.

மெல்லிய தளிர்கள் தோன்றி அந்த வீட்டில் வசந்தம் வர ஆரம்பித்துவிட்டது.

''அதிகாலை ஆறு மணிக்கு யாரோ போன் பண்ணினா. யாரோ லேண்ட் சீலிங் ஆபீசராம். உங்களை எட்டரை மணிக்கு அவர் வீட்டில வந்து பார்க்க முடியுமான்னு பேசினார்'' கிரிஜா நிதானமாய் சொன்னாள்.

''அடிப்பாவி, இத்தனை மெதுவா சொல்றே—மணி என்ன?''

''எட்டு.''

''ஆளை விடு'' பறந்தடித்து ஓடினான்.

ஃ ஃ ஃ

''வாங்கய்யா... சரியான நேரத்துக்கு வந்து இறங்கறீங்களே'' லாண்ட் சீலிங் ஆபீசர் அவர் வீட்டு தோட்டத்தில் நின்று வரவேற்றார்.

''போன் செய்தீர்களாமே சார்?''

''ஆமாம், இந்த வீடு ரெண்டா பிரியுது. என் தம்பி ஹாங்காங்ல இருக்கான். இந்தத் தோட்டப் போர்ஷனை

விற்று அவன் பங்கு தந்தால், இந்த வீட்டு மேல இருக்கிற உரிமையை எனக்கு விட்டுக் கொடுப்பான். வீடு என் பேர்ல இருந்தாத்தான் நான் கடன் வாங்கி மேல் போர்ஷன் கட்ட முடியும். எவ்வளவு சீக்கிரம் விற்றுக் கொடுக்கணுமோ, அவ்வளவு சீக்கிரம் விற்றுக் கொடுக்கணும்."

"முக்கால் கிரவுண்ட்தான் சார் இருக்கு. அவசரப் பட்டம்னா, அடிமாட்டு விலைக்குத்தான் கேட்பாங்க. நீங்க விற்க விருப்பம் இல்லாத மாதிரி நடந்துக்குங்க. மத்ததை நான் பார்த்துக்கறேன்."

"உங்க கமிஷன் எவ்வளவு?"

"ஒரு பைசா வேண்டாம் சார்."

"சும்மா சொல்லுய்யா..."

"கடவுள் மேல சத்தியமா ஒருபைசா வேண்டாம் சார், எனக்கு மாம்பலம் மேட்டரைக் காயம் படாம முடிச்சு விடணும்..."

"அதை முடிச்சுக் கொடுத்த உடனே இதற்கு கமிஷன் கேட்க மாட்டியே?"

"ஒரு சொல், ஒரு பாணம், ஒரு பத்தினி..." சுந்தரம் தெலுங்கு பழமொழி சொன்னான். "நான் அந்தப் பக்கம் ஏதாவது வாங்கிக்கிறேன் சார். அது போதும்" என்றான். அவருடன் நிலப் பத்திரங்களைப் பார்வையிட்டான். ஜெராக்ஸ் காப்பி எடுத்து ஒரிஜினலை அவரிடம் கொடுத்து, மாம்பலம் நிலத்திற்கு உயர் அதிகாரியிடம் பேச மறுநாள் வருவதாகச் சொல்லி அகன்றான்.

பாண்டிபஜாரில் இறங்கி ஒரு கிரவுண்ட் தேடுகிற ஆளைக் காட்டிக் கொடுத்தால் ஆள் ஒன்று 2000 ரூபாய் தருவதாக கடை பரப்பினான். நிலம் கைமாறினால் 3,000



கமிஷன் தருவதாகப் பறையறிவித்தான். நிறையப் புரோக்கர்கள் சூழ்ந்து கொண்டார்கள். கவனமாய் ஆள்களைத் தேர்ந்தெடுத்தான். பார்ட்டி பற்றிய மொத்த விவரமும் விசாரித்தான். வயசான ஒரு புரோக்கரோடு தேடி ஓடினான். பார்ட்டி மட்டும் தனியே வர வேண்டும். புரோக்கர் கூடாதென மறுத்தான். முதல் பார்ட்டிக்குஇடம் பிடிக்கவில்லை.இரண்டாவது பார்ட்டிக்கு இடம் போறாது. மூன்றாவது பார்ட்டி வாங்க ஆசைப்பட்டது. ஆனால் ஏழு லட்சம் அதிக தொகை என்றது. அந்தப் பார்ட்டியை லாண்ட் சீலிங் ஆபீசரிடம் அழைத்துப் போக, ஆறே முக்காலுக்குத் தீர்மானமாயிற்று. அட்வான்ஸ் ஒரு லட்சம் கொடுக்கப்பட்டது. ஒரு மாதத்திற்குள் மொத்த தொகையும் கொண்டு வந்து கொடுத்து விடுவதாக வாக்குறுதி தரப் பட்டது. சுந்தரத்துக்கு கமிஷன் அட்வான்ஸ் ஆயிரமும், மீதி ரெஜிஸ்ட்ரேஷன் செய்யும் போது தருவதாய் ஒப்புக் கொள்ளப்பட்டது. இந்த ரெஜிஸ்ட்ரேஷனுக்கு குறைந்த பட்சம் மூன்று மாதங்கள் ஆகும். இது அள்ளி வீசுகிற பார்ட்டி இல்லை. அகர்வால் மாதிரி அக்குளில் காசு இடுக்கிக் கொண்டிருக்கிறவர்கள் இல்லை. ஆறப் போட்டுத் தான் காசு வாங்க வேண்டும். அவசரப்பட்டால் புரோக்கர் மீது அவநம்பிக்கை பிறக்கும். எல்லாம் முடிந்து வீடு வருகிறபோது மாலை ஐந்துமணி. கிரிஜா உருளைக்கிழங்கு நறுக்கிக் கொண்டிருந்தாள்.

"மத்தியானமே சாப்பிடாமே போயிட்டேள். அதுதான் கால் கிலோ உருளைக்கிழங்கு வாங்கி உங்களுக்கு மட்டும் சமைச்சண்டிருக்கேன்."

"அடச்சீ, இன்னொரு கால் கிலோ வாங்கிட்டு வரச் சொல்லு". ஆயிரம் ரூபாயை அவள் மடியில் போட்டான்.

"என்னன்னா.... தடக்கு தடக்குன்னு காசு கொண்டு வரேள்?"

"இனிமே இப்படித்தான். மணியடிச்சா சாப்பாடு. மாசம் பொறந்தா சம்பளம் அதெல்லாம் இனிமே கிடையாது. ஒரு மாசம் வரும். ஒரு மாசம் வராது. நீதான் எல்லாத்தையும் சரிக் கட்டிண்டு போகணும்."

லுங்கி மாற்றிக் கொண்டு கட்டிலில் துவண்டு படுத்தான். தூங்கிப் போனான். ஒன்பது மணிக்கு கிரிஜா உலுக்கி எழுப்ப, சாப்பிட்டுவிட்டு மறுபடியும் படுக்கப் போனான். சமையல் அறையை ஒழித்துவிட்டு கிரிஜா அவனருகே வந்தாள். புருஷனுக்கு எத்தனை சிரமம் என்று ஆதுரத்துடன் பார்த்தாள். ஒரு விருப்பத்துடன் அவனை உலுக்கி எழுப்பினாள்.

"எனக்குத் தூக்கம் வருது கிரிஜா" சுந்தரம் புரண்டு படுத்தான்.

"பரவாயில்லை... தூங்குங்கோ." கொஞ்சம் ஏமாற்றத்துடன் சொன்னாள். அவனருகே படுத்து, அவன் இடுப்பில் கைபோட்டு அவளும் தூங்கிப் போனாள். தூக்கத்தில் படுத்துக் கொண்டிருந்த சுந்தரம், புரண்டு மனைவியை இறுக்கிக் கொண்டான். இது கூடல் இல்லாத கூடல், கலவியைத் தாண்டிய காதல். சோதனைகள் வரும்போது கைபிணைத்துக் கொண்ட தன்மை. சண்டையிட்டு தெளிவாகிச் சமாதானத்தில் வந்த இறுக்கம். என் புருஷன், என் மனைவி என்று இறுக்கிக் கொண்ட ஸ்நேகம். குடித்தனம் செய்கிறவனுக்குத்தான் இந்த விஷயம் புரியும். பரஸ்பரம் நேசிக்கிறபோதுதான் கலவிக்குப் போகாமல் கட்டிக் கொள்ள முடியும். காமம் தாண்டிய காதல் வரும்.

மறுநாள் எழுந்து மனைவி கையால் டிபன் சாப்பிட்டுவிட்டு மாம்பலத்திற்குப் போகும்போது மனசு இடைவிடாமல் பிரார்த்தனை செய்து கொண்டே இருந்தது. லாண்ட் சீலிங்கின் உயர் அதிகாரி பேப்பரைப் படித்துவிட்டு, 'இதில் ஒன்றும் பிரச்னை இல்லையே' என்று சுந்தரத்திற்குத்



தெரிந்த அதிகாரியிடம் கேட்க, 'ஒரு பிரச்னையும் இல்லை' என்று அவர் சொல்ல, பச்சை இங்க்கால் சீலிங்கை விடுவிக்கச் சொல்லி எழுதி ரப்பர் ஸ்டாம்ப் போட்டுக் கொடுத்தார். இரண்டு மணி நேரத்தில் அந்த மாம்பலம் நிலம், நில உச்ச வரம்பு சட்டத்தில் இருந்து விலக்கப்பட்டதாய் அவர்களுக்குச் சான்றிதழ் கிடைத்தது. அந்த சான்றிதழின் ஒவ்வொரு நகரலுக்கும் சுந்தரத்துக்குத் தெரிந்த அதிகாரி காரணமாய் இருந்தார். உத்தரவை படித்து கவரில் போட்டு அந்த அதிகாரி கொடுத்தபோது, சுந்தரத்திற்கு உடம்பு நடுங்கியது. கவரை வாங்கி நிலச் சொந்தக்காரரிடம் கொடுத்தான். யாரும் எதிர்பாராத வண்ணமாய் அந்த அதிகாரியின் காலில் சாஷ்டாங்கமாய் விழுந்து வணங்கினான்.

"அடடே, என்னங்க... என் காலெல்லாம் விழுந்துக்கிட்டு..." அவர் பதறினார்.

"நீங்க யாரோ, யார் பெத்த புள்ளையோ? ஆனா, எனக்கு அண்ணன்னு யாரும் கிடையாது. ஆனா இந்த நேரம் உங்களை அண்ணனா நினைக்கறேன். என் வாழ்க்கை மொத்தமும் திசை மாத்திட்டீங்க. நன்றின்னு சொல்றது எனக்குப் போறலை. அதனாலதான் நமஸ்காரம் செய்றேன்."

"அடச்சே, என்னய்யா நீ...ஜெயிக்கணும்னு ஆசைப்படறவனுக்கு அவனுடைய வெறிதான் உடன்பொறந்தான். அவன் பேச்சுதான் பொண்டாட்டி. அவனுடைய நேர்மைதான் கடவுள். விட்டு புரோக்கர்னா ஃப்ராடு, திருடங்கறத நீ மாத்து சுந்தரம். கமிஷனை எய்ம் பண்ணாதே. விக்கறவன் கவலையையும், வாங்கறவன் கவலையையும் மனசுல வச்சுக்க. அவன்கிட்ட சத்தியமா இரு. காசு தானா வரும். ரெண்டு பார்ட்டிய ஏமாத்தி, ரெண்டு லட்சம் சம்பாதிக்கறத விட, பத்து பார்ட்டிகிட்ட இருபதாயிரமா சம்பாதி.

உன் வீடு தேடி நூறு பார்ட்டி வரும். இன்னைக்கு இருக்கற களாக்காய்க்கு ஆசைப்படாத. நாளைக்கு வர்ற பலாப்பழத்துக்கு பசியோட இரு.

இது லாண்ட் சீலிங் பற்றிய புது புத்தகம். கடைசியா வந்த கவர்ன்மெண்ட் ஆர்டர் வரைக்கும் இதுல இருக்கு. என் நிலம் வித்ததுக்கு நான் கமிஷன் தரலை. இதை என் கமிஷனா வச்சுக்கோ. எப்ப என் உதவி வேணாலும் வந்து கேள். நியாயமானதை சீக்கிரமா முடிச்சுத் தரேன். காலில விழுந்தா தட்டு தரணுங்கறது எங்க சைவப்பிள்ளைமார் சம்பிரதாயம். என்கிட்ட இப்ப அதிகம் காசு இல்லை. இந்தா...''பர்ஸ் பிரித்து நூற்றியொரு ரூபாய் கொடுத்தார்.

வாங்கிக் கண்களில் ஒற்றிக்கொண்டு வெளியே வந்தான். மாம்பலம் நிலச்சொந்தக்காரரைக் கூட்டிக்கொண்டு அகர்வாலிடம் ஓடினான். அவரை வாசலில் நிற்க வைத்துவிட்டு, அகர்வாலிடம் கொண்டு போய் விடுவிப்பு பத்திரத்தைக் காட்டினான்.

''சபாஷ். சரியான வேலை செய்திருக்கிறாய். ஒன்று செய், பார்ட்டிய வேற எங்கேயாவது ஹோட்டலுக்கு கூட்டிக்கொண்டு போ. நான் உள்ளே இல்லை என்று சொல்லிவிடு. நீ போனபிறகு நான் சைட்டைப்போய் பார்க்கிறேன். அவர் வீட்டிலேயே இரு. ரெண்டு மணி நேரம் பொறுத்து நானே அங்கு வருவது போல் வருகிறேன். ஒன்றரை லட்சம் ரூபாயை அவர் பேரில் ரெஜிஸ்ட்ரேஷன் செய்ய இப்ப கடன் தரேன். அந்தக் காசை நீ வாங்கிக்க. நீ கொடுத்த காசில அவர் ரெஜிஸ்ட்ரேஷன் செய்யட்டும்.''

''ஏன் சார்?''சுந்தரம் வியப்போடு அவரைக் கேட்டான்.

''நான் வாங்குகிறவன். அவன் விற்கிறவன். நீ ஏன்பா காசு போடற அனாவசியமா? மூணாவது பார்ட்டியா நீ ஏன் இருக்கே? நீ புரோக்கர். உன் கமிஷனோட உன் வேலை



முடிஞ்சு போயிடுச்சு. நீ இதுல இன்வெஸ்ட் செய்றது முட்டாள்தனம். இது டேஞ்சரஸ் கேம். இந்த மாதிரி முட்டாள்தனம் இன்னொரு தடவை செய்யாதே. நீ பார்ட்டிய கூட்டிக்கிட்டு கிளம்பு.''

அவர் பேச்சில் நட்பும் வியாபாரமும் கலந்திருந்ததை கவனிக்க முடிந்தது. ஊர் சுற்றி மாம்பலம் போனதும்—

''யாரோ வந்துட்டுப் போனா'' அந்த நிலச்சொந்தக்காரரின் மனைவி முனகினாள். அகர்வால், தன் தம்பியை அனுப்பி நிலத்தைப் பார்வையிடச் செய்திருந்தார். அடுத்த ஒரு மணியில் அவரே வந்தார்.

ஒரு கிரவுண்ட் ஆறு லட்சம் என்று தீர்மானமாயிற்று. பாதி காசு முன்பணமாகவும், பாதி காசு ரெஜிஸ்ட்ரேஷன் போதும் தர முடிவாயிற்று. நிலத்தில் பாத்யதை உள்ளவர்கள் எல்லாரும் அகர்வாலிடம் விற்பதற்கு விருப்பம் தெரிவித்து கடிதம் எழுதி, கையெழுத்து போட்டார்கள். பாதி பணத்துக்கு முதல் தொகையாய் ஒன்றரை லட்சத்திற்கு கரன்சியாய் அங்கேயே கொடுக்கப்பட்டது. ஒரு வாரம் கழித்து மீதி பணம் தருவதாகப் பேசி முடிவாயிற்று.

''சுந்தரம், ஒரு லட்சம் இப்ப வச்சுக்க. அரை லட்சம் மீதி பாதி பணம் வந்தவுடனே தரேனே..'' நிலச்சொந்தக்காரர் கெஞ்சினார்.

''இந்தப் புரோக்கரை செட்டில் செய்து அனுப்பு. இனி நானும் நீயும் பேசலாம்'' என்று அகர்வால் சீறினார். அகர்வால் கொடுத்த ஒன்றரை லட்சம் சுந்தரத்திற்குப் போயிற்று. இது சுந்தரத்தின் காசு. அவன் சொத்து. அவன் ஆபீஸ் கொடுத்த பணம். அவன் மனைவி கிரிஜாவின் நகைகள், இந்த வியாபாரத்திற்காக அவன் தேவையில்லாது போட்ட முதல். வட்டியில்லாது போட்ட கடன். அவன் வீட்டைக் கலக்கிய காசு. கிரிஜாவை அழவைத்த ஒன்றரை

லட்சம். இந்த வியாபாரம் முடித்த கமிஷன் என்பது இனி தான் வரவேண்டும். பாதிப்பணம் முடிய பாதி காசும், ரெஜிஸ்ட்ரேஷன் முடிய மீதி காசும் இரண்டு பக்கமும் கமிஷனாக வரும். இந்தப் பக்கம் ஒரு பர்செண்ட், அந்தப்பக்கம் ஒரு பர்செண்ட் வரும். ரெஜிஸ்ட்ரேஷன் முடியும்வரை வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு இருக்க வேண்டும்.

"விக்கறதா எழுதிக் கொடுத்துட்டேன். நீங்க ரெஜிஸ்ட்ரேஷன் காசுதான் கொடுத்திருக்கீங்க. மீதியை சீக்கிரம் தந்தா நன்னாருக்கும்" நிலச்சொந்தக்காரர் கவலையோடு பேசினார்.

"செய்யலாம், செய்யலாம்" என்று அகர்வால் பேசி கித்தாய்ப்பாய் வெளியேறினார். "ஆபீசுக்கு வா" என்று சுந்தரத்திடம் மட்டும் அடிக்குரலில் கூறினார். ஒன்றரை லட்சம் ருபாயை ஸ்கூட்டரில் வைத்து விட்டு சுந்தரம் அவரைப் பின்தொடர்ந்தான்.

"எனக்கு இன்கம்டாக்ஸ்ல ஆள் தெரியும். என் அக்கவுண்ட்ஸ் அங்கே நீட்டா இருக்கு. ஒரு கிரவுண்டுக்கு ஆறு லட்சம் என்பது இந்த ஏரியாவில் லாபமான ரேட். ஏமுதர ஆள்கள் உண்டு. போட்டிகள் வரும். எனவே ஒரு வாரத்திற்குள் அவர் ரெஜிஸ்ட்ரேஷனை நீ கூட இருந்து முடிக்க வேண்டும். இந்த நிலத்தை என் பெயரில் ரெஜிஸ்டர் செய்ய உதவ வேண்டும். வேறு எவரும் குறுக்கிடாமல் கவனித்துக் கொள்ளவேண்டும். பாதிபணத்தை இன்று கூடத்தரமுடியும். ஆனால் என் ஆடிட்டரோடு இன்கம்டாக்ஸ் ஆபீஸ் போய் விட்டு வந்து சொல்றேன். முப்பத்தாறு லட்சங் டக்கென்று முதலீடு செய்யலாமா என்று விசாரித்து விட்டு வந்து சொல்றேன். ஏது இவ்வளவு முதல் என்று இன்கம்டாக்ஸ் கேள்வி கேட்கும். கூட்டு பிசினஸ் என்று பேப்பர்கள் காட்ட வேண்டும். என் எல்லா வேலைகளையும் நிறுத்தி விட்டு இதை எவ்வளவு சீக்கிரம் முடிக்க முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் முடிக்கிறேன். லாண்ட் சீலிங்கிற்கு அலைந்ததைப்



போல் அந்த ஆளோடு ரெஜிஸ்ட்ரேஷனுக்கும் அலைய வேண்டும். இதைச் செய்ய உனக்கு தனியே காசு தருகிறேன். எவ்வளவு வேண்டும்?"

"பத்தாயிரம்...."

"போதுமா?"

"உங்களுடைய கார் கடன் வேண்டும்."

"ஏன்?"

"சில இடங்களுக்கு காரில் போவது உயர்வாய்த் தெரியும். சம்பந்தப்பட்ட சிலரைக் கூட்டிக்கொண்டு போய் உபசரிக்க வேண்டியிருக்கும்."

"புரிகிறது. என் மாருதியை எடுத்துக் கொள். டிரைவர் வேண்டுமா?"

"டிரைவரோடு காரை வீட்டுக்கு அனுப்புங்கள். நான் காரை வைத்துக் கொண்டு டிரைவரை அனுப்பி விடுகிறேன். என்னிடம் கார் ஓட்ட லைசென்ஸ் இருக்கிறது."

"சரி கவனமாய் இரு."

சுந்தரம் வீடு திரும்பும்போது அவன் வாழ்க்கைப் போக்கையே அவனால் நம்பமுடியாமல் ஓர் அதிசயத்தோடு வண்டி ஓட்டி வந்தான். கிரிஜாவின் எதிரில் டைனிங் டேபிளில் ஒன்றரை லட்சம் பரப்பினான். கிரிஜா அவனை ஒருகொள்ளைக்காரனைப் பார்ப்பது போல் பார்த்தாள்.

"பயப்படாதே. இது என் கம்பெனி காசு. உன் நகை வித்த காசு. சாப்பிட்டு வேற உடுத்திக்கோ. உன் நகை மொத்தமும் வாங்கிண்டு வந்துடலாம்."

சாப்பிடும்போது கார் சாவி கைக்கு வந்தது. கிரிஜா சமையல் அறையில் இருந்தாள். பிள்ளை 'என்னப்பா' என்று

வியப்போடு கூவினான். அவனை வாய் பொத்தி அடக்கி விட்டு, உடுத்திக் கொண்டு கீழ இறங்கினபோது அந்த வெள்ளை நிற மாருதியில் ஏறி அவளுக்கு கார் கதவு திறந்து விட்டான். கிரிஜா மறுபடியும் பயந்தாள்.

"இது உங்க காரா இருந்தா ஏறுவேன்."

"முதலில் ஏறு. விவரம் சொல்றேன்."

வண்டி கிளம்பி தார் சாலையில் இறங்கியது.

"என்னா, நம் கவலையெல்லாம் பறந்துடுத்தா, மனசு கலங்கி எவ்வளவு அவமானப்பட்டேன் தெரியுமா?"

"வறுமைக்குப் பயப்படாதே, வாழ்க்கைக்குப் பயப்படாதே."

"இதெல்லாம் கேக்க நன்னாருக்கும். அம்பது ரூபா கிழாத்து மாமிகிட்ட கடன் வாங்கினேன். எத்தனை தடவை கேட்டுட்டா தெரியுமா? அவமானமாயிடுத்து?"

"அவமானத்துக்கும் பயப்படாதே."

"எப்படி பயப்படாம இருக்கறது? புடவை உடம்பை விட்டு நகராம இருக்கணும்னு கட்டிக்க சொல்லி கொடுத்திருக்கா. வேற விதமா கட்டிக்க முடியுமா?"

"முட்டாள் பேச்சு. தலைப்பு வாசல் கதவில் சிக்கி, ரவிக்கை தெரிஞ்சுடுத்துன்னா தூக்கு போட்டுட்டு செத்துப் போயிடுவியா? வழுக்கி விழுந்து முழங்கால் தெரிஞ்சுடுத்துன்னா காலை வெட்டிடுவியா?"

"ஆமா, அதுக்காக இதுதான் என் முழங்கால், எல்லாரும் பாருங்கோன்னு நிக்கமுடியுமா?"



"இது விதண்டாவாதம்."

"இல்லை. உங்களுக்குப் பொம்மனாட்டி பத்தி தெரியலை. மானம், அவமானம், இல்லாது ஆம்பளை இருந்திடலாம். பொம்மனாட்டி அப்படி இருக்கமுடியாது. என் கம்பீரம் என் புருஷன். அவனுக்கு அவமானம் எனக்கு அவமானம். அவர் பேர்லகாக ஓடியிட்டுரு. அங்கே குறை வைக்காத. தீபாவளி புடவைக்குக் காசு கட்ற மாதிரி மாசம் நூறு ரூபா கொடுத்து உங்க கடனை அடைச்சுடறேன்னு அப்பா காலைப் பிடிச்சுக் கெஞ்சினேன். எனக்காக உங்களுக்காக. என் புருஷனை யாரும் எதுவும் சொல்லக் கூடாதுங்கறதுக்காக"

"அப்படியுந்தான் சொன்னான் உன் தம்பி"

"அந்தக் கடன்காரனை நான் மறக்கவே மாட்டேன். அவன் தவிக்கிறபோது அவனுக்கு இதே வார்த்தையை சொல்லிக்காட்டாம இருக்கவே மாட்டேன்."

"தப்பு 'தாணை நன்னயம் செய்துவிடல்'னு ஒரு குறள் உண்டு."

"குறள் பிரகாரமா வாழ்க்கை நடத்தறோம்? சூட்டைக் காய்ச்சின மாதிரி நாலு வார்த்தை கேட்டாத்தான் அவன் தானைக்கு வேறு யாரையும் கேட்க மாட்டான்."

"அதை எங்கிட்ட விட்டுடு"

"எதை?"

"உன் தம்பிக்கு சூட்டைக் காய்ச்சி இழுக்கறதை."

அடகு வைத்த நகையை மீட்டு, அவளுக்குக் கூடவே ஒரு பவுனில் தெளி மோதிரம் வாங்கிப் பரிசளித்தபோது, கிரிஜாவின் முகம் தாமரை போல மலர்ந்தது. மனைவியின் மலர்ச்சி புருஷனை சந்தோஷப்படுத்தியது. அப்பனும்

அம்மையும் சந்தோஷமாய் இருப்பது பத்து வயசு பிள்ளைக்குக் குதூகலம் கொடுத்தது. அவன் ஒவ்வோர் அசைவிலும் அந்தக் குதூகலம் தெரிந்தது.

வீடு வந்தபோது மாம்பலத்தின் நிலச் சொந்தக்காரனை மறுபடியும் போய்ப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் வந்தது. அவருடைய ரெஜிஸ்ட்ரேஷன் வேலை ஞாபகம் வந்தது.

"இப்பவே ஓடணுமா? நாளைக்குப் போய்க்கலாமே" கிரிஜா கெஞ்சினாள். மனைவியின் அந்தக் கெஞ்சலுக்கு அர்த்தம் புரிந்தது. கொஞ்சம் யோசித்து மனைவியின் முதுகைத் தடவியபடியே படியேறினான். அவளோடு இளைப்பாறினான். அது மிகப்பெரிய தவறு என்று மறுநாள் புரிந்து விட்டது. போர் முடியும் முன்பே பொண்டாட்டியிடம் மயங்குபவன் முட்டாள் என்பதை வாழ்க்கை கற்றுக் கொடுத்தது. கழுத்துக்குக் கத்தி வந்தது.

## 12

மாருதியை எடுத்துக் கொண்டு வழியில் பத்து முழம் மல்லிகைப்பூ வாங்கிக் கொண்டு மாம்பலம் நிலச்சொந்தக்காரர் வீட்டுக்குப் போக, அங்கு இரண்டு கார்கள் நின்றன. ஒன்று அம்பாசிடர், இன்னொன்று காண்டெசா. காண்டெசா ஓட்டுகிற டிரைவரின் உடையே அது சாதாரண ஆளின் கார் இல்லை என்பதைக் காட்டிக் கொடுத்தது. யார் இவரைத் தேடி வந்திருக்கிறார்கள் என்று சந்தேகம் கொடுத்தது. கடன் கொடுத்தவன் வசூலிக்க வந்திருக்கிறானா? இல்லை காசு வந்ததைக்கேட்டு ஒட்டுகிற உறவா, யார்? விசாரிக்க வேண்டுமே. ஆவல் எழுந்தது. காரைவிட்டு



இறங்கி டிரைவரை நோக்கி மலர்ச்சியாய் சிரித்து, 'வணக்கம் துரை' என்று தானாய் முகமன் கூறினான். பிறகு—

"வந்து ரொம்ப நேரம் ஆச்சா?" என்று முதல் கேள்வி கேட்டான்.

"அரை மணி நேரம் ஆச்சுங்க"

"பெரியவரா, சின்னவரா?" வார்த்தை பிறங்க அடுத்த கேள்வியை வீசினான்.

"அம்பாசிடர் இருக்கே, ரெண்டு பேரும் வந்திருக்காங்க" சுந்தரத்திற்குத் தன் முதலாளியைப் பரிச்சயமிருப்பதாய் அவன் உணர்ந்து கொண்டு பேசினான்.

"எனக்கும் அவசரமா பேசணும் உள்ளே போகலாமா வேண்டாமான்னு பார்க்கறேன்."

"அவங்க மனை வாங்கறதுக்குப் போனாங்க. சட்டுன்னு முடியுமா மெதுவாகத் தான் வருவாங்க."

"எந்த மனை?"

"இதுதான். நீங்க யாருங்க?"

"நான் டயர் கம்பெனி முன்பக்க இடம் ஒரு பிரவுண்ட் கேக்கலாமான்னு வந்தேன்."

"உங்களுக்குக் கிடைக்காது. அவங்க மொத்தமா பேசறாங்க."

சுந்தரத்துக்குச் சட்டென்று கோபம் வந்தது. அவன் எஜமான விசுவாசத்தை அலட்டலாய் காண்பிக்கிறான் என்கிற ஆத்திரம் வந்தது. ஆனால் இவனிடம் கோபித்துக் கொண்டு பயனில்லை. யார் வந்திருப்பது என்று தெரிய வேண்டும்.

"காண்டெசா ஜொலிக்கிறது தானே. உள்ளே வேற மாதிரி இருக்கு" கறுப்புக் கண்ணாடியில் கை வைத்து உள்ளே பார்த்தான். "எனக்கு மாருதிதான் வசதி. ஆனா இதைப் பார்த்தா ஓர் ஆசை" தன்னைத் தானே உயர்வு படுத்திக் கொண்டான்.

"நல்லா பாருங்க" என்று டிரைவர் கதவு திறந்துவிட பின் சீட்டில் கோகுல்தாஸ் ரியல் எஸ்டேட் என்கிற அட்டை ஃபைல் இருந்தது. சுந்தரம் மிகப்பெரிய பயத்தை உணர்ந்தான். 'அடப்பாவிகளா' என்று உரக்கக் கூவுவதைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டான். இதைத்தான் அசர்வால் எச்சரித்தாரோ என்று யோசித்தான். என்ன செய்வது என்று கவலைப்பட்டான். காண்டெசா முழுவதும் உள் பக்கம் பார்த்துவிட்டு நிதானமாய் வெளியே வந்தான். "வண்டி நல்லாருக்கு" என்று சிரித்தான். தான் ஓட்டி வந்த மாருதிக்கு அருகே நின்று உள்ளே இப்போது போவதா, நிதானிப்பதா என்று சிந்தனை செய்தான். காண்டெசா டிரைவர் விரைப்பாவது தெரிந்தது. அவர்கள் ஹாலுக்குள்ளிருந்து வெளியே வந்தார்கள்.

அண்ணன் தம்பிகளாய் இரண்டு சிற்றானைக் குட்டிகள். ஆளுக்கு ஒருபக்கம் மாம்பலத்து நிலச் சொந்தக்காரர் தோளில் வைத்துக் கொண்டிருந்தார்கள். இதில் வயதானவன் கோகுல்தாசா? மற்றவன் மங்கள்தாசா? உற்றுப்பார்த்து மனதில் பதிய வைத்துக் கொண்டான். அவர்கள் வெளியே வர, "இது நமக்குக் கிடைக்காது. நான் வரேன்" என்று டிரைவரிடம் சொல்லிவிட்டு மாருதி காரில் ஏறிக் கொண்டான். என்ஜினை முடுக்கி அந்த இடத்தை விட்டு அகன்றான். மாம்பலம் தெருக்களில் சுற்றினான். கடவுளே நல்லதைக் கண்ணுக்கு முன்னால காட்டி தட்டிப் பறிச்சுடாதே என்று வேண்டினான். மறுபடியும் அந்த வீட்டுக்கு வந்தபோது கார்கள் அங்கே இல்லை. கார் விட்டு இறங்கி, வாழையிலையில் சுற்றிய மல்லிகைப்பூச்சரத்தோடு



அசோக் நகர், சென்னை – 83

வீட்டுக்குள் நுழைந்தான். அந்த நிலச்சொந்தக்காரரின் மனைவி வராண்டாவில் எதிர்ப்பட்டாள். வராண்டா பெஞ்சில் பூவை வைத்துவிட்டு, அவளை நோக்கிக் கைகூப்பி நமஸ்கரித்தான்.

"புரோக்கர் சுந்தரம் வந்துட்டார்." அவள் உள்நோக்கி குரல் கொடுத்தாள். அவனை உள்ளே வர அழைத்தாள்.

"ஏழு ரூபா தரேன்றான்யா, நான் ஏமாந்துட்டேன் போலிருக்கே" இதுதான் நிலச்சொந்தக்காரரின் முதல் வார்த்தை.

"நீங்க என்ன முடிவு பண்ணினேள்?"

"நீதான் முடிவு பண்ணனும். மொத்தமா ஆறு ரூபாய் லாபமாச்சே. பத்து லட்ச ரூபாய் தரேங்கறான். காசு காட்றான்யா. எனக்கு ரொம்ப கலவரமா போயிடுச்சு. ஆறு ரூபா நஷ்டம்யா."

"அட்வான்ஸ் டக்குன்னு கொடுத்துடுவாங்க மிச்சக் காசுக்கு இழுத்தடிப்பாங்க. எல்லாத்துலேயும் கையெழுத்து வாங்கி இது போதும்னுவாங்க. அதட்டி கேட்டா கோர்ட்ல கேஸ் போடும்பாங்க. ஆத்திரப்பட்டா ஆள் வச்சு மிரட்டு வாங்க. இங்கு வந்து போனவங்களை எனக்குத் தெரியும்."

"யாரு சொல்லு?"

"கோகுல்தாஸ், மங்கள்தாஸ். ரெண்டு பேரும் கடைந்தெடுத்த அயோக்கியன்கள்."

"அவன் ரவுடியா இருந்தா நமக்கென்னய்யா, ரெவுண்ட் ஏழு லட்சம்னு நீ முடிச்சுக் கொடேன். உனக்குக்கூட கமிஷன் கிடைக்குமோன்னோ?"

"காசு கூட கிடைச்சா சைபன்ல இறங்க என்னால முடியாது. நாம ஓர் இடத்துல வாக்கு கொடுத்துட்டோம். விக்கறதா எழுதிக் கொடுத்துட்டோம்."

"பத்திரமா அது, வெறும் பேப்பர்தானே? ஒன்றரை லட்ச ரூபாயை திருப்பிக் கொடுத்தா போறது."

"அகர்வால் வாங்க மாட்டார். கேஸ் போடுவார். விக்கக் கூடாதுன்னு இன்ஜெக்ஷன் ஆர்டர் வாங்குவார். வேணும்னுட்டாலும் ரெண்டு வருஷத்துக்குக் கேஸ் இழுத்தடிப்பான்."

"ஐயோ. ஆனா ஆறு லட்சம் நஷ்டம்யா."

"ஏழு லட்சம் தரமாட்டாங்கய்யா. ஆறுன்னு பத்திரத்துல வச்சுப்போம். ஏழுன்னு பேச்சிலே வச்சுப் போம்னு சொல்லுவான். மீதி காசை பிளாக் மனிம்பான். ஆறாறு முப்பத்தாறுன்னு செக் தருவான். பிளாக் மனியை அதோ, இதோன்னு இழுத்தடிப்பான். கோகுல்தாஸ் பிளாக் மனி தரலைன்னு எந்தக் கோர்ட்டுக்குப் போவீர்? அந்த சங்காத்தம் உமக்கு வேண்டாம்"

"நானும் அதைத்தான் சொன்னேன்" பின்னாலிருந்த பெண் குரல் கேட்டது. அவள் தலையில் மல்லிகைப்பூ இருந்தது.

"இவர் பேர்ல தப்பில்லை மாமி. ஆறு லட்ச ரூபாய்கூட வருதுன்னா எனக்கும் டெம்ப்டேஷனாகும். ஆனா வருமான்னுதான் சந்தேகம்,"

"மறுபடி ஒன் அவர்லே வருவேன்னு சொல்லிட்டிருக்கான்யா. ஆறு லட்சம்... ஆறு லட்ச ரூபாய் அநியாயமாய் போகுதே. அகர்வால்கிட்டே கொஞ்சம் கூட கேளேன்"

"பேச்சு முடிஞ்சு கையெழுத்தாயிடுத்து: மறுபடி கேக்கறது அயோக்யத்தனம்"

"நானும் அதைத்தான் சொன்னேன்" பின்னாலிருந்து பெண் குரல் கேட்டது.



"நீ சும்மாருடி" நிலச் சொந்தக்காரர் மனைவியைப் பார்த்து சீறினார்.

"கொஞ்சம் இருங்கோ வரேன்" சுந்தரம் வெளியேறினான். பார்ட்டி கைமாறி விடுமோ என்று உள்ளே ஒரு பதற்றம் ஏற்பட்டது. மொத்தமும் கவிழ்ந்து விடுமோ என்கிற பயம் வந்தது. டெலிபோன் பூத்துக்கு ஓடிப்போய் அகர்வாலுக்கு போன் செய்தான்.

"என்ன பதற்றம்?" அகர்வால் எதிர்முனையில் கேட்டார்.

"கோகுல்தாஸ் வந்து கிரவுண்ட் ஏழு லட்சத்திற்கு பேரம் பேசுகிறார்"

"பெஹன் சோத்" அகர்வால் சீறுவது கேட்டது "என்னிடம் கார் இல்லை. உடனே இங்கு வா" கட்டளையுடன் போன் துண்டிக்கப்பட்டது. அகர்வாலை நெருங்க ஆறு கிலோ மீட்டர் வண்டி ஓட்ட வேண்டியிருந்தது. சுந்தரம் பேய் மாதிரி பறந்தான்.

"கோகுல்தாஸ் கிளம்பி விட்டானாம். நாம் உடனே அங்கு போகவேண்டும்" கையிலுள்ள பிரீப்கேஸ் திறந்தார்.

"நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?" கவலையோடு சுந்தரம் கேட்டான்.

"அது உன் வேலையில்லை. அதை நான் பார்த்துக் கொள்கிறேன். ஆனால் அடிதடி ஏற்பட்டாலும் பயப்படாதே. தயாராய் இரு"

"அடிதடியா. உங்களுக்கும் கோகுல்தாசுக்குமா?"

"இது நாலு தலைமுறை சண்டை. என்மீது அவன் கை வைத்தால் நீ கட்டையை எடுத்து அடிக்கலாம். தேவையெனில் கொலையும் செய்யலாம். என் சொந்து

முழுவதையும் விற்று உன்னைக் காப்பாற்றுவேன். என் ராமன் மீது சத்தியம்''

''அடிதடியை நிச்சயம் எதிர்பார்க்கிறீர்களா?''

''இரண்டு தடவை நடந்திருக்கிறது சுந்தரம். கோகுல் தாஸ் புத்தியுள்ளவனாய் இருந்திருந்தால் மறுபடியும் என்னிடம் மோத மாட்டான்.''

கார், மாம்பலம் நிலச்சொந்தக்காரர் வீட்டிற்கு அருகே நின்றது இருவரும் கீழே இறங்கினார்கள். அகர்வால் சகல கவலைகளையும் மறந்து விட்டு வந்தனம் சொன்னார். அட்வான்ஸ் கொண்டு வந்திருக்கிறேன் என இனிமையாகப் பேசினார். ஆறு லட்ச ரூபாய் செக்காகவும், நாலு லட்ச ரூபாய் காசாகவும் வைத்தார்.

''இது பிளாக். அது வொய்ட்டா?''

''இல்லை. என்னிடம் எல்லாம் வெள்ளைதான்.''

''இவ்வளவு வெள்ளை வாங்கினால் இன்கம்டாக்ஸ் அதிகம் கட்ட வேண்டியிருக்குமே.''

''சொத்து மூன்று பேருடையது. வருமானம் பிரியும். டாக்ஸ் குறையும். உச்சவரம்பிலிருந்து விடுவிக்கப்பட்ட நிலத்தின் வியாபாரம் குறித்து அரசு உன்னிப்பாய் கவனிக்கும். இந்தப் பரிமாற்றத்தில் கறுப்புப் பணம் நல்லதல்ல. மேலும் என்னிடம் விற்பதாய் உறுதி கூறி ஒன்றரை லட்சம் அட்வான்ஸ் வாங்கியிருக்கிறீர்கள். இந்த வியாபாரம் முடிந்து போன விஷயம். பின்வாங்குவது நல்லதல்ல. பிறகு உங்கள் இஷ்டம்'' அகர்வால் பெட்டியை மூடினார்.

''சார், என் பொண்டாட்டி நகையை வித்து என் கைக்காசு போட்டு உங்களுக்கு ஒன்றரை லட்ச ரூபாய்



கடன் கொடுத்தது இவரை நம்பித்தான். கோகுல்தாசை நம்பியில்லை'' சுந்தரம் நடுவே பேசினான்.

''பாதாம் பருப்பு, பிஸ்தா ஜாங்கிரி எல்லாம் கொண்டாந்து கொடுத்தான்யா. ரொம்ப மரியாதையா பேசினான்''

''வீடு வாங்குகிறவன் இப்படியெல்லாம் நடந்து கொள்ள மாட்டான். இதிலிருந்தே தெரியவில்லையா அவன் அயோக்கியனென்று. நான் வியாபாரம் முடிந்த பிறகு உங்களுக்கு மரியாதை செய்யலாம் என்று நினைத்தேன். இந்த நூறு ரூபாய் பிஸ்தா முக்கியமென்றால் நான் இந்த இடத்தை காலி செய்து விடுகிறேன்'' அகர்வாலின் குரலில் கோபமிருந்தது. ''மிஞ்சிப்போனால் இருநூறு ரூபாய் சாமான் இதற்காகவா முப்பத்தாறு லட்ச ரூபாய் வியாபாரத்தை முறியடிக்கிறீர்கள்?''

''நானும் அதைத்தான் சொல்றேன்'' சமையலறையில் இருந்து பெண் குரல் கேட்டது.

''எனக்கு ஆறு லட்ச ரூபாய் நஷ்டமாச்சேய்யா'' நிலச் சொந்தக்காரர் பேச எல்லாரும் மௌனமாக இருந்தார்கள். வாசலில் கார் நிற்கும் சத்தம் கேட்டது. இந்த முறை கோகுல்தாஸ் மட்டும் ஆடி அசைந்து உள்ளே வந்தார். அகர்வாலைப் பார்த்ததும் வராண்டாவில் நின்றார். 'அரே மாணிக்கம் இதரால்' என்று டிரைவரைக் கூப்பிட்டார். டிரைவர் பணிவில் அடியாள்தனம் தெரிந்தது. அகர்வால் அசையாது விறைப்போடு உட்கார்ந்திருந்தார்.

''சார் உங்களோடு பேசவேண்டும். சற்று வெளியே வருகிறீர்களா?'' நிலச்சொந்தக்காரரைப் பார்த்துக் கேட்டார்.

''இல்லீங்க. போயிட்டு வாங்க. நான் வியாபாரத்தை இவரோட முடிச்சுட்டேன்'' நிலச் சொந்தக்காரர் கைகூப்பினார். கோகுல்தாஸ் அசையவில்லை.

"நீங்கள்தான் புரோக்கரா? ஒரு நிமிஷம் வாங்களேன்" கோகுல்தாஸ் பேச, சுந்தரம் அகர்வாலைப் பார்த்தான்.

"போய்ப் பேசு" அகர்வால் கட்டளையிட்டார். சுந்தரம், கோகுல்தாசோடு தோட்டத்தில் இறங்கினான்.

"ஆறேமுக்கால் ஏழுக்கு முடிச்சுக் கொடு. நான் உனக்கு இரண்டு பர்செண்ட் தரேன்"

"கையெழுத்தாயிடுச்சுங்களே..."

"என்ன கையெழுத்து? வெள்ளை பேப்பர்ல எழுதிப் போட்ட கையெழுத்து."

"முடிஞ்ச வியாபாரத்தை உடைக்க முடியுமா? நியாய மில்லையே."

"துட்டுதான்யா நியாயம். நீ தைரியமாப் பேசு. நான் உனக்கு எல்லாவிதத்துலேயும் சப்போர்ட் பண்றேன்"

"அடுத்த வியாபாரம் உங்களுக்கு முடிச்சுத் தரேன். இப்ப நீங்க வெளியே போயிடலாம்"

"இதை முடி மதராசி. இப்ப காசு வாங்கிக்க."

"இது அயோக்கியத்தனம்."

"எது?"

"நீ பேசறது"

"நான் யார்ன்னு உனக்குத் தெரியாது"

"நீ எவனா இருந்தாலும் எனக்குக் கவலையில்லை"

"எனக்கு இந்த நிலம் வேணும்"



"இரவுண்ட் ஒன்பது லட்ச ரூபாய் அகர்வால் கிட்டேர்ந்து நான் உனக்கு வாங்கித் தரேன். ரெடியா சொல்லு."

"நீ நேத்து வந்த புரோக்கர். அகர்வால் ஒரு காலிப் பாத்திரம். அவனை நம்பாதே"

"விஷமிருக்கிற பாட்டிலுக்கு காலி பாத்திரம் தேவ லாம்."

"என்னை மீறி நீ புரோக்கர் தொழில் பண்ணிடுவியா?"

"ஊர் விட்டு ஊர் வந்தவனுக்கு இவ்வளவு திமிருன்னா, இதே ஊர்யா எனக்கு. எனக்கு எவ்வளவு திமிர் இருக்கும்? கோகுல்தாசை நம்பி நான் இந்த தொழில்லே இறங்கல. உன்னால முடிஞ்சதைப் பார்"

"ஏய் அகர்வால்" கோகுல்தாஸ் ஹாலை நோக்கி ஹிந்தியில் வேகமாய் ஏதோ பேசினான். அகர்வால் அசையாது உட்கார்ந்திருந்தார். என்ன நினைத்தானோ கோகுல்தாஸ் சடாரென்று சிற்றானைக் குட்டி போல் காரை நோக்கி நடந்தான்.

"ஏய் மதராசி, நீ ஒரு முட்டாள். ஆண்மையில்லா தவன்" என்று திரும்பி ஆங்கிலத்தில் திட்டினார். சுந்தரம் அவனை நோக்கி நடக்க, அகர்வால் எழுந்து நின்று அவனை அடக்கினார். கோகுல்தாஸ் காரில் ஏறிப் போனார். அகர்வால் வெளியே வந்து சுந்தரத்தின் தோளைப் பிடித்து உள்ளே அழைத்துச் சென்றார். அவன் தோளைத் தட்டிச் சிரித்தார்.

"இன்னும் ஒரு வாரம். இன்னும் ஒரு வாரத்தில் உங்கள் ரிஜிஸ்ட்ரேஷன், என் ரிஜிஸ்ட்ரேஷன் எல்லாம் முடித்துத் தருகிறேன். ரிஜிஸ்ட்ரேஷன் முடிந்த ஒரு மணி நேரத்தில் பணம் தருகிறேன். இது என் ராமன் மீது

சத்தியம். தாய் மீது சத்தியம். தயவு செய்து பிஸ்தா பருப்பையும், ஸ்வீட்டையும் வெளியே எறியுங்கள்''

''நானும் இதைத்தான் சொன்னேன்'' உள்ளிருந்து குரல் கேட்டது. அந்தப் பெண் வெளியே வந்தாள். பருப்பு பெட்டியையும், ஸ்வீட் பாக்கெட்டையும் எடுத்துக்கொண்டு படியிறங்கினாள். ரிக்ஷாக்காரனைக் கூப்பிட்டு அவனிடம் கொடுத்தாள். கையைக் கழுவிக் கொண்டாள். சேலைத் தலைப்பில் கையைத் துடைத்தபடி சுந்தரத்தைப் பார்த்து லேசாய் சிரித்தாள். மெல்ல நடந்து சமையலறைக்குப் போனாள். பத்து லட்சம் வாங்கிக் கொண்டதாய் நிலச் சொந்தக்காரர் கையெழுத்து போட, சுந்தரம் நாளை காலை ரெஜிஸ்ட்ரேஷன் ஆபீஸ் கூட்டிப்போவதாய் சொன்னான்: 'ஒரு பலகை மாட்ட எனக்கு அனுமதியளிக்க வேண்டும்' என்று அகர்வால் கேட்க, நிலச்சொந்தக்காரர் 'சரி' என்று தலையசைத்தார். ப்ரீப்கேசின் மற்றொரு பக்கத்தில் அகர்வால் அண்ட் கோ என்ற தகரம் இருந்தது. அந்தப் பெண்மணியிடம் கயிறு வாங்கி, தகரத்தின் ஓட்டைகளில் பிணைத்து அந்த வீட்டுக் கதவில் அகர்வால் மாட்டினார். அகர்வாலும், அவனும் காரில் ஏறிக் கொண்டார்கள்.

''கோகுல்தாஸ் உங்களை என்ன திட்டினான்?''

''என் தாயை, என் பிறப்பை, என் குலப்பெருமையை, என் மனைவி, சகோதரிகளின் கற்பை இழித்துப் பேசினான்.''

''ஏன் பேசாமலிருந்தீர்கள்?''

''நாய் குரைத்தால் நாம் குரைக்க முடியாது சுந்தரம்?''

''நீங்கள் விரட்டக்கூட முயற்சி செய்யவில்லையே.''

''சூரியன் நாயை விரட்டவும் செய்யாது. அதன் வேலையை அது கவனிக்கும். நான் கோபப்படவே அவன்



முயற்சி செய்கிறான். ஒரு பார்ட்டி எதிரில் என்னை அடிதடிக்கு கூப்பிடுகிறான். நானும் அடிதடியில் இறங்க என்னையும் அந்த பார்ட்டி ரவுடி என்று நினைக்கும். இங்கு பார்ட்டி பலவீனமான ஆள். அந்த பார்ட்டியை இயக்குவது அவன் மனைவிதான். அவள் பேச்சுதான் அந்த வீட்டில் எடுபடுகிறது. அந்தப் பெண்மணி பிஸ்தா பருப்பை எப்படி வீசினாள் பார்த்தாயா? அவள் எதிரே நாம் சண்டையிட்டால் நம் மதிப்பு என்னாவது? லட்சக்கணக்கான ரூபாய் முதலீட்டில் வியாபாரம் செய்கிற நாம் அடிதடியில் இறங்கினால் தெரு ரௌடிக்கு பயப்படுவதைவிட நம்மைக் கண்டு பயப்படுவார்கள். காசும் ரௌடித்தனமும் ஓரிடத்தில் இருக்கிறதே என்று கலவரப்படுவார்கள். ஒருபோதும் நாம் அடிதடியில் இறங்கக்கூடாது. இது எல்லா வியாபாரத்திலும் பால பாடம்.''

''ஆனால் அடிதடிக்கு தயாராய் இரு என்று சொன்னீர்களே?''

''ஒருவேளை நிலச்சொந்தக்காரரைச் சட்டையைப் பிடித்து மிரட்டினால் நாம்தான் நம் பார்ட்டியைக் காக்க வேண்டும். அதுதான் கடமை. நீ அவனை அடித்துவிடுவாயோ என்று பயந்தேன் சுந்தரம். நல்லவேளை அடிக்கவில்லை. கடவுள் காப்பாற்றினார்.''

''நன்றி மிஸ்டர் அகர்வால். எனக்கு இன்று பெரிய விஷயத்தைக் கற்றுக் கொடுத்தீர்கள்.''

''தவறு சுந்தரம். நீ பேசுவது தவறு. நான் கற்றுக் கொடுக்கவில்லை. நீ கற்றுக் கொண்டாய். ஒவ்வொரு வினாடியும் வாழ்க்கை நமக்கு கற்றுக் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறது. நாம் சரிவரக் கற்பதேயில்லை. கற்றுக் கொண்டவனே அறிஞன், பணக்காரன், பதவி பெற்றவன் எல்லாம். இந்த கோகுல்தாசிடம் ஒருமுறை சண்டை செய்து அடிதடி ரகளை செய்து ஒரு நல்ல பார்ட்டியை நழுவவிட்டு,

இனி இவ்விதம் செய்யக்கூடாதென்று கற்றுக் கொண்டேன். கடவுள் அருளால் நான் கற்றுக் கொண்டதை மறக்காமல் இருந்தேன். சரி, கோகுல்தாஸ் என்ன சொன்னான்?"

"நிலம் வேண்டுவதாகச் சொன்னார். இரவுண்ட் ஒன்றிற்கு ஒன்பது லட்சம். அகர்வாலிடமிருந்து வாங்கித் தருவதாகச் சொன்னேன்."

அகர்வால் வாய்விட்டுச் சிரித்தார். கார் ஓட்டும் சுந்தரத்தின் முதுகைத் தட்டிக் கொடுத்தார். "அதுதான் சரியான பதில். நீ கட்சி மாறி விடுவாயோ என்ற பயம் எனக்குள் இருந்தது உண்மை சுந்தரம்."

"என்ன இப்படிப் பேசுகிறீர்கள்?"

"காசு ஒரு பெண். இதம் தரும் பெண். அது பேயாய் மாறி நம்மைப் பிடித்துக் கொள்ளாதிருக்க வேண்டும். காசை ஆளுமை செய்யும் பலம் நமக்கு வரவேண்டும். காசு நம்மை ஆளுமை செய்யக்கூடாது. நமது மனுஷத் தன்மையும், காசின் மதிப்பும் சமமானதாக இருக்க வேண்டும்."

"கடவுளே, இது இன்னொரு பாடம்."

"எனக்கு ஐம்பத்தைந்து வயது சுந்தரம். இதுபோல் ஆயிரம் பாடம் உனக்குச் சொல்லித் தருகிறேன். என்னோடு இரு."

"உதவியாளாகவா?"

"தேவையில்லை. நீ புரோக்கர். நான் காண்ட்ராக்டர். கைகோத்து நாலு பிசினஸ் முடிப்போம். ஒரு தர்ம நியாயத்துக்குக் கட்டுப்படுவோம்" அவர் கை நீட்ட, சுந்தரம் ஒரு கையால் ஸ்டியரிங்கையும், மற்றொரு கையால் அவர் கையையும் பிடித்தான். அவன் மனசுள் புதுபலம் பொங்கியது.



அடுத்த ஐந்து நாள்கள் இரவு, பகல் என்று பாராது சுந்தரம் சுற்றினான். அகர்வாலுக்கு எல்லா இடங்களிலும் நல்ல பெயர் இருந்தது. இரண்டு ரிஜிஸ்ட்ரேஷன் வேலைகளும் வேகமாய் முடிந்தன. முப்பத்தாறு லட்ச ரூபாயில் அட்வான்ஸ் கொடுத்தது போக, மீதிக்காக ஒற்றைக் காசோலையாய்க் கொடுக்கப்பட்டது. மாம்பலம் நிலச் சொந்தக்காரரிடமிருந்து கமிஷனாக ரூபாய் முப்பத்தாறாயிரம் கிடைத்தது. அகர்வாலின் கமிஷனாக இன்னொரு முப்பத்தாறாயிரம் காசோலையாய் தரப்பட்டது.

"ஏழு லட்ச ரூபாய் கேட்ட நிலத்தை ஆறு லட்சத்திற்கு வாங்கினேன். அவர்கள் ஏழு லட்சம் தருவார்களா, மாட்டார்களா என்பது வேறு விஷயம். நான் சற்று அதிகம் கொடுக்க வேண்டுமென்று நீங்கள் எதிர்பார்த்தீர்கள். எனக்குக் காசு தர மனசில்லை. அதேசமயம் உங்கள் எதிர்பார்ப்பை ஏமாற்றவும் விருப்பமில்லை. உங்கள் வீட்டிற்கு என் பரிசு." பத்து சவரனை ஒன்றன் மீதாய் ஒன்று அடுக்கி, நிலச் சொந்தக்காரர் கையில் அகர்வால் வைத்தார்.

"நான் அதான் சொன்னேன்" உள்ளிருந்து குரல் கேட்டது.

"என்னம்மா?" சுந்தரம் தலையைத் திருப்பிக் கேட்டான்.

"அவர் காசா தரமாட்டா. வேறெதாவது கொடுப்பா நிச்சயம்னு சொன்னேன்."

அகர்வால் சமையலறையை நோக்கிக் கைகூப்பினார். விடைபெற்றார். ஒரு மாதத்தில் அவர்கள் வீடு காலி செய்து தருவதாக வாக்களித்தார்கள். அகர்வால் அதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

"இன்னும் சீக்கிரமா காலி செய்யச் சொல்லட்டுமா?" சுந்தரம் காதோரமாய்க் கேட்டான்.

"உனக்கு அந்தப் பெண்மணியைப் பற்றிப் புரியவில்லை. பத்து நாளுக்குக்கூட அவள் இங்கு தங்க மாட்டாள்." அகர்வால் சொன்னார்.

"இந்தக் காரை ஆபீசில் விட்டு விடட்டுமா?" சுந்தரம் கேட்டான்.

"இருபதாயிரம் ரூபாய் இப்போது கொடு. மீதியை அடுத்த விற்பனையின்போது கொடு. இது ராசியான கார். நீயே வைத்துக் கொள்."

"உங்களுக்கு அகர்வால்?"

"கான்டெசா இளாசிக் வருகிறது. இனியும் நான் மாருதியில் போனால் மதிப்பிருக்காது."

அன்று மாலை பிஸ்தாப் பருப்பும், முந்திரியும், பாதாமும், ஜாங்கிரியும் அகர்வால் கொடுத்ததாக டிரைவர் கொண்டு வந்து கொடுத்தான். பையன் தாளிப் பிரிக்கப் போனபோது சுந்தரம் தடுத்து விட்டான்.

"உன் உடன்பிறந்தான் வீட்டுக்குப் போகலாம் கிளம்பு."

"ஐயோ அங்கு என்னத்துக்கு?"

"நான் நிமிந்துட்டேன்னு அவனுக்குக் காண்பிக்கணும்டீ."

"தேவைதானா?"

"எனக்குத் தேவையில்லை. உனக்குத் தேவை. சுந்தரத்தோட பொண்டாட்டிய அவமதிச்சா... சுந்தரத்தை அவமதிக்கிற மாதிரி."

"சண்டை போடப் போறேளா? போய்க் கத்தப் போறேளா?"



"ச்சே.... முட்டாள்தான் செய்வான், உன் உடன்பிறந்தானுக்கு ஒரு வெள்ளிக்குடம் வாங்கட்டுமா?"

"ஐயோ, நிறைய விலையாச்சே?"

"என்னால வாங்க முடியும்."

"அப்படி வருமானம் வந்துதேத்தா?"

"வந்துது."

"எவ்ளோ?"

"உனக்குத் தேவையில்லை."

"ஏன்?"

"குடித்தனம் செய்ய உனக்கு நாலாயிரம் போதும்."

"எப்பவோ கோபத்துல சொன்னேன். இன்னும் அதை மனசில வச்சுண்டு...."

"ஒரு மாசம் காசு வரும், ஒரு மாசம் காசு வராது. உனக்குத் தேவை நாலாயிரம். அது கிடைக்கும்."

"ஏன் இப்படி விட்டேத்தியா பேசறேள்?"

"போன மாசம் லட்ச ரூபா கொண்டு வந்தியே, இந்த மாதமும் லட்ச ரூபாய் கொண்டு வான்னுவே. என் தொழிலைப் பற்றி எதுவுமே தெரியாத டிமாண்ட் செய்யல. உனக்குப் பதில் சொல்லக்கூட எனக்கு நேரம் இருக்காது. அதனால சொல்றேன். குடித்தனச் செலவு நாலாயிரம் ஒண்ணாந்தேதியானா உனக்குக் கிடைக்கும். மத்தது என் கவலை."

"சரி உங்க இஷ்டம்". கிரிஜா முகம் தூக்கி வைத்துக் கொண்டாள்.

''இந்த வெள்ளிக்குடம் தவிர ஒரு மூணு சவரன் உனக்கு செயின் செய்து போடலாம்னு இருக்கேன்.''

''ஏதாவது சொல்லி என்னை ஏமாத்தாதீங்கோ''

''நான் ஏமாத்தலை கிரிஜா. இன்னிக்கு நகை செய்து போடுவேன். நாளைக்கு அந்த நகையைக் கேட்பேன். உன் தாலிக்கொடி தவிர அத்தனை நகையையும் நான் எப்ப வேண்ணாலும் கேட்பேன். ஏன்னா என் தொழில் அப்படி.''

''ஒண்ணு செய்யுங்கோ. இந்த நாலு பவுனு தாலிக் கொடியை, ஆறு பவுன் தாலிக்கொடியா மாத்திக் கொடுத் துடுங்கோ. எனம்மா இந்த ஒரு நகை போதும். வேறு நகை வாங்கினாலும், வித்தாலும் யாருக்கும் தெரியா திருக்கும். எங்க வீட்ல தயவுசெய்து சண்டை போடாம இருங்க போதும்.''

சுந்தரம் தன் மைத்துனன் வீட்டு வாசலில் காரை நிறுத்தும்போது அந்த வீடு பூட்டப்பட்டிருந்தது. பக்கத்து வீட்டுக்காரர்கள் அவர்கள் டாக்டர் வீட்டிற்குப் போயிருப்ப தாகச் சொன்னார்கள். மைத்துனன் மனைவிக்கு மயக்கம் வந்ததாகச் சொன்னார்கள். டாக்டர் வீடு போக அங்கே ஒரு சிறிய கூட்டம் இருந்தது. ''ஆட்டோ ரிக்ஷா வேண் டாம். ஆம்புலன்ஸ் வரட்டும்.'' யாரோ கத்தினார்கள். மைத்துனனின் மனைவியை மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல வேண்டுமாம். பனிக்குடம் உடைந்து விட்டதாம், வயிற்றுக் குழந்தை பனிக்குட நீர் குடிக்கும்முன் அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டுமாம். சுந்தரத்தின் காரைச் சூழ்ந்து கொண்டார்கள்.

''இது உங்க காரா, இதுல என் மருமகளைக் கூட்டிண்டு போகலாமா? பனிக்குடம் உடைஞ்சுடுத்து. புடைவையெல் லாம் ஈரம். இந்தக் கார்ல போனா யாரும் ஒண்ணும்



சொல்லமாட்டாளே? க்ளீன் செய்து வேணா கொடுத்துட லாம்.'' மாமனார் பதறினார்.

''இது உங்க கார் மாதிரி மாமா. எந்த ஹாஸ்பிடல் போகணும்?''

''அப்பல்லோ ஹாஸ்பிடல்ல காசு ஜாஸ்தியாகும். தேவகில மெடர்னிடி உண்டா? பக்கத்திலே இருக்கற கே. எஸ். ஹாஸ்பிடல் போயிடலாமா? நல்ல ஆஸ்பத்திரி. அதேசமயம் ரொம்ப காசு செலவு ஆகாம பாத்துக்கணும்.''

பல் கடித்து தவிக்கிற மைத்துனியை கிரிஜாவும், அவள் சகோதரனும் காரின் பின்சீட்டில் படுக்க வைத்தார்கள். முன் சீட்டில் கிரிஜா ஏறிக் கொண்டாள். பையன் தாத்தாவைப் பிடித்துக் கொண்டான்.

''நான் அடையார் மலர் ஆஸ்பத்திரி போறேன்.''

''அது புது ஹாஸ்பிடல் ஆச்சே. சார்ஜ் நிறைய பண்ணினா?'' மைத்துனன் நகம் கடித்தான்.

''வேற வண்டி பிடிச்சு பின்னாலேயே வாங்க. மலர் ஹாஸ்பிடல், மலர் ஹாஸ்பிடல்'' கத்திக் கொண்டே சுந்தரம் காரைத் திருப்பினான். நிலைமை மோசம் என்பது மைத்துனியின் துடிப்பில் தெரிந்தது.

''வலிப்பு வருதுன்னு நினைக்கிறேன். சீக்கிரம்கொண்டு போங்க'' கிரிஜா எட்டி சகோதரன் மனைவியைப் பிடித்துக் கொண்டாள். கார் மலர் ஆஸ்பத்திரிக்குள் நுழைந்தது.

''டாக்டர் ராமமூர்த்தி இருக்காரா? ப்ரெக்னென்ட் பேஷண்ட் ரொம்ப சீரியஸா இருக்காங்க.''

மூன்று நிமிடத்தில் கர்ப்பிணிப் பெண் தியேட்டருக்குக் கூட்டிப் போகப்பட்டாள்.

"யார் பேஷண்ட்கூட வந்தது?" டாக்டர் ராமமூர்த்தி, தன் மனைவியுடன் வெளியே வந்தார்.

"நர்ஸ் சொல்கிற எல்லா இடங்களிலும் கையெழுத்துப் போடுங்கள். இன்னும் இரண்டு நிமிடத்தில் சிசேரியன் ஆரம்பிக்கும். ரூபாய் மூவாயிரம் முதலில் கட்ட வேண்டும்."

சுந்தரம் பாக்கெட்டின் பின்பக்கமிருந்த நோட்டுக் கற்றை உருவினான். மூவாயிரம் பிரித்து ரிஸப்ஷனில் நீட்டினான்.

"டாக்டர், ப்ரக்னென்ட் வுமன் இஸ் வெரி டியரெஸ்ட் டூ அஸ். நல்ல செய்தியை நீங்கள் தர வேண்டும்."

"இந்த ஆஸ்பத்திரிக்கு வந்த அனைவரும் எங்களுக்கு டியரெஸ்ட்தான். என்னால் முடிந்த அனைத்தையும் செய்வேன். கடவுளைப் பிரார்த்தனை செய்யுங்கள்."

ஆஸ்பத்திரி சுத்தமாய் இருந்தது. அது நவீனமானது என்பதை அங்கே கொடுத்த விவரக் குறிப்பு காட்டியது. சரியான இடத்திற்கு வந்திருக்கிறோம் என்கிற நிம்மதி பிறந்தது. யாரோ பிரசவம் பார்க்கும் பெண் டாக்டர் காரிலிருந்து இறங்கி, புயல் போல உள்ளே நுழைந்தாள். "எமர்ஜென்சி கேஸாமே எந்த தியேட்டர்?" என்று படபடத்தாள். நர்ஸ் வழிகாட்ட லிப்டில் ஏறி மறைந்து போனாள். மாமாவும் மாமியும் மைத்துனனும் சுந்தரத்தின் பிள்ளையுடன் வந்தார்கள். மைத்துனன் அருகே வந்து 'ரொம்ப தாங்க்ஸ்' என்று கையைப் பிடித்துக் கொண்டான். "சமயத்திலே உதவி செய்தேள்" என்று பேசினான். சுந்தரம் பதில் சொல்லவில்லை. எனக்கு உன்னோடு சண்டையில்லை. என்பதால் அவன் கைகளைப் பற்றிக் கொண்டான். டாக்டர் நல்ல செய்தி சொல்லட்டும் என்று காத்திருந்தார்கள்.



"ஏன்னா வெள்ளிக்குடம் கார்லேயே இருக்கே இருக்கட்டுமா?"

"இருக்கட்டும்..."

எல்லாரும் காத்திருந்தார்கள். நர்ஸ் வெளியே வந்து "சுந்தரம் யார்?" என்று கேட்டாள்.

எல்லாரும் எழுந்தார்கள்.

"ஆண் குழந்தை பிறந்திருக்கிறது. தாயும் குழந்தையும் நலம். என் வாழ்த்துகள்." நர்ஸ் ஆங்கிலத்தில் அழகாய்ச் சொன்னாள்.

"இப்பப் பார்க்கலாமா? இப்பப் பார்க்கலாமா?" எல்லாரும் பரபரத்து நர்ஸ் பின்னால் ஓடினார்கள். கிரிஜாவும் ஓடினாள். பையன் மட்டும், அப்பா நகராதது கண்டு அங்கேயே நின்றான்.

"என்னப்பா?" என்று அருகில் வந்து கேட்டான்.

"வெறும் வெள்ளிக்குடமா இருக்கேடா. குழந்தை பிறந்திருக்கே. போய் சர்க்கரை வாங்கிண்டு வருவோமா? வேறென்ன வாங்கணும்? எல்லாருக்கும் காட்பரிஸ் சாக்லேட், குழந்தைக்குப் பிளாஸ்டிக் படுக்கை, பவுடர், டெட்டால், நிறைய நாப்கின் வாங்கிக்குவமா?"

"நானே சொல்லணும்னு நினைச்சேன், இது எல்லாம் சேர்ந்து ஒரு பெட்டில போட்டு விக்கறாப்பா. பொம்மைக் கடையில் பார்த்தேன்."

"கிளம்பு போகலாம்."

காரில் ஏறினார்கள். காரில் பவிச்குட நாற்றம் கொஞ்சம் இருந்தது. குடத்தில் சர்க்கரையையும், பரிசுப் பொருளும் வாங்கி வந்திருந்தனர். ஆஸ்பத்திரிக்கு வந்து டாக்டர் உள்பட எல்லாருக்கும் வழங்கினார்கள்.

"இந்த சாக்லேட் உங்களுக்குத்தான். மிகச் சரியான நேரத்தில் அந்தப் பெண்மணியைக் கொண்டு வந்து சேர்த்தீர்கள்." டாக்டர் ராமமூர்த்தி உறைபிரித்து சாக்லேட்டை அவன் வாயில் போட்டார். சுந்தரம் டாக்டருக்கு நன்றி சொன்னான். "வேறென்ன வாங்கணும்?" என்று மாமனாரைக் கேட்டான்.

"ப்ளாஸ்க், ஹார்லிக்ஸ், டர்க்கி டவல், ஏதோ சில மருந்துகள். கிரிஜா ராத்திரி இங்க தங்கறா. அவளுக்குச் சாப்பாடு" என்னென்னமோ சொன்னார்கள். மறுபடி பையனுடன் சுந்தரம் கிளம்பினான்.

"நாளைக்கு வண்டியைக் கொஞ்சம் கழுவணும்டா..." சுந்தரம் பின்சீட்டைத் திரும்பிப் பார்த்துச் சொன்னான்.

"நானே அதான் சொல்லணும்னு நினைச்சேன். நான் ஹெல்ப் செய்யறேம்பா" பிள்ளை பதில் சொன்னான். சுந்தரத்துக்கு இதே வார்த்தை சொல்லி, யாரோ எங்கோ செய்த உதவி ஞாபகம் வந்தது.

"அப்பா உன் கம்பெனி பஸ். உன் கம்பெனி பஸ்." காரைக் கடந்து போகும் டயர் கம்பெனி பஸ் பார்த்து விட்டுப் பிள்ளை கத்தினான்.

கார், ஸ்கூட்டர் இல்லாத சூப்ரவைசர், போர்மேன்களுக்குப் போகும் பஸ் அது. யாரோ சிலர் உள்ளே சாய்ந்து தூங்கிக் கொண்டே நைட் ஷிப்டுக்குப் போவது தெரிந்தது. மடியில் புளியோதரை, தயிர் சாதம் அல்லது உப்புமா வீட்டில் இருந்து கட்டிக் கொண்டதை வைத்துக் கொண்டு கம்பெனிக்குத் தூங்கியபடியே போகிறார்கள். தங்கள் எல்லாத் திறமையையும் மூவாயிரம், நாலாயிரம் காசுக்கு அடகு வைப்பதற்காகப் போகிறார்கள்.

யார் என்ன சொன்னாலும் கேட்டுக் கொண்டு நடப்பார்கள். ப்ரமோஷன் இல்லையென்றால் அழுவார்கள். எதிர்க்க மாட்டார்கள். வேலையில் குறை கண்டுபிடித்துக் கூப்பிட்டுத் திட்டினால் மன்னிப்புக் கேட்பார்கள். நான் செய்தது சரிதானே என்று சொல்ல மாட்டார்கள்.



தனி மனிதன் முக்கியமில்லை, கம்பெனி முக்கியம் என்கிற வார்த்தையில் மயங்கி, தன்னை தன் திறமையைத் தாரை வார்ப்பார்கள். நாமும் அப்படித்தான் இருந்தோம். பதினாறு வருஷம் தன்மீது நம்பிக்கையின்றி ஏதோ பயத்தில் சம்பளம் என்றாலும் போக முடியாது அங்கே. ஒரு மனை விற்றதில் எழுபத்திரெண்டாயிரம் வந்து விட்டது. இது தன் ஒரு வருட சம்பளத்தைவிட அதிகம். இனி ஒரு வருடத்திற்குப் பத்து பிஸினஸ் செய்ய முடியும். ஒரு நேரம் சரியாக வர தானே நிலம் வாங்கி பிளாட்ஸ் கட்ட முடியும். இந்தப் பிள்ளை வளர்ந்து சிவில் என்ஜினியரிங் படித்தால் இன்னும் பெரிய பெரிய கட்டடங்கள், மலர் ஹாஸ்பிடல் போல கட்டடங்கள் கட்ட முடியும். இந்த நம்பிக்கைதான் கடவுள்.

"அப்பா, கார்ல ரேடியோ இருக்கு..." பையன் தடவினான்.

"போடு..."

'ஆத்தி இது வாத்துக் கூட்டம்....' சினிமா பாட்டு கேட்டது. பையன் தாளம் போட்டான். கூடப் பாடினான்.

"கண்ணா வாத்துக் கூட்டம்னு எதைச் சொல்றது பாட்டு?"

"தெரியலையே."

"மனுஷாளை."

"அப்படியா?"

''ஏன் அப்படி சொல்றாங்க சொல்லு?''

''வாத்துஒன்றின் பின்னாடி ஒன்று எங்கே போறோம்னு தெரியாத உரசிக்கிட்டுப் போகும். தனியாக இருக்க வாத்துக்குப் பயம்.''

''கரெக்ட் மகனே. நீ பிழைச்சுக்குவேடா.'' சுந்தரம் பிள்ளையைத் தட்டிக் கொடுத்தான். அவனுடைய நம்பிக்கை அந்த நேரம் மிகவும் அதிகரித்தது. பையன் மறுபடியும் ரேடியோ திருப்பினான். 'காற்றுக்கென்ன வேலி கடலுக்கென்ன மூடி...' வேறு பாட்டு ஒலித்தது.

(முற்றும்)

# சுரங்கப் பாதைகள்

நீங்கள் எழுதுவது குறித்து குறை சொன்ன ஒருவருக்கு என்ன தர்க்க ரீதியாகப் பதில் சொல்லியிருந்தீர்கள் ஐயா! எனக்குக்கூட மாத நாவல்கள் என்றால் முன்பெல்லாம் ஓர் அலர்ஜிதான். வெறும் கொள்ளை, கொலை, திருட்டு, கொஞ்சம் செக்ஸ் என்று நிரப்பி இன்றைய இளைஞர்கள் பலரை நல்ல சிந்தனைகள், செயல்பாடுகள் பக்கமே போக விடாமல் பிடித்துப் போட்டு ஒரு சிந்தனைத் தேக்கத்தையே உண்டாக்கி வைத்தவை மாத நாவல்களே. ஆயினும், அவை கட்கும் ஓர் இலக்கிய அந்தஸ்து தர முடிந்தது என்றால் அது உங்களால்தான் பாலா. இதனை தயவு செய்து முகஸ்துதியாக எடுத்துக் கொண்டு விடாதீர்கள். என்னைப் பொறுத்தவரை சத்தியம்.

—துரை வரதன், கடலூர்

இது 'இரவல் கவிதை' கதையன்று. நல்லதோர் இலக்கியக் கட்டுரை. ஒரு வீரியமான என்ஜைம் (Enzyme). விழுங்கி ஜீரணிக்க, 'Sugar Coated' எனும் கதைப்பூச்சு தேவைதான். இல்லையெனில் இன்றைய இளைய சமுதாயம் என்ஜைமைத் துப்பி (நிராகரித்து) விடும். உணர்ந்து கையாண்டுள்ளீர்கள்.

—ஆடலரசன், சேலம்.

சாவை மறக்கத்தான் பல சுகங்கள் வேண்டியுள்ளபோது சங்கீதாவுக்கு சாவு ஒன்று மட்டுமே சுகமானதென ப்படி சாத்தியமாயிற்று? அதுவும் ஒருவகை மேக் பிலீவ் வகையோ?

—புனிதவதி, வேலூர்-9.

என்ன எழுதுவதென்று தெரியவில்லை. எப்படி ஆரம்பிப்பதென்றும் புரியவில்லை. இதயம் முழுவதும் ரொம்பவும் கனத்துப்போய்க் கிடக்கிறது.... வார்த்தைகள் தொண்டைக் குழிக்குள்ளே சிக்கி, வெளி வரமுடியாமல் தவிக்கிறதே.... என் நினைவுகள் முழுவதும் நீங்கள்தான் பாலா. உங்கள் 'இரவல் கவிதை'யின் தாக்கம்தான் பாலா.

என்னவொரு அற்புதமான கலையது!

காதலர் சாகலாம்...காதல் சாவதில்லை,
கவிஞர் மறையலாம்...கவிதைகள் மறைவதில்லை.

இதை பசுமரத்து ஆணியாய் நெஞ்சில் பதிய வைத்து விட்டீர்கள். இதுவே பிரபஞ்ச நீதியென்பதைத் தெளிய வைத்து விட்டீர்கள்.

அந்த குருமூர்த்தியோடு நானும் அழுதேன் தெரியுமா? அந்த சங்கீதாவோடு அந்த சாமிநாதனோடு நானும் இருந் திருக்கிறேன் தெரியுமா?

நானே குருமூர்த்தியாய் இருக்க ஆசைப்பட்டேன் தெரியுமா...பாலா?

இது கதையல்ல பாலா. நிஜம்.

—செந்தில்குமாரன், நாகை

ஒருபுறம் செங்கல்லும், மறுபுறம் எல்லைக் கல்லும், மற்றொரு புறம் வெட்டப்பட்ட மாமரங்களுமாய் ஒரு சுடுகாட்டைப்போல் காட்சி தந்து கொண்டிருக்கும் புதுவை (பாரதி) குயில் தோப்பை, பாரதி வசித்த, வாசித்த மாந் (குயில்) தோப்பாய் தங்கள் கற்பனையில் கொண்டு வந்திரே அங்கேதான் தங்கள் பெயர் சிம்மாசனத்தில் ஏறி அமர் கிறது. ஏறி அமர்ந்தபெயர் கம்பாவா குந்திக்கிடக்கிறது.... "இந்தக் குயில் தோப்பு ஐரோப்பாவிலிருந்தால் ஒரு புல்கூட இடம் பெயர்ந்திருக்காது. ஆனால், தமிழர்கள் சுரணை யற்றவர்கள்...மொழி வெறியைத் தூண்டி அதில் காசு சம்பாதித்தார்களே தவிர, மொழிக்கு எதையும் செய்துவிட வில்லை. பாரதிக்கு பொட்டு இடுவதா? வேண்டாமா, என்பதுதான் பிரச்னை. மற்றபடி பாரதியின் எழுத்துகளைப் புரிந்து கொள்ள இங்கு எவருமில்லை. இதோ குயில்தோப் பைக் காலம் தின்று கொண்டிருக்கிறது. இங்கு வீடுகள் வரும். இன்றைக்கு அரசியலில் யார் பெரியவரோ அவர் பெயர் வரும்..." என உள்ளுக்குள் குமுறிவிட்டு,

"முன்னைப்பழம் ஒரு நாள்-எங்கள்
மூத்த பெருங் கவிஞன்..."

என ஆங்காரமாய் கவிதை வாசிக்க ஆரம்பித்தபோது சிம்மாசனத்திலேயே மகுடம் சூட்டியதாக உணர்கிறேன்.

—காரை கலையரசி, காரைக்கால்

அசோக் நகர், சென்னை – 83